ஏட்டிக்குப் போட்டி

முதலிய கட்டுரைகளும், கதைகளும்.



ஆசிரியர்:

ரா. கிருஷ்ணமூர்த்தி

(கல்கி)




வாஸன் புஸ்தகசாலை,

சென்னை.

1930 [விலை ரூ. 1—4—0

சென்னை
'ஆனந்த விகடன்' அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ஆசிரியன் முன்னுரை.



நேயர்காள்! "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" என்றனர் பெரியோர். ஆதலின் உங்களுடன் இப்பொழுதே முழுமையும் உறவு கொண்டாடிவிட விரும்புகிறேன். இப் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கி விட்டீர்களானல் அப்புறம் நமது நேய பாவம் நெடுநேரம் நீடித்திருக்க இயலாது. புத்த கத்தை முடிப்பதற்குள் (அவ்வளவு சாமர்த்தியம் யாருக் காவது இருந்தால்) பலர் என்மேல் தீராப் பகைமை கொண் டாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன்.

ஆனல் இப்புத்தகத்தை வெளிக் கொணர்ந்த குற்றத்திற் குப் பொறுப்பாளி நானல்லன் என்பதை உங்களுக்குப் பணி வுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பொறுப்பை வீதாசாரப்படிப் பங்கிட்டுக் கொடுத்து விடுவது தான் இந்த முன்னுரை எழுதுவதில் எனது நோக்கமாகும்.

இந்நூலைப் படிக்குங்கால் இடையில் உங்களில் யாருக்கா வது கடுங்கோபம் உண்டாகி, யாரையாவது சபித்தே தீருதல் இன்றியமையாததாகிவிட்டால், அப்போது ஸ்ரீமான் எஸ்.எஸ். வாஸன் அவர்களை மறக்க வேண்டாமென்று கேட்டுக் கொள் கிறேன். இப்புத்தகம் தோன்றியதற்குப் பாதிக்கு மேற்பட்ட பொறுப்பு அவருடையதே யாகும். சுமார் இரண்டு வருஷத் துக்கு முன்னல் நானும் என் நண்பர் ஸ்ரீ. பாலி சு. நெல்லை யப்பரும் காந்தி கதர் நிதிக்குப் பணம் வசூலிக்கும் பொருட்டு அவரிடம் சென்ற காலத்தில் எங்கள் விருப்பத்தை உடனே

நிறைவேற்றி வைத்து விட்டு, அதற்குப் பதிலாக தமது "ஆனந்த விகடன்" பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுவதாய் என்னிடம் வாக்குறுதி பெற்றவர் யார்? பின்னர், மாதந் தோறும் கடிதமும், ஞாபகக் கடிதமும், அதை ஞாபகப்படுத் தக் கடிதமும் எழுதித் தவறாமல் கட்டுரைகள் பெற்று வெளி யிட்டு வந்தவர் யார்? ஆயிரக் கணக்கான தமிழர்கள் என் கட்டுரைகளைப் படித்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி வருவ தாக (நிஜமோ அல்லது அரசியல் உண்மையோ) சொல்லி என்னை ஊக்கப்படுத்தி வந்ததுடன், ஏனைய என் வேண்டு கோள்களையும் நிபந்தனைகளையும் தட்டாமல் நிறைவேற்றி வந்தவர் யார்? இவ்வளவும் போதாவென்று தமிழ் நாட்டின் நிலைமை நன்கு தெரிந்தும் பல நூற்றுக் கணக்கில் ரூபாய் செலவழித்து இந்தப் புத்தகத்தை வெளியிட முன்வந்தவர் யார்? ஸ்ரீமான் எஸ். எஸ். வாஸன் அவர்களே யாவர். ஆகவே குற்றத்தில் பாதிக்குமேல் இவரைச் சாரும் என்பதைப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை.

ஆனால் ஸ்ரீமான் வாஸன் என்னதான் கெட்டிக்காரரா யிருந்தாலும், ஏற்கெனவே எழுத்துப் பைத்தியம் எனக்குக் கொஞ்சம் இல்லாமலிருந்தால் என்னிடத்தில் அவருடைய முயற்சி யெல்லாம் பலித்திருக்க முடியாது. என்னிடம் இந்தப் பைத்தியத்தை வளர்த்தவர்களுள் மூன்று பெயரை நான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். தலைவர் ஸ்ரீ. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இவர்களுள்ளே முதல் குற்றவாளி யாகின்றார். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நான் எழுதிய சில சிறு கதைகளை அவரிடம் நடுக்கத்துடன் கொடுத்து, அவைகளைப் புத்தகமாக வெளி யிடலாமா வென்று யோசனை கேட்டேன். நான் எதிர்பாராத விதமாய் அவர் அவைகளைச் சிலாகித்ததுடன் புத்தகத்துக்கு

முன்னுரை ஒன்று எழுதித் தரவும் இசைந்தார். அவ்வாறே அவர் முன்னுரையுடன் "சாமதையின் தந்திரம் முதலிய கதைகள்" என்னும் புத்தகம் வெளியாயிற்று. என்னுடைய எழுத்துப் பைத்தியம் தலைக்கேறுவதற்கு இச்சம்பவமே காரணமா யிருந்ததென்று சொல்லலாம்.

இரண்டாவது குற்றவாளி, தமிழ் நாட்டிலே தமிழையும் தேசபக்தியையும் ஒன்று பிணைத்த பெருமை வாய்ந்தவரான திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் ஆவர். அவருடைய "நவசக்தி" பத்திரிகையில் நான் தொண்டு புரிந்து வந்தபோது "தமிழ்த் தேனீ" என்ற பெயருடன் நான் நிகழ்த்திய அநிகப் பிரசங்கத்துக்கெல்லாம் அவர் இடங் கொடுத்து வந்தார். "ஐயோ! வெறும் விகடங்களைப் போட்டு நல்ல பத்திரிகையை வீணாக்குகிறீர்களே?" என்று சில அபிமானிகள் எடுத்துக் கூறியும் இவர் கேட்கவில்லை. மேலும் "தமிழ் நாட்டில் பலர் செய்வதுபோல் என்னுடைய தமிழ் நடையை 'காபி' அடித்துக் கெடவேண்டாம்; உன் போக்கிலேயே செல்" என்று திரு. வி. க. அவர்கள் எனக்குச் செய்த போதனைதான் இந்தப் புத்தகத்துக்கு விதை போட்டது என்று சொல்வேன்.

மூன்றாவது குற்றவாளி தமிழ் நாட்டார் "வ. ரா." என்னும் பெயரால் அறிந்திருக்கும் திரு. வ. ராமஸ்வாமி அய்யங்கார் ஆவர். இவரிடமுள்ள ஒரு பெரிய குறைபாடு என்னவென்றால், நூலாசிரியர் பலரிடையே காணக்கிடக்கும் அசூயை என்னும் நல்ல குணம் இவரிடம் கிடையாதது தான். எந்த விஷயத்திலும் யாரிடத்திலும் கண்டிப்பாய், வெட்டு ஒன்றும், துண்டு இரண்டுமாய்ப் பேசும் இயல்பு வாய்ந்த இவர், என்னுடைய ஹாஸ்யக் குறிப்புகளை உண்மையான

உள்ள மகிழ்ச்சியுடன் பாராட்டினரென்றால், நான் தலைகால் தெரியாமல் எழுத்துத் துறையில் புகுந்துவிட்டதில் வியப் புண்டாவென்று கேட்கிறேன். இதுமட்டு மன்று. ஒரு காலத்தில் வ. ரா. "சுதந்திரன்" என்னும் வாரப்பத்திரிகை யை நடத்தி வந்தார். இதே சமயத்தில் முதன் முதலாக நான் எழுதிய "விமலை" என்னும் நவீனத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யலாமெனத் தவித்துக்கொண் டிருந் தேன். அதை வெளியிடவேண்டுமென்ற ஆவல் ஒரு பக்கம்; யாராவது சிரிக்கப் போகிறார்களே என்ற வெட்கம் ஒரு பக் கம். இந்த நிலைமையில் ஒரு நண்பர் மூலம் எனக்கு அறிமுக மான வ. ரா. அந்தக் கதையைப் படித்துவிட்டு அதை மிக வும் சிலாகித்து எழுதியதோடு, தமது பத்திரிகையிலும் பகுதி பகுதியாக வெளியிட்டு முடித்தார். இவ்வாறு முதன் முத லாக எனக்குத் தைரிய மூட்டியவர் வ. ரா. அவர்களே யாத லின், இப்புத்தகத்தின் வாசகர்களுக்குக் கோபம் வருங்காலத் தில் இவரையும் மறந்துவிடக் கூடாதென்று கேட்டுக்கொள்கி றேன்.

இன்னும் சிறிது பின்னால் சென்று பார்த்தால், மிஸ்டர் வாரன் என்னும் துலைமகனார் மீதும் ஓரளவு குற்றம் சுமத்தி யே தீரவேண்டும். எப்படி யென்றால், மேலே குறிப்பிட்ட "விமலை" என்னும் கதையை நான் எங்கே, எப்போது, ஏன் எழுதினேன் தெரியுமா? 1922-ம் ஆண்டிலே கூடலூர் சிறைச்சாலையிலே வசித்தபோது, பொழுது போக்கிற்காக எழுதியது அக் கதை. சிறைக்கூடத்திற்கு என்னை அனுப்பிய வர் மேற்சொன்ன மிஸ்டர் வாரன் துரையே யாவார். இந்த மூலாதார சம்பவத்திலிருந்து ஒன்றன்பின் ஒன்றாக விளைத்த பல விபத்துக்களிலே இந்த எட்டிக்குப் போட்டி என்னும் புத்தகம் கடைசியானதாகும். இது போன்ற விபத்துக்க

ளைத் தடுக்கும் பொருட்டாவது, இனிமேல் இராஜத்துவேஷத் துக்காகச் சிறைக்கு அனுப்புவதை நிறுத்திவிடவேண்டு மென்று வாசகர்கள் பலமான கிளர்ச்சி செய்வார்களென நம்புகிறேன்.

வாசகர்களின் கோபத்தைச் செலுத்துவதற்கு இவ் வளவு பேரும் போதாதென்றால், இன்னும் சிலரையும் நான் குறிப்பிடக்கூடும். இத்தகைய கட்டுரைகளும், கதைகளும் எழுதுவதற்கு எனக்குத் தூண்டுதல் தந்தவர்கள் மேனாட்டு நூலாசிரியர்களே யாவர். இப்புத்தகத்திலே பெரும் பகுதி என் சொந்தச் சரக்காயினும், இரவல் சரக்குகளும் ஓரளவு உண்டு. ஆனால் அன்னிய சரக்குப் பகிஷ்காரத்தில் அறிவுச் சரக்குகளையும் சேர்த்துவிடப் போகிறீர்களே யென்ற பயத் தினால், அவைகளை உருத் தெரியாமல் மாற்றிச் சொந்தச் சரக் காகவே செய்துவிட முயன்றுள்ளேன். எனினும் அம் மேனாட்டு ஆசிரியன்மார்க் கெல்லாம் எனது நன்றி உரிய தாகும்

இனிமேலும் பேச்சு வளர்த்தி உங்களைக் கடை வாசலில் நிறுத்திவைக்க நான் விரும்பவில்லை. கடவுள் துணையை எதிர்பார்த்து எனது பலசரக்குக் கடைக்குள் உங்களை விடுகி றேன். சரக்கின் தரம் இப்படித்தான் இருக்குமென்று இதற் குள் உங்களுக்குத் தெரிந்திருத்தல் கூடும். எனவே, ஏமாற்ற மடைவதற்கு இடமில்லை யல்லவா? நல்லது உள்ளே பிரவேசி யுங்கள்.

காந்தி ஆசிரமம்,
12—6—30.

ரா. கிருஷ்ணமூர்த்தி.

விஷய அட்டவணை




நூலாசிரியர்

பிரசுர கர்த்தர்களின் குறிப்பு.

"கல்கி"யின் கட்டுரைகள், கதைகள் முதலியன அடங்கிய இந்நூலைப் பற்றித் தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூற ஒரு முன்னுரை எழுதுவதென்பது கொல்லன் தெருவில் ஊசி விற்பதையே யொக்கும். எனினும், முன்னுரை யொன்று எழுதும் வழக்கத்தை யொட்டி இதை எழுதலானோம். தமிழ்ப் பத்திரிகா உலகத்துக்கு நகைச் சுவை யென்பது ஒரு புதிய வார்த்தை யெனக் கூறுவது மிகை யாகாது. அபூர்வமாக வெளியாகும் சில ஹாஸ்யக் கட்டுரைகளும் கீழ்த்தரமானவையாயும், உயர்ந்த நோக்க மற்றவையாயும் ஆபாஸமான பொருள் கொள்ளக் கூடியனவாகவு மிருக்கின்றன. ஹாஸ்யக் கட்டுரைகள் முதன் முதலில் "ஆனந்த விகட"னில் தான் தோன்ற வாரம்பித்தன வென்பதைப்பற்றி நாம் கூற வேண்டுவதில்லை. சென்ற இரண்டு வருட காலமாகக் "கல்கி" யின் இனிய கட்டுரைகளும், கதைகளும், நாடகங்களும் "ஆனந்த விகட"னில் வெளிவந்துகொண் டிருக்கின்றன. கல்கியின் கட்டுரை ஒவ்வொன்றிலும் ஓர் உயர்ந்த நோக்கம், ஒரு புதிய நகைச் சுவை மிளிரக் காணப்படும். அவை பொது மக்கள் எளிதில் உணர்ந்துகொள்ளக் கூடியனவாயும் அறிஞர்

கள் போற்றத் தக்கனவாயு மிருக்கின்றன. "கல்கி"யின் ஹாஸ்யம் எவர் மனத்தையும் புண்படுத்துவ தன்று. அது ஏக காலத்தில் நகைச் சுவை இன்ப மளித்துப் புத்தியும் புகட்டுவ தாகும். "கல்கி"யின் ஹாஸ்ய நடை தனிச் சிறப்புடையதாய் அவருக்கே உரித்தானது. "ஆனந்த விகட"னது பதினாயிரக் கணக்கான வாசகர்கள் "கல்கி"யால் எழுதப்பட்டவற்றைத் திரட்டிப் புத்தக ரூபமாக வெளியிட வேண்டுமென்று நீண்ட காலமாக எம்மை வற்புறுத்தி வந்ததற்கிணங்க இதை வெளியிடலானோம். "பூக் கடைக்கு விளம்பரம் வேண்டியதில்லை" யாகையால் நாம் இந்நூலைப்பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.

பிரசுர கர்த்தர்கள்.



எட்டிக்குப் போட்டி



விதவையல்லாதார் சகாயத்துக்கென்று ஏன் ஒரு சங்கமோ சபையோ சமாஜமோ ஏற்படுத்தக்கூடாது? இந்த எண்ணம் திடீரென்று நேற்று என் உள்ளத்தில் உதயமாயிற்று. ஒரு பத்திரிகையில் விதவைகளின் நிலைக்கு இரங்கி ஒரு பரோபகாரி எழுதியிருந்த கடிதத்தைப் படித்துக் கொண்டே வருகையில் இந்த எண்ணம் பீறிக்கொண்டு எழுந்தது. விதவைகளின் பரிதாப நிலையும், அவர்களுக் குள்ள கஷ்டங்களும் எனக்குத் தெரியாமலில்லை; அவற்றை நினைந்து நினைந்து குடங்குடமாகக் கண்ணீர் வடித்திருக்கிறேன். ஆனால், முன்னமே சொன்னதுபோல், நேற்று எக்காரணத்தினாலோ திடீரென்று விதவையல்லாதார்மீது எனக்கு இரக்கம் பிறந்தது. அன்பர்களே! இதுபோன்ற விஷயங்களில் காரணம் என்ன, காரியம் யாது என்று நோண்டிக் கேட்கக் கூடாது; தெரியுமல்லவா?

கைம் பெண்கள் என்றால் ஏதோ கிள்ளுக் கீரைபோல் சிலர் பேசுகிறார்கள். ஆயினும் அவர்களுடைய அபாரமான வல்லமையைப் பற்றி யாரேனும் சிந்தித்ததுண்டா? ஆக்கவும் அழிக்கவும் வல்லவர்கள் அவர்கள்தாம் என்று கூறினால் அது 100-க்கு 100 பங்கும் உண்மையேயல்லாது வேறில்லை; நம்பமாட்டீர்களா? நல்லது கேளுங்கள்.

உங்கள் வீட்டில் ஒரு கலியாணம் நேரிடுகிறது;—நேரிடவில்லை என்று அபசகுனம்போல் மறுத்துச் சொல்லாதீர்கள். நேரிடுகிற

தென்று வைத்துக் கொள்ளுங்கள்—நிச்சய தாம்பூலம் பெறுவதற்கு நீங்கள் கும்பலாகப் புறப்படுகிறீர்கள். அந்த ஊரிலே உங்களுக்கு ஆகாத ஏழைக் கைம்பெண் ஒருத்தி இருந்தால் இக் கலியாணத்தை நிறுத்திவிடலாம். அந்த அம்மாள் இதற்காகப் பெரிய சூழ்ச்சி எதுவும் செய்யவேண்டியதில்லை. நிச்சய தாம்பூலத்துக்கு நீங்கள் புறப்படும் சமயம் பார்த்து அவள் எதிரில் வந்தால் போதும்! நீங்கள்பட்ட சிரமமெல்லாம் வீணுயின! கலியாணம் நின்று போயிற்று. இப்போது சொல்லுங்கள்; கைம்பெண்ணல்லாதாரின் கதிமோக்ஷத்திற்கு வேலை செய்ய ஒரு சங்கமோ, சபையோ, சமாஜமோ அவசியமா, இல்லையா?

பிராமணர்களுடன் போர் தொடுக்கும் பிராமணரல்லாத நண்பருக்கு ஒரு வார்த்தை. ஒரு பார்ப்பனருடன் சண்டை தொடங்குவதற்கு முன் ஐயா, நீர் மூன்று முறை யோசித்தல்வேண்டும். உமது குடும்பத்திலே எவ்வித சுப காரியமும் நடக்கவொட்டாமல் தடுத்துவிடப் பிராமணர் ஒருவரால் முடியுமென்பதைக் கவனித்தீரா? இதற்காக அவர் தடி கம்புகளுடன் ஆள் சேர்த்துக் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. நீர் நல்லவேளை பார்த்துக் கிளம்பும் சமயம் மட்டும் அவருக்குத் தெரிந்தால் போதும். பின்னர் உமது ஆசை நிராசைதான்!

ஓ! வாணியச் செட்டியாரே! நீர் பார்ப்பனரைப் பார்த்துப் பொருமை கொள்ள வேண்டாம். அவருக் குள்ள சக்தி உமக்கும் இல்லாமற் போகவில்லை. ஆனல் எண்ணெய்க்குடம் ஒன்றுமட்டும் நீர் தலையில் தூக்கிக் கொள்ளவேண்டும். உமது அடுத்த வீட்டுக்காரர் உமக் காகாதவ ரல்லவா? அவர் இவ்வருஷம் எள்ளு வியாபாரத்திற்காக முதன் முதல் இன்று நல்ல நாள் பார்த்துக்கொண்டு கிளம்புகிருர். உமது வீட்டுத் திண்ணையின் சாளரத்தின் வழியாகப் பாரும். ஆ! அவர் சட்டமாக உடை தரித்துக்கொண்டு காலில் செருப்பும், கையில் குடையுமாக இதோ கிளம்பி விட்டார். எண்ணெய்க் குடத்தைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு நடவும்.

அந்தோ! அவருடைய திருமுக மண்டலம் ஏன் இவ்வாறு சிறுத்துப் போகிறது? அதோ அவர் திரும்பி உள்ளே போய்விட்டார். இவ் வருஷம் வியாபாரத்தில் நஷ்டந்தான் என்பதில் அவருக்கு இனிச் சந்தேகமில்லை.

வாயில்லாப் பிராணிகளாம்! நன்று, நன்று; மனிதர்களின் வாழ்க்கையை அமைப்பதில் வாயில்லாப் பிராணிகளுக்கு எவ்வளவு சக்தியுண்டு, தெரியுமா? கருட தரிசனத்தின் மகிமையைப்பற்றி நான் எழுதத் தொடங்கி விட்டால், அப்புறம் எங்கே போய் நிறுத்துவ தென்பதே எனக்குத் தெரியாமல் போய்விடும். அதற்கு இங்கே இடமில்லை. தனிப் புராணம் ஒன்று எழுத வேண்டும். ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். எங்கள் ஊரிலே கருட தரிசனம் ஆகாத கலியாணம் ஒன்று கூட நடந்ததில்லை. ஆனால் சுமங்கலிகளின் எண்ணிக்கையை விடக் கைம்பெண்களின் தொகைதான் எங்களூரில் அதிகம்! அதிலும் யாராவது வெளி ஊருக்குப் போவதற் கென்று கிளம்பி வாசலில் வந்து நின்றுவிட்டால் சுமங்கலி ஒருத்தி கூடக் கிடையாதோ என்று தோன்றும். சுமார் அரை மணி நேரம் காத்திருந்து விட்டு அமங்கலி யாரும் வராத நேரத்தில் ஆகாய விமான வேகத்தில் ஓடி வீதியைக் கடக்கவேண்டும்.

உலகிலேயே செவிக்கினிய குரல் எந்தப் பிராணியினுடைய தென்று என்னைக் கேட்டால்—கழுதையினுடைய குரல்தான் என்று சொல்வேன். நீங்கள் நகைக்கலாம்; ஆனால், கழுதையின் கத்தலைப்போல் சிறந்த சகுனம் வேறில்லை யென்பது உங்களுக்குத் தெரியுமா? வாழ்நாளில் காரியசித்தி பெறுவதற்குக் காரணமா யிருக்கும் ஓசை இனியதினும் இனிய சங்கீதம் ஏன் ஆகாது? கர்த்தப சுரத்தின் தனிப்பெருஞ் சிறப்பு இதுவே யாகும். வாழ்க்கையில் அடிக்கடி தோல்விகளடைந்து கஷ்டப்படுவோர் நான் சொல்வதைக் கேளுங்கள். கழுதைகள் நிறைய வளர்க்கும் வண்ணான் வீட்டுக்குப்

பக்கத்தில் சென்று குடி யிருங்கள். நீங்கள் காரியசித்தி பெறுவது திண்ணம்.

குதிரைப் பந்தயக் கடைகளில் தினந்தோறும் பணம் தோற்றுவிட்டு "மூன்ரும் பேஸ்து" வைத்த முகத்துடன் வீடு திரும்பும் நண்பர்களுக்கு ஒரு யோசனை கூறுகிறேன். இக்காலத்தில் சில பெரிய மனிதர்கள் புனுகுப் பூனை, முயற்குட்டி, நாய்க்குட்டி முதலிய பிராணிகளைப் பிடித்துச் செல்வமாய் வளர்க்கிறார்கள். இவர்கள் தெரியாதவர்கள். நீர் எங்கேனும் சென்று, எப்பாடாவது பட்டு, ஒரு நரியைப் பிடித்துக்கொண்டுவந்து கூட்டில் அடைத்து வளர்த்து வாரும். தினம் காலையில் எழுந்ததும் அதன் முகத்தில் விழித்துவிட்டு வெளிக் கிளம்பும். அன்று நீர் பந்தயத்தில் ஜெயிக்கா விட்டால் என்னைக் கேளும்—இல்லை; தப்பு, வாபீஸ் வாங்கிக் கொள்கிறேன்—நரியைக் கேளும். இரவில் நரி ஊளையிடுமே, தூக்கம் கெட்டுப் போகுமே என்பீரோ? அதற்கு நான் என் செய்வேன்? சும்மா கிடைக்குமோ சோணசலன் பதம்? ஆனால் ஒன்று ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும். நீர் நரி முகத்தில் விழித்தெழுந்தாலும், புறப்படும்போது பூனை குறுக்கே போய்விட்டால் உமது தோல்விக்குப் பொறுப்பாளி நானுமல்ல, நரியுமன்று. ஆதலின் வீட்டிலே பூனைக் குட்டிகள் ஏதேனும் இருந்தால் முதலில் அடித்துத் துரத்திவிடும். இது கொஞ்சம் பிரயாசையான காரியந்தான்; இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் கருமமே கண்ணாயினர் மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், இத்தியாதி, இத்தியாதி.

இவ்வளவு தூரம் எழுதியான பிறகு என் சொந்த அனுபவத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடாமல் விட மனம் வருமா? நான் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது என் சிற்றன்னையின் வீட்டில் சிலநாள் இருக்க நேர்ந்தது. அந்த அம்மையின் புதல்வன் மணி என்பவன் இரண்டாவது பாரத்தில் படித்துக்கொண்

டிருந்தான். ஒரே பையனுதலால் அன்னைக்குப் பிள்ளையிடம் அபார பிரேமை. இத்துடன் சகுனம் பார்ப்பதில் அந்த அம்மாளுக்கு விசேஷ பிரமையுண்டு. தினப்படி பையன் பள்ளிக்கூடம் போகும் போதுகூட சகுனம் பார்த்துத்தான் அனுப்பி வைப்பாள். வெறும் நாளிலேயே இப்படி யென்ருல் பரீட்சையும் சேர்ந்து விட்டால் கேட்க வேண்டுமா ? முதல் நாள் பையனுக்கு இங்கிலீஷ் பரீட்சை. எனக்கு அன்று விடுமுறை யாதலால் வீட்டிலேயே இருந்தேன். என் சிற்றன்னை அன்று காலையில் அவசா அவசரமாக வீட்டுக் காரி யங்களை முடித்துப் பையனுக்குத் தலைவாரிப் பின்னி, குளிப்பாட்டி, சாதம்போட்டு உடையணிந்து விட்டாள். இதற்குள் 10-மணி ஆகி விட்டது. பையனை உள்ளே இருக்கச் செய்து வாசலில் வந்து பார்த்துவிட்டு "வா, வா எவரும் வரவில்லை ஓடி வா" என்ருள் தாயார். ஆனல் பையனுக்குக் கொஞ்சம் சுறுசுறுப்பு அதிகம். அவன் வாசற்படிக்கு வருவதற்குள் "உள்ளே போ கொஞ்சம் தீர்த் தம் சாப்பிடு" என்று தாயார் கூறினுள். நான் வாசலில் போய்ப் பார்த்தபோது விதவை ஒருத்தி சந்து திரும்பி வந்துகொண் டிருந் தாள். அடுத்த முறை பையன் கிளம்புகையில் ஒற்றைப் பிராமணர் ஒருவர் வந்தார். என் சிற்றன்னை பிராமணுபிமானம் நிரம்ப உள்ள வள்தான். ஆனல் அந்தப் பிராமணருக்கு அன்றைய தினம் அவள் கொடுத்த சாபங்களில் ஒன்றேனும் பலித்தால்—நல்லது, அந்த மனிதருடைய உயிரை எந்த துரதிர்ஷ்டம் பிடித்த கம்பெனியாவது இன்ஷியூர் செய்திருந்தால், அது மண்ணை வாரிப்போட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

இதற்குள் 10 அடித்து 20 நிமிஷம் ஆகிவிட்டது. கடைசியாக "அப்பா ஓடி வா! தண்ணீர்க்குடத்துடன் சுமங்கலி வருகிருள்; திவ்ய மான சகுனம்" என்று தாயார் கூவினுள். பையன் அவசாமாகப் புறப் பட்டுச் சென்ருன். சந்து திரும்பும் வரையில் மேற்படி சுமங்கலி யைத் தவிர வேறு யாரும் எதிர்ப்படவில்லை. "நல்ல பேஷான சகு னம். குழந்தை நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்குவான், பார்!" என்

ருள் குதூகலத்துடன் என் சிற்றன்னை. எனக்கு மட்டும் கொஞ்சம் சந்தேகமாகவே யிருந்தது. ஆனால் சகுனத்தின் பலன் இப்படி யாகு மென்று நான் எதிர் பார்க்கவே இல்லை. கால்மணி நேரம் ஆனதும் பையன் போனதுபோலத் திரும்பி வந்துவிட்டான். எங்களிருவ ருக்கும் தூக்கி வாரிப்போட்டது. "என்ன? என்ன?" என்று இரு வரும் ஏககாலத்தில் கேட்டோம். "நான் போவதற்குள் மணி அடித்து 15-நிமிஷம் ஆகிவிட்டது. ஆகையால் பரீட்சைக்கு எழுத விடமாட்டேன் என்று வாத்தியார் சொல்லி விட்டார்!" என்றான் பையன். சிற்றம்மை கோபித்துக் கொள்வாள் என்று தெரிந்தும் என்னால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவே யில்லை.

உண்மைச் சம்பவத்தை உரைத்தான பின்னர், ஒரு பழங் கதையையும் குறிப்பிட வேண்டாமா? வைகறைப்போதில் இரட் டைக் காக்கையைக் கண்டால் நல்ல சகுனமென்று ஓர் இராஜா வுக்கு யாரோ சொன்னார்களாம். அவ்வரசன் தன் சேவகன் ஒரு வனைக் காலையில் இரட்டைக் காக்கை உட்கார்ந்திருக்குமிடம் பார்த்துவந்து சொல்லும்படி கட்டளையிட்டான். அவ்வாறே அச் சேவகன் ஒருநாள் காலையில் ஜோடி காக்கைகளை ஓரிடத்தில் கண்டு ஓட்டமாக ஓடிவந்து அரசனிடம் தெரிவித்தான். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, இராஜா அங்கே போவதற்குள் ஒரு காக்கை பறந்து போய் விட்டது. அரசன் கோபங்கொண்டு சேவகனை நையப் புடைத்தான். அடிபட்ட சேவகன் இராஜனைப் பார்த்து 'அரசே! வைகறையில் இரட்டைக் காக்கை பார்த்ததற்கு எனக்குக் கைமேல் பலன் கிடைத்து விட்டது!' என்றான். இந்தக் காலத்திலே என்றால் அந் தச் சேவகனை அதிகப் பிரசங்கித்தனத்திற் கென்று வேலையைவிட் டுத் தள்ளி யிருப்பார்கள். அதிகார வர்க்கத்தின் அடிப்பீடத்தி லுள்ள சிறு தெய்வங்கூட இக்காலத்தில் தான் செய்த தவறை ஒப் புக்கொள்வதில்லை. ஆனால் அந்தக்காலம் வேறு; எனவே, அரசன் வெட்கிப்போய்ச் சேவகனை மன்னிப்புக் கேட்டுக்கொண்டான் என்று சொல்லப்படுகிறது. நிச்சயமாகத் தெரியாததலால் 'சொல்

லப்படுகிறது' என்று கூறினேன். இம்மாதிரி விஷயங்களில் மிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டு மல்லவா?

இப்படி யெல்லாம் எழுதுவதால், சகுனம் பார்க்கக் கூடா தென்று நான் சொல்வதாக நினைக்கிறீர்களோ? அதுதானில்லை. கொஞ்சம் பொறுங்கள்; "அவசரப் படேல்" என்று ஔவையாரோ, வேறு யாரோ சொல்லி யிருப்பதாக ஞாபகம். என்னுடைய கருத்து என்னவென்றால் சகுனம் மட்டும் பார்த்தால் போதாது என்பதே. ஆம், சகுனம் மட்டும் பார்த்தால் போதாது. நாள், நட்சத்திரம், திதி, மாதம், பட்சம், கிழமை, ராகுகாலம், வாரசூலை, தியாஜ்யம் இத்தி யாதிகளும் பார்க்கவேண்டும். நமது முன்னோர்கள் இருக்கும் திக்கு நோக்கி (எந்தத் திக்கு என்பதுதான் தெரியவில்லை) இரண்டு கரங் களையும் கூப்பித் தண்டனிடுகிறேன். ஆகா! அவர்கள் நமக்குச் செய் திருக்கும் நன்மைதான் என்ன? வருஷம் 365-நாளில் ஏறக்குறைய 300-நாள் நமக்கு விடுமுறை யளித்திருக்கிறார்கள். இக்காலத்தில் வாரத்திற்கு ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கிடைப்பதே கஷ்டமா யிருக்கிறது. ஆனால் நமது முன்னோர்கள் செய்துவைத்த ஏற்பாடு எவ்வளவு அழகானது பாருங்கள்! மாதங்களிலே மார்கழி யும், புரட்டாசியும் கெட்டவை. ஒரு மாதத்தை எடுத்துக்கொண் டால் அமாவாசை பாட்டிமுகம், நவமிதிதி இவை உதவா. பின்னர் பரணி, கார்த்திகை நட்சத்திரங்கள். வாரத்திலோ வெள்ளிக்கிழமை கலக நாள். சனிக்கிழமை செவ்வாய்க்கிழமை ஆகா. செவ்வாயோ வெறுவாயோ என்று கேட்டதில்லையா? பின்னர் மரணயோகமும்கரி நாளும். மாதம், திதி, நட்சத்திரம், கிழமை, யோகம் எல்லாம் கூடிய நாள் ஒன்றிருந்தால், அதில் ராகுகாலம், தியாஜ்யம், பிரதோஷம் இந்த வேளைகள் கூடா. இவ்வளவு விபத்துக்களையும்கடந்து ஒருவன் ஏதேனும் காரியம் செய்யப்போனால், யாரேனும் ஒரு சிறு தும்மல் தும்மிவிட்டால் போதும்! அன்று விடுமுறைதான். ஆகா! இவ்வள வும் பூரணமாக அமுலிலிருந்த அந்தப் பழைய காலம்! நினைத்தால்

நாவில் ஜலம் சொட்டுகிறது. இப்போது வரவரக் கலியல்லவா முற்றி வருகின்றது?

ஐயன்மீர்! ஒரு சந்தேகங் கேட்கலாமா? நல்லது, பயமுறுத்த வில்லை. கேட்டே விடுகிறேன். சுமார் 160 வருஷங்களுக்கு முன்பு கிளைவ் என்னும் காலாடிப்பையன், பிழைப்புக்கு வழிதேடி, இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டானே? அவன் நாளும், நட்சத்திரமும், மரணயோகமும், ராகு காலமும் பார்த்துக்கொண்டா புறப்பட்டான்? அவன் இந்தப் பாரத நாட்டிலே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் பலமாக நிலை நாட்டி விடவில்லையா? அவன் நாட்டிய அந்த விருட்சத்தைப் பெயர்த்து விடுவதற்காக மிதவாதிகளும், அமிதவாதிகளும், உத்தியோகவாதிகளும், வகுப்புவாதிகளும், காங்கிரஸ்வீரர்களும், கிலாபத் தீரர்களும், வெடிகுண்டு சூரர்களும், அண்டிக் கெடுப்பதாகச் சொல்லி சண்டித்தனம் செய்யும் குண்டுணி நாரதர்களும் இன்னும் யாராரோ எப்படி எப்படியோ முயன்றும் அதை அசைக்கக்கூட முடியவில்லையே, அது ஏன்? இந்நாட்டுச் சுதேசமன்னர்கள் தினம் பொழுது விடிந்தால் பஞ்சாங்கம் பார்ப்பதும், காக்கை வலமாகப் போயிற்று, இடமாகப்போயிற்று என்று கவனிப்பதுமாயிருந்தார்களே? அவர்கள் ஏன் தங்கள் நாடு நகரங்களையெல்லாம் அன்னியரிடம் ஒப்படைத்துச் சந்தியில் நின்றார்கள்? அவர்களுடைய தர்பார்களில் சாஸ்திரிகளும் ஜோதிடர்களும் பரம்பரை மான்யம் பெற்றுக்கொண்டு நூற்றுக் கணக்காக இருக்கவில்லையா?

வாசகர்கள் இந்தக் கட்டுரையை மிகவும் பாராட்டுவதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு. அவர்களுக்கு எவ்வித நீதியையும் புகட்ட இது உத்தேசிக்கப்படவில்லை என்பதே அந்தக் காரணமாகும். இதன் பொருட்டு நீங்கள் எனக்குச் செலுத்தும் நன்றியை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன், வந்தனம்.

பூரி யாத்திரை

டில்லியில் 1923ம் ஆண்டில் நடந்த விசேஷ காங்கிரஸைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கேள்விப்படாவிட்டால் அது என்னுடைய தவறன்று. நல்லது, இப்போதேனும் தெரிந்து கொள்ளுங்கள். அந்தக் காங்கிரஸில் பெரிய பெரிய தலைவர்களெல்லாரும் கூடி ஒத்துழையாமை இயக்கத்தை ஏகமனதாகக் கழுத்தைத் திருகிக் கொன்றார்கள். அது "கிறீச்" என்று சத்தம்போடவும் இடங்கொடுக்கவில்லை. ஓர் அமுக்கு, ஒரு திருகு—அவ்வளவுதான். உயிர் போய்விட்டது.

விசேஷ காங்கிரஸில் இந்தப் பெரிய விசேஷத்தைப் பார்த்த பின்னர் கயாவுக்குப் போகவேண்டுமென்று எனக்கு எண்ணம் தோன்றிற்று. என் மூதாதைகளுக்கும் ஒத்துழையாமை இயக்கத்துக்கும் சேர்ந்தாற்போல் சிரார்த்தம் செய்துவிடலாமே யென்ற யோசனை. நான் கேள்விப்பட்டிருந்த வேறொரு விஷயம் இந்த யோசனையை உறுதிப்படுத்திற்று. அதாவது கயாவில் சிரார்த்தம் செய்துவிட்டால் பிதிர்க்கள் ஒரே யடியாகக் கரைசேர்ந்து விடுகிறார்களென்றும் அப்புறம் சிரார்த்தமே செய்யவேண்டியதில்லை யென்றும் யாரோ எனக்குச் சொல்லியிருந்தார்கள். எனவே கயா யாத்திரை நல்ல லாபகரமான வியாபாரமாகிற தல்லவா? (பின்னால் எனக்கேற்பட்ட ஏமாற்றத்தைக் குறித்துச் சொல்லி நேயர்களுக்கு துக்கமுண்டுபண்ண விரும்பவில்லை. இந்த வியாபாரம் முதலோடு நஷ்டமாகி விட்டதென்று குறிப்பிடுவதே போதுமானது. நான் நேரிலேயே பிதுர்லோகத்திற்குச் சென்று என் மூதாதைகளைக் கையைப் பிடித்துக் கரையேற்றி விட்டு வந்ததாகச் சொன்னாலும் எங்கள் ஊர் சாஸ்திரிகளை சம்சார சாகரத்தினின்று கரையேற்றுவதற்காக சிரார்த்தம் செய்தே தீரவேண்டி யிருக்குமென்பதில் சந்தேகமில்லை.)

ஆகவே, டில்லியிலிருந்து கிளம்பி வழியில் மதுரை, ஆக்ரா, பிரயாகை, காசி முதலிய க்ஷேத்திரங்களில் இறங்கிப் புண்ணியத்தை மூட்டை கட்டிக்கொண்டு கயா வந்து சேர்ந்தோம். கயாவில் காங்கிரஸ் காரியதரிசிக்கு ஓர் அறிமுகக் கடிதம் கொண்டுவந்திருந்தோம். அவர் ஒரு நல்ல யுக்தி சொன்னார். அதாவது கயா சிரார்த்தத்தைக் "கண்டிராக்ட்" விட்டு விடுங்கள் என்றார். முதலில் எனக்குப் பயமாயிருந்தது. "கண்டிராக்ட்" வேலைகளைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். உதாரணமாக சாலைக் "கண்டிராக்டை" எடுத்துக் கொள்ளுங்கள். ஆயிரம் ரூபாய்க்கு ஒரு சாலையை நான் 'கண்டிராக்ட்" எடுக்கிறேன். (இப்போதைக்கு எனக்கு இத்தகைய அதிர்ஷ்டம் கிடைக்க மார்க்கமில்லை யென்பது உண்மையே. இருந்தாலும், கூடிய சீக்கிரத்தில் என்னுடைய மாமாவுக்கு அத்தான் பிள்ளையின் மைத்துனர் ஒருவர் ஜில்லா போர்டு அங்கத்தினராகலா மென எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவருக்கு வோட் சேகரித்துக் கொடுக்கும் உத்தேசமும் எனக்குண்டு. பின்னர், ஆயிரம் ரூபாய் சாலைக் "கண்டிராக்ட்" ஒன்று நான் எதிர்பார்ப்பது அதிக ஆசையாகுமா?)

நல்லது; ஆயிரம் ரூபாய்க்கு ஒரு சாலையை நான் 'கண்டிராக்ட்' எடுக்கிறேனென்று வைத்துக் கொள்ளுங்கள். இதில் என்ஜினியர், ஓவர்ஸியர், சாலைமேஸ்திரி முதலியோருக்கு வீதா சாரப்படி கமிஷன் பகிர்ந்து கொடுத்தால் பாக்கி 500 ரூபாய்தான் மிஞ்சும். எனவே கண்டிராக்டில் எனக்கு லாபம் வேண்டுமென்றால் சாலை வாயில் மண்தா னல்லவா?—ஐயோ! தப்பு! சாலைக்கு வேண்டியது மண் தானே? எனக்கு நல்ல லாபம் வேண்டுமென்றால் சாலைக்கு ஒருபிடி மண் கூடக் கிடைக்காதல்லவா?

காங்கிரஸ் காரியதரிசி "கண்டிராக்ட்" என்று சொன்னதும் இந்த விஷயங்களெல்லாம் எனக்கு ஞாபகம் வந்தன. நம்முடைய பணப்பை என்ன சர்க்கார் கஜானாவா அல்லது தாலூகா போர்டு

ஜில்லா போர்டுகளைப் போல் ஊரார் பணம் நம்மிடம் கொட்டிக் கிடக்கிறதா, என்றெல்லாம் எண்ணிப் பயந்தே போனேன். ஆனால் காங்கிரஸ் காரியதரிசி வெகுவாக எடுத்துச் சொல்லி என்னுடைய பயத்தைப் போக்கினார். சாதாரண முறையில் சிரார்த்தம் செய்தால் அதற்கு ஒரு ரூபாய், இதற்கு இரண்டு ரூபாய், என்று ஏராளமாகப் பணம் பறித்துவிடுவார்களென்றும், அத்துடன் எழுந்திரு, உட்காரு மேற்கே பார், கிழக்கே திரும்பு என்று பிராணனை வாங்கிவிடுவார்களென்றும், "கண்டிராக்டில்" என்றால் சுலபமாய் முடித்துவிடலாமென்றும் சொன்னார். அவருடைய யோசனைக்குக் கடைசியில் இணங்கினோம். கண்டிராக்டை ஏலத்தில் விட்டதில் "கயாவாளி" ஒருவர் எங்கள் மூதாதைகளின் சஞ்சித கர்ம மூட்டைகளையெல்லாம் தாம் ஏற்றுக் கொண்டு அவர்களைக் கரையேற்றிவிடும் வேலையை ஏழரை ரூபாய்க்கு ஒப்பந்தமாக எடுத்தார்.

இதன் பொருட்டு அந்தக் "கயாவாளிக்கு" நான் என்றென்றைக்கும் நன்றியுடையவனா யிருப்பது நியாயமேயல்லவா? உண்மை தான். ஆனால் அவர் நான் சற்றும் எதிர்பாராத வேளையில் என் முதுகில் அப்படி ஓங்கி அறைந்திருக்க வேண்டியதில்லை யென்று இன்றளவும் உறுதியான அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன். இதைக் குறித்து எந்த மகா சபையிலும், எவ்வளவு மகா மகோபாத்தியாயர்கள் வரினும் வாதமிடச் சித்தமா யுள்ளேன். இதிலே இன்னும் பெரிய வயிற்றெரிச்ச லென்னவென்றால், "கண்டிராக்ட்" பேசிய ஏழரை ரூபாயைத் தவிர இன்னும் ஒரு ரூபாய் அதிகம் கொடுத்து இந்த அறை வாங்கிக்கொண்டதுதான். அந்த ஏழரை ரூபாயையும் முதலிலேயே கொடுத்துவிட்டோம். கோயிலில் அட்சய வட விருட்சத்தின் அடியில் சிரார்த்தம் எல்லாம் முடிந்து, இனி எழுந்து போகலாம் என்று நாங்கள் ஆசைப்படத் தொடங்கிய சமயத்தில், "கயாவாளி" ஆங்கிலம், வங்காளி, ஹிந்துஸ்தானி முதலிய பல பாஷைகளைக் கலந்து ஏதேதோ பேசினார். இந்தக் கதம்பப் பிரசங்கத்திலிருந்து, இன்னும் கொஞ்சம் "ஸம்திங்" நீட்டினால்

தான் சிரார்த்தம் பூரணமாகு மென்பது அவர் கருத்தென அறிந்து கொண்டோம். அவர் எங்கள் மூதாதைகளுக்குச் செய்யப் போகிற பெரிய சகாயத்தை யெண்ணி, தலைக்கு இன் னும் ஒரு ரூபாய் கொடுத்தோம். உடனேதான் அவர் மேற்சொன்ன வாறு முதுகில் அறைந்தார். அச்சமயம் பக்கத்தில் இருந்தவர்கள், சிரார்த்தத்தில் அவர் பூரண திருப்தி அடைந்ததற்கு அது அறிகுறி என்று விளக்கிக் கூறி யிராவிடின்,—என்? என்ன செய்திருப்போ மென நினைக்கிறீர்கள்? திருப்பி அறைந்திருப்போ மென்றா? ஒரு நாளுமில்லை. நாங்கள் அஹிம்சா தர்மக்காரர்கள் என்பது நினை விருக்கட்டும்.—திரும்பிக் கூடப் பாராமல் ஓடியே வந்திருப்போம்!

இவ்வாறு, கயாவில் ஏழேழு தலைமுறையைச் சேர்ந்த பிதுர்க் களைக் கரையேற்றி விட்டுக் கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்தோம். கல்கத்தாவைப்பற்றி நாங்கள் ஏற்கனவே பத்திரிகைகளில் படித் திருந்ததிலிருந்து, அந்நகரில் எங்கே பார்த்தாலும் வெடி குண்டு மயமா யிருக்குமென்று எதிர்பார்த்தோம். ஆனால் என்ன அதிசயத் தைச் சொல்வது? மருந்துக்குக் கூட ஒரு வெடி குண்டை நாங்கள் பார்க்கவில்லை. எங்களுடைய கொள்கைகளை யெல்லாம் கைவிட்டு லஞ்சம் கொடுப்பதாகக் கூடச் சொல்லிப் பார்த்தோம். அப்படியும் பயனில்லை. அதனால் எங்களுக் கேற்பட்ட ஏமாற்றத்தைச் சொல்லி முடியாது. கல்கத்தாவுக்குப் போய் வெடி குண்டு பார்க்க முடிய வில்லை யென்றால் — இது உயிருள்ள அளவும் மறக்கக் கூடிய சங்கதியா? இறந்த பின்னருங் கூடத் தமது நெஞ்சு வேகுமோ என்னவோ, தெரியவில்லை யென்று என் நண்பர் கூறினார். (தேக தத் துவ சாஸ்திரிகள் இதைக் கவனிக்க வேண்டும். குறைந்தது இரண் டாயிரம் ரூபாய் கொடுத்தால் என் நண்பருடைய வேகாத நெஞ்சை அவர்களிடம் ஒப்புவிக்க ஏற்பாடு செய்யக்கூடும்.) கல்கத்தாவி லிருந்து பூரிக்குப் புறப்பட்டோம்.

உண்டிக் கடைகளிலே கோதுமை மாவும், புழுதியும் சம பாக மாகக் கலந்து நெய் என்று அவதூறாகக் கூறப்படும் திராவகத்தில்

வறுத்து எடுத்த ஒரு பலகாரத்துக்குப் பெயர் பூரி;—பிராமணோத்தமர்களுடைய குக்ஷியில் தங்கள் அன்னம் சிறிது சேர்வதால், நீலகிரி மலையை வெள்ளைக்கார துரைமார்கள் வளைத்துக் கட்டியிருப்பதைப் போல் சுவர்க்கத்தில் மைல் கணக்காக வளைத்துக் கட்டி "அநுமதியின்றி உள்ளே நுழையக்கூடாது" என்று விளம்பரம் தொங்கவிட்டு விடலாமென நம்பும் தனிகர்கள், அப்படி அந்தப் பிராமணர்கள் சாப்பிடுவதற்குச் சிரம பரிகாரமாக, வயிற்றின் அளவை யனுசரித்து, பெரியவர்களுக்கு ஒரு ரூபாய், மைனர்களுக்கு அரை ரூபாய் என்றோ, அல்லது இந்த வீதா சாரப்படி அதிகம் குறைவாகவோ கொடுக்கும் தட்சணைக்குப் பெயர் பூரி;—மத்திய இந்தியாவில் கீழ்க் கடற்கரை யோரத்திலுள்ள ஒரு புண்ணிய க்ஷேத்திரத்தின் பெயர் பூரி;—இந்த மூன்றுக்கும் ஒரே பெயர் ஏற்பட்டிருப்பதின் இரகசியம் என்னவென்று உங்களில் யாருக்காவது தெரியுமா? தெரியாவிடில் அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஏனெனில் அது எனக்கும் தெரியாது!

பூரிக்கு—மேலே மூன்றாவதாகச் சொன்ன பூரிக்கு—புறப்பட்டோம். ஹாவ்ரா ஜங்ஷனை யடைந்து நேரே பூரி ஜகந்நாதத்துக்கே டிக்கட் வாங்கத் தீர்மானித்தோம். "தீர்மானித்தோம்" என்று காரணத்துடனேதான் கூறுகிறேன். ஏனெனில் தீர்மானிப்பது எளிது; தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்றுவது அவ்வளவு எளிதன்று. அதிலும் இந்தியாவிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களில் டிக்கட் வாங்க வேண்டுமென்னும் தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்றுவது மிக மிகக் கஷ்டமாகும். இந்த இரண்டு துறையிலும் எனக்குக் கொஞ்சம் அனுபவமுண்டு. ஆதலின் இம்மாதிரி காரியங்களில் "நான் முந்தி" என்று முன்வரும் கெட்ட வழக்கம் என்னிடம் கிடையாது. "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்னும் முதுமொழியின் உண்மையை நன்குணர்ந்தவ னாதலால் பேசாதிருந்து விடுவேன்.

முக்கியமாக இந்த ரயில் பிரயாணத்தின்போது நானும் எனது நண்பரும் ஒருவிதமாகத் தொழில் பிரிவினை செய்துகொண் டிருந்

தோம். தீர்மானம் செய்வதெல்லாம் நான்; காரியத்தில் கொண்டு வருவதெல்லாம் அவர். டிக்கட் வாங்கவேண்டுமென்று நான் தீர்மானம் செய்வேன்; அவர் டிக்கட் வாங்கிக்கொண்டு வருவார். ஓரிடத்தில் சமையல் செய்யவேண்டுமென்று நான் தீர்மானிப்பேன்; அவர் சமையல் செய்து விடுவார். இந்த நல்ல வழக்கம் காங்கிரஸ் தொண்டனாயிருந்த காலத்தில் நான் பயின்று கொண்டேனென்பதை உங்களுக்குச் சொல்லவேண்டும். காங்கிரஸுக்கு வெளியூர்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திறங்குவார்கள். ரயிலை விட்டிறங்கியதும் அவர்கள் பிளாட்பாரத்தில் மூட்டைகளையும் பெட்டிகளையும் குவித்துக்கொண்டு நிற்பார்கள். உடனே நாலைந்து தொண்டர்களை அங்கே காணலாம். அவர்களில் தலைவரா யிருப்பவர் மூட்டை, பெட்டிகள் எல்லாம் மோட்டாருக்குப் போக வேண்டுமென்று தீர்மானம் செய்வார். மற்றத் தொண்டர்கள் அத்தீர்மானத்தை ஆமோதிப்பார்கள். அத்துடன் தொண்டர்கள் கடமை தீர்ந்தது. வந்த பிரதிநிதிகள் தத்தம் மூட்டைகளையும், பெட்டிகளையும் தூக்கிக் கொண்டு போய் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும்.

இப்போது; பூரிக்கு டிக்கட் வாங்கத் தீர்மானித்தேன். என் நண்பர் அதை நிறைவேற்றி வைத்தார். இருவரும் வெகு பிரயாசையின் பேரில் வண்டியில் இடம் பிடித்து உட்கார்ந்தோம். இங்கு எனது இந்த நண்பரைப் பற்றிக் கொஞ்சம் கூறுதல் அவசியமாகிறது. அவர் ஓர் அய்யங்கார். நேயர்கள் இதை நன்றாக மனதில் பதித்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் அவர் அய்யங்கார் என்னும் விஷயம் மிகவும் முக்கியமானது. பின்னால் வரும் நிகழ்ச்சிகளுக் கெல்லாம் அதுதான் ஆதாரம் என்று சொல்லலாம். ஆம்; அவர் அய்யங்கார்; அதிலும் வைதிக வைஷ்ணவர். நெற்றி என்பது திருநாமம் போட்டுக் கொள்வதற்காகவே ஏற்பட்டதென்னும் கொள்கை யுடையவர். நானோ "நீறில்லா நெற்றி பாழ்" என்னும் மொழியை வேதவாக்காகக் கொண்டவன். எனவே, அவருடைய

விஸ்தாரமான நாமத்தைப் பார்க்கும்போதெல்லாம், ஏன்? எனக்குக் கொஞ்சம் ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். என்னுடைய பாட்டனுருக்குப் பாட்டனும், அவருடைய பாட்டனுருக்குப் பாட்டனும் சைவ வைஷ்ணவச் சண்டைகள் எவ்வளவோ போட்டிருக்கவேண்டும். நாங்கள் அவர்களுடைய வழியில் தோன்றியவர்கள் தாமே? எனவே, எவ்வளவு தான் மூடி மறைத்தாலும் அந்த இயற்கை விரோத உணர்ச்சி சிறிதேனும் இல்லாமற் போகுமா? இந்நிலைமையில் எங்களுக்குள் சண்டை மூண்டுவிட்டதென்றால் அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

நானும் அவரும் அத்தியந்த நண்பர்கள் தாம். சைவ, வைஷ்ணவச் சண்டைகள் எல்லாம் சுத்த ஆபாசம் என்று உறுதிகொண்டவர்கள்தாம். ஆயினும் இரத்தத்தில் ஊறிப்போன விரோத பாவம் முழுதும் போய்விடுவது எளிய காரியமா? சத்தியம் பெரிதா, அஹிம்சை பெரிதா என்பதைக் குறித்து எங்களுக்குள் விவாதம் எழுந்தது. நான் சத்தியத்தில் அடங்கியது அஹிம்சை என்றேன். அவர் அஹிம்சைக்குள் சத்தியம் அடக்கம் என்றார். நான் மகாத்மா கூறியதை எனக்காதாரமாக எடுத்துக் காட்டினேன். அவரும் மகாத்மா மற்றோரிடத்தில் மொழிந்திருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டினார். இந்த விவாதம் வளர்ந்து "அயோக்யன்" "மடையன்" என்பது போன்ற பதப் பிரயோகங்கள் சரமாரியாக நிகழ்ந்த பிறகு ஏறக்குறைய அடிதடிக்கு வந்துவிட்டபோதுதான் நாங்கள் விழித்துக் கொண்டோம். இரண்டுபேரும் ஏகமனதாக ரயில்காரன்மீது பாரத்தைப் போட்டோம். வழக்கம்போல வண்டிக்குள் ஒரு மூலையில் பெட்டிகளையும் படுக்கைகளையும் அடுக்கி அதன் உச்சியில் ஒருவரும் வண்டிப்படியில் நின்றுகொண்டு மற்றொருவரும் பிரயாணம் செய்ய நேர்ந்திருந்தால் இத்தகைய விவாதம் எழுந்தே யிராதல்லவா? சேர்ந்து உட்கார இடங் கிடைத்ததினாலல்லவா இவ்வளவு விபத்தும் ஏற்பட்டது? இவ்வாறு யோசித்து, இருவரில் ஒருவர் வேறு வண்டிக்குப் போய்விடவேண்டுமென்று தீர்மானித்தேன். வழக்கம்போல் நண்பர் தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்றினார்.

"என்ன வீண் வளர்த்தல்?" என்று வாசகர்களில் சிலர் முணு முணுக்கிறார்கள். அன்பர்களே! சற்றுப் பொறுங்கள். இந்த விவரங்கள் எல்லாம் எவ்வளவு முக்கியமானவை என்பதைப் பின்னால் நீங்களே தெரிந்து கொள்வீர்கள். அதன் பின்னர் இருவரும் வெவ்வேறு வண்டிகளிலேயே பிரயாணம் செய்தோம். கடைசியாகப் பூரிக்கு இன்னும் நாலு ஸ்டேஷன் பாக்கி யிருந்தபோது ஒரு விநோதத்தை நான் கவனித்தேன். எனக்கருகில் உட்கார்ந்திருந்த இருவர் என்னைச் சுட்டிக் காட்டிக் காட்டி உக்கிரமான குரலில் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். முதலில் நான் பயந்து போனேன். அவர்கள் இருவரின் முகம், ஜாடை, பேச்சின் தொனி இவற்றைப் பார்த்தால் ஏதோ என்னைக் கொலை செய்யத் தீர்மானித்திருப்பவர்கள் போலவே தோன்றிற்று. நல்ல வேளையாகப் பக்கத்திலிருந்த ஒரு கனவானை விசாரித்து அவ்விருவரும் பூரி க்ஷேத்திரத்தின் பண்டாக்கள் என்றும் அவர்களில் எவர் என்னை அழைத்துப்போவது என்பதைப் பற்றிச் சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறார்க ளென்றும் அறிந்தேன். இந்த ரசமான சண்டையில், அடியேனுடைய அபிப்பிராயத்தையோ, சௌகரியத்தையோ அவர்களில் எவரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. என் விஷயத்தில் இவ்வளவு உரிமை கொண்டாடுகிறவர்கள் என்னைப் பாதி பாதியாகப் பங்கிட்டுக் கொள்ளத் தீர்மானித்துவிட்டால் என்ன செய்வதென்று எண்ணியபோது என் கதி கலங்கிப் போயிற்று. இந்த சமயத்தில்தான் என் நண்பர் பக்கத்தி லில்லாமற் போனதின் தொல்லையை உணர்ந்தேன். அவர் இருந்தால் தலைக்கு ஒருவராகவேனும் பங்குபோட்டுக் கொள்ளச் சௌகரியமாயிருக்குமல்லவா? ஏறக்குறைய நான் பயந்தபடியே நடந்தும் விட்டது.

கைதியைச் சேவகர்கள் இறக்குவதுபோல் அவ்விருவரும் என்னை வண்டியிலிருந்து கீழே இறக்கினார்கள். பெட்டியை ஒருவர் பிடுங்கிக்கொண்டார்; படுக்கையை மற்றவர் பறித்துக்கொண்

டார். இருவரும் தலைக்கு ஒரு கையைப் பிடித்துக் கொண்டு வெவ் வேறு திக்கில் என்னை இழுக்கத் தொடங்கினார்கள். தமிழ்நாட்டு ஜட்கா வண்டி ஓட்டிகளும், மோட்டார் பஸ்காரர்களும், தேர்தல் ஏஜெண்டுகளும் இந்தப் பண்டாக்களின் பாதாரவிந்தத்தில் அமர்ந்து பாடங் கற்றுக் கொள்ளவேண்டுமென்னும் எண்ணம் ஒரு புறத்தில் எனக்குண்டாயிற்று. மற்றொரு புறத்தில், பூரி க்ஷேத்திரத்துப் பண்டாக்கள் நம்மை நேரே வைகுண்டத்துக்கே அனுப்பி விடாமல் விட்டு, நாமும் திரும்பி ஊருக்குப்போய்ப் பெண்டாட்டி பிள்ளை களைப் பார்க்கப் போகிறோமா என்ற கவலை தோன்றிற்று. (அந்த நெருக்கடியான நிலைமையில், நான் பிரம்மசாரி என்பதைக் கூட மறந்து விட்டேன்!)

இப்படிப்பட்ட தருணத்தில், என் நண்பர் வருவதைக் கண் டதும் எனக்கெவ்வளவு அளவிலா மகிழ்ச்சி ஏற்பட்டிருக்குமென் பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். அவர் தனியாக வந்தார் என்று நினைக்கிறீர்களோ? அது தானில்லை. இன்னும் இரண்டு பேருடன் வந்தார். பயப்படாதீர்கள்! அவர்கள் பண்டாக்களல்லர். அவர்களுடைய கதர் உடையையும் முகத் தோற்றத்தையும் கண்ட துமே இதை நான் நன்கறிந்து கொண்டேன். அவர்களிருவரும் ஆந்திர தேசத்தில் குண்டூர் ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். எங்களைப் போல் டில்லி விசேஷ காங்கிரஸுக்குப் போய்த் திரும்பி வருபவர் கள். அவர்களுள் கிழவருடைய பெயர் சேஷய்ய பந்துலு. வாலிப ருடைய பெயர் வேங்கடரமண ராவ். என்னைவிட்டுப் பிரிந்த பிறகு என் நண்பர்—அவர் மகராஜராய் இருக்கட்டும்!—இந்தத் தெலுங் கர்களைச் சிநேகம் பிடித்தாராம். இவர்கள் ஏற்கனவே பூரிக்ஷேத் திர அநுபவமுள்ளவர்களாதலால் என் நண்பரைத் தங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி சொன்னதுடன், என்னிடம் வந்ததைப் போல் அவர்களிடமும் வந்த பண்டாக்களை அதட்டி உருட்டி "டிமிக்கி" கொடுத்துவிட்டு இறங்கி வந்தார்களாம். இந்த விவரங் களெல்லாம் நான் பின்னர்த் தெரிந்துகொண்டேன். நிற்க.

மேற்படி மூவரும் கூட்டமாய் வந்ததும், என்னைப் பங்கு போட்டுக் கொண்டிருந்த பண்டாக்கள், "சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்" என்ற பாவனையாக "ஹூம்" என்ற சத்தத்துடன் பெட்டியையும் படுக்கையையும் கீழே எறிந்துவிட்டுப் போனார்கள். அவர்கள் கை கோர்த்துப் பேசிக் கொண்டு போனதைப் பார்த்தபோது, அடியேனைக் கூடிய சீக்கிரத்தில் சுடுகாட்டில் பார்க்கத் தங்கள் பலமான விருப்பத்தை ஏகமனதாகத் தெரிவித்துக்கொண்டு போனதாய்த் தோன்றிற்று. பிறகு நாங்கள் நால்வரும் ஒற்றைமாட்டு வண்டி ஒன்று பிடித்து அதில் ஏறிக் கொண்டோம். வண்டி மெதுவாக நகர ஆரம்பித்தது. கொஞ்ச தூரம் போவதற்குள் வண்டியைத் தொடர்ந்து ஒருவர் வந்து கொண்டிருக்கிறார் என்பதைக் கவனித்த சேஷய்ய பந்துலு திடுக்கிட்டுப்போனார்.

உண்மை யென்ன வென்றால், அந்த ஆந்திர தேசபக்தர்கள் பண்டாக்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டதாக எண்ணியது பகற் கனவே யல்லாது வேறில்லை. பின் தொடர்ந்தவர் மகா மகோபாத்தியாய இராமச்சந்திர பண்டா அவர்களின் குமாஸ்தா ஆவர். இந்த இராமச்சந்திர பண்டா பூரியில் பெரிய செல்வர்களுள் ஒருவர் என்றும் அவருக்கு அங்கே அநேக வீடுகளும், ஏழெட்டு குமாஸ்தாக்களும் உண்டென்றும் பின்னால் அறிந்தோம். ஆகா! அந்தக் குமாஸ்தாவின் பொறுமையை என்னவென்று சொல்வேன்? "பொறுத்தார் பூமி ஆள்வார்" என்னும் முதுமொழியின் அரிய உண்மையைப் பின்னால் நிகழ்ந்த சம்பவங்களிலிருந்து நான் நன்கறிந்தேன். நாங்கள் மைசூர் மகாராஜாவின் சத்திரத்துக்குப் போய்க்கொண்டிருந்தோமென்பதை இங்கே குறிப்பிடவேண்டும். பண்டாக்கள் தங்கள் ஜாகைகளுக்கு வரும்படி பரிந்தழைப்பார்களென்றும் அப்படிப் போய்விட்டால் இருக்கிற பணத்தை யெல்லாம் கறந்து கொண்டு விடுவார்களென்றும் ஸ்ரீமான் சேஷய்ய பந்துலு எங்களிடம் கூறி, மைசூர் மகாராஜா சத்திரத்துக்குப் போகும்படி வண்டிக்காரனைத் திட்டம் செய்திருந்தார். குமாஸ்தா அப்படியும் விடா

மல் தொடர்ந்து வருவதைக் கண்டதும் பந்துலுக்குக் கோபம் பொங்கிவிட்டது. என்னவெல்லாமோ சொல்லித் திட்டினர். குமாஸ்தா பொறுமையாக "நீங்கள் தேசபக்தர்கள். உங்களுக்கு ஊழியம் செய்யும் பாக்கியம் கிடைத்தாலே போதும். நீங்களாகப் பார்த்து ஏதேனும் கொடுத்தால் வாங்கிக் கொள்கிறேன். இல்லா விடில் ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே வந்தார். சேஷய்ய பந்துலு தமது விஸ்தாரமான சட்டைப்பையில் கைவிட்டுப் பிரமாண்டமான பணப்பையை எடுத்தபோது எனக்கு உண்மையிலேயே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. ஆனல் அப்புறம் அவர் என்ன செய்தாரென நினைக்கிறீர்கள்? காலணுக்கள் நிறைந்து கிடந்த அந்தப் பையிலிருந்து ஒரு காலணுவை எடுத்து, "இன்று முழுதும் நீர் தொடர்ந்து வந்தாலும் இந்தக் காலணுவுக்குமேல் தர மாட்டேன். நாங்கள் ஏழைகள்" என்று சொல்லிக் காலணுவை மீண்டும் பையிலேயே போட்டுவிட்டார்.

வண்டி நின்றது. நான் கீழே இறங்கிச் சுற்று முற்றும்பார்த்து "மைசூர் மகாராஜா சத்திரம் எது" என்று கேட்டேன். சேஷய்ய பந்துலுவும் சுற்று முற்றும் பார்த்தார். ஆகா! அவர் முகத்தில் அப்போது உண்டான திகைப்புக் குறியை என்னல் வர்ணிக்க முடியாது. "மோசம் போய்விட்டோம்" என்ருர். விஷயம் என்னவோ என்றெண்ணி நான் நடுங்கிப்போனேன். நகரின் ஒரு மூலைக்கு நாம் வந்திருக்கிருேமென்றும், மைசூர் மகாராஜாவின் சத்திரம் வேருெரு மூலையிலிருக்கிற தென்றும் அவர் விளக்கிக் கூறினர். வண்டி வந்து நின்ற இடம் இராமச்சந்திர பண்டா யாத்திரீகர்களுக் கென்று கட்டிவிட்டிருந்த ஜாகைகளில் ஒன்று! அந்தச் சாது குமாஸ்தா வண்டிக்காரனுக்கு அத்தகைய கட்டளை யிட்டிருந்தார் போலும்! ஆனல் சேஷய்ய பந்துலுவுக்கு ஒரு விஷயத்தில் சந்தோஷம். வண்டிக்காரன் எங்களை வாடகை கேட்கவில்லை! நாங்கள் இறங்கியதும் அவன் வண்டியைத் தட்டிவிட்டுக் கொண்டு போயே போய்விட்டான். அந்த மாடு அவ்வளவு வேகம் போகுமென்று

யார்தான் எதிர்பார்க்க முடியும்? சற்றுநேரம் பந்துலு யோசித்து விட்டு "சரி, நம்மை மோசம் செய்தானல்லவா? மண்ணைவாரிப் போடுகிறேன்!" என்றார். (நாங்கள் அப்போது வந்த சாலையில் அந்த வஸ்துவைப் போட்டால் திரும்பிப் போகும்போதாவது உடம்பு வலியெடுக்காமல் போகலாமே யென்று எண்ணினேன்.) இராமச்சந்திர பண்டாவின் ஜாகையில் நுழைந்தோம்.

அன்பர்களே! அப்புறம் நடந்த அந்தக் கேவலமான நிகழ்ச்சிகளைக் குறித்து எனக்கு அதிகம் வளர்த்த விருப்பமில்லை. ஒரு புறத்தில் பண்டா கூட்டத்தின் பொருளாசை; மற்றொரு புறத்தில் அந்தத் தெலுங்கு தேசபக்தரின் லோபித்தனம். இவ்விரண்டுக்கும் பெரிய போர்! அதை நினைத்தாலே எனக்கு அவமானமா யிருக்கிறது. அன்று கடலில் மூழ்கியதைத் தவிர எத்தனை குளங் குட்டைகளில் ஸ்நானம் செய்தோம் என்பது எனக்கு நன்றாக நினைவில்லை. சுமார் முப்பத்தேழு இருக்கலாம் ஆங்காங்கே யிருந்த பண்டாக்கள் எங்களை சங்கற்பம் செய்துகொள்ளச் சொன்னதும், பந்துலுவின் தலைமையில் நாங்கள் அதை மறுத்ததும், தட்சணையாவது கொடுங்கள் என்றதும், பந்துலு பெரிதும் பிடிவாதம் பிடித்துவிட்டுக் கடைசியில் காலணா கொடுத்ததும், பண்டாக்கள் அதைப் பெற்றுக்கொண்டு சாபங் கொடுத்ததும், இப்படிக் கால்காலணாவாக வீசிக்கொண்டு வந்ததும், கடைசியில் கோயிலில் சுவாமி தரிசனம் உள்பட, தலைக்கு ஏறக்குறைய ஒன்றே முக்கால் ரூபாய் செலவில் வீதாசாரம் ஏற்பட்டதும் — எழுதுவதற்கோ, படிப்பதற்கோ — சந்தோஷம் தராத விஷயங்களாதலால் அவற்றை விடுத்து மேலே செல்கிறேன்.

தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து மூர்த்திகளைத் தரிசித்துவிட்டு நாங்கள் ஜாகை திரும்பியபோது மணி மூன்றாகி விட்டது. அப்புறம் சமையல் வேலை தொடங்கினோம். நாலு மணிக்குச் சாப்பிட்டோம். இல்லை; சாப்பிட்டார்கள். அந்தத் தெலுங்கர் பாகம் செய்த மிளகாய்த் திராவகத்தைப் போட்டுக்கொண்டு நாங்கள் சாப்பிட்டிருந்

தால் ஆகாய விமான வேகத்தில் அந்தரத்துக்குப் போயிருக்க வேண்டியதுதான். நாலரை மணிக்குப் பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு புறப்படச் சித்தமானோம். அந்தச் சமயத்தில் நாலைந்து பேர் திடுதிடுவென்று உள்ளே வந்தார்கள். வந்தவர்கள் மகாமகோபாத்தியாய இராமச்சந்திர பண்டாவும், அவருடைய சகாக்களுமே என்பது விரைவிலேயே விளங்கிப் போயிற்று.

பண்டா தட்டிக்குள் நுழைவதும் பந்துலு கோலத்திற்குள் நுழைவதுமாக அற்புதப் போராட்டம் அப்போது ஆரம்பமாயிற்று. பாம்பும் கீரிப்பிள்ளையும் சண்டை போடுவதைப் பார்த்திருக்கிறீர்களா? நான் ஒருமுறை பார்த்திருக்கிறேன். பண்டா பந்துலு சண்டையைப்பற்றி எண்ணும்போதெல்லாம் பாம்பு கீரிச் சண்டையும் எனக்கு நினைவு வருவது வழக்கமா யிருந்து வருகிறது. சம்பாஷணை முழுதும் தெலுங்கு பாஷையில் நடந்தது. எனக்குத் தெலுங்கு பேசத் தெரியாது. (தரவாதா, கானி, ஏமண்டி, அக்கட, இக்கட, வாடு, வீடு என்னும் சில வார்த்தைகள் மட்டும் தெரியும்.) சில சமயம் தெலுங்கருடைய சம்பாஷணையைக் கேட்கும்போது தெலுங்கு மொழியே இந்த நாலைந்து வார்த்தைகள் அடங்கியது தானோ என்று கூடத் தோன்றும். ஆனால் யாராவது தெலுங்கு பேசினால் கூடியவரையில் புரிந்து கொள்வேன். அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையை இங்கே சுருக்கித் தருகிறேன்.

"புண்ணிய க்ஷேத்திரம்" என்றார் பண்டா. "தேச பக்தர்கள் நாங்கள்" என்றார் பந்துலு. "சகல பாவங்களும் நீங்கும்" என்றார் பண்டா. "எங்களிடம் பாவமே கிடையாது, சத்திய விரதர்கள்" என்றார் பந்துலு. "தட்சணை தரவேண்டும்" என்று பண்டா மெதுவாக நீட்டினார். "பரம ஏழைகள்" என்று பந்துலு ஈனக் குரலில் அழுதார். 'கொடுத்தது போதும்?' என்று பண்டா புன்னகை ததும்பக் கூறினார். "இருந்தால்தானே" என்று எரிந்து விழுந்தார் பந்துலு. "தலைக்கு ஐந்து ரூபாயாவது கொடுங்கள்"

என்று பண்டா பல்லைக்காட்டிக் கெஞ்சினர். "ஐயோ! ஐந்து காலணு வும் இல்லையே!" என்று பந்துலு சண்டித்தனம் செய்தார். "சரி, இருக்கட்டும் பாதகமில்லை. ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் தலைக்கு 20-ரூபாய் அனுப்புவதாக ஜகந்நாத ஸ்வாமி பெயருக்குப் பத்திரம் எழுதிக் கொடுங்கள்" என்று பண்டா ஒரு பெரிய நோட்டுப் புத்த கத்தை நீட்டினர். அதில் ஒவ்வோர் ஏட்டிலும் ஆங்கில பாஷையில் ஜகந்நாத ஸ்வாமி பெயருக்கு "ஆன் டிமாண்டு" பத்திரம் எழுதப் பட்டுக் கீழேஓர் அணுத்தலையும் ஒட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்த தும் பண்டாவின் பாசுபதாஸ்திரம் இதுவே என்பதை உணர்ந் தேன். அதை வெல்லக்கூடிய அஸ்திரம் பந்தலுவிடம் வேறிருக்க முடியாதென்று தோன்றிற்று. பத்திரத்தைப் படித்துப் பார்த்த போது என் கதி கலங்கி விட்டது. வட்டியுடன் கூடப் பணம் அனுப்பத் தவறினுல் ஜகந்நாத ஸ்வாமி ஆணையாக இன்னின்ன நர கங்களுக்குப் போவேன் என்பதாக அதில் எழுதி யிருந்ததைப் படித்ததும் இப்பத்திரத்தில் கையொப்பமிடுவதைவிட ஐந்து ரூபாய் ரொக்கமாகக் கொடுத்து விடுவதே மேல் என்று தீர்மானித்தேன்.

ஆனுல் இந்த யாத்திரையில் நான் கண்ட அதிசயங்களி லெல் லாம் பெரிய அதிசயத்தை இனித்தான் காண விருந்தேன். பந்துலு தொண்டனையைக் கனைத்துவிட்டுப் பேசலானுர்:—"தங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். இதோ இந்த வாலி பரின் பெயர் வேங்கடரமண ராவ். இவர் பரம ஏழை; ஆனுல் தேசபக்தி மிகுதியும் உள்ளவர். இவர் தேசத் தொண்டிலேயே தமது காலம் முழுவதையும் செலவு செய்து வருகிருர். நாங்களிருவ ரும் டில்லி விசேஷ காங்கிரஸுக்குப் போயிருந்தோம். திரும்பு காலையில் கல்கத்தாவில் இறங்கினேம். கல்கத்தாவில் ரயில்வே ஸ்டே ஷனில் ஒருநாள் படுத்திருக்க நேர்ந்தது. அப்போது இவர் தலை மாட்டில் வைத்துக் கொண்டிருந்த மூட்டையை யாரோ கிளப்பிக் கொண்டு போய்விட்டார்கள். கையிலிருந்த பணம், துணி எல்லாம் அடியோடு போய்விட்டன. என்ன செய்வார், பாவம்! தவியாகத்

தவித்தார். இவ்வூர் வரைக்கும் நான் டிக்கட் வாங்கிக் கொடுத்து அழைத்து வந்தேன். ஆனால் என்னிடமும் பணம் குறைவு. (ஸ்ரீமான் இராமச்சந்திர பண்டா இப்போது தமது நண்பர்களைத் திரும்பித் திரும்பிப் பார்க்கத் தொடங்கினர்) இந்த க்ஷேத்திரத்திலே மகா மகோபாத்தியாய இராமச்சந்திர பண்டாவாகிய தங்களுடைய தர்ம சிந்தையையும், உதார குணத்தையும் பற்றி மிகவும் கேள்விப் பட்டிருக்கிறேன். (பண்டா "ப்ஹூம்" என்று சொல்லி விட்டு எழுந்திருக்க முயன்றார்.) அவசரப்படக் கூடாது. கொஞ்சம் விண்ணப்பத்தைக் கேட்க வேண்டும். இந்தச் சமயத்தில் தாங்கள் உதவி செய்தால் இந்த வாலிபர் உயிருள்ளளவும் அந் நன்றியை மறக்க மாட்டார். (பண்டாவும் அவருடைய நண்பர்களும் எழுந்து நின்றார்கள்.) தாங்கள் கடனாகப் பாவித்துக் கொண்டாலும் சரி தான். ஒரு பதினைந்து ரூபாய் கொடுத்து உதவினீர்களானால்"...

அடுத்த கணத்தில் பண்டாவையும் அவரது நண்பர்களையும் நாங்கள் காண வில்லை. ஒரே ஓட்டமாக அவர்கள் ஓடிப்போனார்கள்! எனது அய்யங்கார் நண்பர் சந்தோஷம் தாங்காமல் பாய்ந்துசென்று ஸ்ரீமான் சேஷய்ய பந்துலுவைக் கட்டிக்கொண்டார். அன்பர்களே! உங்களில் யாருக்காவது வடநாட்டு யாத்திரை செய்யும் உத்தேசம் இருந்தால் என்னுடைய புத்திமதியைக் கேளுங்கள். தெலுங்கு தேசபக்தர்கள் இருவரைப் பணங் கொடுத்தாவது உடன் அழைத்துக்கொண்டு செல்லுங்கள். இல்லாதவரையில்—ஆம், இல்லாதவரையில்—என்ன நேரிடுமென நினைக்கிறீர்கள்? இந்த மாதிரி கட்டுரை ஒன்று உங்களால் எழுத முடியாமல் போய்விடும்.

இரவல் படிப்பு



நான் ஏமாந்து போனேன். ஆம்; பத்திரிகைகளில், இக் காலத்தில், என் நெஞ்சத்தைத் திடுக்கிடச் செய்ய வல்லது எதுவும் வெளியாகக் கூடுமென நான் எதிர்பார்க்கவே யில்லை. இத்தாலிய சர்வாதிகாரி முஸோலினிக்குக் கூட அந்தச் சக்தி போய் விட்டதென்று எண்ணினேன். ஆனால் முஸோலினியால் கூட முடியாத அக்காரியத்தைச் சென்னையில் வெளி யாகும் இரு தமிழ்ப் பத்திரிகைகள் செய்து விட்டன.

ஆம், நான் ஏமாந்தே போனேன்.

"மகாத்மாவின் வர்த்தக யுக்தி நமக்கு விளங்கவில்லை" என்று எனது நன்மதிப்புக் குரிய ஒரு தமிழ்த் தினசரி எழுதிற்று. இதை ஆமோதித்து "மகாத்மாவின் வர்த்தக யுக்தி நமக்கும் விளங்கவில்லை. என்று நான் பெரிதும் போற்றும் ஒரு வாரப் பத்திரிகை எழுதிற்று. இவற்றைப் படித்ததும் நான் தலையில் இடியே விழுந்தது போல் திடுக்கிட்டுப் போனேன் என்பதை ஒப்புக் கொள்கிறேன். (தலையில் இடிவிழுந்தால் எப்படி யிருக்கும் என்பது பற்றி எனக்குச் சொந்த அநுபவமில்லை. சொல்லிக் கேள்விதான். தக்க ஆதாரத்துடன் இந்த உபமானத்தை யாராவது மறுத்தால் திருத்திக் கொள்ளச் சித்தமா யிருக்கிறேன்.) "ஆகா! நீங்கள் கூடவா?" என்னும் மொழிகள் என்னை யறியாமலே என் வாயினின்றும் பிறந்தன. இதிலே வயிற்றெரிச்சல் அதுதான். பத்திரிகைக்காரர்கள் இப்படிச் சொல்வதா யிருந்தால்? வேறு யாராவது, பத்திரிகை-புத்தகப் பிரசுரங்களில் அநுபவ மில்லாதவர்கள் இப்படிக் கூறினால் பொருட்படுத்த வேண்டியதில்லை. விவசாயக் கல்லூரியில் பட்டம் பெற்ற நிபுணர்களின் யோசனைகளை அசல் விவசாயிகள் பொருட்படுத்துகிறார்களா? அதுபோல் நாமும் தள்ளிவிட்டுப் போகலாம். ஆனால்

பத்திரிகைகள்-நமது இந்திய நாட்டிலே பத்திரிகையோ புத்தகமோ வெளியிடுவதென்றால் என்னவென்பதை உணர்ந்திருக்க வேண்டிய பத்திரிகைகள்—இப்படி யெழுதினால், "ஆகா! நீங்கள் கூடவா?" என்று கேட்பதற்கு நமக்கு உரிமை உண்டா, இல்லையா?

தினசரிப் பத்திரிகையோ, வாரப் பத்திரிகையோ படிக்கும் வழக்கமில்லாத பாக்கியசாலிகளுக்காக விஷயம் இன்னதென விளக்குகிறேன். மகாத்மா காந்தி தமது சுய சரிதத்தை வாரந் தோறும் எழுதி வருகிறா ரல்லவா? இதன் முதல் மூன்று பாகங்கள் மட்டும் இப்போது ஆங்கிலத்திலும் தமிழிலும் * புத்தக வடிவில் வெளியாகி யிருக்கின்றன. ஆனால் இச் சரிதத்தின் முழுப் பதிப்புரிமையையும் மகாத்மா காந்தி ஆங்கிலப் புத்தகக் கம்பெனி ஒன்றுக்கு விற்றுவிட்டா ரென்றும், அதன் விலையாகிய ஒரு லட்சம் ரூபாயையும் இராட்டை இயக்கத்துக்கு அளிக்கப் போகிறாரென்றும் "இண்டியன் நேஷனல் ஹெரால்டு" பத்திரிகை ஒரு வதந்தியை வெளியிட்டிருந்தது. இதைப் படித்ததும் "ஆகா! இந்த வதந்தி உண்மையா யிருக்கவேண்டுமே!" என்று நான் பிரார்த்தித்தேன்.

இது உண்மையானால் காவேரிக் கரைப் பிள்ளையாருக்கு 108 தேங்காய் உடைப்பதாக வேண்டிக் கொண்டேன். (இந்த வேண்டுதலுக்கு ஒரு நிபந்தனை உண்டென்பதை ஒப்புக் கொள்கிறேன். ஒரு பெரிய சொம்பின் அளவு கொண்ட உரித்த தேங்காய்கள் காலணாவுக்கு ஆறு வீதம் கிடைக்கும்போது உடைப்பதாக நிபந்தனை.

பிரசுரத் தொழிலில் கொஞ்சம் அனுபவமுள்ள இந்தியர் அனைவரும்—இராட்டை இயக்கத்தின் கொடிய விரோதிகள் நீங்கலாக—என்னைப் போலவே பிரார்த்திப்பார்க ளென்றும் எதிர்பார்த்தேன். இந்நிலைமையில், மேற்படி பத்திரிகைகளின் கூற்றைக் கண்டதும் நான் திடுக்கிட்டுப் போனது இயல்பே யல்லவா?

---

* இந்நூல் வாஸன் புஸ்தக சாலையில் கிடைக்கும். விலை ரூ 2-8-0

மகாத்மா காந்தி தமது சரித்திரத்தைச் சொந்தமாகப் பிரசுரித்திருந்தாலும், அல்லது இந்தியக் கம்பெனி ஒன்றுக்குக் கொடுத்திருந்தாலும், எவ்வளவோ லட்சம் ரூபாய் இந்தியாவுக்குக் கிடைத்திருக்குமே? அவ்வளவும் இப்போது அன்னியக் கம்பெனிக்கல்லவா போகப் போகிறது?" என்பது அப்பத்திரிகைகளுடைய புகாரின் சாராம்சம். (ஞாபகத்திலிருந்து எழுதுகிறேன். பிழையிருந்தால் திருத்திக் கொள்ளத் தயார்.) ஒரு வேளை இந்தப் புகார் மகாத்மாவின் காதுக் கெட்டி, அவர் அந்த ஏற்பாட்டை மாற்றிவிடப் போகிறாரோ என்னுங் கவலை முதலில் எனக்குண்டாயிற்று. ஆனால் ஒன்று.

மகாத்மா எதையும் தீர ஆலோசித்துத்தான் முடிவு செய்வார். செய்தபின்னர் தமக்கே தவறென்று தோன்றினாலன்றி அம்முடிவை மாற்றமாட்டார்.

மேலும் கோமுட்டி செட்டியாரல்லவா? எனவே, பயம் வேண்டியதில்லை யென்று ஆறுதல் செய்துகொண்டேன்.

யாருடைய கட்சி சரியானது? மேற்படி பத்திரிகைகளின் கூற்று சரியா? மகாத்மாவும் நானும் சொல்வது சரியா? (ஹா! ஹா! ஹா! எனக்கே சிரிப்பு வருகின்றது; ஒரு கதையுங்கூட வருகின்றது. சிங்கம் ஒன்றின் முதுகின்மேல் அதன் வாலுக்கு எட்டாத இடத்தில் ஓர் ஈ உட்கார்ந்து கொண்டதாம். அப்போது அந்த ஈ "நானும் இந்தச் சிங்கமும் சேர்ந்தால் இந்தக் காட்டிலுள்ள மிருகங்களை யெல்லாம் துரத்தி யடித்துத் துவம்ஸம் செய்துவிடமாட்டோமா?" என்று பெருமை யடித்துக் கொண்டதாம். "மகாத்மாவும் நானும்" என்பது அதுபோலில்லையா?) நல்லது; என் அனுபவங்கள் சிலவற்றை மட்டும் இங்கே கூறி விடுகிறேன். பின்னர், யாருடைய கட்சி சரியானது என்று தீர்ப்பளிக்கும் உரிமையை நேயர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

நான் யார்?—உடனே, நான் இந்த உடலா, தசையா, இரத்தமா என்னும் வேதாந்த விசாரணையில் இறங்கிவிடாதீர்கள்.—நான்

புத்தகம் எழுதுவதிலும், வெளியிடுவதிலும், பத்திரிகைத் தொழிலிலும் கொஞ்சம் அனுபவமுள்ள மனிதன்; உங்களுக்கு என்னைப் பற்றி அவ்வளவு தெரிந்தால் போதும். ஒரு வருஷத்திற்கு முன்பு, நல்ல அமிர்தயோக வேளையில் ஒரு புத்தகம் அச்சிட்டு வெளியாக்கினேன். (நண்பர்களுக்கு ஓர் எச்சரிக்கை. புது முயற்சி எதுவும் அமிர்த யோகத்தில் தொடங்க வேண்டாம். மரண யோகத்திலோ, ராகுகாலத்திலோ, வேறு எந்த வேளையில் வேண்டுமானாலும் தொடங்குங்கள். ஆனால் அமிர்தயோகம் மட்டும் வேண்டாம். சொன்னேன், சொன்னேன், மூக்காலும் சொன்னேன்.) இதைப் பற்றிய ஒரே ஓர் அனுபவம் மட்டும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதமல்லவா ? ஒரு மாதத்திற்கு முன்பு கடற்கரையில் புதிய நண்பர் ஒருவர் எனக்கு அறிமுகமானார். உடனே அவர் நம்மவர்களிடையே உள்ள வழக்கத்தை யனுசரித்து, ஊர், பெயர், உற்றார், பெற்றார், உத்தியோகம், சம்பளம், மேல் வரும்படி ஆகிய யோக க்ஷேமங்களைப்பற்றி சவிஸ்தாரமாக விசாரித்தார். இந்த விசாரணையின்போது "மேல் வரும்படி" என்னும் தலைப்பின் கீழ் நான் புத்தகம் வெளியிட் டிருப்பது குறித்துச் சொல்லிவிட்டேன். பின்னால் நிகழ்ந்தவைகளை எண்ணும்போது இதைக் கூறிய நாவை அறுத்து விடலாமா வென்று தோன்றுகிறது. ஒரு பிரதி வாங்கிக்கொள்ள மாட்டாரா என்பது எனக்கு உள்ளூர ஆசை. கொஞ்சம் தற்பெருமையுங் கூட. நுணலுந் தன் வாயால் கெடுமல்லவா? சொன்னதும் வந்தது விபத்து.

ஆனால் அந்தோ! அது விபத்தென்பதை ஏழையேன் அப்போது உணர்ந்தே னில்லையே! "ஆகா! அப்படியா? தங்கள் புத்தகத்தை அவசியம் பார்க்க வேண்டும். தங்களுடன் வீட்டுக்கு வருகிறேன்" என்றார் அப்புது நண்பர்.

எனக்கோ மகிழ்ச்சியினாலும், கர்வத்தினாலும் தலைகால் புரியவில்லை. அவரை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனேன்.

"என்ன பாக்கியம் செய்தது இச்சிறு குடில்" என்பது முதலான பாடங்களை ஒப்புவித்தேன். காரியத்தில் கண்ணுயிருந்த அந்நண்பர் "தங்கள் புத்தகம்" என்ருர். உபயோகித்துச் சிறிது அழுக்கடைந்திருந்த ஒரு புத்தகத்தை எடுத்துக் கொடுத்தேன்.

"புதிய புத்தகமாய் இருக்கிறதல்லவா !"

"இருக்கிறது."

"ஒன்று எடுங்கள் !"

நேயர்களே! அப்போது எனக்குண்டான ஆனந்தத்தை உங்களால்ஊகித்துரைக்க முடியுமா? முடியாதென்றே நினைக்கிறேன். உங்கள் சொந்தக் கையினல் எழுதி, நீங்களே வெளியிட்ட புத்தகம் ஒன்றை நீங்களே விற்றுக் கையில் முழுப் பணமும் வாங்கியிருந்தால் தான் அதன் அருமை தெரியும். புதிய புத்தகம் ஒன்றை மகிழ்ச்சி தளும்ப எடுத்துக்கொடுத்தேன். அவர் வாங்கிப் பிரித்தார். உடனே என் முன்னல் வைத்து "எங்கே? இதில் 'அன்பளிப்பு' என்று போட்டுத் தங்கள் கையெழுத்துச் செய்து கொடுங்கள்!" என்ருர்.

எனக்குத் திடீரென்று என்ன நேர்ந்துவிட்டது? இந்த வீடும், விளக்கும், மேஜையும், இம்மனிதரும் ஏன் இப்படிச் சுழல்கிருர்கள்? இல்லை இல்லை. இவர்கள் சுழலவில்லை. என் மூளைதான் கறகற வென்று சுழன்றது. சற்று நிதானித்து அவரைப் பார்த்தேன். பாம்புக் கண்ணின் காந்த சக்தியால் கவரப்பட்ட பறவை பிரமை கொண்டு அதன் வாயில் போய் அகப்பட்டுக் கொள்வதைப் பற்றிப் படித்திருக்கிறீர்க ளல்லவா? நானும் அந்நிலையை யடைந்தேன். அவர் சொற்படி "அன்பளிப்பு" என்று எழுதப் போனேன். அப்போது அவர் கண்ணின் காந்த சக்தியிலிருந்து விடுபட்டுப் புத்தகத்தை நோக்கினமையால் தப்பிப் பிழைத்தேன். பேனவைக் கீழே வைத்துவிட்டு இதனல் உங்களுக்கு லாபமில்லை, எனக்கும் நஷ்டம். அரை மணி நேரத்து நண்பர்களுக் கெல்லாம் ஒவ்வொரு

புத்தகம் "அன்பளிப்பு"ச் செய்து வந்தால் என்னுடைய கதி என்னவாகு:மென்று யோசித்துப் பாருங்கள். படிக்க வேண்டியது தானே தங்களுக்கு முக்கியம்? இந்தப் பழம் புத்தகத்தையே எடுத்துக்கொண்டு போங்கள். தயவுசெய்து அதையும் திருப்பிவிட்டால் நலம். தங்களைப்போன்ற மற்ற நண்பர்களுக்குக் கொடுக்கவேண்டுமல்லவா?" என்றேன். பழம் புத்தகம் இன்னும் திரும்பிவந்து சேரவில்லை!

மற்றொரு நாள், ஆங்கிலச் சிறு கதைப் புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண்டு, கடற்கரையில் போட்டிருக்கும் ஆசனங்களில் ஒன்றில் உட்கார்ந்திருந்தேன். சற்று நேரத்திற் கெல்லாம் இன்னொரு கனவான் வந்து அதே ஆசனத்தின் மற்றொரு மூலையில் அமர்ந்தார். அவர் 703-ம் நம்பர் மல்லினால் கைகில் கட்டு கட்டிக் கொண்டு, உட்சட்டை, மேற்சட்டை, கழுத்துப்பட்டை சுருக்கு, துருக்கி குல்லா, சாந்துப் பொட்டு முதலியவைகளுடன் விளங்கினார். சில நிமிஷம் ஆனதும் அவர் சற்று நெருங்கி நான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை எட்டிப் பார்த்தார். இன்னும் இரண்டு நிமிஷம் சென்றன. மெதுவாக விரலைக் கொடுத்துப் புத்தகத்தின் மேலட்டையைத் தூக்கிப் பார்த்தார் "ஓகோ! இவன் எழுதியதா? கதைகள் மிக நன்றாயிருக்கும். ஸார்!" என்று ஆங்கிலத்தில் கூறினார். இவ்வளவுக்குப் பிறகு பேசாதிருப்பது மரியாதை யன்றெண்ணி "ஆம்; நன்றாகத்தான் இருக்கின்றன" என்றேன். சில நிமிஷம் மௌனம். பின்னர், அட்டவணைப் பக்கத்தை விரலால் கிளப்பிப் பார்த்துவிட்டு, "ஸார், ஸார்! இதில் ஒரு கதையைப் பாதியில் விட்டிருக்கிறேன். சில நிமிஷம் கொடுத்தீர்களானால் முடித்து விட்டுக் கொடுத்து விடுவேன். புத்தகம் உங்களுடையதுதானே. நீங்கள் சாவகாசமாகப் படித்துக் கொள்ளலாம்" என்றார்.

வேறு வழியில்லை; வாய் பேசாமல் புத்தகத்தைக் கொடுத்தேன். சமுத்திரத்தை நோக்கினேன். கதைகளுக்குள் நீளமான ஒன்றை அவர் அடியிலிருந்து தொடங்குகிறார் என்பதைக் கடைக்

கண்ணால் கவனித்தேன். அரைமணி நேரம் "கடவுளே" என்று பேசாமலிருந்தேன். இத்தகைய சந்தர்ப்பங்களில் தான் மனிதனுக்குக் "கடவுள்" வேண்டுமென்பது. ஆம்; கடவுள் நம்பிக்கையைத் தவிர இத்தகைய சமயங்களில் மனிதனுக்கு வேறு ஆறுதல் ஏது? ஆனால் பொறுமைக்கும் ஓரளவுண்டல்லவா? அரை மணி நேரத்திற்குப் பிறகு அவர் மற்றொரு கதையைத் தொடங்க ஆரம்பித்த போது என்னுடைய பொறுமை போய்விட்டது. "ஸார் தயவு செய்து புத்தகம் தருகிறீர்களா?" என்றேன். அவர் தூக்கி வாரிப் போட்டவர் போல் காணப்பட்டார். "புத்தகத்தைத் திருப்பிக் கேட்கவுந் துணிந்து விட்டீரல்லவா?" என்னும் கேள்வி அவர் நெற்றியில் எழுதி ஒட்டியிருந்தது போல் தோன்றிற்று. பெருமூச்சு விட்டுக் கொண்டே புத்தகத்தைக் கையில் கொடுத்து விட்டுக் கூறுவார்:—"என் ஸார்? தங்கள் வீடு எங்கே? இதைக் கொடுத்தீர்களானால் காலையில் திரும்பக் கொண்டுவந்து கொடுத்து விடுவேன். சிலரைப்போல் நான் ஒரு புத்தகத்தை மாதக் கணக்காகப் படிப்பதில்லை ஸார்! ஒரே இரவில் முடித்துவிடுவேன். அல்லது தங்கள் வீட்டுக்கு வரச்சொன்னாலும் வந்து வாங்கிக் கொள்கிறேன்......" நான் என்ன செய்தேனென்று எண்ணுகிறீர்கள்? எனக்குச் செய்வதற்கு ஒன்றே ஒன்றுதான் இருந்தது. சட்டென்று எழுந்து குடையைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு அதிவேகமாக நடக்கத் தொடங்கினேன். திரும்பிப் பார்க்கவே யில்லை. வீடு சென்றதும் அப்புத்தகத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டினேன். ஆனால் இன்னும் எனக்குச் சந்தேகந்தான். என்றாவது ஒரு நாள் அந்தப் பெட்டி உடைக்கப்பட்டுப் புத்தகம் காணாமற் போயிருப்பதைக் கண்டால் நான் வியப்புறவே மாட்டேன்!

இந்தச் சந்தோஷமில்லாத விஷயத்தை அதிகமாக வளர்க்க நான் விரும்ப வில்லை. எனினும் ஓர் அநுபவத்தைக் கூறி முடித்து விடுகிறேன். ஒரு முறை நானும் என் மனைவியும் எழும்பூர் ஸ்டேஷனில் ரயில் ஏறினோம். மூன்றாம் வகுப்பென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை யல்லவா? அது அரைப் பலகை வண்டி. புறப்படும்

ஸ்டேஷனுதலால் கூட்டம் அதிகம் இல்லை. மேலும் இந்த வாயு வேக, மனோவேக நாட்களிலே மதுரைப் பாஸஞ்சரில் யார் ஏறு வார்கள்? நானும் என் மனைவியும் ஓர் அரைப் பலகையில் உட்கார்ந் தோம். எதிர்ப் பலகையில் படுக்கை, பெட்டிகளை வைத்தோம். வண்டி புறப்படுவதற்கு முன் "புக் ஸ்டா"லுக்குச் சென்று "ஹிந்து" பத்திரிகை ஒன்று வாங்கிக் கொண்டு வந்தேன். அதை வாங்கும் போது அங்கே ஓர் இளைஞர் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மீது எனக்குச் சந்தேகம் தோன்றி விட்டது. எனவே மறு படியும் வண்டியேறியதும் பத்திரிகையைச் சுருட்டி வைத்துவிட்டு, பிளாட்பாரம் பக்கம் பாராமல் அதற்கு எதிர்ப் புறத்தை நோக்கிக் கொண்டிருந்தேன். ஆனால் அந்த இளைஞர் பிளாட்பாரத்தில் மேலுங் கீழும் வண்டியிலுள்ள யாரையோ தேடுபவர் போல் அலைந்து கொண்டிருந்ததை மட்டும் கவனித்தேன். அப்படியே இருந்திருக்கக் கூடாதா? விதி யாரை விட்டது? இங்கே விதி ஆரஞ் சுப் பழக்காரனின் உருவத்தில் வந்து சேர்ந்தது. ஆரஞ்சுப் பழம் வாங்குவதற்காகத் திரும்பினேனோ, இல்லையோ, அவ்விளைஞரும் என்னைப் பார்த்துவிட்டார். இத்தனை நேரமும் தம்மை அலைய வைத்ததற்காக மனதிற்குள் அவர் என்னைத் திட்டினு ரென்பதில் சந்தேகமில்லை. வண்டியி லேறியதும் அவருடைய எரிச்சல் அதிக மாயிருக்க வேண்டும். எனக்குப் பக்கத்தில் என் மனைவி உட்கார்ந் திருந்தாள். எதிரிலோ பெட்டியும், படுக்கையும். வண்டியில் இடம் அதிக மிருந்தபடியால் அவைகளை எடுக்கச் சொல்லி உட்காருவதற்கு மில்லை. எனவே வண்டியின் மறு பக்கத்தில் இருந்த மற்றோர் அரைப் பலகையில் பெருமூச்சு விட்டுக் கொண்டு அமர்ந்தார்.

சிறிது நேரம் சென்றது. அவ்விளைஞர் மெதுவாகத் தொண் டையைக் கனைத்துக் கொண்டு "ஸார்! ஒரு ஷீட் (தாள்) தருகிறீர் களா?" என்றார். எனக்குக் காதில் விழவில்லை. அதாவது விழுந்த தாக நான் காட்டிக் கொள்ளவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் கழித்து "ஸார்! உங்களைத் தானே? நீங்கள் வாசித்த தாளை தயவு

செய்து இப்படித் தருகிறீர்களா? என்றார். "இன்னும் படித்தாக வில்லையே" என்று மட்டும் சொல்லிவிட்டு நான் மறுபடியும் பத்திரி கையில் ஆழ்ந்துவிட்டேன். என் வாணாளிலேயே நான் இவ்வளவு கவனமாகப் பத்திரிகை படித்தது கிடையாதென்பது நிச்சயம். வண்டியின் இன்னொரு பக்கத்திலிருந்து நாட்டுப் புறத்துக் கன வான் ஒருவர் எழுந்து வந்து அந்த இளைஞரின் அருகில் உட்கார்ந் தார். "பத்திரிகையில் ஏதேனும் விசேஷம் உண்டா?" என்று கேட் டார். சிறிது நேரம் மௌனம். 'பத்திரிகையில் விசேஷம் ஏதே னும் உண்டா?" என்றார் மறுபடியும். "ஒன்றையுங் காணோம்" என்று அசட்டையாய்ப் பதிலளித்தேன். "பத்திரிகை படிப்பவர் களே இப்படித்தான் விழுந்து விழுந்து படிப்பார்கள், கேட்டால் ஒன்றுமில்லை யென்பார்கள்" என்றார் அக்கனவான். இளைஞர் என் கட்சியை ஏற்றுக் கொண்டு "அதெல்லாம் உங்களுக்குச் சொன்னால் தெரியாது. வழக்கமாய்ப் படித்து வந்தால் விளங்கும்" என்றார்.

சற்றுப் பொறுத்து "காந்தி இப்போது எங்கே இருக்கிறார்?" என்று நாட்டுப் புறத்து மனிதர் வினவினார். மற்றொரு மூலையி லிருந்து இன்னொருவர் "ஜெர்மனிக்காரன் சண்டை இப்போது எப் படி யிருக்குங்க?" என்று கூச்சல்போட்டார். (என்பிரயாணம் நாளது 1928 ஆண்டில் நடந்தது என்பது நேயர்களுக்கு நினைவிருக்கவேண் டும்.) இதற்குள் செங்கற்பட்டு ஸ்டேஷன் வந்தது. அப்போது நான் வேண்டுமென்று ஒரு காரியம் செய்தேன். பத்திரிகை முழுவதை யும் பிரித்துக் கீழே போட்டு அதில் ஆரஞ்சுப் பழங்களை வைத்துப் பொட்டணம் கட்டினேன். "ஸார்! ஸார்!! ஸார்!!!" என்றார் இளைஞர். "என்ன? என்ன? என்ன?" என்றேன் நான். "பத் திரிகை தரேனென்றீர்களே?". "மன்னிக்க வேண்டும், ஸார்! நான் இங்கே இறங்கப் போகிறேன்". "நீங்கள்தான் படித்தாய் விட்டதே; கொடுத்துவிட்டுப்போகலாமே?". "ஓர் அணு கொடுத்தால் தந்து விடுகிறேன்" என்றேன். அந்த இளைஞரின் கண்களிலே அப்போது கொலைக்குறி தோன்றிற்று. "நீங்களெல்லாம் இப்படி

இரவல் வாங்கிப் படித்துவிட்டால் பத்திரிகைக்காரர்கள் எப்படித் தானையா பிழைப்பது ?" என்று சொல்லிக்கொண்டே வண்டியை விட்டிறங்கினேன்.

நேயர்களே! இப்போது நீங்களே சொல்லுங்கள். இந்நாட்டில் இத்தகைய மனிதர்கள் இருக்கும்போது, இவர்கள் ஏராளமா யிருக் கும்போது, இவர்களே மிகப் பெரும் பான்மையோரா யிருக்கும் போது, மகாத்மா காந்தி செய்தது (அல்லது செய்ததாகச் சொல்லப் படுவது) சரியா, இல்லையா ?

"மகாத்மாவின் வர்த்தக யுக்தி நமக்கு விளங்கவில்லை" என் றெழுதிய ஆசிரியன்மார்களுக்கு ஒரு வேண்டுகோள்.

தயவுசெய்து அவர்கள் தங்கள் இலவச சந்தாதாரர் ஜாபிதாவை எடுத்து இப்போது ஒருமுறை பார்க்கட்டும். அநேகமாக, மகாத் மாவின் வர்த்தக யுக்தி அவர்களுக்கு விளங்கி விடலாம். பணம் விஷயத்திலும், வேறு எல்லாப் பொருள்கள் விஷயத்திலும் இரத்த லின் இழிவை உணர்ந்திருப்பவர்கள், ஓர் அணா இனாம் கொடுத்தால் அதைப் பெரிய அவமதிப்பாகக் கருதக்கூடியவர்கள்—பத்திரிகை மட்டும் இரக்கலாம், இனாமாகப் பெறலாம் என்னுங் கொள்கையுடை யவர்களா யிருப்பது எப்படி என எனக்கு விளங்கவே யில்லை. பாதி சந்தாவுக்குப் பத்திரிகை கேட்பவர்கள் எத்தனை பேர்? தபால் கட் டணம் மட்டும் செலுத்திவிடுவதாக மனமுவந்து ஒப்புக்கொள்ளுகிற வர்கள் எத்தனை பேர்? தனி மனிதர்கள் இனாம் கேட்பதையாவது மன்னித்து விடலாம். வாசக சாலைகள் யாசக சாலைகளாவதை எப்படி மன்னிப்பது ? மற்ற நாடுகளில் வாசகசாலைகளே பத்திரிகை புத்தக முயற்சிகளுக்கு முக்கிய ஆதாரவா யிருக்கின்றன. இந்நாட்டு வாசகசாலைகளோ அம்முயற்சிகளை யொடுக்குவதில் முனைந்து நிற் கின்றன. புதிதாக ஒரு வாசகசாலை ஏற்பட்டதென்றால் பத்திரிகை களுக்கு ஒரு புதிய இலவச சந்தாதாரர் என்று பொருள்.

இந்த ஏழை நாட்டில் தனி மனிதன் ஒருவன் பத்திரிகை பணங் கொடுத்து வாங்கத் தயங்கினால் அதில் அவ்வளவு வியப்புற வேண்டுவதில்லை. ஆனால் பலபேர் படிக்கக்கூடிய வாசகசாலையில், காலணா அரையணாவாக வசூலித்தாலும் பத்திரிகைகளுக்குப் பணஞ் செலுத்தி விடலாமே? இதுகூடச் செய்ய முடியாதவர்கள் வாசக சாலை ஏன் ஏற்படுத்த வேண்டும்?

என் அருமை நேயர்களே! (இந்தக் கட்டுரையை இவ்வளவு தூரம் நீங்கள் விடாமல் படித்ததின் பொருட்டு உங்களிடம் எனக்கு அவ்வளவு "அருமை" உண்டாகி விட்டது.) இப்போது நீங்கள் தீர்ப்புக் கூறுங்கள். "மகாத்மாவின் வர்த்தக யுக்தி" உங்களுக்கு விளங்கி விட்டதா? இல்லையா?



தலைகீழ்ப் பாடம்

“என்ன டாக்டரே! சௌக்கியமா? முகம் ஏன் ஒரு விதமாய் வாட்ட முற்றிருக்கிறது?” என்று என் நண்பரைப் பார்த்துக் கேட்டேன்.

“சௌக்கியத்துக் கென்ன குறைவு? நான் மட்டுமல்ல, ஊரிலேயே எல்லாரும் சௌக்கியம். பின்னர், என் முகம் வாட்ட முறுவதற்குக் கேட்பானேன்?” என்றார் நண்பர்.

அவர் விடையின் பொருத்தம் முதலில் எனக்கு நன்றாய் விளங்கவில்லை. கொஞ்சம் யோசித்ததும் விளங்க ஆரம்பித்தது. ஆனால் நண்பர் என் மனதுக்கு அதிக சிரமங் கொடுக்கவில்லை. அவர் மேலும் சொன்னதாவது:—“ஆமாம், ஸார்! ஊரிலே வியாதியே கிடையாது. சீதோஷ்ண நிலை நிரம்ப சுகமா யிருக்கிறது. இது காலரா வரவேண்டிய காலம், ஆயினும் அதைக் காணவே காணோம். டாக்டர்களுக்கு உற்ற துணையான மலேரியாகூட எங்கோ மலைவாசம் செய்யப் போய்விட்டதாகக் காண்கிறது. ஒருவருக்கும் ஒரு வயிற்று வலி கூடக் கிடையாது. இம்மாதம் பிறந்து, முழுமையாக மூன்று ரூபாய்க்குக் கூட பில் போட்டு அனுப்பவில்லை. காலட்சேபம் எப்படி நடக்கப் போகிறதோ, ஆண்டவனுக்கே வெளிச்சம். இந்த இலட்சணத்தில் தீபாவளி வேறு வருகிறது!”

ஏன்? நேயர்களுக்கு இப்போது மட்டைக்கு இரண்டே கீற்றென விளங்கி விட்டதல்லவா?

“என்னப்பா, அக்கிரமம்? ஊரில் நோய் நொடி இல்லாமலிருந்தால் சாதாரணமாய் எல்லாரும் சந்தோஷப் படுவார்கள். நீ துக்கப் படுகிறாயே?” என்று வினவினேன்.

"இது கலியுக மல்லவா? எல்லாம் தலை கீழ்ப் பாடம்?" என்று பதில் வந்தது.

அருகில் சர்க்கரை மட்டு மிருந்திருந்தால் கை நிறைய அள்ளி அவர் வாயில் போட்டிருப்பேன். (சர்க்கரை பிறருடையதா யிருக்க வேண்டு மென்பது இன்றியமையாத நிபந்தனை.)

உலகில் தற்போது பல காரியங்கள் தலை கீழாக நடைபெறு கின்றன என்பதில் சந்தேகமில்லை. இவற்றுள் சில கொஞ்சம் சாய்ந் தவை, இன்னும் சில அதிகம் கோணலானவை, அடியோடு தலை குப்புறக் கவிழ்ந்து கிடப்பவை ஒரு சில; இவற்றுள் தலைமையானது வைத்தியத் தொழிலாகும். ஊரில் எவ்வளவுக் கெவ்வளவு நோய் அதிகமாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு வைத்தியர்களுக்குப் பிழைப்பு. எனவே, மாரியம்மன், காளியம்மன், பெண் கொசுத் தெய் வம் முதலியவர்களுடன் வைத்தியர்கள் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறார்கள். (பெண் கொசு தான் மனிதரைக் கடிக்கும், ஆண் கொசு சைவ விரதங் கொண்டது என் னும் உண்மை இதற்குள்ளாக நேயர்கள் எல்லாருக்கும் தெரிந் திருக்குமென்று நம்புகிறேன். விஞ்ஞான சாஸ்திரிகள் அப்படிச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதை நம்பத்தான் வேண்டும். நம் பாதவர்கள் நாகரிக மடையாதவர்கள். சூரிய மண்டலத்தில் மனி தர்கள் உண்டு என்று ஒரு விஞ்ஞானப் புலவர் சொல்வார். சூரிய மண்டலத்தில் மனிதர்கள் இல்லை என்று மற்றொரு விஞ்ஞானப் பண்டிதர் புகல்வார். இரண்டையும் நம்பித்தான் ஆகவேண்டும். புதிய விஞ்ஞானிகள் கூறுவன அனைத்தையும் அப்படியே நம்பு வதும், பழைய ஞானிகள் கூறியன எல்லாவற்றிலும் அடியோடு அவ நம்பிக்கை கொள்வதுந் தான் நாகரிகத்துக் கழகு.)

ஊரிலே காலரா, வைசூரி முதலியவைகள் வந்தால் காளித் தாய்க்கும், மாரியம்மனுக்கும் கொண்டாட்டம்; வைத்தியர்களுக்கு

அளவில்லாத பூரிப்பு. ஆனால் கொசு தேவிக்கு இன்னும் என் ஜோயில் கட்டப்படவில்லை? இந்தக் கைங்கரியத்துக்கு யாரேனும் ஓர் ஆஸ்திகப் பிரபு முன் வருவாரென நம்புகிறேன்.

சீன தேசத்தார் இவ்விஷயத்தில் உலகத்துக்கே வழி காட்டிகளா யிருக்கிறார்கள். அந்நாடு ஒன்றில்தான் வைத்தியத் தொழில் நேரிய முறையில் நடந்து வருகிற தென்னலாம். சீனத்தில் நோயைத் தீர்ப்பதற்காக ஜனங்கள் வைத்தியர்களுக்குப் பணங் கொடுப்பதில்லை. நோய் வராமல் தடுப்பதற்காகப் பணங் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் மாதம் இவ்வளவு ரூபாய் என்று வைத்தியருக்குக் கொடுத்து வருவார்கள். வீட்டில் யாருக்கும் நோய் வராமல் வைத்தியர் பார்த்துக்கொள்ள வேண்டும். நோய் வந்துவிட்டால் அந்த மாதத்தில் வைத்தியருக்குப் பணங் கிடையாது. இது எவ்வளவு நல்ல ஏற்பாடு பாருங்கள்! இவ் வேற்பாட்டின்படி நோய் வராமல் பார்த்துக் கொள்வதில் வைத்தியர்களுக்குச் சிரத்தை இருக்கிறது. ஆனால் நம் நாட்டிலுள்ள ஏற்பாட்டின் படியோ, நோய் குணமாகாம லிருக்கும் வரையில்தான் டாக்டர்களுக்குப் பணம். டாக்டர்களும் மனிதர்கள் தானே? எனவே, நோயைக் குணப்படுத்துவதில் நமக்குள்ள அவசரம் அவர்களுக்கில்லை யென்றால் அதில் ஆச்சரியம் யாது?

நம் நாட்டில் முன்காலத்தி லிருந்த முறையாவது கொஞ்சம் மத்தியதா மென்று சொல்லலாம். யாருக்காவது வியாதி வந்தால் வைத்தியரைக் கூப்பிடுவார்கள். வைத்தியர் மருந்து கொடுப்பார். மருந்து கொடுக்குங் காலையில் படி யரிசியும், வெற்றிலைப் பாக்குந் தான் பெற்றுக் கொள்வார். சிலர் மருந்துச் செலவுக்கென்று ஒன்றிரண்டு பணமும் வாங்கிக் கொள்வதுண்டு. நோயாளி குணமடைந்து எழுந்த பின்னரே "சோமன் ஜோடு" முதலியவைகள் சன்மானம் செய்யப்படும். (இங்கே ஜோடு என்பது "ஜோடி"யின் மருவு. நேயர்கள் தப்பர்த்தம் செய்துவிடக் கூடாது.) ஆனால் மேனாட்டு நாகரிகம் வந்து புகுந்த பின்னர் எல்லாம் அடியோடு தலை

கீழாகி விட்டன, இப்போது இங்கிலீஷ் டாக்டர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், சித்த வைத்தியர்கள், யூனானி ஹக்கீம்கள் எல்லாரும் ஒரே முறையைத்தான் கையாளுகிறார்கள். நோயாளி பிழைத்தாலும் செத்தாலும் 'பில்' என்னமோ தவறாமல் பிரசங்கமாகி விடும்.

டாக்டர்களில் பலவகை உண்டு. இரண்டொரு வகைகளைப் பற்றி மட்டும் இங்கே கூறுகிறேன். ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்து, செல்வர்களிடம் அதிகப் பணம் வாங்குவோர் ஒரு வகை. ஆனால் இவர்களிடம் ஒரு தொந்திரவு என்னவென்றால் ஏழைகளுக்கு வைத்தியம் செய்யமட்டும் இவர்களுக்கு அவகாசமே கிடைப்பதில்லை. ஆயினும், "அவரா? புண்ணியவானாயிற்றே? பணக்காரர்களிடம் கண்டிப்பாய்ப் பணம் வாங்கினாலும் ஏழைகளுக்குத் தர்ம வைத்தியஞ் செய்கிறார்" என்று ஊரில் பேசிக் கொள்வார்கள். மற்றொரு வகை டாக்டர்கள் கைநீட்டிப் பணம் வாங்குவதில்லை யென்று விரதங் கொண்டவர்கள். ஆனால் மேஜை மீது அவரவர்களுக்கு விருப்பமான தொகையை வைத்துவிட்டுப் போகலாம். இது ஒரு சௌகரியமான விரதம். கை நீட்டிப் பணம் வாங்குவதென்று வைத்துக் கொண்டால், நோயாளிகளும் அவர்களுடைய இஷ்ட மித்திர பந்து ஜனங்களும் கேட்கும் கேள்விகளுக் கெல்லாம் பதில் சொல்லும்படி நேரும். ஆனால் மேற் கூறிய விரதம் எடுத்துக் கொள்பவர்களுக்கு இந்தத் தொல்லை இல்லை. அவர்கள் மௌன விரதத்தையும் மேற் கொள்ளலாம். மொத்தத்தில் பண வருமானமும் குறையாது. ஏனெனில் சாதாரண டாக்டர்கள் ஒரு நோயாளிக்கு வைத்தியம் பார்க்கும் நேரத்தில் இத்தகையவர்கள் பத்து பேருக்குப் பார்த்து விடுவார்கள்.

நோயாளிகளைக் கொண்டு, மருந்து ஆராய்ச்சி நடத்தும் டாக்டர்கள் சிலர் உண்டு. புதிதாக ஒரு மருந்து ஜெர்மனியிலிருந்து புறப்படும். அதன் சக்தியைத் தெரிந்து கொள்வதெப்படி? தங்களிடம் வரும் முதலாவது நோயாளிக்கு அதன் பெயரை எழுதிக் கொடுத்து விடுவார்கள். அது பயனில்லை யென்று தெரிந்தால்

வேறென்று எழுதிக் கொடுப்பார்கள். ஆனால் ஒரு விஷயம்; நோயாளிகளை இவர்கள் ஏமாற்றுவது மட்டுமில்லை. "இதைச் சாப்பிட்டுப் பாருங்கள்" என்று சொல்வார்களே யன்றி, "இதைச் சாப்பிடுங்கள்! குணமாகி விடும்" என்று சொல்லவே மாட்டார்கள். பெரிய பெயர் பெற்ற டாக்டர்களைப் பற்றி இவ்வளவு தூரம் சொன்னேன். கொஞ்சம் கீழ்த் தரத்தைச் சேர்ந்த இன்னொரு வகை டாக்டர்கள் உண்டு. இவர்கள் மருந்துக் கடையும் வைத்திருப்பார்கள். இத்தகையோரிடம் வைத்தியத்திற்குச் செல்லு முன்பு ஆயிரந் தடவை யோசிக்கும்படி நண்பர்களுக்குச் சொல்வேன். ஏனெனில் இவர்களிடம் ஒரு முறை போய்விட்டால், தங்களிடமுள்ள மருந்து வகைகள் எல்லாவற்றிலும் ஒவ்வொரு 'டோஸா' வது உங்கள் உடம்பில் செலுத்திய பிறகுதான் விடுவார்கள். இவர்களிடமிருந்து தப்பிப் பிழைக்க வேண்டுமானால், செத்துப் போவதுதான் உத்தம வழி.

டாக்டர்களைப் போல் தான் மருந்துகளும். என் நண்பர் ஒருவர் மலச்சிக்கலுக்காக டாக்டரிடம் யோசனை கேட்டார். டாக்டர் ஒரு மாத்திரையின் பெயர் எழுதிக் கொடுத்தார். நண்பர் அம்மாத்திரைகளை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தார். முதலில் தினம் ஒரு மாத்திரை சாப்பிட்டார். பயன் விளைந்து வந்தது. சில தினங்களுக்குப் பின்னர் அது பயன் தரவில்லை. டாக்டர் இரண்டு மாத்திரை சாப்பிடச் சொன்னார். இது சில தினங்களுக்குப் பயன்தந்து வந்தது. மறுபடியும் பழைய விதமே யாயிற்று. இப்போது என் நண்பர் தினந்தோறும் ஒரு புட்டி மாத்திரை விழுங்கி வருகிறார். இன்னும் கொஞ்ச காலத்தில் அவருடைய வருமானம் முழுவதும் மலச்சிக்கல் மாத்திரை வாங்குவதற்கே போதுமா யிருக்குமென்று தோன்றுகிறது.

நேயர்களுக்குக் கடைசியாக ஓர் எச்சரிக்கை செய்யக் கடமைப் பட்டிருக்கிறேன். அன்பர்களே! நீங்கள் வைத்தியர்களிடம் வேண்டுமானால் போங்கள். அவர்கள் கொடுக்கும் அல்லது எழுதித் தரும் மருந்தை வாங்கிச் சாப்பிடுங்கள். ஏனெனில் மனித காயம்

அநித்தியம். இன்றைக் கிருப்பாரை நாளைக்குக் காணோம். ஏதோ பரோபகாரார்த்தமாய் டாக்டர்களின் குடும்பம் பிழைக்கும் வண் ணம் நான் செத்துப் போவோமே? மரண பயம் ஒழியவேண்டு மென்று மகாத்மா காந்திகூடச் சொல்லுகிறார். மேலும், வைத்தியர்களைப் பற்றிப் பொதுப் படையாகவே சொன்னேன். இதற்கு விலக்கான டாக்டர்களும் இலை மறைகாய் போல் இருந்து வரலாம். (எப்போதும் இத்தகைய விதி விலக்கு ஒன்று போட்டு வைப்பது நல்லது. யாராவது கேட்டால் "தங்களைத் தவிர" என்று சொல்லிவிடலா மல்லவா?) எனவே, நூற்றுக்குப் பத்துபங்கு நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கும் சாத்திய முண்டு. மற்றும், தலைவிதி மட்டும் பலமா யிருந்தால் எவ்வளவு பெரிய பட்டம் பெற்ற டாக்டர் களாயிருந்தால்தான் என்ன செய்ய முடியும்? எனவே, நேயர்களே! வேண்டுமானால் டாக்டர்களிடமோ, வைத்தியர்களிடமோ, ஹக்கீம்க ளிடமோ செல்லுங்கள். ஆனால், பத்திரிகைகளில் மருந்து விளம் பரங்கள் வருகின்றனவே, அவற்றை மட்டும் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவேண்டாம். பத்திரிகைகளில் விளம்பரமாகும் மருந்துக ளெல்லாம் பயனற்றவை யென்று நான் சொல்ல வரவில்லை. அப் படிச்சொல்லிவிட்டு நஷ்டஈட்டு வழக்குகளுக் குள்ளாக நான் சித்தமா யில்லை. மருந்து விளம்பரங்களைப் பார்க்க வேண்டாமென்று நான் சொல்வதின் காரணம் முற்றும் வேறானது. அந்தக் காரணத்தைச் சொல்வதைவிட, என்னுடைய அனுபவம் ஒன்றைக் கூறினேனானால் உங்களுக்கு நன்றாய் விளங்கிவிடும்.

ஒரு நாள் தினசரிப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண் டிருக்கையில் ஒரு விளம்பரம் கண்ணில்பட்டது. அது "கல்லீரல் மாத்திரை" விளம்பரம். அந்த விளம்பரத்தை வாசித்தபோது எனக்குப் பெருமூச்சு வாங்கிற்று; உடம்பு வியர்த்தது. ஏனெ னில், கல்லீரல் கெட்டுப் போயிருந்தால் என்னென்ன அறிகுறிகள் காணப்படும் என்று அவ்விளம்பரத்தில் சொல்லப் பட்டிருந்ததோ, அவ்வளவு அறிகுறிகளும் என்னிடம் இருப்பதாகத் தோன்றிற்று.

"சரி, இதை இத்துடன் விட்டுவிடக்கூடாது. முழுதும் ஆராய்ந்தே தீரவேண்டும்" என்று தீர்மானித்தேன். உடனே அருகிலிருந்த புத்தகசாலை ஒன்றுக்குச் சென்றேன். அங்கே வைத்திய புத்தகங்கள் உண்டென்று அறிந்ததும், போன உயிரில் பாதி திரும்பி வந்தது. நோய்களைப்பற்றி விவரிக்கும் அகராதி ஒன்றை வாங்கிக் கல்லீரல் நோயைப்பற்றிப் படிக்கத் தொடங்கினேன். சந்தேகம் அறவே நிவர்த்தியாயிற்று. என் கல்லீரல் நைந்து அழுகி நாசமாய்ப் போயிருக்க வேண்டுமென்று நிச்சய மடைந்தேன். உடனே சென்று அந்த மாத்திரையை வாங்கவேண்டு மென்று தீர்மானித்தேன்.

வந்த காரியம் ஆனதும் எழுந்து போயிருக்கக் கூடாதா? சைத்தான் ஆசை ஒன்று உண்டாயிற்று. "வந்ததுதான் வந்தோம். இன்னும் சில ரோகங்களைப் பற்றியும் படிக்கலாமே?" என்று தோன்றிற்று. எனவே, சில ஏடுகள் தள்ளி மற்றொரு நோயைப்பற்றிப் படித்தேன். அது ஒரு மகா கொடிய நோய். (பின்னால் நேர்ந்த மனக் குழப்பத்தில் அதன் பெயரை மறந்துவிட்டேன்.) நாலைந்து வரி படிப்பதற்குள் ஒரு பயங்கரமான சந்தேகம் எழுந்தது. இன்னும் நாலைந்து வரி படித்ததும் சந்தேகம் நிச்சயமாய் மாறிற்று. அப் பயங்கர நோய் என்னைப் பிடித்திருந்த தென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. கால் கட்டைவிரல் முதல் உச்சந் தலைவரையில் ஒரு நடுக்கம் உண்டாயிற்று. ஐந்து நிமிஷம் ஸ்தம்பாகாரமாய் உட்கார்ந்திருந்தேன். பின்னர், நடுங்கிக்கொண்டிருந்த விரல்களால் மற்றோர் ஏடு புரட்டினேன். டைபாய்டு சுரம் வந்தது — புத்தகத்தில். ஆனால் என் உடம்புக்கு அது வந்து குறைந்தது ஆறு மாதமாகியிருக்கவேண்டுமெனத் தெளிவாயிற்று. இதன் பின்னர் எனக்கு அச்சத்தைவிட ஆச்சரியமே அதிகமாயிருந்தது. ஆமாம்! என்ன ஆச்சரியம்! எனக்குத் தெரியாமல் இத்தனை நோய்கள் எவ்வாறு வந்திருக்கக்கூடும்?

இதை அடியிலிருந்து ஆரம்பித்து ஆராய்ச்சி செய்து விடுவதென்று தீர்மானித்தேன். 'ஏ' யிலிருந்து தொடங்கினேன். புத்

நகம் ஆங்கிலப் புத்தகம் என்று நேயர்களுக்குச் சொல்லவேண்டிய தில்லை யல்லவா? வரிசையாக நோய்களைப் படித்துக்கொண்டு வந்தேன். காசநோய் எனக்கிருப்பதாகத் தெரிந்தது. ஆனால் அதைப் பற்றிப் பயமில்லை. காசநோயுடன் பல வருஷகாலம் உயிரோடிருக்கலாம். சீதபேதிக்கு வந்ததும் கொஞ்சம் மனோ பீதி உண்டாயிற்று. க்ஷயரோகம் எனக்குப் பிறவியிலேயே உண்டென்று தெற்றென விளங்கிற்று. இன்னும் மலேரியா, வைசூரி, இன்புளுயன்ஸா, நிமோனியா ஆகியவை யெல்லாம் ஒவ்வொரு நிலையி லிருந்தன. கடைசி எழுத்து (இஜட்) முடியப் படித்தேன். காக்கை வலிப்பு ஒன்றைத் தவிர மற்ற எல்லா நோய்களும் என்னைப் பீடித்திருந்ததாக உறுதி பெற்றேன். இது குறித்து முதலில் கொஞ்சம் வருத்தமாய்த்தான் இருந்தது. காக்கை வலிப்புமட்டும் ஏன் இல்லை? மற்ற எல்லா நோய்களும் வந்திருக்கும்போது, காக்கை வலிப்பு மட்டும் நம்மை அசட்டை செய்துவிட்டதல்லவா? என்ற ஏக்கமுண்டாயிற்று. ஆனால் பின்னர், "ஆசைக்கோரளவில்லை" என்னும் பாட்டைப் பாடித் திருப்தி செய்துகொண்டேன். புத்தகத்தினுள்ள அவ்வளவு நோய்களும் இருக்கும்போது, காக்கை வலிப்பு ஒன்றில்லாவிடில் என்ன மோசம் என்று ஒருவாறு ஆறுதல் அடைந்தேன்.

சட்டென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று. "வைத்திய கலாசாலை யொன்றுக்கு நாம் எவ்வளவு உபயோகமா யிருக்கலாம்? நாம் மட்டும் ஒரு வைத்திய கலாசாலைக்குச் சொந்தமாயிருந்தால், மாணாக்கர்கள் ஆஸ்பத்திரிகளுக்குச்சென்று தனித்தனி நோயுள்ளவர்களைப் பார்த்துக்கொண்டு அலையத் தேவையில்லை. நாமே ஒரு வைத்திய சாலை. யானைமுகக் கடவுள் பரமசிவனைச் சுற்றிவிட்டுப் பழத்தை வாங்கிக் கொண்டதுபோல், மாணாக்கர்கள் நம்மைப் பார்த்து, ஆராய்ந்துவிட்டுப் பட்டம் பெறலாம் என்றெண்ணினேன். அப்படி வைத்திய கலாசாலை எதுவேனும் என்னை வாங்குவதா யிருந்தால் பதினாயிரம் ரூபாய்க்குக் குறைந்து விற்பதில்லை யென்றும், அதற்கு

மேல் கிராக்கிக்குத் தகுந்தாற்போல் பார்த்துக்கொள்வ தென்றும் முடிவு செய்தேன்.

இதற்குள் இன்னொரு நினைவு எழுந்தது. எல்லாவற்றிற்கும் உயிரோ டிருந்தா லல்லவா ? கை நாடியைப் பிடித்துப் பார்த்தேன். முதலில் நாடி அடிப்பதாகவே தெரியவில்லை. திடீரென்று அதி வேகமாக அடிக்கத் தொடங்கிற்று. எண்ணியதில் ஒரு நிமிஷத்தில் 136 தடவை அடித்ததாகத் தெரிந்தது. பின்னர் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தேன். நெஞ்சு அடித்துக் கொள்ளவே யில்லை. இப்போது உயிரோ டிருக்கிறேனா, செத்துப் போனேனா என்பதே சந்தேக மாகிவிட்டது. தொடையில் கிள்ளிக்கொண்டேன் ; கொஞ் சம் வலித்தது. உயிர் சிறிதளவு ஒட்டிக்கொண் டிருக்கிறதென்ற தைரியம் பிறந்தது. ஆனால் புத்தக சாலையிலிருந்து வெளியே வரு வதற்குக் கூட உடம்பில் பலமில்லை. மெதுவாகச் சுவரைப் பிடித் துக் கொண்டே வெளியே வந்து, ஒரு ஜட்கா வண்டி பிடித்து இக்கட்டுரையின் தலைப்பில் குறிப்பிட்ட டாக்டர் வீட்டுக்கு ஓட்டச் சொன்னேன். அவர் எனது நெடுநாள் நண்பர், அடிக்கடி கை பார்ப்பார்; 'தர்மா மீடரி'ல் வெப்பநிலை அளந்து சொல்வார் ; தாக மாயிருக்கிற தென்றால் ஏதேனும் 'மிக்ஸ்சர்' (கலப்பு மருந்து) கொடுப்பார். அவருக்கு நன்றி செலுத்த இது நல்ல சமயம் என்று தோன்றிற்று. ஊரில் வியாதி இல்லை யென்று அவர் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். ஒரு வியாதி இரண்டு வியாதி உடைய ஆயிரத்தைந்நூறு நோயாளிகளும் சரி, நான் ஒருவனும் சரி யல்லவா? என்னால் பணங் கிடைக்காவிட்டாலும், பணக் கவலை தோன்றா வண்ணம் அவருக்குப் பொழுது போக்காவது ஏற்படு மல்லவா ?

"உனக்கென்ன வந்தது?" என்று அந்த டாக்டர் நண்பர் கேட்டார். நான் கூறியதாவது;—"நல்லது அப்பா! எனக்கு என்ன வந்திருக்கிறது என்று கூறி நான் நேரம் போக்கப் போவதில்லை. மனிதன் வாழ்நாள் சொற்பம். இன்றைக்கிருந்தாரை நாளைக்குக்

காணேம். எனக்கு வந்திருப்பதை யெல்லாம் சொல்லத் தொடங்கினல் நான் சொல்லி முடிப்பதற்குள் நீ செத்துப் போனாலும் போகலாம். ஆதலின் எனக்கு என்ன வாவில்லையென்று சொல்கிறேன். காக்கை வலிப்பு எனக்கு வாவில்லை, ஏன் அது வாவில்லை யென்று நான் அறியேன். அது வாவில்லை யென்பது உண்மை; மற்ற எல்லா ரோகங்களும் எனக்கு வந்திருக்கின்றன.'' பின்னர் இதைக் கண்டு பிடித்த வாலாற்றை அவரிடம் கூறினேன். அவர் என் கையைப் பிடித்துப் பார்த்தார். பின்னர் என் மார்பில் இரண்டடி அடித்தார். அது ஒருவகைப் பரிசிலனை என்று சமாதானம் சொல்லி மருந்தும் எழுதிக் கொடுத்தார். அம்மருந்து தம்மிடம் இல்லையென்றும், மருந்துக் கடைக்குப் போகும்படியும் சொன்னார்.

மருந்துக் கடைக்குச் சென்று சீட்டை நீட்டினேன். கடைக்காரன் சீட்டைப் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தான். என்னை ஏற இறங்கப் பார்த்தான். "இது மருந்துக் கடையல்லவா?'' என்று கேட்டேன். "ஆம்; இது மருந்துக் கடைதான். ஆனல் இதை மளிகைக் கடை அல்லது சாப்பாடு ஹோட்டல் என்று நீர் நினைத்த காரணம் என்ன?'' என்றான் கடைக்காரன். சீட்டைப் பிரித்துப் படித்தேன்:—

(1) காற்படி கைக்குத்தரிசிச் சோறு (பருப்பு, நெய், மோர் உள்பட) இரண்டு வேளை.

(2) ஓர் இளநீர்; அகப்பட்டால் இரண்டு ஆரஞ்சும் சில திராட்சைப் பழங்களும்.


(3) தினம் ஐந்து மைல் நடை.

(4) இரவு ஒன்பது மணிக்குப் படுக்கை.


(5) தெரியாத விஷயங்களில் தலையிடாமல் வாலைச் சுருட்டிக் கொண்டிருத்தல்.

ஆம்; எனக்குத் தலை கால் தெரியாத கோபம் வந்தது. அதி லும் அந்தக் கடைசி யோசனை! டாக்டர்களே இப்படித்தான். உறவி னர் அல்லது நண்பர்களுக்கு நோய் வந்தால் இந்த மாதிரியான அசட்டுப் புத்திமதி ஏதேனும் சொல்லி விடுவார்கள். அன்னியர் யாருக்காவது நோய் வந்தால் மட்டும் கடையிலுள்ள மருந்துகள் எல்லாம் போதா. ஆயினும் நிதானமாய் யோசித்ததில் அவருடைய புத்திமதியைக் கடைப் பிடிப்பதே புத்திசாலித் தனமென்று தீர்மானித்தேன்.

கடைசியாக ஒரு விஷயம். மேற்படி மருந்துச் சீட்டில் என் நண்பர் "அந்தரங்கம்" என்று குறிப்பிட்டிருந்தார். எனவே, அதை யாருக்கும் சொல்ல வேண்டாமென்று நேயர்களைக் கேட்டுக் கொள் கிறேன். தாங்களும் எவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விடுகிறீர்களோ அவ்வளவுக்கு நல்லது.



சட்டம்—ஒரு கழுதை



முதலில், நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும் யாரிடம் என்று நேயர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை யல்லவா? ஆம். நீங்கள் நினைப்பது சரிதான். கழுதை யிடந்தான்! கழுதையைச் சட்டத்துடன் ஒப்பிட்டது கழுதைக்கு அகௌரவமாகத் தோன்றலாம். ஆனல் இந்த அவதூறுக்கு நான் பொறுப்பாளியல்லேன். "சட்டம் ஒரு கழுதை" என்று கூறியவர் ஓர் ஆங்கில ஆசிரியர். எனவே, கழுதை அவதூறு வழக்குத் தொடர எண்ணினுல், தப்பு! மன்னிக்க வேண்டும். கோர்ட்டுக்குப் போவது போன்ற அறிவீனமான செயலைக் கழுதை செய்யுமா என்ன? ஒரு நாளுமில்லை அது மனிதர்களால்தான் முடியும்!

எனினும், சட்டத்தைக் கழுதையுடன் ஒப்பிடுவது மிகவும் பொருத்தமான விஷயம் என்று நான் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. அவதூறு வழக்கைப் பற்றிய அச்சம் இல்லாதபடியால் இதைத் தாராளமாகச் சொல்லலாம். இரண்டு கழுதைகள் வண்ணுன் மூட்டைகளைச் சுமந்து கொண்டு போகும்போது யாராவது பார்த்ததுண்டா? நான் பார்த்திருக்கிறேன். அவற்றின் பேச்சை நம்மால் அறிந்து கொள்ள முடியுமானுல் எவ்வளவு நன்ருயிருக்கும் என்று நான் எண்ணுவதுண்டு. ஒரு கால் அவை பின் வருமாறு பேசிக் கொண்டு போகலாம்.

முதல் கழுதை:—"அண்ணே! இந்த இரண்டு கால் பிராணியின் வீறாப்பைப் பார்! நம்மைப் பார்த்துக் கையெடுத்துக் கூடக் கும்பிடாமல் விரைப்பாய்ச் செல்கிறது."

இரண்டாம் கழுதை:—"ஆம், தம்பி! இந்த மனிதன் என்னும் ஜந்து மிகவும் நன்றிகெட்டது. நாம் பொதி போன்ற மூட்டைகளைச் சுமந்து துணி வெளுத்துக் கொண்டுவந்து தராவிட்டால், தன்

னுடைய தளுக்கான உடையும், மிடுக்கான நடையும் என்ன ஆகும் என்பதைச் சிறிதும் கவனித்துப் பார்ப்பதில்லை.''

இந்தச் சம்பாஷணையை அகச் செவியினால் நான் கேட்குந்தோறும், ஐரோப்பியர்கள் கீழ் நாட்டுக் கறுப்பு மனிதர்களின் சுமையைச் சுமந்து திரிவது என் ஞாபகத்துக்கு வரும். அடுத்தாற்போல், சட்டத்தைப் பற்றி ஆங்கில ஆசிரியர் கூறியதும் நினைவில் தோன்றும். ஆம்; கழுதையின் மீது எவ்வளவு சுமை போட்டாலும் அது எப்படி முணுமுணுக்காமல் சுமந்து செல்கிறதோ, அப்படியே சட்டத்தின் மீது எவ்வளவு பாரம் போட்டாலும் அது தாங்குகிறது. உங்களுக்கு இதில் சந்தேகமிருந்தால் ஓர் உதாரணங் கூறுகிறேன்.

சென்னை ஹைகோர்ட்டில் சில மாதங்களுக்கு முன் பந்தகப் பத்திரம் சம்பந்தமான ஒரு வழக்கு நடந்தது. பந்தக நிலங்களில் தனக்கு ஜீவனும்ச பாத்தியம் உண்டென்று மீனாக்ஷியம்மாள் என்னும் பெண்மணி ஒரு குறைந்த வழக்குத் தொடுத்தாள். அதில் அந்த அம்மாளுக்கு அநுகூலமாகத் தீர்ப்புக் கிடைத்தது ஜீவனும்சத் தொகையும் செலவு தொகையுமாகச் சேர்த்து ரூ. 503-8-0 அந்த அம்மாளின் வக்கீல் ஸ்ரீமான் விஸ்நாதய்யர் பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டார். ஆனால் இந்தப் பணத்தை அவர் மீனாக்ஷியம்மாளிடம் கொடுக்கவில்லை. பலமுறை கேட்டும் பயனில்லாமற் போகவே, அந்தப் பெண்மணி வக்கீல்மீது வழக்குத் தொடுத்தாள். இவ்வழக்கு கீழ்க் கோர்ட்டுகளை யெல்லாம் தாண்டி ஹைகோர்ட்டுக்கு வந்தது. நீதிபதி மாதவ நாயரும், நீதிபதி ஜாக்ஸனும் வழக்கை விசாரித்தார்கள். வக்கீல் ஸ்ரீமான் விசுவநாதய்யரின் சார்பாக மாஜி நீதிபதி வி. வி. சீனிவாசய்யங்கார் தோன்றி வாதமிட்டார். மேற்படி ஜீவனும்ச வழக்கில் ஸ்ரீமான் விசுவநாதய்யருக்கு வக்கீல் கூலி ரூ. 550 வரவேண்டுமென்றும், அதற்காகத் தம் கட்சிக்காரிக்குத் தீர்ப்பான தொகையை அவர் நிறுத்திக்கொண்டதாகவும் அவர் எடுத்துக் கூறினார்.

ஏன்? நன்று யிருக்கிறதல்லவா? ஜீவனும்சமும் செலவு தொகையும் சேர்ந்து ரூ. 503-8-0. இத்தொகைக்காக வழக்கு நடத்திய வக்கீலுக்குக் கூலி ரூ. 550. இது அநீதியே யானாலும், சட்டம் அதற் கிடங்கொடுக்கிற தென்றும், வக்கீல் குற்றவாளி யல்ல வென்றும் கனம் நீதிபதிகள் தீர்ப்பளித்தார்கள்! இது சம்பந்தமான சட்டத்தைத் திருத்தி யமைத்தல் நலமென்று அவர்கள் யோசனை சொன்னார்கள்.

அதுதான் விஷயம். சட்டம் வேறு, நீதி வேறு இரண்டும் ஒன்றுதான் என்று நாட்டில் சிலர் நினைக்கிறார்கள். இப்படி நினைத்த சாது மனிதன் ஒருவன் வெளியூர் கோர்ட் ஒன்றில் நீதிபதியைப் பார்த்து "எஜமானே! நீதி வழங்க வேண்டும்" என்று முறை யிட்டான். நீதிபதி கொஞ்சம் நகைச்சுவை உள்ளவர். அவர் உடனே "இங்கே நீதி கிடையாது, அப்பனே! நீதி கிடையாது. சட்டந்தான் உண்டு." என்று விடை யிறுத்தார். ஏழை ஸ்திரீ ஒருத்தியின் ஜீவனும்சத் தொகை முழுவதையும் வக்கீல் விழுங்கி விடுதல் நீதிக்குப் பொருந்தாது என்று குட்டிச் சுவரைக் கேட்டாலும் சொல்லும். இதைத் தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரன்கூட ஒப்புக் கொள்வான். ஆனால் சட்டம் அதற்கு இடங் கொடுக்கிறது. சட்டத்தின்படி, வக்கீல் தமக்குச் சேரவேண்டிய பாக்கி ரூபா 46-8-0 க்கு அந்தப் பெண்மணியின்மீது வழக்குத் தொடரா திருந்தாலே பெரும் பாக்கியம்! (அவர் அப்படிச் செய்யாதிருப்பதற்காக, மீனுக்ஷியம்மாள், மூன்று தேங்காயும், நூற்றெட்டு கொழுக்கட்டையும் "பீஸ்" பேசிப் பிள்ளையாரை வக்கீலாக அமர்த்தி யிருப்பதாகவும் கேள்விப் படுகிறேன். இது நிற்க.) "சட்டம்—ஒரு கழுதை" என்ற ஆங்கில ஆசிரியரின் வாக்கு உண்மையா, அல்லவா? நீங்களே சொல்லுங்கள்.

சில வருஷங்களுக்கு முன்னர் நடந்த மற்றொரு வழக்கைப் பற்றிச் சமீபத்தில் கேள்விப்பட்டேன். இரண்டு சகோதரர்கள் தங்கள் தகப்பனர் வைத்துச் சென்ற இரண்டு லட்ச ரூபாய்

சொத்தைப் பிரித்துக் கொண்டார்கள். சொத்துப் பிரிவினை யெல்லாம் சமரசமாக முடிவடைந்து, கடைசியில் தகப்பனர் பூசை செய்துவந்த "ஸாளக்கிராம"த்தைப் பிரித்துக் கொள்வதில் தகாராறு ஏற்பட்டது. இதில் சமாசம் ஏற்படாமல் போகவே சகோதரர்கள் கோர்ட்டுக்குச் சென்றார்கள். ஹைகோர்ட்டு புல் பெஞ்சு வரைக்கும் போய் வழக்காடினர்கள். பிரித்துக்கொண்ட ஒரு லட்ச ரூபாய் சொத்தில் ஒரு தம்படி பாக்கியின்றி இருவரும் செலவழித்தார்கள். முடிவாக, ஸாளக்கிராமத்தை இரண்டாய் உடைத்துத் தலைக்கு ஒரு பாதி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கப்பட்டது! எனக்கு ஒரு சந்தேகம். மேற்படி ஸாளக்கிராமத்தினிடம் இவ்விரு சகோதரர்களையம்விட அதிக பக்திகொண்டு மானத பூஜை செய்துவந்த சில வக்கீல்மார்கள் இருந்திருக்கலாமோ? அந்த பக்தர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று "ஸாளக்கிராமம்" திருவுளங் கொண்டிருக்கலாமென்று தோன்றுகிறது.

மயிலாப்பூரில் ஏறக் குறைய எழுபது வயதானவரும், ஆசார சீலருமான ஒரு பெரிய வக்கீல் இருக்கிறார். இவர் சமீபத்தில் விவாக வயதுக் கமிட்டியாரின் முன்பு சாட்சியந் தருகையில் பெண்களுக்கு 11 வயதுக்குள் கலியாணம் செய்து, பெரியவளான பதினாரும் நாள் சாந்தி முகூர்த்தம் நடத்தி, அதற் கடுத்த வருஷம் குழந்தை பிறந்து, அதில் தப்பிப் பிழைத்தால் இருபது வயதிற்குள் கிழவியாகிக் கண்ணால் பார்க்கவேண்டு மென்றும், பெண்களுக்கு அடுப்பங்கரைக் கல்வியே அதிகமென்றும், அதற்குமேல் கொடுத்தால் அஜீரணமாகி விடுமென்றும், இன்னும் பல முன்னேற்றமான யோசனைகளும் கூறி, கடைசியில் இவைதான் தம்முடைய மதம் என்றும், "என் மதத்துக்காக நான் உயிரையும் விடச் சித்தமாயிருக்கிறேன்" என்றும் சொல்லி முடித்தார். ஆனால் தற்போது அவர் தினந்தோறும் கோர்ட்டுக்கு வந்து பணத்துக்காக உயிர்விடுவதைத் தான் நாம் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். இப்பெரியார் சமீபத்தில் ஓர் அரிய யோசனை கூறினர். அதாவது, பத்து வருஷ காலத்திற்குச் சட்ட கலாசாலையை மூடிவைக்க வேண்டுமென்று

அவர் தெரிவித்தார். இந்த யோசனை எனக்கு மிகவும் பிடித்திருந்த படியால் சட்ட கலாசாலை மாணுக்கர் சிலரிடம் இதைப் பற்றி அபிப் பிராயம் கேட்டேன். "இதை விட அறுபது வயது தாண்டி விட்ட வக்கீல்கள் கோர்ட்டுக்கு வரக்கூடாதென்று சட்டம் செய் தால் நலம்" என்று அவர்கள் சொன்ஞர்கள். பின்னர், கட்சிக்காரர் சிலரிடம் இந்த யோசனையைப் பற்றிச் சொன்னேன். "சட்ட கலா சாலையை மூடுவதைவிடக் கோர்ட்டுகள் எல்லாவற்றையும் பத்து வருஷ காலத்திற்கு மூடிவிட்டால் சர்வோத்தமமா யிருக்கும்" என்று அவர்கள் அபிப்பிராயப் பட்டார்கள்.

வக்கீல் தொழிலில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை இவை யெல்லாம் தெரிவிக்கின்றன வல்லவா? வக்கீல்களின் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது; கட்சிக்காரர்களோ நாளுக்கு நாள் ஏழையாகி வருகிருர்கள். எனவே, போகும் வழி என்ன? கொஞ்ச நாளைக்குமுன் மாயவரத்துக்கு ஜில்லா நீதிபதி வந்திருந்தபோது வக்கீல்கள் அவரை இந்தக் கேள்விதான் கேட்டார்கள். "வேறு வழி யொன்றும் எனக்குப் புலனுகவில்லை. ஈசுவரனைப் பிரார்த்தியுங்கள்" என்று அவர் பதிலளித்தார். தற்போது மாயவரம் வக்கீல்கள் "ஈசு வரா! வழக்குகளும் கட்சிக்காரர்களும் பெருகும்படி அருள் செய் வாய்!" என்று தினந்தோறும் மூன்று வேளை பிரார்த்தனை செய்து வருகிருர்களென்று நம்புகிறேன்.


"ஆகவே, வக்கீல் தொழிலும் தலைகீழ்ப் பாடந்தான் போ லும்!" என்று இதற்குள் நேயர்கள் முடிவு செய்திருக்கலாம். அதில் சந்தேகமே கிடையாது. வழக்குகளும், விவகாரங்களும் அதிகமாக ஆக, வக்கீல்களுக்கு வருவாய் அதிகம் என்றிருக்கும் வரையில், அவர்கள் சமாசத்தில் அதிக பற்றுக் கொள்ளாதிருத்தல் ஆச்சரிய மாகா தன்ருே? வைத்தியர்களைப் போலவே வக்கீல்களும் மனிதர் கள் தான் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். சீன தேசத்தார் வைத்தியர்கள் விஷயத்தில் கையாளும் முறை ஒன்று தான் இந்நிலைமைக்குப் பரிகாரமாகும். நம்முடைய குடும்ப வக்கீல்,

நமக்கும் அண்டை அயலார்களுக்கும் நேரிடும் சச்சரவுகளை யெல்லாம் சமரசமாகத் தீர்த்து வைத்து, நம்மைக் கோர்ட்டுக்கு இழுக்காத வரையில், அவருக்கு மாதம் இவ்வளவென்று சம்பளம் கொடுத்து வருவோம். அப்படிக்கின்றிக் கோர்ட்டுக்குப் போக நேர்ந்துவிட்டால் சம்பளத்தை நிறுத்திவிடவேண்டும். ஸ்டாம்பு கட்டணம் முதற்கொண்டு, கோர்ட்டுச் சேவகனுக்கு இனும் வரையில் எல்லாச் செலவுகளும் வக்கீலே செய்யவேண்டும். எங்கே? இந்தப் பிரேரணைக்குச் சாதகமானவர்கள் எல்லாரும் தயவு செய்து கை தூக்குங்கள்!......சரி, தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறி விட்டபடியால், இன்னொரு பிரேரணையையும் உங்கள் முன் கிளத்த எனக்குத் தைரியம் உண்டாகிறது. போலீஸ் இலாகா விஷயத்திலும் ஏன் இதே முறையைக் கையாளக்கூடாது? ஊரில் திருட்டு, கொலை, கலவரம் எதுவும் நிகழாதிருக்கும் வரையில் போலீஸ்காரர்கள் தாராளமாகச் சம்பளம் வாங்கிக் கொள்ளட்டும். அதிக காலம் எந்தப் பிரதேசத்தில் குற்றம் நடவாம லிருக்கிறதோ, அந்தப் பிரதேசத்திலுள்ள போலீஸ்காரர்களுக்குச் சம்பள உயர்வும் உத்தியோக உயர்வும் அளிப்போம். ஆனால் கொலையும் களவும் எங்கே நிகழ்கின்றனவோ, அங்கே யுள்ளவர்களுக்குச் சம்பளப் பிடித்தம் செய்வோம். ஏன்? முதல்தரமான ஏற்பாடல்லவா ? இதற்குமாறாக இப்போதுள்ள ஏற்பாட்டின் ஊழலைக் கவனியுங்கள். கொலை களவு நடந்த பின்னர் குற்றவாளிகளை யார் கண்டுபிடித்துத் தண்டனை வாங்கி வைக்கிறார்களோ அவர்களுக்குத்தான் சம்பள உயர்வு, உத்தியோக பதவி எல்லாம்! இந்த நிலைமையில், நீங்களே போலீஸ்காரர்களா யிருந்தாலும், குற்றம் நிகழாமல் தடுப்பதில் உங்களுக்குச் சிரத்தை இருக்குமா? நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்!

நேயர்களே ! இதே முறையை வேறு சிலர் விஷயத்திலும் நீங்கள் கையாண்டுபார்க்க விரும்புவீர்களென்பதை நான் அறிவேன். உதாரணமாக, சிற்சில ஆசாமிகள் [illegible]கிய நாவல் எதுவும் எழுதாம

விருப்பதற்காக நீங்கள் பணங் கொடுக்கச் சித்தமா யிருப்பீர்கள். சில பத்திரிகைகள் வெளிவராம லிருக்கும் பொருட்டுப் பணங் கொடுக்கவும் சம்மதிப்பீர்கள். உங்களுக்கு அடுத்த வீட்டில் உள்ள சங்கீத வித்வான் பாடாம லிருப்பதற்கும், உங்கள் வீதியில் வசிக்கும் நாதசுரக்காரர் நாயனம் வாசியாம லிருப்பதற்கும் நீங்கள் மனமுவந்து பணங் கொடுப்பீர்கள். சிற்சில நடிகர்கள் அரங்கத்துக்கு வராம லிருக்கவும், சிற்சில பிரசங்கிகள் மேடையில் ஏருமலிருக்கவும் ஒப் புக்கொண்டால் நீங்கள் சந்தோஷமாகப் பணம் கொடுப்பீர்கள். ஏன்? "நான்" கட்டுரை எழுதாமலிருக்கச் சம்மதித்தால் பணம் கொடுக்க முன்வரக் கூடியவர்களும் உங்களுள் சிலர் இருக்கலாம். அடியேனைப்பற்றிய வரையில் அதற்கு இணங்க ஆட்சேபமே கிடை யாது. கட்டுரை எழுதாம லிருப்பதற்காக எனக்கு யாராவது பணம் கொடுத்தால் இரண்டு கையையும் நீட்டி வாங்கிக்கொண்டு "கப் சுப்" என்றிருக்கத் தயார். அத்தகைய புண்ணியவான்கள் யாராவது முன் வருகிறார்களா என்று பார்ப்போம்.



வாக்கு வேட்டை

—(::)—

முன்னுரை

நேயர்கள் சற்றே சிரித்து மகிழவேண்டும், கொஞ்சம் புன்னகை யேனும் கொள்ளவேண்டும் — என்ற நல்ல எண்ணத் துடனேதான் நான் எழுதி வருகிறேன். ஆனல் இந்த நல்ல எண்ணம் எவ்வளவு தூரம் பலிதமாகி வருகிற தென்று எனக் குத் தெரியாது. சென்னை நகரில் ஒரு பிரபல அரசியல் வாதி இருக் கிறார். அவருக்கு மற்றவர்களைப் போல் தாமும் நகைச் சுவை ததும்பப் பேசவேண்டும் என்னும் ஆவல் மிகுதியு முண்டு. எனவே, அவர் மேடைமீது நின்று பேசும்போது மிக்க ஹாஸ்ய ரசத்துடன் பேசுவதாகத் தாமே எண்ணிக் கொண்டு, இடையிடையே "ஹா! ஹா!! ஹா!!!" என்று சிரிப்பார். ஆனல், பொதுக் கூட்டத்துக்கு வரும் ஜனங்கள் இருக்கிறார்களே — அப்பா! சிறிதும் அநுதாபம் இல்லாதவர்கள்; வாயில் கொழுக்கட்டை யுள்ளவர்களைப் போல் 'உம்'மென்று உட்கார்ந்திருப்பார்கள். ஆனல் பிரசங்கி இதைப்பற் றிச் சவலைப் படுவதேயில்லை. அவர்பாட்டுக்குப் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் போவார். எனக்கும் அவருடைய கதிதானே, என்னமோ, தெரியாது. அவருக்காவது ஓர் ஆறுதல் உண்டு. பொது ஜனங்கள் எப்படி யிருந்தாலும், பத்திரிகை நிருபர்கள் மட் டும் எப்போதும் நகைச் சுவை மிகுதியு முள்ளவர்கள். மற்றவர் களுக்கு ஒன்றும் புலப்படாத இடங்களில்கூட அவர்கள் ஹாஸ்ய ரசத்தைக் கண்டு பிடித்து விடுவார்கள். எனவே, மேற்படி தலைவ ரின் உபந்நியாசம் மறுநாள் பத்திரிகைகளில் வரும்போது இடை யிடையே நகைப்பு, சிரிப்பு, உரத்த நகைப்பு, பலத்த சிரிப்பு, விடா நகைப்பு பரிகாசச்சிரிப்பு, முதலிய சொற்களும், சொற்றொடர்களும் மிளிர[illegible] காணலாம். இந்[illegible]றுதல்கூட எனக்குக் கிடையாது.
[illegible] நகை[illegible] எவ்வளவ[illegible]

நான் எழுதும் கட்டுரை அல்லது கதையில் நானே சிரிப்பு, நகைப்பு என்று போட்டுக் கொள்ளுதல் நன்ருயிருக்குமா? இது நிற்க.

எங்கே ஆரம்பித்தேன்?—அப்பா! இந்த மனக் குரங்கு என்ன ஓட்டந்தான் ஓடுகிறது? "காடுங்கரையும் மனக் குரங்கு கால் விட்டோட" என்று தாயுமானர் தெரியாமலா சொன்னர்? ஆம், நேயர்களுக்குக் கொஞ்சம் நகைப்பூட்ட வேண்டுமென்பதுதான் என் எண்ணம். ஆனல் கீழே வரும் கதையில் சிறிது சோகரசமும் என்னையறியாமல் கலந்துவிட்டதோ வென்று சந்தேகமா யிருக்கிறது. எதற்கும் முன்னதாக எச்சரிக்கை செய்து விடுதல் நல மென்று கருதி இம்முன்னுரை எழுதினேன்.

கதை

நமது கதை 1926-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் காலை ஐந்து மணிக்கு நாட்டுப் புறத்துச் சாலை யொன்றில், இரட்டை மாடு பூட்டிய ஒரு கட்டை வண்டியில் ஆரம்பமாகிறது. (இதுதான் 'நாவல்'களும், கதைகளும் தொடங்குவதற்குரிய நவீன முறை. நேயர்கள் கவனித்துக் கொள்க.) வண்டி 'லொடக்' 'லொடக்' என்று ஆடிக் கொண்டே போயிற்று. வண்டிக்காரக் கௌண்டர் அரை நிமிஷத்துக் கொருமுறை 'ஹாய்' 'ஹாய்' என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தார். நான் சற்றே கண்ணயர்வதும், வண்டி சாலையிலுள்ள பள்ளத்தில் விழுந்து எழுந்திருக்கும்போது திடுக்கென்று விழித்துக் கொள்வதுமா யிருந்தேன். ஒவ்வொரு சமயம் வண்டிக் கூண்டின் மூலைகள் மண்டையிலோ, தோள் பட்டை எலும்பிலோ 'மொட்'டென்று தாக்கும். அப்போது அஹிம்சா தர்மத்தின்மீதும், மகாத்மா காந்தியின்மீதும் பாரத்தைப் போட்டுப் பேசாமல் பொறுத்துக் கொண்டிருப்பேன். வண்டியில் என்னுடன் இருந்த வண்டிக்காரக் கௌண்டரின் மகன் கண்ணன் சிற்சில சமயம் தொப்பென்று என் மேலே விழுவான். அச்சமயங் களில் நான் அவனுக்குக் கொமொகு[illegible]ாவிக சாபங்[illegible] [illegible]ங்கே

எழுதுதல் முறையன்று. ஏனெனில், கண்ணன் தான் நமது கதாநாயகன். வாசகர்களுக்கு அவன்மீது முதலிலேயே கெட்ட எண்ணம் உண்டாகிவிடக் கூடாதல்லவா?

இவ்வாறு, ஆயிரம் முறை உறங்கி விழித்த பின்னர், பறவைகளின் உதயகானத்தைக் கேட்டுக் கண் விழித்து எழுந்து உட்கார்ந்தேன். கீழ் வானம் பொன் மயமாகத் திகழ்ந்தது. பாலசூரியன் இன்ப ஒளித்திரளாக அப்போது தான் உதயமாகிக் கொண்டிருந்தான். மனோகரமான இளங்காற்று வீசிற்று. சாலையின் ஒரு புறத்தில் இருந்த விசாலமான தோப்பிலிருந்து ஆயிரக் கணக்கான புள்ளினங்கள் கா கூ வென்று பற்பல சுரங்களில் பாடிக்கொண்டு நாலு திசைகளையும் நோக்கிப் பறந்தோடின. குடியானவர்கள் புலங்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டே பாடிய ஒலி எங்கேயோ வெகு தூரத்திலிருந்து காற்றுடன் கலந்து வந்து கேட்டது. (நேயர்களுக்கு ஓர் இரகசியச் செய்தி. உண்மையில் இந்த விவரங்களையெல்லாம் அப்போது நான் கவனிக்கவேயில்லை. கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்ததும், வழியில் இட்டிலி, காப்பி எங்கேயாவது கிடைக்குமா என்பதில் தான் புத்தி நாட்டங் கொண்டிருந்தது. ஆனால் கதை ஒன்று எழுதினால், அதில் இதுபோன்ற இயற்கை வர்ணனைகள் மிகவும் அவசியம்; இல்லாவிடில் ரசப்படாது. ஆசையினால் தான், பின்னால் யோசனை செய்து இந்த வர்ணனையை எழுதினேன்.)

புதுக் கதைக்கு இன்றியமையாத அம்சங்களான முடுக்கான ஆரம்பம், இயற்கை வர்ணனை இவ்விரண்டும் இப்போது ஆகிவிட்டபடியால், இனிமேல் நான் கதையை உள்ளது உள்ளபடியே சொல்லிக் கொண்டு போகலாம். சௌண்டரும் நானும் நெடுங்கால நண்பர்கள். ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் நான் தற்போது சென்னை வாசி. அவர் கிராமத்திலேயே வசித்து வந்தார். அவருக்குச் சொந்தம் நிலபலம் உண்டு. அத்துடன் வாடகை வண்டியும் ஓ[illegible] நகைபணம் ச[illegible] எவ்வள[illegible] வருஷ மொருமுறை நான்

ஊருக்குப் போவது வழக்கம். அதுபோல் இவ்வருஷமும் சென்றேன். தற்செயலாகக் கௌண்டர் வண்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருக்கவே மேற்கூறியாவாறு வண்டியில் ஏறிப் படுத்துக் கொண்டு புறப்பட்டேன். தூக்கம் கலைந்ததும் நானும் கௌண்டரும் ஊர் விஷயங்கள் பலவற்றையும் குறித்துப் பேசத் தொடங்கினோம். வண்டி பாதிதூரம் போன பின்னர் கண்ணன் "அப்பா! உட்கார்ந்து உட்கார்ந்து காலைக் குறக்களி வாங்குகிறது. சற்று நடந்து வருகிறேன்" என்றான். கௌண்டர் வண்டியை நிறுத்திப் பையனை இறக்கிவிட்டார். நானும் இறங்கி விடலாமா வென்று எண்ணினேன். ஆனால் பேச்சின் சுவையே வெற்றி கொண்டது. வண்டிக் கூண்டின் மூலைகளில் அடிபட்டு எலும்பு முறிவது கூடப் பெரிதாகத் தோன்றவில்லை. கௌண்டர் இடையிடையே "ஹாய்! ஹாய்" என்று உருப் போட்டுக் கொண்டு வந்தார். நானோ அடிக்கடி "இட்லி காப்பி" மந்திரத்தை மானஸிகமாய் ஒப்பித்து வந்தேன்.

"பூம் பூம்" என்ற மோட்டார் கொம்பின் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஐயோ! அப்போது நான் கண்ட காட்சியை என்ன வென்று கூறுவேன்? வண்டிக்குப் பின்னால் சுமார் ஐம்பது கஜ தூரத்தில் சாலையில் ஒரு வளைவு இருந்தது. குழந்தை கண்ணன் இவ்வளைவைக் கடந்து இப்போது தான் திரும்பினான். அந்தக் கணத்திலே "பூம்" "பூம்" என்று சத்தமிட்டுக்கொண்டு மோட்டார் வண்டியும் வளைவுதிரும்பி—அந்தோ! அச்சின்னஞ் சிறு குழந்தையின் மேல் ஏறிவிட்டது. மோட்டார் சத்தங் கேட்டு நான் திரும்பிப் பார்த்த அதே நேரத்தில் ஒரு கணத்தில் இவ்வளவும் நிகழ்ந்துவிட்டது. என்னைப்போலவே திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்த கௌண்டர் "ஹோ" வென்று அலறிக் கொண்டு கீழே குதித்து ஓடினார். நானும் சட்டென்று வண்டியினின்றும் குதித்து அவர் பின்னர் விரைந்து சென்றேன். குழந்தை கிடந்த இடத்தை அடைந்ததும் கௌண்டர் அவனை வாரி எடுத்து மடியில் போட்டுக் கொண்டார். இதற்குள் நானும் அங்கே போய்ச்சேர்ந்தேன். சிறுவ[illegible] மார்

பில் கையை வைத்தேன். "படபட" வென்று அடித்துக் கொண்டிருந்தது. மூச்சு மிகவும் மெதுவாய் வந்து கொண்டிருந்தது. "பயப்படாதீர்கள்; கடவுள் காப்பாற்றுவார்" என்றேன். நாயக்கர் கண்களிலிருந்து நீர் அருவி தாரைதாரையாய்ப் பொழிய வாரம்பித்தது. பின்னர், எங்கள் இருவர் நினைவும் இயற்கையாக மோட்டார் வண்டியின்மீது சென்றது. வந்த வேகத்தில் கொஞ்ச தூரம் போய் விட்ட மோட்டார் இப்போது திரும்பி வருவதைப் பார்த்தோம்.

எங்கள் அருகில் வந்ததும் வண்டி நின்றது. அதில் பின் பலகையில் மூவரும், முன்னால் இருவரும் இருந்தனர். பின் பலகையில் இருந்த இரண்டுபேர் தான் அந்தக் கூட்டத்தில் முக்கியமானவர்கள் என்று பார்த்தவுடனே தெரிந்தது. கலியாண வீட்டில் ஆயிரம்பேர் கூடியிருந்தபோதிலும் மாப்பிள்ளையைப் பார்த்தவுடன் கண்டுபிடிக்க முடியுமல்லவா? அவ்விருவரில் ஒருவர் ஐயங்கார் சுவாமிகள். அவர் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர். பறங்கிப்பழம்போன்ற நிறமுடையவர். நல்ல ஆஜானுபாகு. நெற்றியில் அழகான நாமம் தரித்திருந்தார். தங்க விளிம்புகட்டிய மூக்குக்கண்ணாடி, காதுகளில் ரவைகள் பதித்து டால்வீசிய கடுக்கன் ஜோடி, அரையில் மூலக்கச்சம், கறுப்புப் பட்டினாலான நீண்ட மேற் சொக்காய், சரிகைத் தலைப்பாகை முதலியவை அவர் அழகுக்கு அழகு செய்தன. சொக்காய்ப் பையினுள்ளிருந்து வேலைப்பாடமைந்த தங்க கடிகாரச் சங்கிலி தொங்கி விளையாடிக் கொண்டிருந்தது. மற்றொருவர் வேளாளப் பிரபுபோல் காணப்பட்டார். அவர் கறுப்புநிறம். ஆனால் உடல் பருமனிலோ, ஆடையாபரணங்களிலே ஐயங்காருக்குச் சிறிதும் குறைந்தவ ரல்லர்.

மோட்டார் வந்து நின்றதும் "என்ன ? உயிருக்கு அபாயம் இல்லையே" என்று கனம் ஐயங்கார் வினவினர். "ஏதோ அந்தமட்டில் உங்கள் தயவுதான்!" என்று நான் பதில் சொன்னேன். ஐயங்கார் என்னைச் சற்றே ஏற இறங்கப் பார்த்துவிட்டு அசட்டுச் சிரிப்பு சிரித்தார். இதற்குள் முன் ஆசனத்திலிருந்த ஒருவர் கீழே குதித்து அருகி[illegible] சிறுவனைப் [illegible]எவ்வளவிட்டு "அதெல்லாம் ஒன்று

யில்லை. அதிர்ச்சியினால் மூர்ச்சை யடைந்திருக்கிறான். அவ்வளவு தான். நல்ல வேளையாக ஓரத்தி லிருந்தபடியால் வண்டி எத்தித் தள்ளிவிட்டுப் போய்விட்டது. நடுவில் அகப்பட் டிருந் தால் சட்னிதான்!" என்றார். அவர் இதைக் கூறிய முறையில், பையன் "சட்னி" யாகாதது குறித்து அவர் மிகவும் வருந்துவது போல் தோன்றிற்று.

இதுவரை சிறிது கலக்கங் கொண்டவர்போல் காணப்பெற்ற வேளாளப் பிரபு இப்போது தைரிய மடைந்தவராய், சௌண்ட ரைப் பார்த்து "ஓய், உமக்கு மூளை கீளை இருக்கா? சிறு பையனைச் சாலையில் இப்படி விடலாமா? பையன் செத்துப் போயிருந்தால் இப் போது என்னசெய்வது?" என்று கேட்டார். எனக்குச் சொல்லமுடி யாத ஆத்திரம் வந்தது. "பிள்ளைவாள்! அந்தக் கேள்வியை நாங்கள் அல்லவா உங்களைக் கேட்கவேண்டும்? சாலைகூடவா உங்கள் ஏக போக உடைமையாகி விட்டது?" என்றேன். பிள்ளை தமது நோக் கால் என்னைச் சுட்டு வீழ்த்திவிடுபவர் போலப் பார்த்தார். அப்போது ஐயங்கார் சிறிது தொண்டையைக் கனைத்துக்கொண்டு "என்ன ஓய்! லா பாயிண்டா பேசுகிறீர்?" என்று கேட்டார்.

இவர்களெல்லாம் மனிதர்கள் தானா, மிருகங்களா என்று எனக் குச் சந்தேகம் வந்துவிட்டது. "ஐயங்கார் சுவாமி! உம்முடைய லாவையும், பாயிண்டையும் சுடுகாட்டுக்கு அனுப்பும். குழந்தையின் மேல் மோட்டாரை ஏற்றிவிட்டு ஏதேதோ பேசுகிறீர்களே? பையன் குற்றுயிராகக் கிடப்பது தங்கள் கண்ணில் படவில்லையா? அவனை உடனே வைத்திய சாலைக்குக் கொண்டுபோய் சிகிச்சை செய்ய வாவது வேண்டாமா?" என்றேன்.

ஐயங்கார் மூக்குக் கண்ணாடியை எடுத்துத் துடைத்துப் போட் டுக்கொண்டு என்னைப் பார்த்தார். "யாரோ டவுன் காலாடி போ லிருக்கிறது" என்று அவர் பிள்ளையிடம் மெதுவாக ஆங்கிலத்தில் கூறினார். "இவர்களுக்கெல்லமாகுட[illegible]ம்கூட இட[illegible]டுக்கக்

கூடாது. ஏதேது? இன்னும் கொஞ்ச நாளில் 'கம்யூனிஸ'மே வந்து விடும்போ லிருக்கிறது" என்று பிள்ளை பதிலளித்தார். பின்னர், வண்டி ஓட்டியைப் பார்த்துக் "கிளம்பு" என்றார். இதற்குள், ஐயங்கார் தமது சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கௌண்டருக்கு அருகில் எறிந்து "ஓய்! இந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளும். பையனை யாராவது டாக்டரிடம் கொண்டுபோய்க் கவனமாய்ப் பாரும்" என்றார். மோட்டார் வண்டியும் 'பட்பட்' என்று அடித்துக்கொண்டு புறப்படலாயிற்று.

கௌண்டர் அவசரமாய்க் குனிந்து அந்தப் பத்து ரூபாய் நோட்டை எடுத்தார். அதைக் கண்டதும் என் மனம் சிறிது புண்பட்டது. என் மானம் போய்விட்டதென்று எண்ணினேன். ஆனால் அடுத்த கணத்தில், நான் அவருக்குப் பெரும் அநீதி செய்துவிட்டேன் என்பது புலனாயிற்று. கௌண்டர் பொறுக்கிய நோட்டை வேகமாக வீசி எறிந்தார். அது பறந்துசென்று அப்போதுதான் புறப்பட்டுக் கொண்டிருந்த மோட்டாரில் ஐயங்கார் முகத்தினெதிரே விழுந்தது. நான் என்னையும், கௌண்டரின் துயரத்தையும் மறந்து கைகொட்டிச் சிரித்தேன்.

அருகிலிருந்த பட்டணத்தில் எனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு கடிதம் எழுதிக் கௌண்டரிடம் கொடுத்தேன். ஐயங்காரின் நோட்டுக்கு நேர்ந்த கதியைப் பார்த்த பின்னர் கௌண்டருக்குப் பணங்கொடுக்க எனக்குப் பயமாகத்தானிருந்தது. இருப்பினும் துணிந்து ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தேன். நான் பயந்ததற்கு நேர் மாறாக அவர் அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டார்.

பின்னர், வண்டியைத் திருப்பிக்கொண்டு போனார். நான் காலை வண்டியில் ஊர்போய்ச் சேர்ந்தேன். அவர் குடும்பத்தாருக்கு விவரம் தெரி[illegible] ந[illegible] தைரியம் கூறி[illegible] எவ்வளக்[illegible]

இரண்டுநாள் கழித்துக் கௌண்டர் கண்ணனுடன் திரும்பி வந்து சேர்ந்தார். அன்று மாலை அவர் வீட்டுக்குப் போனேன். கடவுள் அருளால்தான் பையன் தப்பிப் பிழைத்ததாக டாக்டர் கூறினராம். அவனைப் பார்த்த பின்னர் வீட்டு நடையில் இருந்த திண்ணையில் உட்கார்ந்து நானும் கௌண்டரும் பேசிக்கொண் டிருந்தோம். வாசர் திண்ணையின் மாடத்தில் ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கு மங்கலாய் எரிந்துகொண் டிருந்தது. அப்போது வாசலில் 'பூம்' 'பூம்' என்ற மோட்டார் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுப் போனோம். "ஏது? மோட்டார் யமன் நம்மை விடமாட்டான்போ லிருக்கிறதே?" என்றேன். இதற்குள் வண்டி கௌண்டர் வீட்டு வாசலிலேயே வந்து நின்றது. "கௌண்டரே! கௌண்டரே!" என்று கூப்பிடும் சத்தம் அடுத்த நிமிஷம் கேட்டது. நாங்கள் ஆச்சரியக் கடலில் மூழ்கியே விட்டோம். கௌண்டர் எழுந்து வாசல் திண்ணைக்குப் போனார்.

எனக்குமட்டும் ஒரு சந்தேகம் உதித்தது. அன்று வாக்கு வேட்டைக்காகச் சிலர் எங்கள் ஊருக்கு வரப்போகிறார்களென்று கேள்விப்பட் டிருந்தேன். ஆதலின், நடைத் திண்ணையில் இருந்த வண்ணம் எட்டிப் பார்த்தேன். மோட்டாரிலிருந்து மூவர் இறங்கிவந்து வாசல் திண்ணையில் உட்கார்ந்தார்கள். அவர்களில் ஒருவர் எங்கள் ஊர் மிட்டாதார். மற்ற இருவரும்—சரி! சரி! அந்த மங்கிய மண்ணெண்ணெய் விளக்கொளியிலும் அவர்களை நான் கண்டுகொண்டேன். என் சந்தேகம் நிச்சயப்பட்டது. சொல்லமுடியாத குதூகலத்தினால் அங்கேயே ஒரு துள்ளல் துள்ளிக் குதித்தேன். அப்புறம் "என்ன சிறுபிள்ளைத்தனம்!" என்று எனக்கே சிறிது வெட்கமா யிருந்தது.

இதற்குள் வாசலில் சம்பாஷணை தொடங்கியாகிவிட்டது. பேசியவர் மிட்டாதாரர். அவர் கூறியதாவது:—"கௌண்டரே! இவர்கள் ரொம்ப பெரிய மனிதர்கள். சாதாரணமாக வெல்லாம் நம்மைத் தேடி வரமாட்டாதவர்கள்."

மாகு

"அப்படியுங்களா? சந்தோஷம்!" என்றார் கௌண்டர். அவர் பேச்சின் தொனியிலிருந்து அவருக்கும் கொஞ்சம் சந்தேகம் தட்டியிருக்கலாமென்று தோன்றியது.

மிட்டாதார் மேலும் சொல்வார்:—"ஆமாம்! வராதவர்கள்தான் வந்திருக்கிறார்கள். அதோ இருக்கிறவர்கள் சென்னைப் பட்டணத்திலே பெயர்பெற்ற வக்கீல். நமக்கு ஏதாவது ஹைகோர்ட்டில் கேஸ் ஏற்படும்போது இவர்களிடந்தான் போவது வழக்கம். ஹைகோர்ட் ஜட்ஜு பதவி ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் இவர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் சம்பளம் குறைவென்பதாக இவர்கள் மறுத்துவிட்டார்கள். பரோபகாரம் செய்வதிலே இவர்களை மிஞ்சியவர் இந்தச் சென்னை இராஜதானியிலேயே கிடையாது. ஏராளமாகப் பணம் சம்பாதித்து அவ்வளவையும் தர்மத்துக்கே செலவிட்டு வருகிறார்கள்........."

(ஏதேது? நமது ஊர் மிட்டாதார் இவ்வளவு வாக்குத் திறமையுள்ளவரா? என்றெண்ணி நான் பிரமித்துப்போனேன். அவர் பேச்சில் நானே மயங்கி விழுந்து விடுவேன்போல் இருந்தது. ஆனால் இந்தப் பாடத்தைப் பல இடங்களில் ஒப்புவித்து அவருக்குப் பழக்கமாய்ப் போயிருக்கவேண்டும்.)

"......ஏழை எளியவர்களுக்கு அதிக உபகாரம் செய்துவருங் காரணத்தினால் ஜனங்கள் எல்லாம் சேர்ந்து இவர்களுக்கு ஏழைகளின் நண்பர் என்ற பட்டப்பெயரும் அளித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட மகான், டில்லி சட்டசபைக்குத் தேர்தலில் நிற்கிறார்கள். உங்களுடைய வோட்டை நீங்கள் அவர்களுக்கே கொடுக்க வேண்டும். வரி, வாய்தாக்களைக் குறைப்பதற்குப் பாடுபடுவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இதோ இருக்கும் பிள்ளைவாளைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவர்கள்தான் மணிமங்கலம் பெரிய பண்ணைப்பிள்ளை. பரம்பரையான பெரிய குடும்பம். இவர்கள் ... நமைசென்னை ... எவ்வளவ... சட்டசபைக்கு நிற்கிறார்கள். எத்

தனையோ தர்மங்கள் செய்திருக்கிறார்கள். முக்கியமாகக் குழந்தைகளின் க்ஷேமத்திலே இவர்களுக்கு ரொம்ப சிரத்தை யுண்டு. ஒவ்வொரு வருஷமும் நமது ராஜா பிறந்த தினத்தன்று இவர்கள் பதினாயிரம் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு தின்பண்டங்கள் வழங்கி வருகிறார்கள்........"

இதற்குமேல் என்னால் தாங்க முடியவில்லை. உடனே நான் வாசலுக்கு வந்து, மாடத்திலிருந்த விளக்கை எடுத்துத் தூண்டி விட்டுத் தூக்கிப் பிடித்தேன். மிட்டாதாரைத் தவிர்த்து இரண்டு ஆசாமிகளும், மோட்டாரில் நாங்கள் கண்ட பிரபுக்கள்தான் என்பது ஐயமற விளங்கிற்று. "ஐயங்கார் சுவாமிகளே! சௌக்கியமா?" என்றேன். ஐயங்காரும், பிள்ளைவாளும் திடுக்கிட்டவர்களாய் என்னையும், கௌண்டரையும் பார்த்துப் பார்த்து 'திரு திரு' வென்று விழித்தார்கள். ஆகா! அந்த நேரத்திலே, அந்த மங்கிய மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியிலே, அவர்களுடைய திருமுக மண்டலங்களின் தோற்றத்தை நீங்கள் பார்த்திருக்கவேண்டும்!

அப்போது மிட்டாதார் என்னைப் பார்த்து "ஓஹோ! நீங்களா? உங்களுக்கு ஐயங்கார் சுவாமிகளைத் தெரியுமோ?" என்று கேட்டார். "எனக்கு இரண்டு பேரையும் தெரியும். ரொம்ப ஜீவகாருண்ய முள்ளவர்கள். அதிலும் குழந்தைகள் என்றால் உயிரை விடுவார்கள்" என்றேன். பிள்ளை வேறு பக்கம் திரும்பிப் பொடி டப்பியைத் திறந்து ஒரு சிட்டிகை இழுத்தார். ஐயங்கார் கடிகாரத்தை எடுத்து மணிபார்த்துவிட்டு 'நேரமாகிறது' என்றார். பின்னர், மூவரும் எழுந்து சென்றார்கள்.

"யாருக்கு வோட்டுக் கொடுக்கப்போகிறீர்கள்?" என்று கௌண்டரைப் பார்த்துக் கேட்டேன்.

"எங்கள் வீட்டு எருமை மாட்டுக்கு" என்று அவர் பதில் சொன்னபோது எனக்குக் கொஞ்சம் கோபந்தான் வந்தது. ...னெ

னில், எப்போதேனும் தேர்தலுக்கு நிற்கலாம் என்ற ஆசை எனக்குக்கூட சிறிது உண்டு.

"அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்?" என்றேன்.

"எங்கள் வீட்டு எருமை மாடு எங்கள் குழந்தையை இடறித் தள்ளிக்கொண்டு போவதில்லை. குழந்தையைக் கண்டால் கொஞ்சம் அகன்றுதான் போகும்" என்றார் கௌண்டர்.

"எல்லோரும் ஐயங்கார் சுவாமிகளையும், பிள்ளைவாளையும் போலவே இருப்பார்களா?" என்று ஆனமட்டும் சொல்லிப் பார்த்தேன். ஒன்றும் பயனில்லை.

ஆகவே, நேயர்களில் யாரேனும் தேர்தலுக்கு நிற்க எண்ணினால், நமது கௌண்டரிடம் மட்டும் போகவேண்டாம். போனால் நிச்சயமாக வீண் முயற்சியாகவே முடியும். அதைவிடக் குட்டிச் சுவரிடம் போய் வோட்டுக் கொடுவென்று கேட்கலாம்.



ஆரம்ப ஆசிரியர்

—(::)—

கொஞ்சநாளைக்கு முன் பத்திரிகைகளில் ஒரு செய்தி படித்தேன். ஒரு திருடன் சுருட்டுக்கடை ஒன்றில் கன்னம் வைத்துப் புகுந்தானாம். அங்கே எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டியும் அவன் எதிர்பார்த்தபடி ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் பெட்டி யடியில் கிடந்த காலணா காசுடன் அவன் திரும்பிப்போக நேர்ந்ததாம். என்ன வெட்கக்கேடு பாருங்கள்! திருடப்போயும் தரித்திரம் தொலையவில்லை. அந்தச் சுருட்டுக் கடைக்காரன் பரம லோபியா யிருந்திருக்க வேண்டும். இது நிற்க.

மேற்படி செய்தியைப் படித்தபோது எனக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அதாவது, திருட்டுத் தொழில் இவ்வளவு கேவலமாய்ப் போய்விட்டால், திருடர்கள் வேறு ஏதேனும் உத்தியோகம் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான் என்று நினைத்தேன். வேறு நல்ல உத்தியோகம் ஒன்றும் கிடைக்கா விட்டால் எங்கேயாவது ஒரு கிராமத்தில் பள்ளிக்கூடமாவது போடலா மல்லவா?

ஆமாம், உண்மையிலே இந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்களால் தேசத்துக்கு அதிக நன்மை விளைந்து வருகிறது. வேறு எந்த வேலைக்கும் லாயக்கில்லாத எத்தனை இளைஞர்களும், கிழவர்களும், நடுத்தர வயதினரும் அந்தப் பள்ளிக்கூடங்களினாலே பிழைத்து வ்குகிறார்கள்? இங்கிலாந்து தேசத்தில் இவ்வாறு வேறு வேலைக்கு லாயக்கில்லாதவர்களை யெல்லாம் இந்தியாவில் உத்தியோகம் செய்ய அனுப்பி விடுவார்கள். ஆனால் இங்கிலாந்துக்கு இந்தியா இருப்பது போல் இந்தியாவுக்குத் தன் ஆட்சிக்குட்பட்ட தேசம் வேறு கிடையாது. எனவே, போகும் வழியென்ன? நாட்டிற்குள்ளேதான் ஏதேனும் வழி ஏற்பட வேண்டு[illegible]ரம்பப் பள்[illegible]ங்கள்

எவ்வளவு உபயோகமானவை என்று இதிலிருந்து நன்கு விளங்கு கின்றதல்லவா ?

ஓர் உதாரணம் சொல்கிறேன், கேளுங்கள்! எனக்குத் தெரிந்த பையன் ஒருவன் ஐந்தாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தான். அவன் துர்ச் சகவாசத்தினல் கெட்டுப்போய் மைனர் விளையாட்டில் இறங்கினன். ஒருமுறை அவன் தன் அண்ணன் மனைவியின் நகை களைத் திருடிக்கொண்டுபோய், 'வழுக்கி வீழ்ந்த சகோதரி' ஒருத்தி யினிடம் கொடுத்து விட்டான். பிறகு சில தினங்கள் எங்கெங் கேயோ கெட்டலைந்து கடைசியாக வீட்டுக்குத் திரும்பிவந்து சேர்ந் தான்.

அப்பொழுது தமையனர் தம்பிக்கு அன்புடன் சொன்ன புத்தி மதி யாவது:—" தம்பி! போனது போகட்டும். எல்லாவற்றையும் மன்னித்து விடுகிறேன். இனிமேல் உனக்குப் படிப்பில் புத்தி செல் லாது. படித்தது போதும். ஏதாவது பிழைப்புக்கு வழி பார்க்க வேண்டும். வக்கீல் குமாஸ்தா ஆகிருயா? ஆனல் அதில் எடுத்ததும் வருமானம் கிடைக்காது. கோயில் கணக்குப்பிள்ளை யாகலாம். தர்மகர்த்தாவை எனக்குத் தெரியும். சிபார்சு செய்கிறேன். இதுவும் உனக்குப் பிடிக்காவிட்டால், டிரெயினிங்குக்குப் போய்வந்து பள் ளிக்கூட உபாத்தியாயராகவாவது ஆகலாம். ஆமாம், எல்லாவற்றை யும்விட இதுதான் நல்லது. சிபார்சு, கிபார்சு ஒன்றும் வேண்டிய தில்லை. சுலபமான வேலை. என்ன சொல்கிருய்?" என்ருர். பையன் தற்போது டிரெயினிங் ஸ்கூலில் படித்து வருகிருன்!

நான் இப்படிச் சொல்வதினல் ஆரம்ப ஆசிரியர் சமூகத்தையே நிந்தனை செய்வதாக யாரும் நினைத்தல் கூடாது. பாவம்! ஆரம்ப ஆசிரியர்களுக்கு வாழ்க்கை ஆரம்பத்தில் நகைச்சுவை உணர்ச்சி கொஞ்ச நஞ்சம் இருந்தாலும், நாளாக ஆக அது மங்கி ஒன்று மில் லாமல் போயிருக்கும். ஆகவே, அவர்கள் என்மீது இதற்குள்ளேயே கடுங்கோபம் கொண்டிருந்தால் நான் ஆச்சரியப் படமாட்டேன். " அ[illegible] நகை சொல்லலா[illegible] எவ்வள[illegible] எல்லாரும் ஒரு வேலைக்கும்

லாயக்கில்லாதவர்களா ? நாங்களெல்லோரும் திருடர்களா ? நாங்கள் எல்லாம் அப்படியா ? இப்படியா?" என்று அவர்கள் சண்டைக்கு வரலாம். சுவாமிகளே ! மன்னிக்க வேண்டும். என்னுடைய நோக்கம் இதற்கு முற்றிலும் மாறானது.

நான் இத்தனை சக்கர வட்டமாக எழுதுவ தெல்லாம் ஓர் ஆரம்ப ஆசிரியரின் அருளினல்தான். அவர் இருக்கும் திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பிக்கிறேன். இன்னும் எனது பிரிய நண்பர்களில் சிலர் ஆரம்ப ஆசிரியர்கள். என் மதிப்புக்குரிய பெரியார்களில் பலர் ஆரம்ப ஆசிரியர்கள். எல்லாவற்றிலும் முக்கியமானது யாதென்றால், நானும் தற்போதைக்கு ஒரு முறையில் ஆரம்ப ஆசிரியன்தான். ஆகவே ஆரம்ப ஆசிரியர்களைப்பற்றி நான் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அந்தத் தொழிலின் நற்கால நிலைமையைப் பற்றியே கூறினேன். அதைப்பற்றியே இன்னமும் கூறப் போகிறேன்.

மேலே தமையனர் தம்பிக்குப் புத்தி சொன்னாரல்லவா ? அவர் சொன்னதிலே பாக்கி யெல்லாம் சரிதான். ஆனல் ஒன்றுமட்டும் கொஞ்சமும் சரியில்லை. ஆரம்ப ஆசிரியர் தொழிலை மிகவும் சுலபமான வேலை என்பதாக அந்தப் புண்ணியவான் சொன்னார். ஒரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள். ஒருவன் ஆற்றோடு போய்க் கொண்டிருந்தான். கரையில் நின்ற மற்றொருவன் "அப்பனே ! உன்னை நான் கரையேற்றி விடுகிறேன். என் குழந்தைகள் இரண்டு பேருக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கிறாயா?" என்று கேட்டான்: "ஐயோ ! வேண்டாம் ! நான் ஆற்றோடேயே போகிறேன்" என்று சொல்லி அவன் போய் விட்டானம். உண்மையிலே அது அவ்வளவு கஷ்டமான வேலை. எனினும், அதைப்போல் அவமதிக்கப்படும் தொழில் வேறு கிடையாது. அவ்வளவு குறைந்த கூலி வேறெந்த வேலைக்கும் இல்லை.

உபாத்திமைத் தொழிலே கஷ்டந்தான். அதிலு[illegible]ழந்தைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடு[illegible]ன்றால் சொ[illegible]ண்டிய

தில்லை. "ம-ர-ம்=மரம்," "ம-ர-ம்=மரம்" என்று பன்னிரண்டு தடவை சொல்லிக் கொடுத்த பிறகு பையன் "ப-ள-ம்=பழ்ழம்" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொல்லுகிறுன். "ஐயோ! கர்மமே" என்று உபாத்தியாயர் தலையில் அடித்துக் கொள் கிறுர். இதற்குள் ஒரு பையன் "ஜார்! ஒன்னுக்கு" என்று அவர் முகத்தண்டை விரலை நீட்டுகிறுன். இன்னொருவன் "வாத்தியார்! சீனு என் புத்தகத்தைக் கிழித்துவிட்டான்" என்று கத்துகிறுன். மற்றொருவன் "ஸ்லேட்டுக் குச்சியைக் காணோம்" என்கிறுன். வேறொரு பையன் தேம்பித் தேம்பி அழுகிறுன். எவ்வளவு தடவை கேட்டாலும் பதில் வருவதில்லை. இதற்குள் வாசலில் ஏதோ சத்தம் கேட்கிறது. எல்லாப் பிள்ளைகளும் எழுந்து வெளியே ஓடுகிறுர்கள். அவர்களைத் திரட்டிக் கொண்டு வந்து சேர்ப்பதற்குள் உபாத்தியாயருடைய பிராணன் உச்சந் தலைக்கு வந்துவிடுகிறது.

உலகம் பலவிதம் என்பார்கள். பிள்ளைகளிலும் பலவிதம் உண்டு. இராமன் கெட்டிக்காரப் பையன். அவனுக்குக் கணக் கெல்லாம் நன்றுய்த் தெரியும். ஆனுல் கேட்டால் மட்டும் பதில் சொல்லமாட்டான். "ராமா! ஏழும் எட்டும் எவ்வளவு?" என்று வாத்தியார் கேட்கிறுர். பையன் வாய்மூடி மௌனியாய் நிற்கிறுன். "எவ்வளவு?" மௌனம். என்னதான் தட்டிக் கொடுத்தாலும், தாஜா பண்ணினுலும் பயனில்லை. மனதிற்குள் அவன் "பதினைந்து, பதினைந்து" என்று சொல்லிக் கொண்டே யிருக்கிறுன். ஆனுல் உதட்டைத் தாண்டி அது வெளியில் வருவது கிடையாது. இவ னுக்கு நேர் மாருனவன் கோபு. "ஏழும் எட்டும் எவ்வளவு?" என்று வாத்தியார் கேட்டு வாய் மூடுவதற்குள் "பத்தொன்பது" என்று அவன் தவக்கமின்றிப் பதில் சொல்லுகிறுன். "என்னடா பத் தொன்பது?" "ஆறும் ஏழும் பத்தொன்பது." "நான் என்ன கேட்டேன்?" "எட்டும் ஒன்பதும் என்னவென்று கேட்டீர்கள்." (பதில்[illegible]மாரியாய் வருகின்றன.) "எட்டும் ஒன்பதும் என் னட[illegible] நறைன்மூன்று" [illegible]எவ்வளவுச் சொல்லு." "பதினுலு."

உபாத்தியாயர் எரிச்சல் பொறுக்காமல் அடிப்பதற்குக் கையை ஓங்குகிறார். "இல்லை, ஸார்! பன்னிரண்டு" என்று பையன் அவசரமாய்க் கத்துகிறான். ஆசிரியர் கண்களில் நீர் ததும்புகிறது.

சில வேலைகள் மிகவும் கஷ்டமா யிருக்கலாம்; ஆனால் அவை முக்கிய மற்றனவா யிருத்தல்கூடும். உதாரணமாக, அவசரமாய் ஓடும் பன்றிக் குட்டியைப் பிடிப்பது மிகவும் கஷ்டமான காரியம். அப்படிப் பிடிக்க முயன்ற ஒருவனை நான் பார்த்திருக்கிறேன். ஐயோ! அவன் பட்ட கஷ்டத்தை இப்பொழுது நினைத்தாலும் பயமாயிருக்கிறது. ஆனால் அந்த வேலை முக்கியமானதென்று எவரும் சொல்லமாட்டார்கள். ஆனால் ஆரம்ப ஆசிரியர் வேலை அத்தகைய தன்று. அது எவ்வளவு கஷ்டமானதோ அவ்வளவு முக்கியமானது மாகும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பது மொழி. ஐந்தில் வளைப்பவர் ஆரம்ப ஆசிரியர். அவர் கோணலாய் வளைத்துவிட்டால் வாழ்க்கை பூராவும் கோணல்தான். நாட்டின் வருங்காலப் பிரஜைகள் வளருமிடம் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள். தேச மக்கள் தீரம் மிக்க ஆண் சிங்கங்களாய் விளங்குவதும், கோழைத் தனம் வாய்ந்த அடிமைகளா யிருப்பதும் ஆரம்ப ஆசிரியர் களின் கைவேலையே யாகும்.

இந்த உண்மைகளை மேனாட்டார் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆரம்பக் கல்விக்குக் கோடி கோடியாய்ப் பணம் செலவழிக்கிறார்கள். உயர்தரக் கல்விக்குச் செலவழிப்பதைக் காட்டிலும் ஆரம்பக் கல் விக்கே அதிகம் செலவு செய்கிறார்கள். டாக்டர் மாண்டிஸாரி என் னும் ஓர் அம்மையார் இருக்கிறார். இவர் பச்சைக் குழந்தைகளுக் குப் பாடஞ் சொல்லிக் கொடுக்க ஒரு புதிய முறை கண்டு பிடித் திருக்கிறார். இந்த முறையின்படி ஐந்து வயதுக் குழந்தை ஒன்றுக் குக் கல்வி கற்பிக்க 500 ரூபாய்க்குக் கருவிகள் மட்டும் வாங்கவேண் டும்! நமது நாட்டிலோ ஐம்பது குழந்தைகள் படிக்கும் ஒரு பள்ளிக் கூடம் முழுவதற்கும் ஆசிரியர் சம்பளம் உள்பட வரு[illegible]ல் 500 ரூபாய் செலவழிக்கப் படுவதி[illegible]

நம் நாட்டு ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இரண்டு வகைப்பட்டவை. ஒரு வகை அரசாங்க உதவி பெற்ற சொந்தப் பள்ளிக்கூடங்கள்; மற்றொரு வகை போர்டு பள்ளிக்கூடங்கள். சொந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கத்திலிருந்து வருஷா வருஷம் கிராண்ட் கொடுக்கப்படும். போர்டு பள்ளிக்கூடங்களுக்கு மாதா மாதம் தாலூகா போர்டிலிருந்து சம்பளம் கிடைக்கும். சொந்தப் பள்ளிக்கூடங்களின் உபாத்தியாயர்கள் பிள்ளைகளிட மிருந்து சம்பளம் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் சம்பளம் கிடைப்பது மட்டுமில்லை. சம்பளம் கேட்டால் பிள்ளைகள் வரமாட்டார்கள்! பிள்ளைகள் வராவிட்டால் கிராண்டும் கிடைக்காது! ஆனால் மொத்தத்தில் போர்டு பள்ளிக்கூட ஆசிரியர்களைக் காட்டிலும் இவர்கள் நிலைமை சௌகரியம் என்று சொல்லலாம். ஏனென்றால் இவர்களுக்குத் தொந்திரவு அதிகமில்லை. வருஷத்தில் ஒரு நாள் இன்ஸ்பெக்டர் வருவார். அவருக்குச் சாப்பாடு, சிற்றுண்டி, காப்பி, பால், தயிர் முதலியவை ஒழுங்காக சப்ளை செய்யவேண்டியது. அவருடைய சேவகனுக்கு அரை, கால் கொடுக்கவேண்டியது. பரீட்சை தினத்தன்று எப்படியாவது சிரமப்பட்டு உள்ளூர், அயலூர்ப் பிள்ளைகளை யெல்லாம் சேர்த்துவிட வேண்டியது. இந்த மூன்று விஷயங்களையும் கவனித்துக் கொண்டால் ஒன்றுக்குப் பாதியாவது கிராண்டு கிடைத்து விடும். ஒரு வருஷத்திற்குக் கவலையின்றிக் காலே யரைக்கால் வயிறு சாப்பிட்டுக் காலந் தள்ளலாம்.

ஆனால் போர்டு பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் நிலைமையை நினைத்தாலும் எனக்குப் பரிதாபமா யிருக்கிறது. அவர்கள் எத்தனை பேருக்குப் பதில் சொல்லியாகவேண்டும், தெரியுமா? எல்லாருக்கும் முதன்மையாகத் தாலூகா போர்டு அக்கிராசனர். அவர் உள்ளூர்க்காரரா யிருந்துவிட்டால் சொல்லவேண்டியதில்லை. அவருடைய வீட்டு எருமைக் கன்றுக் குட்டி கெட்டுப் போய்விட்டால் வாத்தியார் [illegible]தேடிக் கொண்டு வந்து கட்டவேண்டும். அவருக்குப் பிற[illegible] [illegible]கா போர்[illegible] [illegible]எவ்வளவு[illegible]ராசனர்; அங்கத்தினர்கள்; இவர்

சனருக்கெல்லாம் தேர்தலில் வோட்டு சேகரித்துக் கொடுத்தவர்கள்; இவர்களுடைய இஷ்டமித்திர பந்து ஜனங்கள்; தாலூகா போர்டு குமாஸ்தாக்கள்; சேவகர்கள்; கல்வி இலாகா அதிகாரிகள்; இத்தனை பேருடைய தயவும் போர்டு பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்களுக்கு வேண்டும்.

தாலூகா போர்டு அக்கிராசனருக்கு வோட்டு வாங்கிக் கொடுத்தவரின் சம்பந்தியின் நண்பரின் பிள்ளைக்கு ஒரு போர்டு ஸ்கூல் வாத்தியார் 'பிரைவேட்' சொல்லிக் கொடுக்கவில்லை. இந்தக் குற்றத்திற்காக அவருக்கு வேலைபோய்விட்டது. சில தாலூகா போர்டுகளில் அக்கிராசனரும், உபஅக்கிராசனரும் வேலைகளைப் பிரித்துக்கொள்வதுண்டு. ஒரு தாலூகா போர்ட்டில் உபஅக்கிராசனர் பங்குக்குப் பள்ளிக்கூடங்கள் விழுந்திருந்தன. அவர் ஒருநாள் வீட்டில் பெண்டாட்டியுடன் சண்டை போட்டுக்கொண்டார். அந்தக் கோபத்துடன் அவசரமாய்த் தாலூகா போர்டு ஆபீஸுக்குச் சென்றார். உபாத்தியாயர்களின் ஜாபிதாவை எடுத்தார். மளமள வென்று மாற்றத் தொடங்கினார். குறுக்கை வாத்தியாரைக் குறுங்குளத்திற்கும், திருச்செந்தூர் வாத்தியாரைத் திருநாரையூருக்கும், பட்டி குளம் வாத்தியாரைப் பண்டார வாடைக்கும், இப்படியாகத் தாறுமாறாய் மாற்றிவிட்டார்! பாவம்! அந்த உபாத்தியார்கள் ஒருவார காலத்திற்குள் ஜாகை மாற்றுவதற்குப் பட்ட கஷ்டம் ஆண்டவனுக்கே தெரியும்.

போர்டு பள்ளிக்கூடங்களின் உபாத்தியாயர்களுக்கு மாதாமாதம் சம்பளம் வருமென்பது ஐதிகம். ஆனால் சில விடங்களில் தாலூகா போர்டு குமாஸ்தாவுக்குக் கமிஷன் கொடுத்துக் கொண்டிருந்தால்தான் இந்த ஐதீகம் காரியத்தில் நடக்கும். இல்லா விட்டால் மூன்று மாதத்திற் கொருமுறையோ, நாலு மாதத்திற் கொரு முறையோதான். அதுவும் பதினைந்து தடவை நடந்து அலைந்த பிறகுதான் கிடைக்கும். அதுவரைக்கும் உபாத்தியாயரும் அவர் குடும்பமும் வயிற்றை இறுக்கிக் கட்டிக்கொண்டு கட்[illegible]பவாச மிருக்கவேண்டும். மாதாமாதம் [illegible]கு[illegible]துவிட்டால் [illegible], [illegible]ன்ன?

முழு வெள்ளி ரூபாயாகப் பதினாறு ரூபாய் வீசி எறிவார்கள்! தம் பிடியாக மாற்றிவிட்டால் வீடெல்லாம் பணம்! உபாத்தியாயரின் சட்டை தலைப்பாகை, உபாத்தியாயர் மனைவிக்கு புடவை, குழந்தை குட்டிகளுக்குத் துணிமணி, ஐந்தாறு ஜீவன்களுக்குச் சாப்பாடு, கிழத் தாயாரின் இராமேசுவர யாத்திரை, இவ்வளவும் அந்தப் பதினாறு ரூபாய்க்குள் ஆகவேண்டும்'

சம்பளந்தான் இப்படியிருக்கிறதே யென்றால், தொழிலுக்குத் தகுந்த மரியாதையாவது உண்டா? முற்காலத்தில் ஆசிரியர்களுக்கிருந்த கௌரவம் வேறு யாருக்கும் கிடையாது. ஒரு கதை சொல்வார்கள். ஒரு பையன் தன்னுடைய ஊர் ஆற்றில் ஏராளமாய் வெள்ளம் வந்திருப்பதாய் மற்றப் பிள்ளைகளிடம் சொல்லிக்கொண்டிருந்தான். "ஏ, அப்பா! எவ்வளவு தண்ணி தெரியுமா? ஆனைக்கும் குதிரைக்கும் கூட அண்டாது!" என்றான் அச்சிறுவன். அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவன், "அப்படியா? நம்ம வாத்தியார் ஐயாவுக்குக் கூட அண்டாதோ?" என்று கேட்டானும். முற்காலத்தில் உபாத்தியாயர்என்றால் பிள்ளைகளுக்கு அவ்வளவு பயபக்தி விசுவாசம் இருந்தது: இப்பொழுதோ எல்லாம் தலைகீழ்ப் பாடம், உபாத்தியாயரிடம் மதிப்பு வைக்க வேண்டாமென்று அதிகாரிகளே பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

பள்ளிக்கூடத்தைப் பார்வையிடத் தாலூகா போர்டு அக்கிராசனர் வந்துவிட்டால், அவரைவிட யோக்கியதையிலும் வயதிலும் எவ்வளவு பெரியவரா யிருந்தாலும் உபாத்தியாயர் தலையில் முண்டாசுடன் எழுந்து நிற்கவேண்டும். உபஅக்கிராசனர், அங்கத்தினர், இவர்களுக்கு வோட்டு செய்த பெரிய மனிதர்கள். தாசில்தார், ரிவினியூ இன்ஸ்பெக்டர், போலீஸ் ஹெட் கான்ஸ்டேபிள் ஆகிய எல்லாருக்கும் உபாத்தியாயர் மரியாதை செய்யவேண்டும். தாலூகாபோர்டு சேவகன்கூடத் தனக்கு உபாத்தியாயர் எழுந்து நின்று மரியாதை செய்ய[illegible]ண்டுமென எதிர்பார்க்கிறான். இந்த நிலைமையில் பிள்ளைகளு[illegible] [illegible]த்தியாயரி[illegible] எவ்வளவு மதிப்பு எற்படும், அவர்களுக்குப்

பாடம் எவ்வளவு நன்றாய் வரும், நற்குணங்கள் எப்படிப் படியும் என்று சொல்ல வேண்டியதில்லை.

சமீபத்தில் ஒரு சம்பவத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டேன்: தாலூகா போர்டு உப அக்கிராசனர் ஒருவர் ஒரு பள்ளிக்கூடத்தைப் பார்வையிடச் சென்றார். உபாத்தியாயர் மேஜையின்மீது ஒரு தினசரிப் பத்திரிகை கிடந்தது. அதைப் பார்த்ததும் உப அக்கிராசனருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஓய்! பாடம் நடத்துகிறீரா? பத்திரிகை படிக்கிறீரா? இரண்டு ரூபாய் அபராதம்!" என்றார். உபாத்தியாயர் கதிகலங்கிப் போனார். இதென்னடா? பிச்சைக்காரன் குடிசையில் சனிசுரபகவான் புகுந்தானே என்று அவர் எண்ணி, ஏதோ சமாதானம் சொல்வதற்காக 'எஜமானே!' என்று ஆரம்பித்தார். அதற்குள் உப அக்கிராசனர் கடுங்கோபங்கொண்டு, கண்களில் தீப்பொறி பறக்க, புருவம் நெரிய, உதடுகள் துடிக்க "ஓய்! வாயை மூடும். பதில் பேசினீரோ டிஸ்மிஸ் செய்துவிடுவோம். வாங்குவது பதினாறு ரூபாய் சம்பளம். இதிலே பத்திரிகை படிக்கும் ஜம்பம்" என்று எரிந்து விழவே உபாத்தியாயர் பெட்டிப் பாம்பு போலே அடங்கிவிட்டார். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு இந்த உபாத்தியாயரிடம் எவ்வளவு மதிப்பிருக்கும் பாருங்கள்!

இந்த நிலைமையில் ஒரு வேலைக்கும் லாயக்கில்லாத கழிசடைகள் ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயராக முன் வருவதில் ஏதேனும் ஆச்சரிய முண்டா? கிடையவே கிடையாது. உண்மையில் ஆச்சரியமென்ன வென்றால், இப்படிப்பட்ட நிலைமையிலும் சில உத்தமர்கள், சன்மார்க்க சீலர்கள், அறிஞர்கள், தலைசிறந்த ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களா யிருந்து வருவதேயாகும். இது இவர்களுக்கு பெருமை தருவதேயன்றி, தொழிலின் தற்போதைய நிலைமைக்குப் பெருமை தருவதாகாது. ஆனால் நிலைமை இப்படியே இருந்து வருமானால் நாளடைவில் இ[illegible]தமர்களெல்லாம் விலகிக் கொள்வார்கள். வே[illegible]தொழில் எ[illegible]குதி

யற்றவர்களும், மூடர்களும், காலாடிகளும், துன்மார்க்கர்களும், சோம்பேறிகளும் இச்சம் பேசுவதில் சமர்த்தர்களுமே உபாத்தியாயர்களாக வந்துகொண்டிருப்பார்கள். இவர்களுடைய கையின்கீழ் நம் குழந்தைகள் எவ்வளவு நல்ல பயிற்சி பெறுவார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை.

இத்தகைய விபத்து நேராமல் தடுக்க வேண்டுமானால், உடனே இந்த நிலைமையைச் சீர்திருத்த வழி தேடவேண்டும். உபாத்தியாயர்களுக்கு நல்ல சம்பளமும், உயர்ந்த கௌரவமும் கொடுத்து அறிஞர்களும் உத்தமர்களும் ஆரம்ப ஆசிரியத் தொழிலுக்கு வருமாறு ஊக்க மளிக்க வேண்டும். பள்ளிக்கூடங்கள் அந்தந்த ஊர்ப் பஞ்சாயத்தின் மேற்பார்வையிலோ, அல்லது உள்ளூரிலுள்ள சிறந்த கல்விமான் ஒருவருடைய மேற்பார்வையிலோ நடக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும். ஆனால் இந்த யோசனைகளெல்லாம் காரியத்தில் நடக்கப் போகின்றனவா வென்று கேட்டால், நல்லது அந்தக் கேள்வி என்னைக் கேட்க வேண்டாம். பக்கத்திலுள்ள பிரபல ஜோசியரைப் பிடித்து உரிய தக்ஷிணை வைத்துக் கேளுங்கள்.



கதம்பம்

—(::)—

விவசாயிகளுக்கு

இராஜப் பிரதிநிதி இர்வின் பிரபு வங்காள நிலச்சுவான்தார் கூட்டத்தில் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:—"இந்திய விவசாயிகளின் நலத்துக்காக எல்லா வழிகளிலும் உதவி செய்யவேண்டுமென்பது என் மனமார்ந்த விருப்பம். இதற்குமுன் பலமுறையும் இதைத் தெரிவித்துள்ளேன். இப்போதும் தெரிவிக்கிறேன்."

பத்திரிகையில் இதைப் படித்த பின்னர் பழைய பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தேன். இர்வின் பிரபு இந்தியாவுக்கு வந்தது முதல் நாளது வரையில் 2372 முறை மேற்படி விருப்பத்தைத் தெரிவித் திருக்கிறாரென்று கண்டுபிடித்தேன். இன்னும் 7628 தடவை சொன்னால் சரியாக 10,000 ஆகிவிடும். அப்போது மந்திரம் சரியாக உருவேறி இந்திய விவசாயிகளின் உள்ளமும் குளிர்ந்து விடும். பிரபு இந்தியாவை விட்டுப் பிரயாணமாவதற்குமுன் இதைச் செய்து முடித்துவிடுவா ரென்று நம்புகிறேன்.

ஆனால் ஒரு விஷயம். மேற்கண்ட முறையை இன்னும் சில காரியங்களில் நான் அனுஷ்டித்துப் பார்த்ததில் பெருந் தோல்வி தான் நேர்ந்திருக்கிறது. என் மனைவிக்கு ரூ 2000 பெறுமான வைரக் கம்மல் வாங்கிப்போட வேண்டுமென்பது "என் மனமார்ந்த விருப்பம்" என்று 10,001 முறை சரியாகச் சொல்லியாகிவிட்டது. ஆனால் அவள் திருப்தி யடைந்தபாடில்லை. எங்கள் வீட்டு மாப்பிள்ளைக்குக் கடிகாரம் வாங்கித் தரவேண்டுமென்னும் விருப்பத்தைச் சரியாக 10,003 தடவை தெரிவித்து விட்டேன். பயனில்லை. "கடிகாரம் கைக்கு வரவில்லையே?" என்று மாப்பிள்ளை கேட்கிறார். அம்மாவைக் காசிக்கு அழைத்துப் போக விருப்பமென்று 23,354 தடவை சொல்லியாகி விட்டது. பண்ணையாளுக்குக் [illegible]ணம்

செய்துவைக்க விருப்ப மென்பதாக அதைவிட இருமடங்கு முறை தெரிவித்தாகி விட்டது. யாரும் திருப்தி யடையும் வழியைக் காணோம். இந்தத் தொல்லைக்கு என்ன வழி என்று இராஜப் பிரதிநிதியை எழுதிக் கேட்கலாமென உத்தேசித் திருக்கிறேன். முக்கியமாக, வரி வசூல் செய்யும் கிராம முனிசீப்புகளுக்கு, மிராசு தார்கள் வரி செலுத்த விருப்பத்தைத் தெரிவித்தால் அத்துடன் திருப்தி யடைந்திருக்குமாறு கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்று பிரபுவைக் கேட்டுக்கொள்ள எண்ணி யிருக்கிறேன். பதில் வந்ததும் நேயர்களுக்கு அவசரத் தந்தி மூலம் தெரிவிப்பேன்.

ஆனால், இர்வின் பிரபு வெறுமனே தம் விருப்பத்தைத் தெரிவித்து விட்டுச் சும்மா யிருந்துவிடவில்லை. விவசாயிகளுக்குக் காரிய சாத்தியமான ஒரு யோசனையும் கூறியிருக்கிறார். அதாவது :— "விவசாய ராயல் கமிஷன் அறிக்கை, நிபுணர்களின் ஞானமெல்லாம் அடங்கிய ஒரு பொக்கிஷம். அவ்வறிக்கையை ஆழ்ந்து படியுங்கள் என்பதே இந்தச் சமயம் உங்களுக்கு என்னுடைய புத்திமதியாகும்."

விவசாயிகள் இந்த யோசனையைப் பொன்னேபோல் போற்றி அனுஷ்டானத்திலும் கொண்டு வருவார்களென்று நம்புகிறேன். ஆடி மாதத்தில் கலப்பையைத் தூக்கிக்கொண்டு வயலுக்குப்போகும் மூடத்தனம் இனிமேல் அவர்களுக்கு வேண்டாம். விவசாயக் கமிஷன் அறிக்கையை அவர்கள் பக்தியுடன் பாராயணம் செய்துகொண்டிருந்தால் வயல்கள் தமக்குத் தாமே சாகுபடி செய்துகொள்ளும். பக்தர்கள் அறுவடையின்போது அரிவாளை எடுத்துக் கொண்டு போனால் போதும்.

மாகாண மகாநாடு

சென்ற 1928-ம் வருஷத்தில் தமிழ் மாகாண காங்கிரஸ் மகாநாடு ஏன் நடைபெறவில்லை? என்னும் பிரச்னையை ஒரு பத்திரிகை

கிளப்பி விட்டது. இது சம்பந்தமாகக் காங்கிரஸ் அதிகாரிகள்மீது சிறிதும் தவறில்லை யென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். அவர்கள் ஒரு ஜில்லா பாக்கி யில்லாமல் எல்லா ஜில்லாக் களுக்கும் எழுதிக் கேட்டார்களென்று எனக்கு மானதச் செய்தி கிடைத்திருக்கிறது. பற்பல ஜில்லாக்களி லிருந்தும் கிடைத்த பதில்களின் விபரமும் எனக்கு மானதச் செய்தியின் மூலம் தெரிய வந்தது. அவற்றின் சாராம்சத்தைக் கீழே தருகிறேன்.

தஞ்சாவூர்:—"மாகாண மகாநாடு நடத்தும் பாக்கியம் கிடைக்க வேண்டுமென்று தவங்கிடந்து வருகிறோம். எனினும், எங்களுக்கு அடுத்த திருச்சிராப்பள்ளி ஜில்லாவாசிகளுக்கு அவ்விருப்பம் இருப்ப தாகத் தெரிய வருவதால், அவ்வுரிமையை விட்டுக் கொடுக்கத் தீர் மானித்துள்ளோம். இவ்வளவு காலம் மகாத்மா காந்தியின் போதனை யைக் கேட்ட பிறகேனும் அவ்வளவு தியாக புத்தியாவது காட்ட வேண்டாமா?"

திரிசிராப்பள்ளி:—"எங்கள் ஜில்லாக்காரர் ஒருவர் மந்திரியா யிருக்கிறார். கட்டளை அணைக்கட்டு முதலிய பல காரியங்கள் அவ ரைக் கொண்டு ஆகவேண்டும். தயவு செய்து இம்முறை மன்னித்து விடுங்கள். எங்கள் உடல் எந்தப் பக்கம் இருந்தாலும், உயிர் என் னமோ உங்களிடந்தான்."

மதுரை:—"மகாநாட்டுத் தலைவர் யார் என்று முதலில் தெரி வியுங்கள். வடநாட்டிலிருந்து யாரையேனும் தருவிக்க முடியுமா? இல்லாதவரை ஜனங்களுக்கு உற்சாக மூட்ட முடியாது.

ராமநாதபுரம்:—"ஜில்லா மகாநாடு நடத்தி மிகவும் களைப்புற் றுப் போயிருக்கிறோம். தயவு செய்து வேறு ஜில்லா பார்க்கவும்."

திருநெல்வேலி:—"பேச்சுகள் கேட்டுத் தலைவலி அதிகமா யிருக்கிறது, உடனே ஏதாவது மருந்து அனுப்புங்கள்!"

தென்னுற்காடு:—"ஆழ்ந்த நித்திரை. தயவு செய்து எழுப்ப வேண்டாம். தூங்கும்போது எழுப்பினுல் மகா பாவம் என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது."

செங்கற்பட்டு:—"அடுத்த தேர்தலுக்கு இப்போதே வேலை தொடங்கிவிட்டபடியால் அவகாசமில்லை. மன்னிக்கவும்."

வட ஆற்காடு:—"சில நிபந்தனைகளுக்குட்பட்டு மகாநாடு நடத்தத் தயார். கொட்டகை விஷயத்தை மாகாணக் கமிட்டி கவனிக்க வேண்டும். பிரதிநிதிகளின் ஜாகை, சாப்பாடு வசதிகள் அவரவர்களே பார்த்துக்கொள்ளவேண்டும்; அக்கிராசனர் ஊர்வலத்துக்கும், மாலைகளுக்கும் முதலிலேயே பணம் வந்துவிடவேண்டும்; தொண்டர்களின் சாப்பாட்டுக்கு யாராவது வழிசெய்ய வேண்டும். சம்மதமானுல் உடனே தந்தி யனுப்பவும்."

கோயமுத்தூர்:—கப் சுப்!

சேலம்:—(எல்லையில்லா மௌனக்கடல்)



என் பெயர்

—(::)—

சில நாளைக்கு முன் ஒரு நண்பர் என்னிடம் பலமாகச் சண்டை பிடித்தார். நான் புனைபெயர் வைத்துக்கொண்டு பத்திரிகைகளுக்கு எழுதுவதுதான் அவருடைய கோபத்துக்குக் காரணம். "ஏன் சொந்தப் பெயர் போட்டுக்கொண்டு எழுதக்கூடாது? சொந்தப் பெயர் சொல்லிக்கொள்ள வெட்கமா யிருக்கிறதா? ஏன் இந்தக் கோழைத்தனம்?" என்று அவர் கேட்டார். உண்மை யென்ன வென்றால், அவருக்கு ஒரு பிரமை. என்னுடைய கதைகள், கட்டுரைகள் முதலியவற்றினால் எனக்கு வரவேண்டிய கீர்த்தி (!) அவ்வளவும் என்னைச் சேராமல் அநியாயமாய்க் கொள்ளை போய்விடுகிறதென்பது அவருடைய கவலை.

பெயர் போட்டுக் கொள்ளாததற்குக் கோழைத்தனம் காரணமல்லவென்று நான் சொல்லவேண்டிய தில்லை. அப்படி வெட்கப்படும்படியான சங்கதி ஏதேனும் நான் எழுதுகிறேனா, என்ன? ஒன்றுமில்லை. பின்னர், புனைபெயர் ஏன்? உலகத்தின் மனப்போக்குதான் அதற்குக் காரணம்.

சொந்தமாகச் சிந்தனை செய்யும் சக்தியை இந்த உலகத்தில் பகவான் மிகவும் கொஞ்சமாய் வைத்துவிட்டார். நம்மில் பெரும்பாலோர் பிறருடைய அபிப்பிராயங்களையே நம்முடைய சொந்த அபிப்பிராயமாகக் கொண்டு போராடுகிறோம். ஒரு கதை சொல்கிறேன், கேளுங்கள். இது இதாலி தேசத்துக் கதை. டாஸோ, அரிஸ்டோ என்னும் இரண்டு பிரபல நூலாசிரியர்கள் இதாலியில் இருந்தனர். இவ்விருவருடைய எழுத்துத் திறமையைக் குறித்து இரண்டு நண்பர்களுக்கிடையே வாதம் எழுந்தது. ஒருவர் 'டாஸோதான் சிறந்தவர்' என்றார். மற்றொருவர் 'அரிஸ்டோவின் புலமை அவருக்கு வராது' என்றார். முதல் நண்பர் 'டாஸோவுக்கு கவிதா சக்தி அதி

கம்' என்றார். இரண்டாம் நண்பர் 'அரிஸ்டோவின் வசன நடையில் தேனொழுகுகிறது' என்றார். 'ஹாஸ்ய ரசத்தில் டாஸோவுக்கு மிஞ்சித்தான்' என்றார் ஒருவர். 'மொத்தத்தில் அரிஸ்டோவுக்கு ஈடானவர் எவருமில்லை' என்றார் மற்றவர். இவர்களுக்குள் விவாதம் முற்றி, வார்த்தை தடித்து, கடைசியில் பெருஞ் சண்டையாகி விட்டது.

ஐரோப்பாவில் ஒரு வழக்கம் உண்டு. அதாவது, ஒருவர் இன்னொருவரை அவமதித்துவிட்டால் உடனே அவமதிக்கப்பட்டவர் மற்றவரைத் துவந்த யுத்தத்துக்கு அழைப்பார். துவந்த யுத்தத்துக்கு வர மறுத்தவர்கள் கோழைகளென்றும், பேடிகளென்றும் கருதப்படுவார்கள். எனவே, மேற்படி நண்பர்களுக்குள் எழுந்த விவாதம் கடைசியாக துவந்த யுத்தத்தில் வந்து முடிந்தது. இருவரும் கத்தி யெடுத்து ஒருவரோடொருவர் பலமான சண்டை போட்டார்கள். இருவரும் பலத்த காயமடைந்து கீழே விழுந்தார்கள். அப்போது முதல் நண்பன் சொன்னான்:—"ஐயோ! டாஸோவுக்காக நான் உயிர் விடுகிறேன். ஆனால் அவன் புத்தகத்தில் ஒரு வரி கூடப் படித்ததில்லை!" என்றான். இரண்டாவது நண்பன் சொன்னான் :—" அட கர்மமே! நானும் அரிஸ்டோவின் நூலில் ஒரு வரி கூடப்படித்தது கிடையாது! இதற்காகவா நாம் சண்டை போட்டோம்?" என்றான். பிறகு இரண்டு நண்பர்களும் ஏக காலத்தில் உயிர் விட்டார்கள்.

இப்படித்தான் சாதாரண ஜனங்களாகிய நாம் சண்டை போட்டுக்கொண்டு சாகிறோம். ஏதேனும் ஒரு விஷயம் கேள்விப்பட்டால் அதன் குறை குணங்களைப்பற்றி முதலில் ஆராய்வதில்லை. அதைச் சொல்வது யார் என்று முதலில் கவனிக்கிறோம். சொல்பவர் பிரசித்தி பெற்றவரா யிருந்தால், அல்லது நமக்குப் பிடித்தவரா யிருந்தால், உடனே விஷயத்தை ஆதரிக்கத் தொடங்குகிறோம்; அதைப் பாராட்டுகிறோம், அதன் புகழ் பாடுகிறோம். சொல்பவர் சாதாரணப் பெயர் வழியா யிருந்தால் உடனே அதை மறந்து விடுகிறோம்.

சொல்பவர் நமக்குப் பிடிக்காதவரா யிருந்தாலோ உடனே குறை சொல்லத் தொடங்கி விடுகிறோம்.

இலக்கியத் துறையில் மட்டுமல்ல; அரசியல், சங்கீதம், சமூக சீர்திருத்தம் ஆகிய எல்லாவற்றிலும் இப்படித்தான். பெரும்பாலும் எல்லாவற்றிலும் நாம் இரவல் பிழைப்பே பிழைத்து வருகிறோம். சென்னையிலுள்ள எனது நண்பர் ஒருவருக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் அபாரப் பிரேமை. ஆகையால் அவருக்குப் பண்டித நேருவைக் கொஞ்சமும் பிடிக்காது. ஒருநாள் நான் பத்திரிகை படிக்க அவர் கேட்டுக்கொண்டிருந்தார். இந்திய சட்டசபையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் செய்த பிரசங்கத்தைப் படித்தேன். அப்போது அவர் அடைந்த உற்சாகத்தையும்,காட்டிய சந்தோஷத்தையும் சொல்ல முடியாது. பிரசங்கம் முடிந்ததும் "ஓய்! நீர் என்னதான் சொல்லும். அந்த ஒரு மனுஷனுல்தான் இப்படிப் பேசமுடியும்!" என்ருர் நண்பர். "சுவாமி! மன்னிக்க வேண்டும். பெயர் தவருகச் சொல்லி விட்டேன். இப்பொழுது படித்தது பண்டித நேருவின் பிரசங்கம்" என்றேன் நான். அவரால் நம்ப முடியவில்லை. பத்திரிகையை வாங்கிப் பார்த்துவிட்டு "சரிதான் தொலையட்டும். நடுவில் கொஞ்சம் சந்தேகமாய்த்தா னிருந்தது. இவ்வளவு அசம்பாவிதமாய் ஐயங்கார் பேசியிருக்க முடியாதே என்றுகூட நினைத்தேன்." என்ருர். சற்று முன்னுல் நான் பிரசங்கம் நன்ருயில்லை யென்று சொல்லி யிருந்தால் அவர் என்னை அடிக்கவே வந்திருப்பார்.

இதனுல் நான் மட்டும் பெரிய மேதாவி என்று நீங்கள் எண்ணி விடவேண்டாம். ஒரு வேளை அரசியலிலும், சமூக விஷயங்களிலும் நான் ஏமாறமாட்டேன். இந்த விஷயங்களைப்பற்றிக் கொஞ்சம் சிந்தித்திருக்கிறேன். ஆனுல் சங்கீதத் துறையில் நான் ஏமாந்த கதையைச் சொல்கிறேன் கேளுங்கள். கோகலே ஹால் மாடியில் உட்கார்ந்து ஒருநாள் பத்திரிகை படித்துக்கொண் டிருந்தேன். கீழே ஏதோ சங்கீதக் கச்சேரி நடந்துகொண் டிருந்தது. "பிடில் யார்?" என்று பக்கத்திலிருந்த நண்பரை கேட்டேன். "...ஐயர்"

என்று அவர் சொன்னர். “அதுதான் அழுது வடிகிறது. மலைக் கோட்டை கோவிந்தசாமி பிடில் வாசித்துக் கேட்க வேண்டும். மற்ற வர்க ளெல்லாம் சுகமில்லை.'' என்றேன். கொஞ்ச நேரங் கழித்துக் கீழே இறங்கிப் போனபோது வாசலில் போட்டிருந்த கச்சேரி விளம்பரத்தைப் பார்த்தேன். அதில் மலைக்கோட்டை கோவிந்த சாமி—பிடில்” என்று கொட்டை எழுத்தில் போட்டிருந்தது! அப்பொழுது என் உடம்பு ஒரு சாண் குட்டையாய்ப் போயிருக்க வேண்டுமென நினைக்கிறேன்.

சிற்பம், சித்திரம் ஆகிய கலைகளில் இரவல் பிழைப்பு இன்னும் அதிகம். அடையாற்றில் சித்திரக் கண்காட்சி ஒன்று நடந்தது. அவனிந்திரநாத் தாகூரின் சித்திர வன்மையைப்பற்றி அதிகம் கேள் விப்பட்டிருந்த இரண்டு மாணவிகள் அங்கிருந்த ஒரு படத்தின் முன்பு நின்று அதை வெகுவாக சிலாகித்துக் கொண்டிருந்தார்கள், திடீரென்று அவர்களுள் ஒருத்தி படத்தின் அடியில் சிறிய எழுத்தில் இருந்த பெயரைப் பார்த்தாள். “ஓ ஹோ! இது அவனீந்திரர் பட மல்ல. வேறு யார் பெயரோ போட்டிருக்கிறது” என்ருள், “சை! இவ்வளவுதானு?” என்ருள் மற்றவள். உடனே இருவரும் அவ்விடம் விட்டுச் சென்று அவனீந்திர நாதர் எழுதிய படத்தைக் கண்டு பிடித்து அதை சிலாகிக்கத் தொடங்கினர்கள்!

மற்றத் துறைகளி லெல்லாம் 100-க்கு 30 பங்கு, 50 பங்கு இர வல் அபிப்பிராயமென்ருல், இலக்கியத் துறையில் 100க்கு 99 பங்கு இரவல் என்றே சொல்லலாம். நேயர்களுக்கு ஒரு சிறு யோசனை கூற விரும்புகிறேன். அதாவது, அவர்களுடைய நண்பர்கள் சொந்த அபிப்பிராயம் உள்ளவர்களா, கடன் வாங்குபவர்கள் தானு என்று கண்டுபிடிக்க ஒருவழி. தற்போது தமிழ் நாட்டில் கம்பனுக்கு ஒன்றுமில்லாத பெருமை ஏற்பட்டிருப்பது எல்லாருக்கும் தெரியும். கம்பனைப்பற்றி ஏதேனும் கட்டுரை வெளிவராத தமிழ்ப் பத்திரி கையே கிடையாது. திடீரென்று கம்பனுக்குச் சுக்கிர தசை பிறந் திருக்கிறது. இது நல்ல தான் சந்தேகமில்லை. ஆனல், மூன்ருந்தர


நாலாந்தரக் கவி ஒருவரின் அசட்டுப் பாட்டு ஒன்றை எடுத்துக் கொண்டு, கம்பனைப் போற்றும் உங்கள் நண்பரிடம் சென்று "இதோ பார்த்தீர்களா? கம்பன் பாட்டு ஒன்று! என்ன கவிதை! என்ன அழகு! என்று சொல்லுங்கள், இவர் உமது வலையில் விழாவிட்டால் என்னைக் கேளுங்கள்.

சுப்பிரமணிய பாரதி சிறந்த கவிவாணர் என்பதில் சந்தேக மில்லை. ஆனால் அவர் பாட்டுக்கள் சமமான சிறப்புடையனவல்ல. பல பாட்டுக்கள் கவிதையிலும், கருத்திலும் நிகரற்று விளங்குகின் றன. வேறு சில பாட்டுக்கள் அழகும் பொருளுமற்ற சக்கைகளா யிருக்கின்றன. எனினும் இந்தச் சக்கைப் பாட்டுக்களைச் சொல்லி சொல்லி வியக்கும் அபிமானிகள் பலரை நான் பார்த்திருக்கிறேன். ரவீந்திர நாத் தாகூரைப்பற்றி ஏதேனும் சொன்னால், நேயர்களே ஒருவேளை என்னை அடிக்கக் கிளம்பலாம். இருந்தாலும் சொல் லியே யாகவேண்டும். தாகூரின் சிறு கதைகளையும், நவீனங்களை யும் படித்து என்னைப்போல் இன்புற்றவன் இல்லை. அவருடைய கவிதைகளில் சில தெய்வீக சௌந்தரியம் பெற்று விளங்குகின்றன. ஆயினும் சில விடங்களில் அவர் பாட்டுக்கள்கூடப் பொருளற்ற வெறும் வார்த்தைப் பந்தலாக எனக்குத் தோன்றுகின்றது. இதைப் பற்றி நான் ஒரு நண்பரிடம் ஒரு தடவை பேசிக்கொண்டிருந் தேன். அவர் என்ன சொன்னார் தெரியுமா? "அதில் ஏதேனும் உள்ளர்த்தம் இருக்கும்; உமக்கு விளங்க வில்லை. அவ்வளவுதான்!" என்றார்.


இத்தகைய மனோபாவங் குடி கொண்டிருக்கும் இவ்வுலகத்தில் நான் சொந்தப் பெயர் போட்டுக் கொண்டு எழுதுவது உசிதமாகுமா சொல்லுங்கள். எவரும் தாம் எழுதுவதைப் பிறர் படிக்க வேண்டு மென்று விரும்புதல் இயல்பல்லவா? எனக்கும் அந்த ஆசை உண்டு. ஆனால் தலைப்பில் என் பெயரைப் போட்டுக் கொண்டால் என்ன நேரிடுமென்று நினைக்கிறீர்கள்? 100-க்கு 9[illegible] பேர் ஏட்டைப்புரட்டி அடுத்த கட்டுரைக்குப் போய் விடுவார்கள்.

ஒரு சிலருக்குப் பெயர் போட்டுக் கொள்வதில் உண்மையாக அநுகூலம் உண்டு. உதாரணமாக திரு. வி. கலியாண சுந்தர முதலியார், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜலு நாயுடு, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இவர்களைச் சொல்லலாம். இவர்கள் என்ன எழுதினாலும் படிப்பதற்குத் தனித்தனியே ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள். ஒருவருடைய அபிமானிகள் மற்றவர்கள் பெயரைக் கண்டதும் தள்ளிவிட்டுப் போய்விடலாமாயினும் ஒவ்வொருவருக்கும் குறைந்தது 5000 பேராவது படிப்பதற்கு இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் என் போன்ற சாமானியர்களுக்கோ வென்றால்......?

ஏன் "குட்டை" நானே ஏன் உடைத்து விடவேண்டும்? உண்மையில் புனை பெயர் வைத்துக் கொள்வதிலுள்ள அநுகூலம் இது தான். பெயரைப் போட்டுக்கொண்டால் நான் சாமான்னியனாகி விடுகிறேன். ஆனால் "கல்கி" எவ்வளவு பெரிய மனிதராய்த்தான் இருக்கக்கூடாது? மகா வித்வானா யிருக்கலாம்; பண்டித சிரோமணியாயிருக்கலாம்; ஹைகோர்ட் ஜட்ஜாக இருக்கலாம்; மந்திரியாகக் கூட இருக்கலாம்; காங்கிரஸ் தலைவராயிருக்கலாம்; சுயமரியாதை வீரராயிருக்கலாம்; இன்னும் எவ்வளவோ பெரிய, பெரிய மனிதரா யிருக்கலாம்? இவ்வளவு மகோந்நதமான பதவியை நான் ஏன் விடவேண்டும்?



ஜீவரசம்



முன்னொரு காலத்தில் நான் பதினெட்டு வயதுள்ள இளைஞனாயிருந்தேன். அத்துடன் கலாசாலையில் எப். ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். போதாததற்குப் பரீட்சை சமீபித்திருந்தது. நானோ பரீட்சையில் முதல்தரமாகத் தேற வேண்டுமென்பதில் பெரிய பிரமை கொண்டவன். இவ்வளவும் தவறான விஷயங்கள் என்பது பிற்காலத்தில் தான் எனக்கு நன்கு விளங்கிற்று.

பரீட்சைக்கு முன்னால் மாணாக்கர்கள் அமைதியாகப் படிப்பதற்கென்று ஒரு வாரம் விடுமுறை விட்டார்கள். நகரில் இருந்தால் அந்த ஒரு வாரமும் நிச்சயமாய் வீணாகி விடுமென்று நான் அநுபவத்தில் கண்டறிந்தவன். காப்பி ஹோட்டல்கள், சினிமாக்கள், நாடகங்கள், சீட்டுக் கச்சேரிகள் முதலியவை குறித்துப் பரீட்சை வினாக்கள் கேட்பதாயிருந்தால் நகரிலிருக்கலாம். ஆனால் அந்தக் குருட்டுப் பரீட்சகர்களோ டார்வினைப்பற்றியும், ஷேக்ஸ்பியரைப் பற்றியும், லீஸரைப் பற்றியும் கேள்வி கேட்கிறார்கள். ஆகவே என்ன செய்யலாமென்று யோசித்தேன். ஓர் அற்புதமான புது யோசனை தோன்றிற்று

நகரத்துக் கருகிலுள்ள ஏதேனுமொரு கிராமத்துக்குச் சென்று அந்த ஒரு வாரமும் அமைதியாகப் படித்துப் பரீட்சைப் பாடங்களைக் கரைத்துக் குடித்துவிட்டு வந்து விடுகிறதென்று தீர்மானித்தேன். அவ்வாறே ஒரு நாள் காலையில் ஸ்நானஞ் செய்து உடையணிந்து கைப் பெட்டி ஒன்றில் டார்வின், ஷேக்ஸ்பியர் முதலியவர்களையும், மாற்றி அணிவதற்குச் சில துணிகளையும் எடுத்துக்கொண்டு கிளம்பினேன். ரயில்வே ஸ்டேஷன் சென்றதும் எந்த ஊருக்கு டிக்கட் வாங்கலாமென்று பார்த்தேன். நகருக்கு ஐந்தாறு ஸ்டேஷனுக்கப்பால் தாமரை வேலி என்[illegible]ஸ்டேஷன் இருந்தது.

ஊரின் பெயர் அழகா யிருந்தபடியால் அந்த ஸ்டேஷனுக்கே டிக்கட் வாங்கிக்கொண்டு ரயில் ஏறினேன்.

ரயில் ஓடியபோது சிந்தனையும் வெகுதூரம் ஓடிற்று. தாமரை வேலி! ஆஹா! என்ன அழகான பெயர்? ஊரும் இவ்வளவு அழகாகத்தான் இருக்கும். பக்கத்திலே சல சல வென்று ஜலம் ஓடிக்கொண்டிருக்கும் ஆறு. தாமரையும் அல்லியும் பூத்திருக்கும் பெரிய குளம். தென்னந் தோப்புகள்; மாமரங்கள்; வாழைத் தோட்டங்கள்; 30, 40 வீடு; இரண்டு சிறு கோவில்கள். நந்தவனம்! ஆகா படிப்பதற்கு எவ்வளவு அமைதியான இடம்? சாப்பாட்டைப் பற்றிக் கவலையில்லை. ஹோட்டல் இராதென்பது உண்மையே. அதனாலென்ன மோசம்? ஒரு வீட்டிற்குள் தைரியமாக நுழைந்து சாப்பாடு போடும்படி கேட்கலாம். விஷயத்தைச் சொன்னால் சந்தோஷமாகப் போடுவார்கள். இதன் பயனாக என்னென்ன நேரிடுமோ யார் சொல்ல முடியும்? அந்த வீட்டில் பதின்மூன்று பதினாலு வயதில் ஓர் அழகிய பெண் ஏன் இருக்கக் கூடாது? கட்டாயம் இருக்க வேண்டும். "இந்தப் பையனைப் போன்ற மாப்பிள்ளை கிடைத்தால் எவ்வளவு நன்றா யிருக்கும்?" என்று அவள் பெற்றோர் பேசிக் கொள்வார்கள். அப்புறம் குலம், கோத்திரம் விசாரிப்பார்கள். எல்லாம் சரியாகத்தான் இருக்கும். பெண்ணைத் தனிமையில் கண்டு பேச ஒரு வாரத்தில் எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைக்கும். ஆகா! பரீட்சைக்குப் படிக்கப் போய்க் கலியாணம் செய்து கொண்டால் விநோதமா யிருக்குமல்லவா?..."லொடக்" என்று ஆடிக்கொண்டு ரயில் நின்றது. அவசர அவசரமாக வண்டியை விட்டுக் கீழிறங்கினேன்.

என்ன ஏமாற்றம்? எல்லாம் வெறும் ஆகாயக் கோட்டையாக முடிந்தது. ஆறு இருந்தது; தண்ணீர் இல்லை. குளம் இருந்தது; தாமரையும் அல்லியும் இல்லை. தென்னைமரம் இருந்தது; ஆனால் சமீபத்தில் அதன் ... இடி விழுந்திருக்க வேண்டும். எனவே, மட்டையாவது ... க் குலையாவது இல்லாமல் மொட்டையாய்

நின்றது. மாமரம் பெயருக்கும் இல்லே. புளியமரம் ஏராளம். கோவில் ஒன்றிருந்தது ; ஆனல் இடிந்து பாழாய்க் கிடந்தது. நந்தவனத்துக்குப் பதிலாகக் குப்பை மேடு எங்கெங்கும் காணப்பட்டது. ஒரு கள்ளுக்கடை, ஒரு காப்பி ஹோட்டல், ஒரு போலீஸ் ஸ்டேஷன், ஒரு சுருட்டுக்கடை, ஒரு பள்ளிக்கூடம். பள்ளிக்கூடத்தில் உபாத்தியார் "அர்ரித்மெட்டிக்" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொல்லிக் கொடுத்துக்கொண் டிருந்தார். ஆயினும் நான் தைரியத்தைக் கைவிடவில்லே. அடுத்த ரயில் வரும் வரையில் கிராமவாசம் செய்தே தீர்வதென்று தீர்மானித்தேன். வேறு வழியுமில்லே.

என்னதான் இருந்தாலும் கிராமம் கிராமந்தான். ஆகா? எவ்வளவு விஸ்தாரமான மைதானம்? என்ன அழகான அருகம் புல்? எவ்வளவு நேர்த்தியான மண்? அப்புறம், இதோ தெரியும் சப்பாத்திக் கள்ளி? இவை யெல்லாம் நகரத்தில் காணக் கிடைக்குமா? அவசரப்பட்டுக் கிராம வாழ்க்கை வெறும் 'ஹம்பக்' என்று தீர்மானித்தது பிசகுதான். எப்படியும் இந்தப் புல் நிறைந்த மைதானத்தில் சிறிது நேரம் உட்கார்ந்து அமைதியாகப் படிக்கலாம். ஆனல் அதற்கு முன்னல் கொஞ்சம் தாகத்துக்குச் சாப்பிட வேண்டும். தொண்டை வரள்கிறது. காப்பி கிளப்புக்கு—சை! கிராமத்துக்கு வந்தும் காப்பி கிளப்பா? ஏதாவது ஒரு வீட்டுக்குள் நுழைந்து கொஞ்சம் மோர் வாங்கிக் குடித்து விட்டு வரவேண்டும். மோரில் 'வைடமின்' உண்டு. மோர் உடம்புக்கு நல்லது. ஆஹா! மோருக்குச் சமானம் வேறொன்றுமில்லே.

கிராமத்துக்குள் சென்றேன்: கொஞ்சம் ஒதுங்கி நின்ற ஒரு வீடு என்னேக்கவர்ந் திழுத்தது. அது சிறிது பாழடைந்த வீடு. "ஆம். ஏழை வீட்டுக்குப் போனல்தான் நல்லது. தைரியமாகக் காலணு கொடுத்து மோர் கேட்கலாம்" என்று எண்ணினேன். ந. வீட்டி னருகில் சென்றேன். பெயர், "லலிதா விலாஸம்." ... டேரிட்டிருந்தது.



வெளிச் சுவரில் ஏதேதோ எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன். இராஜப் பிரதிநிதி இர்வின் பிரபுவுக்கு ஒரு நோட்டீசு. "இது கண்ட ஒரு வாரத்திற்குள் நீர் நமக்குத் தரவேண்டிய இரண்டு லக்ஷம் ரூபாயையும் அனுப்பி வைக்க வேண்டியது. இல்லாவிடில் உம்மை வேலையிலிருந்து தள்ளி விடும்படி சிபார்சு செய்யப்படும்." சென்னை ஹைகோர்ட்டு நீதிபதிகளையெல்லாம் இந்தியாவிலுள்ள பற்பல இடங்களுக்கும் மாற்றியிருப்பதாக மற்றொரு உத்திரவு எழுதப்பட்டிருந்தது. இடையிடையே "ஜீவாசம், ஜீவரசம்" என்று பல இடங்களில் பொறிக்கப்பட்டிருந்தது. "சரி! நமது கிராம வாசம் வீண் போகவில்லை. இங்கே ஏதோ விநோதம் இருக்கிறது" என்று எண்ணிக் கொண்டேன். கதவைத் தட்டினேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கதவு திறக்கப்பட்டது. முதலில் ஒரு கரும் பூனை வெளியே வந்தது. அப்புறம் ஒரு முயற்குட்டி. அப்புறம் ஒரு நாய். பின்னர் ஒரு கிழவரின் முகம் மட்டும் தெரிந்தது. பிறகு கிழவரின் உருவம் முழுதும் வெளியே வந்தது. ஆகா எத்தகைய கிழ[illegible]தாப்புள் வரையில் தொங்கிய வெண்ணிறத் தாடி. முழங்க[illegible]ந்த வெண்மையான மேலங்கி. கண்ணில்

மூக்குக் கண்ணாடி. நெற்றியில் குங்குமம். ஆஜானுபாகுவான தோற்றம். யாரோ பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த மகானாயிருக்க வேண்டுமென்றும், இங்கே தனிமையாக வந்து தவம் செய்கிறா ரென்றும் நான் எண்ணினேன்.

"என்னப்பா! எங்க்கே வந்த்தே?" என்றார் கிழவர்.

"தங்களுக்குத் தொந்திரவு கொடுத்ததற்காக மன்னிக்க வேண்டும். தாகமா யிருக்கிறது. கொஞ்சம் மோர் கிடைக்குமா என்று கேட்க வந்தேன்."

"மோ—மோர். என்ன? மோர்ரா? ஓஹோ! மோர்—சர்ரி, சர்ரி. உள்ளே வா" என்றார் கிழவர்.

எனக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டிற்று. இருந்தாலும் உள்ளே சென்றேன். சுற்று முற்றும் பார்த்ததும் என் கலக்கம் அதிகரித்தது அவ்வளவு விசித்திரமான சாமான்கள் அங்கே காணப்பட்டன. பழைய அலமாரி, அதற்குள் கணக்கில்லாத கண்ணாடிப் புட்டிகள், ஒடிந்த மேஜை, அதன்மீது கண்ணாடிக் குழாய் முதலிய என்னென்னவோ கருவிகள், மூலைக்கு மூலை கிழிந்த பழைய புத்தகங்கள், ஜோடி பூனை, நாலு முயல், ஒரு நாய், எலி வளை முதலியன. கிழவர் ஒரு சட்டியிலிருந்து கொஞ்சம் மோர் ஊற்றிக் கொடுத்தார். அதை மறுப்பதற்கு எனக்குத் தைரியமில்லை. வாங்கிக் குடித்தேன். சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று.

"தாங்கள் என்ன இரசாயன சாஸ்திரியோ?" என்று கேட்டேன். இரகசியத்தைக் கண்டு பிடித்து விட்டதாகவே எண்ணினேன்.

"என்ன? என்ன? ர்ரசாயனமா? இல்லை இல்லை. ஹா! ஹா! ஹா! ர்ரசவாத சாஸ்திரி. ர்ரசவாத சாஸ்தி. ர்ரசவாதம். ர்ரசவாதம்"

கிழவன் பைத்தியக்காரன் என்பது இப்போது எனக்கு நன்கு விளங்கி விட்டது. திரும்பிப் போவதற்காக ஓர் அடி எடுத்துவைத்தேன். ஆனால் அதற்குள் கிழவன் என் கையைப் பிடித்துக்கொண்டான். ஏதோ பெரிய இரகசியம் சொல்வதுபோல். அவன் கூறியதாவது:—

"தெரியுமா? நான் ஜீவரசம் கண்டு பிடித்திருக்கிறேன்! ஒரு லட்சம் உயிர்களின் வடிக்கட்டிய ஜீவசத்து? ஆமாம். ஒரு லட்சம் உயிர்கள்! ஓர் உயிருக்கு நூறு வருஷம். லட்சம் உயிருக்குக் கோடி வருஷம். கோடி வருஷத்து ஆயுள் இதோ இந்தப் புட்டியில் அடங்கியிருக்கிறது!"

இவ்வாறு சொல்லிக் கிழவன் மேஜையிலிருந்து ஒரு சிறு புட்டியை எடுத்துக் காட்டினான். இந்தப் பைத்தியக்காரனிடமிருந்து தப்பி எப்படி வெளியே போகப் போகிறோம் என்று எனக்கு ஏக்கம் உண்டாகிவிட்டது.

"நல்லது, ஐயா! நான் ரயிலுக்குப் போகவேண்டும். மோர் கொடுத்தீர்களே. அதற்கேதாவது காசு..." என நான் தயங்கினேன்.

"நீ நல்லப் பையன். நான் சொல்லுரத்தைக் கேளு. ஒருப் புட்டி வாங்கிக்கோ. ஜீவரசம் ஒரு லட்சம் உயிர்களின் வடிக்கட்டிய சத்து. கோடி வருஷ ஆயுசு" என்றான் கிழவன்.

அங்கிருந்து தப்புவதற்கு இதுதான் வழியென்று நினைத்தேன். "என்ன விலை?" என்று கேட்டேன்.

"விலை மூன்று ரூபாய். நீ நல்லப் பையன் உனக்கு மட்டும் இரண்டு ரூபாய்."

ஒரு குவளை மோருக்கு இரண்டு ரூபாய் நல்ல பேரம் அல்லவா? ஆனால் எனக்கு அப்போதிருந்த மனக் குழப்பத்தில் கையில் இருந்த பத்து ரூபாயையும் கேட்டாலும் கொடுத்திருப்பேன்.

நான் வெளியே வந்து அந்த வீட்டின் கீழண்டைச் சுவரைப் பார்த்தபோது அதில் "பித்துக்கொள்ளிக் கிழவன்" என்று யாரோ குழந்தைகள் எழுதி யிருப்பதைக் கண்டேன். என் காலின் வேகம் நான் சொல்லாமலே அதிகமாயிற்று. நேரே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போ[illegible] இப்போது தான் ஒரு வண்டி போயிற்றென்றும், அடுத்த [illegible] இன்னும் மூன்று மணி நேரம் ஆகுமென்

றும் சொன்னார்கள். "அட தெய்வமே!" என்று எண்ணினவனாய் ஸ்டேஷனிலிருந்த கடையில் கொஞ்சம் வாழைப்பழம் வாங்கிக் கொண்டு, சமீபத்தில் புல் முளைத்திருந்த ஒரு மைதானத்தில் போய் உட்கார்ந்தேன். வானம் மப்பும் மந்தாரமுமா யிருந்தது. ஏதோ வந்ததற்குச் சிறிது நேரம் அமைதியாய்ப் படிப்போம் என்று எண்ணினேன். அதற்கு முன் மருந்துப் புட்டியை எடுத்து ஒருமுறை பார்த்தேன். பெருமூச்சுடன் அதைக் கீழே வைத்துவிட்டு டார்வின் புத்தகத்தைக் கையில் எடுத்துப் படிக்கத் தொடங்கினேன், ஜீவ வர்க்க பரிணாமத்தைப் பற்றியும், குரங்கிலிருந்து மனிதன் எப்படிப் பிறந்தான் என்பதைப் பற்றியும் டார்வின் வெகு ரசமாகச் சொல்லிக் கொண்டு போனார். அந்த ரசத்தில் சொக்கிப் போன எனக்கு ஆனந்தமாக நித்திரை வந்தது.

"சை! தூங்கக் கூடாது" என்று எண்ணி நான் கண்ணைக் கசக்கிய போது சமீபத்தில் காலடிச் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். எதிரில் யார் வந்தது என்று நினைக்கிறீர்கள்? புத்தகத்தில் யாரைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்தேனோ அந்த சாக்ஷாத் ஆஞ்சனேயப் பெருமான்தான். குரங்குடன் மனிதன் ஒருவனும் கூட வந்தான். அவன் கழுத்தில் ஒரு பழைய ஹார்மோனியப் பெட்டி தொங்கிக் கொண்டிருந்தது. குரங்கு, சட்டையும் குல்லாவும் அணிந்திருந்தது. "இந்தப் பிராணியிடத்திருந்தா நாமெல்லாரும் பிறந்தோம்? டார்வினும் ஒரு பெரிய பைத்தியக்காரன் போலிருக்கிறதே!" என்று நான் எண்ணினேன்.

"குட்மார்னிங் ஸார்!" என்றான் குரங்காட்டி. அவனுடைய குரங்கு என்னைக் கவர்ந்துவிட்டதென்பதை அவன் கவனித்திருக்க வேண்டும்.

"ஹனுமார்! ஐயாவுக்கு ஸலாம் போடு!" என்றான். ஹனுமார் ஸலாம் போட்டது.

"ஐயாவுக்கு வாத்தியம் கேட்கப் பிரியமா?" என்றான் மனிதன்.


"இல்லை" என்று அழுத்தந் திருத்தமாகச் [illegible]ன். [illegible]னேன். ஹார்மோனியம் என்றாலே எனக்காகாது. அதிலு[illegible] [illegible]டே[illegible]சித்த ஹோட்

டலுக்கு அடுத்த வீட்டிலிருந்த ஹார்மோனியம் என் படிப்பைக் கெடுப்பது போதாதென்று இங்கு அமைதியாகப் படிக்க வந்த இடத்திலுமா?

"ஐயா ஹனுமாருக்குக் காலணா கொடுப்பாரு. நான் வாத்தியம் வாசிப்பேன்" என்றான் மனிதன்.

"இரண்டும் இல்லை" என்றேன் நான்.

"அப்படியானால் ஐயா அரையணாக் கொடுப்பாரு. நான் வாத்தியம் வாசிக்காதிருப்பேன்!" என்றான் மனிதன். இப்போது அவன் குரங்கின் விலாவில் விரலால் குத்தவே அது ஓடிவந்து தன்



தலையில் இருந்த குல்லாவை எடுத்து நீட்டியது.

மறுபடியும் தோல்விதான். சட்டைப் பையில் கைவிட்டுக் காலணாக்களைத் தேடிக் கொண்டிருந்தேன். இதற்குள் குரங்கின் கவனம் பக்கத்திலிருந்த வாழைப் பழங்களின் மேல் போய்விட்டது. அப்பொழுது எனக்கு அருமையான ஒரு யோசனை தோன்றிற்று. கிழவனிடம் பெற்ற ஜீவரசத்தை இந்தக் குரங்குக்குக் கொடுத்து ஏன் பரிசோதிக்கக்கூடாது?

சட்டென்று ஒரு வாழைப் பழத்தை உரித்து, குரங்காட்டி பாராமல் புட்டியிலிருந்து அதில் கொஞ்சம் மருந்து ஊற்றிக் குரங்கினிடம் கொடுத்தேன். [illegible] லாவில் அரையணாவும் போட்டேன். அடுத்த

கணத்தில் குரங்கு தன் எஜமான் தோளுக்குப் போயிற்று; அரையணு எஜமானின் சட்டைப் பைக்குள் போயிற்று; வாழைப்பழம் குரங்கின் வயிற்றுக்குள் போயிற்று. குரங்காட்டி என்னை வாழ்த்திக்கொண்டே திரும்பினான். "இவ்வளவுதானா? ஒன்றுமில்லையே?" என்று நினைத்துக்கொண்டு நான் மீண்டும் படிக்கத் தொடங்கினேன்,

ஆனால் குரங்காட்டி கொஞ்ச தூரம் போய் நின்று குரங்கினிடம் ஏதோ வாத மிடுவதைக் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தேன். ஆஹா! இதென்ன விந்தை? பழைய குரங்கு எங்கே? இந்தப் பெரிய குரங்கு எங்கிருந்து வந்தது? குரங்காட்டி ஏதோ தந்திரத்தினால் இந்தப் புதிய குரங்கைக் கொண்டுவந்து விட்டானா? அப்படி யிருக்க முடியாது. ஏனெனில் குரங்காட்டியும் என்னைப் போலவே அதிசயமடைந்தவனாய்க் காணப்பட்டான். அவன் குரங்கைக் கீழே இறக்கிவிட்டு அதைப் பார்த்து ஏதேதோ ஹிந்துஸ்தானி பாஷையில் பேசினான்.

நன்றாய்க் கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். முன் பார்த்த குரங்கைவிட இது மூன்று மடங்கு பெரிதா யிருக்கிறது. நிமிஷத்துக்கு நிமிஷம் அது வளர்ந்து வந்ததுடன் உருவமும் மாறி வந்தது. இப்போது குரங்காட்டியின் மார்பு அளவுக்கு அது வந்துவிட்டது. அதன் முதுகு வளைவு மறைந்து போயிற்று. கால்கள் நிமிர்ந்து வந்தன. ஆனால் குல்லா பழைய குல்லாதான். சட்டையும் பழைய சட்டைதான். ஆனால் உடம்பு பருத்தபோது சட்டை தாறுமாறாய்க் கிழிந்து விட்டது. எனவே பழைய குரங்குதான் இப்படி வளர்ந்து வருகிறதென்பதில் சந்தேகமில்லை. வாயைப் பிளந்த வண்ணம் இந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் கண் விழிகள் பிதுங்கிவிடும்போ லிருந்தன.

குரங்கு—அல்லது மாஜி குரங்கு—இன்[illegible]ன். ந·3 [illegible] நிமிஷத்தில் தன் எஜமானனின் தோள் அளவுக்கு வ[illegible]ட்டே[illegible]ன் முகத்தை

விநோதமாக உற்றுப் பார்க்கத் தொடங்கியபோது அதற்குமேல் அந்த மனிதனுல் தாங்க முடியாமல் போய்விட்டது. அவன் ஹார்மோனியப் பெட்டியைத் தொப்பென்று கீழே போட்டுவிட்டு "ஆண்டவனே! அல்லாவே!" என்று கூச்சலிட்டுக்கொண்டு ஓட்டம் பிடித்தான். ரயில்வேலி, தண்டவாளம், அதனருகிலிருந்த வாய்க்கால் முதலியவற்றை அவன் சிறிதும் பொருட்படுத்தாமல் ஒரே தாண்டலாகத் தாண்டிக் குதித்து ஓடினுன். ஆனுல் நானே இந்த மகத்தான அற்புதக் காட்சியைப் பார்த்தவண்ணம் மந்திரத்தினுல் கட்டுண்டவன்போல் உட்கார்ந்திருந்தேன். குரங்காட்டி ஓடிப்போனதும் மாஜி குரங்கு திரும்பிப் பார்த்தது. மெதுவாக என்னை நோக்கி வந்தது. இப்போது அது காட்டுமிராண்டி மனிதன் ஒருவனைப்போல் காணப்பட்டது. இதற்குள்ளாகச் சட்டை சுக்குசுக்காகக் கிழிந்து கீழே விழுந்துவிட்டபடியால் தலையில் குல்லாவைத் தவிர வேறென்றும் அது அணியவில்லை. சில சமயம் வடநாட்டிலிருந்துவரும் நிர்வாண பைராகிகளைப்போல் அது காணப்பட்டது.

அந்த விநோதப் பிராணி என்னெதிரே வந்து நின்று உற்றுப் பார்த்தது. எப்படியேனும் அதைத் திருப்தி செய்யவேண்டுமென்று எனக்குத் தோன்றியது. பக்கத்திலிருந்த வாழைப்பழத்தைச் சீப்புடன் எடுத்துக் கொடுத்தேன். எல்லாப் பழத்தையும் தின்றுவிட்டு "அப்-அப்-அப்" என்றது.

"அப்படியா! சந்தோஷம்" என்றேன் நான். உள்ளுக்குள் எனக்கிருந்த திகிலைச் சொல்ல முடியாது.

"குரங்கு மனிதன் எனக்கெதிரில் புல்லில் உட்கார்ந்து கொண்டான். "கிக்-கிக்-கிக்" என்றுன். பிறகு "எக்-எக்-எக்" என்றுன். பின்னர் என்னை நோக்கி ஏதோ கேட்பவன்போல் "வக்-வக்-வக்?" என்றுன்.

என் மூ[illegible]து வேலை செய்ய ஆரம்பித்தது. இதென்ன விந்தை? இ[illegible]்புதம்? இதெப்படி நிகழ்ந்திருக்கும்? கிழவ

னுடைய ஜீவரசம் செய்யும் வேலையா ? ஜீவரசம் ஆயுளைத்தானே வளர்க்க முடியும்? ஒரு லட்சம் உயிர்களின் வடிக்கட்டிய சத்து. ஒரு கோடி வருஷ ஆயுள். டார்வின் கொள்கை. பரிணாமவாதம். ஓஹோ ஹோ! விளங்கி விட்டது. விளங்கிவிட்டது. கிழவன் பைத்தியக்காரனல்லன்; மகா சித்த புருஷன். வெறுமே உயிரைச் சாகாமல் வைத்திருக்கும் ஜீவரசம் அன்று: உயிர் வளர்ச்சி தரும் ஜீவரசம். கால் மணி நேரத்தில் ஒரு லட்சம் வருஷத்தின் வளர்ச்சி! ஆஹா! என்ன அற்புதம்!

ஆனால் இந்த அற்புதத்தின் உண்மையைக் கண்டு பிடித்த மகிழ்ச்சியை நான் அதிக நேரம் அநுபவிப்பதற்கில்லை. ஏனெனில் நிமிஷத்துக்கு நிமிஷம் நிலைமை மாறி மேலும் மேலும் பிரமிப்பு உண்டாக்கி வந்தது. இப்போது அந்தக் குரங்கு மனிதன் பேசுவதற்கு முயல்கிறானென அறிந்தேன்.

"இன்-இன்-இன்" என்று சொல்லிக்கொண்டே அவன் ஜீவரசம் இருந்த புட்டியைச் சுட்டிக் காட்டினான்.


பிறகு சிறிது சிரமப்பட்டு "இன்-இன்-இன்னும் கொஞ்சம்." என்றான்.

ஆதி காலத்தில் முதன் முதல் தோன்றிய மனித சாதி தமிழ் மொழிதான் பேசிற்றென்று ஒரு தமிழ்ப் பிரமுகர் கூறுவது எனக்கு நினைவு வந்தது. அது உண்மையாகவே இருக்கவேண்டுமென்று நினைத்தேன். ஆனால் இது குறித்து அதிக நேரம் சிந்திப்பதற்குத் தருணம் அதுவன்று. இன்னும் கொஞ்சம் ஜீவரசம் குடித்து விட்டால் என்ன விளையுமோ வென்ற பீதி எனக்குண்டாகி விட்டது. ஆதலின் புட்டியைக் கையிலெடுத்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றேன்.

ஆனால் முயற்சி பலிக்கவில்லை. வலிமை பொருந்திய ஒரு கை என்னைப் பிடித்து இறுத்திற்று. மற்றொரு ன். ந.தி இவன் புட்டியைப் பிடுங்கி அதிலிருந்த ஜீவரசம் முழு .டே. ஞ்உத்து விட்

டான். பின்னர் அவன் என் கைப்பெட்டியைத் திறந்தான், அதிலிருந்த என்னுடைய மாற்று உடைகளை எடுத்து அணிந்துகொண்டு மறுபடியும் கீழே உட்கார்ந்தான். என் மூளை திருவிழாக் காலங்களில் திருக்குளம் குழம்புவதுபோல் குழம்பிற்று. அது அடியோடு சிதறிப் போகாமலிருக்கும்பொருட்டு நகரம், கலாசாலை, என்னுடைய ஆசிரியன்மார் முதலியவர்களைப்பற்றி எண்ணினேன். எனக்கு நேர்ந்திருக்கும் இந்த நிலைமையை என் விஞ்ஞான ஆசிரியரால் கூடச் சமாளிக்க முடியாது என்று கருதினேன்.

"நிரம்ப நல்லது" என்று அக்குரங்கு மனிதன் தூய தமிழில் பேசினான். பிறகு ஏதோ அபூர்வ ஜந்துவைப் பார்ப்பதுபோல் என்னை உற்று நோக்கி "நீ என்ன? பழைய கருநாடகமா யிருக்கிறாயே?" என்றான்.



ஒரு கூத்தாடிக் குரங்கு என்னைப் பார்த்துப் "பழைய கருநாடகம்" என்று சொல்லுமென நான் கனவிலும் கருதியதில்லை. எனவே அக்[illegible]ன்னைத் தூக்கி வாரிப்போட்டது. அப்போது என் மடியி[illegible]வின் புத்தகம் கீழே விழுந்தது.

"ஓஹோ! மாண்டுபோன ஆங்கில மொழியா?" என்றான் அம் மனிதன். நிமிஷத்துக்கு நிமிஷம் என் வியப்பு அதிகமானதுபோல் அவன் உருவமும் மாறி வந்தது. பழைய காட்டுமிராண்டி வடிவம் போய்விட்டது. அவன் தேகம் மெலிந்து மென்மையாகி யிருந்தது. மண்டை அசாத்தியமாகப் பெருத்து விட்டது. கண்களும் அப்படியே. வாய் மிகவும் சிறுத்திருந்தது. விரல்கள் மெலிந்து நீண்டிருந்தன. தலையில் இருந்த ஒரு சிறு குல்லா ஒன்றுதான் அவன் சற்று நேரத்திற்கு முன் குரங்கா யிருந்தான் என்பதை எனக்கு நினைவூட்டிற்று.

இந்த நினைவு வந்ததும் மறுபடியும் ஒரு நிமிஷம் சிந்தனை செய்தேன். வளர்ச்சி அதிவேகமாக நிகழ்ந்து வருகிறதென்று அறிந்தேன். குரங்கு காட்டு மனிதனாகி, காட்டு மனிதன் இக்கால மனிதனாகி, இக்கால மனிதன் வருங்கால மனிதன் ஆகிவிட்டான். இப்போது அவனைக் கண்டதும் என்னை யறியாமலே பயபக்தி உண்டாயிற்று.

"மன்னிக்க வேண்டும்" என்னும் சொற்கள் என் வாயினின்று தாமே வெளிவந்தன. எதற்காக மன்னிக்க வேண்டுமென்பது எனக்கே விளங்கவில்லை.

வருங்கால மனிதன் கீழே விழுந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்துவிட்டுச் சொல்வான்:— "ஓ! டார்வின் இயந்திர யுகத்தைச் சேர்ந்தவன். நமது வளர்ச்சியை ஒருவாறு ஊகித்து அப்போதே சொன்னான். ஆயினும் அக்காலத்து மக்களெல்லாரும் பொதுவாக மூடர்கள். எனவே ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டு செத்தார்கள்."

"உண்மை, வாஸ்தவம்" என்றேன். இவ்வளவு மூளைக் குழப்பத்தினிடையே எனக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. வருங்கால மனிதர் தமிழ் மொழி பேசுவார்கள் என்பதின். ந[illegible]ந்த சந்தோஷம் உண்டாயிற்று. ஆங்கிலம் மாண்டுபோ[illegible]டே[illegible] உத்மகிழ்ச்சி

தான். அந்த பாஷை கற்பதற்கு நான் படும் அவஸ்தை அவ்வளவு அதிகம்.

மீண்டும் சட்டென்று எனக்கு ஓர் அரிய யோசனை தோன்றிற்று. வருங்காலத்தைப்பற்றி இந்த வருங்கால மனிதன் கூறுவதையெல்லாம் எழுதிக்கொண்டால் நல்ல தல்லவா? அப்படிச் செய்து கொண்டால் கலாசாலை ஆசிரியர்களைக்கூட ஓட ஓட விரட்டலாம். உடனே நோட்டுப் புத்தகமும் பென்சிலும் சட்டைப் பையிலிருந்து எடுத்தேன்.

"ஓகோ! எழுதும் கலை? இது மறந்து போய் இரண்டு லட்சம் ஆண்டு கழிந்த தல்லவா? என்று கூறி வருங்கால மனிதன் வியப்புடன் நோக்கினான்.

பிறகு சட்டென்று ஓர் எண்ணம் உதயமானவனைப் போல் என்னை உற்றுப் பார்த்து "நீ யார்?" என்றான்.

விஞ்ஞானப் புலவர்கள் ஒரு வண்டு அல்லது தேனீயை நோக்குவது போன்று அவன் என்னை ஆராய்ச்சிக் கண்ணுடன் பார்க்கத் தொடங்கினான். உடனே எனக்கு அளவிலாத பீதி யுண்டாயிற்று. நல்ல வேளை! அவன் முன்போல் காட்டு மிராண்டி மனிதனாயில்லை. தப்பித்து ஓடிப் போகலாம்.

எழுந்து ஓடினேன். ஆனால் சில அடி தூரம் போவதற்குள் என் கால்கள் தாமாக நின்றன. விருப்பமில்லாமல் திரும்பிப் பார்த்தேன். வருங்கால மனிதன் இருந்த விடத்திலேயே இருந்தான். ஏதோ கட்புலனாகாத சக்தி என்னைப் பிடரி பிடித்துத் தள்ளிக் கொண்டு போய் அவன் எதிரில் உட்கார வைத்தது. தேக பலத்தை அவன் இகழ்ந்து கூறியதின் கருத்து எனக்கு இப்போது நன்கு விளங்கியது. இதற்[illegible]வன் மண்டையும் கண்களும் இன்னும் அதிகம் பெரு[illegible]ண்களில் காந்த ஒளி வீசிற்று.

இதன் பின்னர் அவன் வாய் திறந்து பேசவில்லை. ஆயினும் அவனுடைய கட்டளைகள் என் மூளையில் வந்து நன்றாகப் பதிந்தன.

"உன் குல்லாவை எடுத்து என்னிடம் கொடு" என்று மானதக் கட்டளை பிறந்தது.

"முடியாது" என்று நான் வாயால் சொன்னேன். ஆனால் கையினால் குல்லாவை எடுத்துக் கொடுத்தேன். மௌன மனிதன் அக்குல்லாவை மண்டபம் போலிருந்த தன் தலையின் உச்சியில் வைத்துக் கொண்டான். பின்னர், குரங்குக் குல்லாவை என்னிடம் கொடுத்தான்.

"இதை உன் தலையில் வைத்துக்கொள்" என்று மானதக் கட்டளை பிறந்தது.

"மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டே அதை வாங்கித் தலையில் வைத்துக் கொண்டேன்.

"இடது கையில் குல்லாவைத் தூக்கி வலது கையினால் ஸலாம் போடு" என்று அடுத்த உத்திரவு வந்தது.

ஐயையோ! இதென்ன அநியாயம்? மனிதர்கள் குரங்குகளையும் நாய்களையும் பழக்குவதுபோல் இவன் நம்மைப் பழக்குகிறானா, என்ன?

"முடியாது" என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னேன். ஆயினும் என் இடது கை குல்லாவைத் தூக்கிற்று. வலது கை ஸலாம் போட்டது.

"மீண்டும் ஸலாம் போடு"

எனக்குக் கண்ணில் நீர் ததும்பிற்று. ஆ[illegible]. [illegible]ம் போட்டேன்.

"எழுந்து நின்று கூத்தாடு."

அவமானம்! அவமானம்!! எழுந்து நின்று கூத்தாடினேன்.

"போதும். உட்கார்."

உட்கார்ந்தேன். அடுத்தாற்போல் "செத்துப்போ" என்று கட்டளை பிறக்கக் கூடாதா என்று நினைத்தேன்.

அடுத்த கணத்தில் "செத்துப் போ!" என்று பயங்கரமான மானதக் கட்டளை வந்தது.

"மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டே மல்லாந்து கீழே விழுந்தேன். வருங்கால மனிதனின் அப்பயங்கரமான பெரிய மண்டை என் முகத்தினருகே வந்தது. அவனுடைய மெலிந்த நீண்ட விரல்கள் என் முகத்தைத் தீண்டின. அளவிவில்லாத பீதி கொண்டவனாய்க் கண்களை மூடிக்கொண்டேன்.

ஒரு பெரிய பிரயத்தனம் செய்து கண்களைத் திறந்தேன். என் மார்பின் மீது குரங்கு உட்கார்ந்து பல்லை இளித்துக் கொண்டிருந்தது. சுற்று முற்றும் பார்த்தேன். குரங்காட்டி ஹார்மோனியத்தைத் திறந்து சுரம் போட்டுக் கொண்டிருந்தான். எருமைக் கன்று சத்தமிடுவது போலிருந்தது. பக்கத்தில் வாழைப் பழங்கள் எல்லாம் உரிக்கப்பட்டுத் தோல்கள் கிடந்தன. கடவுளே! இவ்வளவும் கனவுதானா? சட்டென்று எழுந்த உட்கார்ந்தேன். என் மார்பிலிருந்து கீழே விழுந்த குரங்கு என்னை நோக்கி "கிக்-கிக்-கிக்" என்றது.

"ஐயா; அநுமாருக்குக் காலணா கொடுப்பாரு. நான் வாத்தியம் வாசிப்பேன்" என்றான் குரங்காட்டி.

"இங்கு எத்தனை நேரமாய் நிற்கிறாய்?" என்று கேட்டேன்.

"கால் [illegible] க்கரேன், சாமி! இன்று முழிச்ச முகம் நல்ல முகமில்லெ [illegible] ரம்பிடிந்து தம்பிடி கிடைக்கவில்லை. அதோ

அந்தப் பித்துக்கொளி வீட்டில் ஒரு நாழி வீணாய்ப் போச்சு. நீங்களா பட்டப் பகலில் தூங்கிப் போய்ட்டீங்க." என்றான்.

பித்துக்கொளி என்றதும் நான் பக்கத்தில் திரும்பிப் பார்த்தேன். குரங்கு அப்போது தான் "ஜீவரசம்" இருந்த புட்டியைத் திறந்து கொண்டிருந்தது. "ஐயையோ!" என்று ஒரு சத்தம் போட்டு அதைப் பிடுங்கி வீசி எறிந்தேன். கிராமவாசம் போதும் போதுமென்று ஆகிவிட்டது. கைப் பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு ஸ்டேஷனை நோக்கி வேகமாய் நடக்க ஆரம்பித்தேன். அப்போது குரங்கு என்னை உற்றுப் பார்த்து 'வக்-வக்-வக்' என்றது.

"மாட்டேன்" என்று சொல்லிக்கொண்டே அதற்கு நான் ஸலாம் போட்டேன்.

குரங்காட்டி அதைப் பார்த்தான். "ஊ ஊ ஊ" என்று ஒரு சத்தம் போட்டான். மறுபக்கம் நோக்கி ஓட்டம் பிடித்தான். அரைமணி நேரத்திற்குள் இரண்டு பைத்தியக்காரன்களைச் சந்தித்தால் யாருக்குத் தான் பயமுண்டாகாது?

இவ்வளவும் நீளம் கூறிய இந்தக் கதையின் உட்கருத்தென்ன? இதனால் விளங்கும் நீதி யாது? என்று வாசகர்கள் கேட்கலாம். அது தான் எனக்கும் தெரியவில்லை. தெரிந்தவர்கள் எழுதினால் மிகவும் நன்றியுடையவனா யிருப்பேன்.



ராகு காலம்

ராகு வென்றால் இன்ன வென்பது நீங்கள் எல்லாரும் அறிந்த விஷயமே. (ஆகையினால் தான் அதைப்பற்றி இங்கே எழுதத் துணிந்தேன். தெரியாத விஷயத்தைப் பற்றிச் சொல்வதால் யாருக்கு என்ன பயன் ஏற்படக்கூடும்?) ராகு வென்பது ஒரு கிரகம் அல்லது ஒரு பாம்பு, அல்லது ஓர் இராட்சதன், அல்லது ஓர் இராட்சதப் பாம்புக் கிரகம். இந்த ராகுவுக்குச் சில சமயம் திடீரென்று அகோரமான பசி உண்டாகிவிடும். பின்னர் அது என்ன செய்யும் தெரியுமல்லவா? பகலா யிருந்தால் சூரியனையும், இரவா யிருந்தால் சந்திரனையும் அப்பம் என்றெண்ணி விழுங்கிவிட முயலும். ஆனால் சூரியன் என்றால் இலேசா, என்ன? சூரியனுடைய குறுக்களவு, சுற்றளவு, வெப்பத்தின் டிகிரி முதலியவைகளும் உங்களுக்குத் தெரிந்த விஷயங்களே. சூரியனது குறுக்களவு 1,00,00,00 ....மைல். (எவ்வளவு பூஜ்யம் என்பது ஞாபகமில்லை. பூஜ்யம் எவ்வளவு போட்டால்தானென்ன? இதே முறையில் எல்லாக் கிரகங்களின் அளவையும் கணக்காகச் சொல்லிவிடலா மென்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.) பூமியிலிருந்து சூரியனுடைய தூரமோ ஒன்று போட்டுப் பதினாறு பூஜ்யம் மைல் என்று நினைக்கிறேன். இவ்வளவு தூரத்திலிருக்கும் சூரியபகவான், வருஷந்தோறும் நாம் கொடுக்கும் பொங்கல், வாழைப்பழம் முதலியவைகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தும் இப்போதே வெயில் மண்டை வெடிக்கின்றது. இப்படிப்பட்ட சூரிய பகவானை விழுங்க முயலுபவனின் கதி என்னவாகு மென்று சொல்ல வேண்டுவதில்லை.

இப்படியாக, ராகு சூரியனையோ, சந்திரனையோ விழுங்கிப் பார்த்து மு[illegible]ரும்பக் கக்கி விடுவதற்குத்தான் சூரிய சந்திர கிரஹண[illegible]ம்பெயர் என்பதை நாமெல்லாரும் அறிவோம்.

வாசகர்களின் காதோடு ஒரு சமாசாரம். இந்தக் கதையில் உண்மையாக உங்களுக்கு நம்பிக்கை கிடையாது; எனக்கும் நம்பிக்கை கிடையாது. முறையே, பூமி, சந்திரன் இவற்றின் நிழலினால் எப் எப்படி சூரிய, சந்திர கிரஹணங்கள் உண்டாகின்றன வென்பதை நாலாம் வகுப்பிலேயே நாம் படித்திருக்கிறோமல்லவா? ஆனால் கிரகணத் தினத்தன்று மட்டும் இந்த நவீன அறிவெல்லாம் நமக்கு மறந்து போய்விடுகிறது. அன்று, கடல் நீரிலோ குளங் குட்டையிலோ தலை முழுகித் தர்ப்பணம் முதலியவைகள் செய்ய நீங்களும் நானும் தவறுவதில்லை. இது குறித்து நாம் வெட்கப்படவேண்டிய அவசியமுமில்லை. வான சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற எம். ஏ. பட்டதாரிகள் கூட அப்படித்தான் செய்கிறார்கள். இது நிற்க.

ராகுவைப் பற்றியும், கிரகணங்களைப் பற்றியும் இப்பொழுது நமக்கு நன்றாக உண்மை விளங்கி விட்டது. ஆனால், இந்த ராகு காலம்! அதன் இரகசியந்தான் எனக்குப் பிடிபடவில்லை. ராகுவுக்கும் காலத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கக்கூடும்? ராகு காலத்திலும் ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் வரும் ராகுகாலம் மிகப் பொல்லாததாம். ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு காரியத்துக்காக நான் புறப்பட்டுச் சென்றேன். புறப்படும்போதே "ராகுகாலத்தில் கிளம்புகிறோம்!" என்று நெஞ்சு அடித்துக் கொண்டது. அதற்கேற்றாற் போல் காரியமும் நடக்கவில்லை. சரி, சரி, ராகு காலப் பலன்தான் என்று தீர்மானித்து விட்டேன். ஆனால் நான் கொஞ்சம் சந்தேகப் பிருகிருதி என்பது உங்களுக்குத் தெரியுமே. மறுபடியும் யோசனை வந்து விட்டது. நான் புறப்பட்ட நேரத்திற்கும், நான் பார்க்கச் சென்றவர் ஊரில் இல்லாததற்கும் என்ன சம்பந்தம் இருக்கக் கூடும்? ராகு காலத்திற்கு முன்னால் போயிருந்தாலும் அவர் இருந்திருக்க முடியாது. இவ்வாறெண்ணி வேறொருநாள் வேண்டுமென்றே ராகுகாலத்தில் கிளம்பிச் சென்றேன். அன்று வேலை திருப்திகரமாய் நடந்தது. அதற்குப் பிறகு பலமுறை ராகு காலத்தில் காரியம் தொடங்கிப் பார்த்தேன். [illegible] நடந்தது; சிலமுறை நடக்கவில்லை. ஆகவே காரியசித்தி [illegible]

துக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லையென்று ஒருவாறு தீர்மானித்தேன். இக் கட்டுரையையும் நான் துணிந்து ராகுகாலத்தில் எழுதத் தொடங்குகிறேன்.

இதற்குள்ளாக, நேயர்களில் பாதிப்பேர் என்னை நாஸ்திகன் எனத் தீர்மானித் திருப்பார்கள் என்றே நினைக்கிறேன். "ஐயோ! பாவம்! இந்த நல்ல மனிதனுக்கு இப்படி நேர்ந்து விட்டதல்லவா?" என்று அவர்கள் அநுதாபப்படுகிறார்கள். மற்றப் பாதிப்பேர் ஒரு வேளை நான் சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்து விட்டதாக எண்ணி எனக்கு வாழ்த்துக் கூறத் தயாரா யிருக்கலாம். ஆனால் அநுதாபத் துக்கோ, வாழ்த்துக்கோ நான் உரியவனல்லன் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். உண்மையில், நான் கடவுள் கட்சியைச் சேர்ந்தவன்தான். நான் பிறந்ததிலிருந்து கடவுளுடைய கட்சியில் இருந்து விட்டு இப்போது அவருக்கு ஆபத்து வந்திருக்கும் சமயத் தில் அவரைக் கைவிட்டு விடுவதென்றால் என் மனம் இடங் கொடுக்கவில்லை. அது நம்பிக்கைத் துரோக மாகுமல்லவா? எனக்கு வயதோ இந்திய மக்களின் சராசரி வயதைவிட அதிகமாகிவிட்டது. இன்னும் எத்தனை காலம் உயிர் வாழப் போகிறேனோ தெரியாது. (ஜோதிடர்கள் 60 வயது சொல்லி யிருக்கிறார்க ளென்றாலும், என் னுடைய நண்பர்கள் சிலருடைய ஜோதிட அநுபவம் அவ்வளவு நம் பிக்கை யூட்டுவதா யில்லை.) மனித காயம் அநித்தியம். இன்றைக் கிருப்பாரை நாளைக்குக் காணோம். இந்த நிலைமையில், ஏதோ இருக் கும் வரையில் கடவுள் கட்சியிலேயே இருந்துவிட்டு உயிரை விட லாம் என்று உறுதியாகத் தீர்மானித் திருக்கிறேன் ஆகையால். "நாஸ்திகன்" என்னும் பழியைத் தயவுசெய்து என் பேரில் போட வேண்டாம்.

"அப்படியானால் நீர் ராகு காலத்தைப் பற்றிக் குறை சொல் கிறீரே? சொல்லலாமா?" என்று சிலர் கேட்கலாம். அப்படிக் கேட் பவர்கள் [illegible] துக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம் என் [illegible] வித்தால் நலம். சம்பந்தம் எதுவும் இருப்பதாக

நான் நினைக்கவில்லை. கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்து நிற்பவரென்று பொருள். எனவே, அவர் அறியாத்தனத்தையும் கடந்து நிற்க வேண்டுமல்லவா? ஆகையினால்தான் மனிதனுக்கு ஆண்மையையும் அறிவையும், ஊக்கத்தையும் உறுதியையும் அளித்த பகவான், இவ்வளவு பயன் படாமற்போக நடுவில் நாளையும், கிழமையையும் ராகுகாலத்தையும் வார சூலையையும் வைத்திருப்பாரென்று என்னால் நம்பமுடியவில்லை.

கடவுள் விஷயத்தை இவ்வளவு திருப்திகாமாகத் தீர்த்துவிட்டபடியால், இனிமேல் ஜோதிடத்தைப்பற்றி என்னுடைய அநுபவங்கள் சிலவற்றைத் தைரியமாகச் சொல்லலாமென எண்ணுகிறேன். "ஒரு ரூபாய்க்கு ஒரு வருஷ பலன்" விளம்பரங்களைப் பற்றி நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். என்னுடைய நண்பர் ஒருவர் இத்தகைய விளம்பரம் ஒன்றைக்கண்டு ஒரு ரூபாய் பணம் அனுப்பி வைத்தார். அதில் ஜோதிடம் கேட்ட மாதத்திலிருந்து பன்னிரண்டு மாதங்களையும் எழுதி ஒவ்வொரு மாதத்துக்கும் நேராக "நன்மை," "தீமை," "நிஷ்பலன்" என்று இவ்விதமாகப் பலன் குறிப்பிடப்பட்டிருந்தது. இக்கடிதத்தை அப்படியே பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு ஒரு வருஷங் கழித்துப் பரிசோதிக்கலாமென்று நான் அந் நண்பருக்கு யோசனை கூறினேன். அவ்வாறே ஒரு வருஷம் சென்ற பிறகு ஒரு நாள் அக் கடிதத்தைக் கொண்டுவந்தார் நண்பர். பலன்களைப் படித்துவிட்டு "பலே சோதிடம்! அவ்வளவு சரியாயிருக்கிறது!" என்று அவர் கூறினார். "என்ன? என்ன?" என்று நான் ஆவலுடன் வினவினேன். அவர் கூறியதாவது:- "நிஷ்பலன்" என்று இதில் காணப்படும் மாதத்தில் நான் 104 டிகிரி சுரம் அடித்து வைகுண்டத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். "நன்மை" என்று இதில் காணப்படும் மாதத்தில் பரீக்ஷையில் தவறிப்போனேன். "தீமை" என்று இதில் போட்டிருக்கும் மாதத்தில் எனக்குக் கலியாணம் நடந்தது!

இவ்வாறு சொல்லி அவர் சிரித்தார். நானும் [illegible]கத்தேன். ஆனால் சற்று யோசித்துப் பார்த்ததில் சோ[illegible] [illegible]ன்றே

தோன்றியது. எப்படியென்றால், முதலில் 'நிஷ்பலன்' மாதத்தை எடுத்துக்கொள்வோம். அம்மாதத்தில் என் நண்பருக்குச் சுரம் அடித்தது உண்மையே. ஆனால் அது காரணமாக அவர் வைகுண்டத்தை எட்டிப் பார்த்தாரே யொழிய, வைகுண்டம் போய்ச் சேரவில்லையல்லவா? அங்கே போயிருந்தாலன்றோ சுரம் பலன் தந்ததாகும்? ஆதலின், அது 'நிஷ்பலன்' தான். பின்னர், 'நன்மை' என்ற மாதத்தில், என் நண்பர் பரீட்சையில் தவறினர். எனவே, உத்தியோகத்துக்கு அலையும் கவலை இன்னும் ஒரு வருஷத்துக்கு அவருக்கில்லாமற் போயிற்று. இது 'நன்மை' யல்லவென்றால், வேறெது தான், ஐயா, நன்மை? கடைசியாக, கலியாணம்......... நல்லது. இது பகிரங்கமாகப் பேசுவதற்குரிய விஷயமன்று. கலியாணம் நன்மையா, தீமையா என்பதைப்பற்றி என் அபிப்பிராயத்தை இங்கு நான் எழுதப்போவதில்லை. நேயர்களில் கலியாணமானவர்கள் எல்லாருக்கும் அது தெரிந்த விஷயமே. பிரமசாரிகளாயிருக்கும் பாக்கியவான்கள் தயவுசெய்து தனித்தனியே கலியாணமானவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும். இது நிற்க.

"சப்தரிஷி வாக்கியம்" என்று சிலர் கேள்விப்பட்டிருக்கலாம். இது ஒரு பிரமாண்டமான சாஸ்திரம். இவ்வுலகிலே ஆதிகாலத்திலிருந்து இன்று வரைக்கும் இருந்தவர்கள், இப்போது இருப்பவர்கள், இனிமேல் பிறக்கப்போகிறவர்கள் ஆகிய எல்லாருடைய ஜாதகங்களுக்கும் பிரதிகளும், அவற்றிற்கு மிக நுட்பமான ஆயுள் பலனும் இந்த சாஸ்திரத்தில் உண்டாம்! என்னுடைய மாமன் ஒருவர் கொடியதொரு நோயினால் வருந்திக்கொண்டிரு[illegible]தார். அவர் மேற்படி சாஸ்திரம் வைத்திருந்த ஒருவரிடம் சென்று எழு ரூபாய் கொடுத்துப் பலன் கேட்டார். ஓர் அறையில் கட்டுக் கட்டாகக் கிடந்த ஓலைச் சுவடிகளை மூன்று நாள் புரட்டிப் புரட்டித் தேடிய பிறகு அவருடைய ஜாதகத்தைப் போன்ற ஒரு ஜாதகமும், 200 பாட்டுக்களில் அந்த ஜாதகத்தின் பலன்களும் அடங்கிய சுவடிக் கட்டு கிடை[illegible]த்தது. மேற்படி பாட்டுகளுக்கு நகல் எடுத்துக் கொண்டு [illegible] திரும்பி வந்து சேர்ந்தார். அந்தப் பாட்டுகளில் அவ

ருடைய ஊர், பெயர் முதற்கொண்டு அன்றுவரை அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லாம் சிறிதளவும் மாருமல் கூறப்பட்டிருந்தன. இது குறித்து எல்லாரும் மிக்க ஆச்சரிய மடைந்தார்கள்.

ஆனல் எனக்கு வேருெரு விஷயம் அதைவிட ஆச்சரியமாயிருந்தது. "சப்தரிஷி வாக்கியம்" பண்டைக்கால ரிஷிகளால் அருளிச் செய்யப்பட்டதாம். அதாவது பல நூற்ருண்டுகளுக்கு முன்னர் அது எழுதப்பட்டிருக்கவேண்டும். அதற்குப் பின் இன்றுவரை உலகில் எத்தனையோ கோடானுகோடி மனிதர்கள் பிறந்து இறந்திருக்கிருர்கள். இத்தனைபேருடைய ஜாதக பலன்களும் எழுதப்படுவதற்கு எவ்வளவு சுவடிகள் வேண்டும்? இச்சுவடிகளையெல்லாம் வைக்க எவ்வளவு பெரிய இடம் வேண்டும்? ஆனல் என்னுடைய மாமனர் ஒரு சிறு அறையில் கிடந்த சுவடிகளிலிருந்து தம்முடையதைத் தேடிப் பொறுக்கி எடுத்ததாகக் கூறினர். இது சந்தேகத்துக் கிடமென்பதாக எனக்குத் தோன்றிற்று. பின்னல், சந்தேகமும் நீங்கிவிட்டது. சாஸ்திரம் பார்த்துவிட்டு வந்ததற்குப் பிறகு ஒன்ருவது அதில் கூறியபடி நடக்கவில்லை. முப்பத்தி நாலாவது வயதில் அவர் நோய் நீங்கிக் குணம் பெறுவாரென்றும், அதன் பின்னர் அவருக்கு சர்க்கார் உத்தியோகம் கிடைக்குமென்றும், இரண்டு பெண் குழந்தைகள் பிறக்குமென்றும், ஐம்பத்தைந்தாவது வயதில் துவாதசி திதியில் காலை பத்து நாழிகைக்கு அவர் காலமாவார் என்றும் சாஸ்திரம் சொல்லிற்று. நல்ல வேளையாக அவர் இந்த விபத்துகளுக்கெல்லாம் தப்பி, சாஸ்திரம் பார்த்த நாலாவது வருஷத்தில், முப்பத்தி மூன்ரும் வயதில் அமாவாசை யன்று இரவு பன்னிரண்டு மணிக்கு மரண மடைந்தார். அந்த வயதிலே ஒரு கண்டமிருப்பதாகக் கூட சப்தரிஷி வாக்கியத்தில் சொல்லப்படவில்லை.

"சப்தரிஷிவாக்கிய"த்தைக் காவல் புரிந்த கனவான் கவி பாடத் தெரிந்தவரா யிருக்கலாமென்பது என்னுடைய ஊகம். சாஸ்திரம் பார்க்க வருவோர் ஏழு ரூபாயைக் கொடுத்துவிட்டு [illegible] சுவடிகளை புரட்டிகொண் டிருக்கும்போது, இவர் அவர்களு[illegible] உத்[illegible]களை

விசாரித்து அறிந்து, கவி பாடிச் சுவடியில் எழுதிக் கும்பலில் சேர்த்துவிடுகிறார் போலும்! ஆனால் அவர் பேரில் நான் குற்றஞ் சொல்வதாக நினைக்க வேண்டாம். தமிழ் நாட்டில் தற்போது கவிகள் பிழைப்பதற்கு வேறென்ன வழி இருக்கிறது? கவிகளுக்கு மனமுவந்து பணங்கொடுப்போர் யாரிருக்கிறார்கள்? ஒரு பாரதியின் பாடே எவ்வளவோ திண்டாட்டமா யிருந்தது. ஆகவே மேற்படி "சப்தரிஷி வாக்கிய" க்காரர் மீது தவறு இருப்பதாக நான் சொல்லவே மாட்டேன். நிற்க.

இன்னும் இரண்டோர் அநுபவங்கள் கூறிவிட்டு என் கதையை முடித்துக்கொள்கிறேன். எங்கள் ஊரில் ஜோசியர் ஒருவர் வெகு காலமாகப் பிரபல மடைந்திருந்தார். தூர தூர இடங்களிலிருந்து அவரிடம் ஜோதிடம் கேட்கவும், கலியாணப் பொருத்தங்கள் பார்க்கவும் ஜனங்கள் வருவார்கள். அவருக்கு அருமையாக ஒரு பெண் இருந்தாள். அவளுக்குக் கலியாணம் மிகச் சிறப்பாக நடத்தினார் ஜோசியர். கலியாணத்தின் நாலாம் நாள் இரவு மாப்பிள்ளைக்குக் காலரா வந்து மறுநாள் காலையில் பெண் விதந்து வாயினாள். இந்தப் பரிதாப சம்பவம் நடந்ததற்கு அடுத்த மாதத்தில் ஜோசியர் எங்கள் ஊரைவிட்டே போய் விட்டார்.

இதன் பிறகு மற்றொரு பிரபல ஜோசியர் தற்காலிகமாக எங்கள் ஊருக்கு வந்திருந்தார். அவரிடம் விதைவிடுவதற்கு நல்ல நாள் கேட்டுக் கொண்டு பெரிய மிராசுதார்கள் பலர் சாகுபடிக்கு விதை தெளித்தார்கள். பதினைந்து நாளைக்கெல்லாம் கொள்ளி[illegible]ம் உடைப்பெடுத்துக் கொள்ளவே நாற்றுக்களெல்லாம் அடியோடு நாசமாயின. பல நிலங்கள் மண் மேடிட்டுப் போயின. சர்க்கார் கிஸ்தி கூட வஜா செய்யப் பட்டதென்றால், மகசூல் எவ்வளவு நன்றா யிருந்திருக்குமென்று நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

ஒருகால் வாசகர்களில் சிலருடைய அநுபவம் வேறு விதமா யிருந்திருக்[illegible]டும். அவர்கள் கேட்ட ஜோதிடம் ஒருவேளை பலித்திருக்க[illegible]. எனினும், அதனால் அவர்கள் அடைந்த பயன்

யாதென்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஜோதிட சாஸ்திரமே பொய் யென்பதாக நான் சொல்லவில்லை. அந்த சாஸ்திரத்தில் எனக்கு ஆராய்ச்சி கிடையாது. எனவே அது பொய் யென்றோ, நிஜமென்றோ நான் சொல்லத் தயாராயில்லை. அது உண்மையாகவே இருந்தாலும் அதிக பயனில்லை என்றுமட்டுமே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றைக்குப் பத்து வருஷத்திற்குப் பிறகு ஒரு தீமைவரப் போவதாக வைத்துக் கொள்ளுவோம். இதை இப்போதே தெரிந்து கொள்வதால் நாம் அடையும் பயன் என்ன? தீமையைத் தடுத்து விட முடியாது. முடியுமென்றால் ஜோசியம் பொய்யாகி விடுகிறது. ஆகவே அத்தீமையைப் பற்றி இப்போதிருந்தே எண்ணி எண்ணி வருந்துவதைத் தவிர வேறு லாபம் என்ன? வரப்போவது நன்மையாயிருந்தால் அதை அறிந்து கொள்ளவும் நான் விரும்பவும் மாட்டேன். திடீரென்று எனக்கு ஒரு புதையல் கிடைத்தால் ஆயிரம் ரூபாயா யிருந்தாலும் சந்தோஷப் படுவேன். புதையல் கிடைக்கப் போகும் விஷயம் முன்னமே தெரிந்தால், "சீ! இவ்வளவுதானா? 5000 ரூபாய்கூட இல்லையே?" என்று வருத்தப்படுவேன். ஆகவே, பயன் என்ன?

கடைசியாக, ஜோதிடர்களுக்கு ஒரு வார்த்தை. இதைப் போல நான் இன்னும் 9999 கட்டுரைகள் எழுதினாலும் உங்களுடைய பிழைப்புக்கு யாதொரு குறையும் வராது. ஆதலின், கவலையற்றிருங்கள்! இக் கட்டுரை ராகு காலத்தில் தொடங்கி எங் கெல்லாமோ சுற்றி, ஜோதிடத்தில் வந்து முடிந்திருக்கிறது. ராகுகாலத்தில் ஆரம்பித்ததன் பயனைப் பார்த்தீர்களல்லவா?

பாரதியின் நகைச்சுவை



"எனக்கு நகைச்சுவை மட்டும் இல்லாவிட்டால் எப்பொழுதோ தற்கொலை செய்துகொண்டு இறந்திருப்பேன்" என்று ஒரு முறை காந்தியடிகள் கூறினர். தனி மனிதனுடைய வாழ்க்கையிலும் சரி, தேசீய வாழ்க்கையிலும் சரி, நகைச் சுவையானது முன்னேற்றத் துக்கு இன்றியமையாத அம்சங்களில் ஒன்ருகும். உலகில் முன் னணியில் நிற்கும் தேசத்தார் எல்லாரும் பெரிதும் நகைச்சுவை கொண்டவர்களா யிருப்பதைக் காணலாம். இங்கிலாந்து, அமெ ரிக்கா முதலிய தேசங்களில் ஹாஸ்ய ரசத்திற்கென்றே எத்தனையோ பத்திரிகைகளும் புத்தகங்களும் வெளியாகின்றன. "கழுதையின் குரல்" என்றும், "நாயின் வால்" என்றும் எடுத்துக்கொண்டு பிரபல ஆசிரியர்கள் பெரும் ஹாஸ்யக் கட்டுரைகள் எழுதி விடுவார்கள். லட் சக்கணக்கான ஜனங்கள் அவற்றைப் படித்துச் சிரித்து மகிழ்வார்கள். "அக்கட்டுரைகளினுல் விளையும் பயன் என்ன? அவை போதிக்கும், நீதி என்ன?" என்று எவரும் கேட்பதில்லை. ஒரு கண நேரம் புன் னகைக்காகவும், ஒரு நிமிஷச் சிரிப்புக்காகவும் அவர்கள் ஷில்லிங் கணக்கிலும், டாலர் கணக்கிலும் பணம் கொடுத்துப் பத்திரிகை களும் புத்தகங்களும் வாங்குகிருர்கள்.

பாரத நாடு முற்காலத்தில் சிறப்புடன் விளங்கியபோது நமது முன்னேர் நகைச்சுவை யுணர்வு அதிக முள்ளவர்களா யிருந்தன ரென்பதற்குச் சான்றுகள் நிரம்ப இருக்கின்றன. இராஜ சபை களில் நகை யூட்டுவதற்கென்றே விகட கவிகள், விதூஷகர்கள் முத லியோர் இருந்தார்கள். ஒவ்வொரு நாடகத்திலும் விதூஷகன் ஒரு முக்கிய நாடக பாத்திரமாக விளங்கினுன். "கம்ப ராமாயணம்" முதலிய கா...பங்களிலும் ஹாஸ்ய ரசம் பெரிதுங் காணப்படுகிறது. அனல்... லத்தில் தேசம் பராதீனமடைந்து தாழ்வுற்றபோது

மக்களின் நகைச்சுவையும் வீழ்ந்து பட்டதாகத் தோன்றுகிறது. (ஒருகால் நகைச்சுவை யிழந்ததே தேசத்தின் வீழ்ச்சிக்கும் காரணமா யிருக்கலாமோ ?) எங்ஙனமாயினும் இக்காலத்தில் இவ்விந்திய நாட்டில், சிறப்பாகத் தமிழகத்தில், சிடுமூஞ்சி ராயர்களும், அழுமூஞ்சி செட்டியார்களும், இன்னும் இவர்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்களுமே அதிகமா யிருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

தமிழ் நாட்டின் சிறந்த வாரப்பத்திரிகை யொன்றில், உலக வர்த்தமானங்களைக் குறித்து நகைச் சுவையுள்ள குறிப்புகள் வாரந் தோறும் வெளியாகி வந்தன. இதன் பொருட்டு, மேற்கூறிய இனத்தைச் சேர்ந்த ஒரு மகான் அப்பத்திரிகையின் ஆசிரியரிடம் "ஐயோ! இப்படி என் பத்திரிகையின் இடத்தை யெல்லாம் வீணாக்குகிறீர்கள் ?" என்று பரிதாபத்துடன் கூறியதாகக் கேள்விப்பட்டேன். பழைய தலை முறையைச் சேர்ந்த இத்தகைய மனிதர்களை எவராலும் திருத்த முடியாது. இளைஞர்களும், இளம் பெண்மணிகளும்தான் நாட்டில் நகைச் சுவையை வளர்த்து வரல் வேண்டும்.

தமிழ் நாட்டில் நகைச்சுவை குன்றி யிருக்கிறதாயினும் அதிர்ஷ்டவசமாக அது அடியோடு அழிந்துவிடவில்லை: இந்தத் துர்ப்பாக்கிய நாட்டில்-துயரமே மிகுந்த இந்நாளில்-பிறந்த தமிழ்ப் பிரமுகர்களிலும் சிலர் நகைச்சுவை பெற்றிருந்தனர்; பெற்றிருக்கின்றனர். தமிழுக்குப் புத்துயிர் த[illegible]த காலஞ்சென்ற ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி அத்தகையோரில் ஒருவராவர். பாரதியார் தமது வாணாளில் பெரும் பகுதியும் துன்ப வாழ்க்கையே நடத்தினார். தமது சொந்தத் தொல்லைகளை விடத் தாய் நாட்டின் துயரங்களை நினைந்து நினைந்து அவர் உள்ளம் நைந்து உருகினார். எனினும் அவர் தம் நகைச் சுவையை மட்டும் இறுதி வரையில் இழக்கவில்லை யென்றே தோன்றுகிறது. அவருடைய கவிதைகள் சிலவற்றிலும், வசன நூல்[illegible]ளிலும் இந் நகைச்சுவை ஆங்காங்கு பீறிக்கொண்டு எழுவதைக் க[illegible]ம்.

தேசம் சுதந்திரம் பெற்றுச் சுபிட்சமாயுள்ள காலத்தில் பாரதியார் பிறந்திருந்தால், இப்போது ஆங்காங்கே குமிழிவிட்டுக் கிளம்புவதுடன் நிற்கும் அவருடைய நகைச் சுவையானது பெரு வெள்ளம் போல் பெருகி ஓடியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பாரதியாரின் கவிதைகளுள் குயில் பாட்டு என்னும் அற்புதக் கற்பனைச் சித்திரத்திலேதான் அவருடைய நகைச் சுவை ஒளிவிட்டு ஓங்குகிறது என்று கூறலாம். கவிஞன் காட்டகத்தில் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காதற் குயிலைத் தேடிச் சுற்றுமுற்றும் பார்த்துத் துடித்துக் கொண்டு வருகிறான். அப்போது அவன் கண்ட காட்சி அவன் நெஞ்சைத் திடுக்குறச் செய்கிறது. ஆனால் அக்காட்சி என்ன வென்பது முதலிலேயே கூறப்படுவதில்லை.

"வஞ்சனையே! பெண்மையே! மன்மதனும் பொய்த் தேவே!
நெஞ்சகமே! தொல்விதியி னீதியே! பாழுலகே!
கண்ணாலே நான் கண்ட காட்சிதனை யென்னுரைப்பேன்!
பெண்ணா லறிவிழக்கும் பித்தரெல்லாங் கேண்மினோ!
மாதரெலாங் கேண்மினோ! வல்விதியே கேளாய் நீ!"

என்று கவிஞன் ஆத்திரம் பொங்கப் புலம்புவது, பின்னால் வரப் போகும் நகைச் சுவை ததும்பும் நிகழ்ச்சிக்கு ஏற்ற தோற்றுவாயாக அமைந்திருக்கிறது. மேற் கூறிய வரிகளைப் படித்ததும் வாசகர்கள் ஏதோ பயங்கரமான நிகழ்ச்சி வரப் போகிறதென்று எதிர் பார்க்கிறார்கள். அதற்கு மாறாக, ஹாஸ்ய ரசம் பொருந்திய ஒரு நிகழ்ச்சி கூறப்படும்போது அதன் சுவை வாசகர்களுக்குப் பன்மடங்கு மிகைப் பட்டுக் காண்கிறது. அச்சம்பவம் யாது? கவிஞன் காணும் பயங்கரக் காட்சிதான் என்ன?

கவிஞன் தேடிச் செல்லும் மாயக் குயில் ஒரு மாக்கிளையில் வீற்றிருக்கிறது. அதனருகில் ஓர் ஆண் குரங்கு காணப்படுகிறது. குயில் விழிநீர் பாய, சிறிய உடல் பதைக்க, விம்மிப் பரிந்து துயரக் குரலில் அவ்வானரனிடம் ஏதேதோ கூறி யிரங்குகிறது. கவிஞனு

டன் நாமும் மரத்தடியில் ஒளிந்து நின்று அப்பெட்டைக் குயில் குரங்கினிடம் கூறிய மொழிகளை ஒட்டுக் கேட்போம்:—

வானரரே,

ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே, பெண்மைதான்
எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்குந் தரமாமோ?
மண்ணி லுயிர்க்கெல்லாந் தலைவரென மானிடரே
எண்ணி நின்றார் தம்மை; எனிலொரு கால், ஊர்வகுத்தல்
கோயில், அரசு, குடிவகுப்புப் போன்ற சில
வாயிலிலே யந்த மனித ருயர்வெனலாம்.
மேனி யழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலு நேர்த்தி தன்னிலுமே,
வானரர்தஞ் சாதிக்கு மாந்தர் நிக ராவாரோ?
ஆனவரையு மவர் முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலை
எட்டுடையால் மூடி யெதிருமக்கு வந்தாலும்,
மீசையையும் தாடியையும் விந்தை செய்து வானரர்தம்
ஆசை முகத்தினைப்போ லாக்க முயன்றிடினும்,
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணி வைத்துச் சென்றாலும்,
வேறெத்தைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர்போ லாவாரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈன முறுங்கச்சை யிதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு கந்தைபோல்
வேகமுறத் தாவுகையில் வீசி யெழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?
சைவ சுத்த போஜனமும் சாதுரியப் பார்வைகளும்
வானரர் போற் சாதியொன்று மண்ணுலகின் மீது[illegible]தோ?
வானரர் தம்முள்ளே மணிபோ லுமையடைந்தே[illegible]

மாயக் குயிலின் இக்காதல் மொழிகளை—இந்த வானர ஸ்துதித்யத்தை—நான் முதன் முதலில் படித்தபோது, "வாலுக்குப் போவதெங்கே?" என்னும் இடத்துக்கு வந்ததும் கொல்லென்று சிரித்துவிட்டேன். நான் அறிந்த அளவில், தமிழ் மொழியின் நவீன இலக்கியத்திலே நகைச் சுவையில் இதை மிஞ்சக்கூடிய பகுதி ஒன்றிருப்பதாகத் தோன்றவில்லை.

குயிலின் காதல் மொழிகளைக் கேட்டதும்,

"வற்றற் குரங்கு மதிமயங்கிக் கள்ளினிலே
முற்றும் வெறிபோல் முழுவெறி கொண்டாங்ஙனே,
தாவிக் குதிப்பதுவுந் தாளங்கள் போடுவதும்
'ஆவி யுருகுதடீ! ஆஹாஹா!' என்பதுவும்,
கண்ணைச் சிமிட்டுவதும், காலாலுங் கையாலும்
மண்ணைப் பிறாண்டியெங்கும் வாரி யிறைப்பதுவும்
"ஆசைக் குயிலே, அரும் பொருளே, தெய்வதமே,
பேசமுடியாப் பெருங்காதல் கொண்டுவிட்டேன்,"

என்று கூறுவதுமாகிய காட்சியும் நமக்குப் பேருவகை யளித்து நகைப் பூட்டுவ தொன்றாகும்.

மறுநாள் காலையில் மீண்டும் கவிஞன் நீலக்குயிலைத் தேடிச் சோலைக்குச் செல்கிறான். இன்று அப்பொல்லாத பெண் குயில் ஒரு மாமரத்தின் கிளையிலமர்ந்து, கீழே நின்ற ஒரு கிழக் காளைமாட்டினிடம் பழைய மோகக் கதையைப் படிக்கின்றது:—

"நந்தியே!
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே,
காமனே மாடாகக் காட்சிதரு மூர்த்தியே,
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ?
மானிடருந் தம்முள் வலி மிகுந்த மைந்தர்தமை
மேனி[illegible]ங் காளை யென்று மேம்பா டுறப்புகழ்வார்
[illegible]முள்ளே கனமிகுந்தீர், ஆரியரே,

நீளமுகமும், நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்,
பஞ்சுப் பொதி போற் படர்ந்த திருவடிவும்
மிஞ்சு புறச் சுமையும், வீரத்திருவாலும்,
வானத்திடி போல மாவென் றுறுமுவதும்
ஈனப்பறவை முதுகின் மிசை யேறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கு நேர்மையும்பல்
கால நான் கண்டு கடுமோக மெய்தி விட்டேன்."

இவ்வாறே காளைக்குப் புகழ்ச்சி கூறிய குயில், பின்னர் அது எங்கே தன் காதலைப் புறக்கணித்துவிடப் போகிறதோ என்று அஞ்சி உரைக்கும் ஆசை மொழிகளைக் கவனியுங்கள்:—

"மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்
கூனர் தமை யூர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருதவி செய்த பின்னர் மேனி விடாய்
எய்தி யிருக்கு மிடையினிலே, பாவியேன்
வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்
வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்
வாலிலடிபட்டு மனமகிழ்வேன். மாவென்றே
ஒலிடுநும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்.
மேனியிலே யுண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்.
கானிடையே சுற்றிக் கழனியெலா மேய்ந்து நீர்
மிக்கவுண வுண்டுவாய் மென்றசைதான் போடுகையில்
பக்கத்திருந்து பல கதைகள் சொல்லிடுவேன்.
காளை யெருதரே காட்டிலுயர் வீரரே,
தாளைச் சரணடைந்தேன், தையலெனைக் காத்தருள்வீர்."

என்னும் குயிலின் காதற் பேச்சில் அடங்கியுள்ள நயமிகுந்த நகைச் சுவை ரஸிகர்களுக்குப் பெரு மகிழ்ச்சி தருவதாகும்.

பாரதியாரின் கவிதைகளுக்குள்ளே காவியம் என்று சொல்லக் கூடியது "பாஞ்சாலி சபதம்" ஒன்றே யாம். புதி[illegible]

எளிய நடையில் இயற்றப்பட்டுள்ள இவ்வழகிய சிறு காவியத்தில் பாரதியாரின் நகைச்சுவை ஆங்காங்கு குமிழி விட்டுக் கிளம்புவதைக் காணலாம். திருதராஷ்டிரன் தன் மகன் துரியோதனனுக்குத் தர்க்க ரீதியாகப் பல நீதிகளை எடுத்துப் புகட்டுகின்றான்; மகன் பாண்டவர்மீது கூறிய பழிகளையெல்லாம் மிக அழகாகவும், சாதுர்ய மாகவும் மறுத்து விடுகின்றான். அவனுடைய வாதங்களுக்கு நேர் முறையில் துரியோதனனால் விடையிறுக்க முடியாமற் போகிறது. எனவே, அவன் குறுக்கு வழியில் புகுந்து "ஆகா! மன்னர் தந்திரம் தேர்ந்தவர்களுக்குள்ளே என் தந்தையை யொப்பவரில்லை.

மாதர்த மின்ப மெனக்கென்றான்—புவி
மண்டலத்தாட்சி யவர்க் கென்றான்—நல்ல
சாதமு நெய்யு மெனக்கென்றான்—எங்கும்
சாற்றிடுங் கீர்த்தி யவர்க்கென்றான்.

அடடா! பிள்ளைகளிடம் இவ்வளவு ஆதரவு காட்டும் தந்தை உலகில் வேறு உண்டா? நீ என் தந்தை; பாண்டவர் என் உயிர்ச்சோதரர். இனிமேல் எனக்கென்ன குறை?" என்று கூறுகிறான். தந்தைக் கும் மைந்தனுக்கும் நடக்கும் இந்த விவாதத்தில் அமைந்துள்ள சாதுரியமும், நகைச்சுவையும் தெவிட்டாத இன்பந் தருவனவாகும். இத்தகைய நகைச்சுவையை இக்காவியத்தில் இன்னும் பல இடங்க ளில் காணலாம். சிறப்பாகத் தருமனைச் சூதுக்கு வருமாறு தூண்டும் சகுனி அவனை நோக்கி,

"பாரத வீரர் முன்னே—நடு
மண்டபத்தே பட்டப் பகலினிலே
சூரசிகா மணியே—நின்றன்
சொத்தினைத் திருடுவ மெனுங் கருத்தோ?"

என்று பரிகசிக்கும் மொழிகளிலும், சபை நடுவில் துரியோதனன் விதுரனை[illegible]ர்த்து,

"ஐவருக்கு நெஞ்சம்—எங்கள்
அரமனைக்கு வயிறும்
தெய்வமன் றுனக்கே—விதுரா
செய்து விட்டதேயோ ?"

என்று சொல்லும் மொழிகளிலும் நகைச்சுவை ததும்புகின்றது.

இனி, பாரதியாரின் தீஞ்சொற் கவிதையஞ் சோலையிலிருந்து வெளிக் கிளம்பி, அவருடைய வசன நூல்களில் சிதறிக் கிடக்கும் ஹாஸ்ய ரத்தினங்களில் சிலவற்றைத் திரட்டும் முயற்சியில் இறங்கு வோம். "ஆறில் ஒரு பங்கு" என்னும் சிறு கதையில்,

> "ஸ்ரீமான் நாயுடுவுக்கு மூன்று வருஷத்திற் கொரு முறை ஆபீஸில் பத்து ரூபாயும், வீட்டில் ஒரு குழந்தை யும் பிரமோஷன்."

என்னும் வாக்கியத்தைப் படிக்குங்கால் குலுங்கச் சிரியாத மனிதர் களை ஏதேனுமொரு கண்காட்சிச் சாலைக்கு அனுப்பவேண்டுமென்று சிபார்சு செய்வேன். "சந்திரிகை"யின் கதையில், கைம்பெண் ணுகிய விசாலாக்ஷியின் ரூபலாவண்யங்களையும், குணதிசயங்களையும் பற்றி வீரேசலிங்கம் பந்துலு டெப்டி கலெக்டர் கோபாலய்யங் காருக்கு வெகுவாக எடுத்துச் சொல்லுகிருர். இதனுல் அய்யங்கா ரின் மனம் பக்குவ மடைந்திருக்கிறது. அங்கிலையில் அவர், சோலை மலரொளியில் சுந்தரப் புன்னகை செய்துகொண்டிருந்த குழந்தை சந்திரிகையைப் பணிப்பெண் முத்தமிடும் காட்சியைக் காண்கிருர். அப்பணிப் பெண்ணையே விசாலாக்ஷி என்று அவர் எண்ணி அவள்மீது காதல் கொள்கிருர். பின்னுல், தமது தவறு தெரிய வந்தபோது அவர் அப்பணிப்பெண்ணையே மணம்புரிந்து கொள்ளப்போவதாக வீரேசலிங்கம் பந்துலுவிடம் கூறுகிருர். இந்த நிகழ்ச்சிகளைப் படித்து வரும்போது வாசகர்களின் இதழ் களில் புன்னகை தவழ்ந்துகொண்டிருக்கிறது. ஆனுல் இறுதியாக வீரேசலிங்கம் பந்துலு டெப்டி கலெக்டரைப் பார்த்து உத்

"காதலாவது, உருளைக் கிழங்காவது ! அய்யங்கார் ஸ்வாமிகளே, பணிப்பெண்ணாவது, கதையாவது !"

என்று கூறும்போது வாசகர்களின் புன்னகை 'கொல்'லென்ற சிரிப்பாக மாறிவிடுகிறது.

தமிழ் வசனத்திலேயே ஒப்புயர்வற்ற நூல் என்று கருதப்படும் "ஞான ரதம்" என்னும் கற்பனைக் களஞ்சியத்தில் " மண்ணுலகம் " என்னும் அத்தியாயம் நகைச்சுவை குலுங்கும் ஓர் அரிய பொக்கிஷமாகும். அடியிலிருந்து கடைசிவரை ஹாஸ்ய ரசமாயிருக்கும் இவ்வத்தியாயத்திலிருந்து தனித்தனியே சில பகுதிகளைப் பொறுக்கி எடுத்துக் காட்டுதல் எளிதன்று. எனினும், நேயர்களுக்கு அதை முழுதும் படிக்கவேண்டுமென்னும் ஆர்வம் உண்டாக்கும்பொருட்டு இரண்டொரு பகுதிகளை உதாரணமாக இங்கே தருகிறேன்:—


"மூன் பகுதியில் ஒரு ராயர் பெரிய குடும்பத்தோடிருந்தார். அவருக்குப் பகல் முழுதும் உழைத்துக்கொண்டிருக்கும்படியாகத் தபால் கச்சேரியிலோ, எங்கேயோ ஓர் உத்தியோகம். உடம்பிலே கோபி மண் முத்திரைகள் எத்தனையோ, அத்தனை குழந்தைகள். அவர் மனைவி மறுபடியும் கர்ப்பம். அந்த முற்றத்திலேயே ஒரு பசுமாடு. அத்துடன் ஒட்டுக் குடியாக அவருடைய பந்துக்கள் சிலர் வசித்தார்கள்... ராயருக்குக் காச நோயாதலால் அவர் இருமிக்கொண்டே யிருக்கிற சப்தம் ஓயாமல் கேட்கும். அவருடைய குழந்தைகள் ஒன்று மாற்றி ஒன்று அழுது கொண்டே யிருக்கும். கர்ப்பிணியாகிய அவர் மனைவி இடையிடையே விழித்துக் குழந்தைகளையோ, அல்லது ராயரைத்தானோ, கன்னட பாஷையிலே திட்டிவிட்டு மறுபடியும் உறங்கிவிடுவள்."

"வரும் வழியிலே ஜட்கா வண்டிகள், துரைகள் பே[illegible] கோச்சுகள், புழுதி, இரைச்சல், துர்நாற்றம்,


இவற்றையெல்லாம் கடந்து முன் பகுதியிலே, பசு மாடு, ராயர் வீட்டம்மாள், குழந்தைக் கூட்டங்கள் முதலிய விபத்துக்கெல்லாம் தப்பிப் பின்புறத்திலே மெத்தைக்கு வந்து சேர்ந்தேன்."

"நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர்களெல்லாம் புளியஞ் சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத் தொண்டர். 'காலணு'வின் அடியார்க்கு மடியார். ஆனல் எங்களிலே ஒவ்வொருவனும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும்படியாயிருக்கும்."

பாரதியாரின் நகைச்சுவையை உள்ளபடி அனுபவித்தற்கு அவருடைய கவிதைகளையும், உரை நடை நூல்களையும் தொடர்ந்து படித்தல் அவசியமாகும். ஆங்காங்கு துண்டாக எடுத்துத் தரும் பகுதிகளை மட்டும் படித்து அவற்றின் சுவை நயத்தை முழுதும் அநுபவித்தல் இயலாத காரியம். இக்கட்டுரையைப் படிக்கும் அன்பர்களின் உள்ளத்தில் நமது மகா கவியின் நூல்களைப் படிக்கும் ஆர்வம் ஒரு சிறிதேனும் உண்டாகி யிருக்குமாயின், என் முயற்சி பயன் தந்ததென்று எண்ணிப் பெருமகிழ்ச்சி யடைவேன்.



குழந்தைகள் மகாநாடு



அகில இந்தியக் குழந்தைகள் மகாநாடு ஒன்று நடைபெறப் போவதாக நான் முதலில் கேள்விப்பட்டபோது, அதை அவ்வள வாக நம்பவில்லை. இருப்பினும், அது உண்மையா யிருந்தால் அம் மகா நாட்டுக்குக் கட்டாயம் போகவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன். ஏனென்றால், குழந்தைகள் எனில் எனக்கு அதிகப் பிரியம். (எங்களுக்கு அடுத்த வீட்டுக் குழந்தை மட்டும் இதற்கு விலக்கு என்பதை ஒப்புக் கொண்டு விடுகிறேன். தினந்தோறும் சரியாக இரவு ஒரு மணிக்கு இந்தக் குழந்தை கண்விழித்து, தனக் குப் பசியா யிருக்கிறதென்ற விசேஷ சமாசாரத்தை "பா ஆ ஆ ஆ" என்ற சத்தத்தின் மூலம் தெரிவிக்கத் தொடங்கும். அப்போது எங்கள் வீதியில் ஓர் ஈ காக்கை பாக்கியில்லாமல் எல்லாரும் விழித் துக் கொள்வார்கள். அந்த நேரத்தில் ஒரே ஒரு பெண்ணரசிமட் டுந்தான் ஆழ்ந்த சுழுப்தி நித்திரையில் இருப்பாள். அவள், குழந் தைக் கருகில் படுத்திருக்கும் அதன் தாயார் தான்.) ஆகவே, மகா நாடு உண்மையிலேயே நடைபெறுகிறதென்று அறிந்ததும் குறிப் பிட்ட நேரத்தில் மகாநாட்டுப் பந்தலுக்குச் சென்றேன்.

பந்தல் வாயிலில் இரண்டு குழந்தைத் தொண்டர்கள் நின்று கொண்டிருந்தார்கள். "என்ன உபத்திரவம், அப்பா! பெரியவர் களின் மகாநாடுகளில் தான் தொண்டரின் தொல்லை யென்றால், இங்கே கூட அது இருக்கிறதே!" என்று சொல்லவில்லை—நினைத் துக் கொண்டேன். பின்னர், மரியாதையாக, "தொண்டரே, தயவு செய்து என்னை உள்ளேவிட முடியுமா?" என்றேன்;

"தயவு செய்து உம்மை உள்ளே விடமுடியாது!" என்று பதில் வந்தது. [illegible]ன் கொஞ்சம் திகைப்படைந்து போனேன்.

"என்னை ஏன் விடக் கூடாது?"
"உம்மை ஏன் விடவேண்டும்?"

குழந்தைகளென்றால் இந்தக் கஷ்டந்தான். அவர்களுடன்வாதம் செய்ய முடியாது. அவர்களுக்குத் தர்க்க முறையே தெரியாது. ஏதாவது கேட்டால் ஏதாவது பதில் சொல்வார்கள். இதற்கு என்ன செய்வதென்று யோசித்தேன். உடனே, பழைய அநுபவம் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. அதாவது, சென்னையில் இரண்டு வருஷங்களுக்குமுன் நடந்த ஒரு மகாநாட்டின் விஷயம். அம் மகாநாட்டுக்கு நான் முதலில் போனபோது உள்ளேவிட மறுத்துவிட்டார்கள். பணங்கொடுத்து டிக்கட் வாங்கவேண்டு மென்றார்கள். கடைசியாக ஒரு யுக்தி செய்தேன். மகாநாட்டின் காரியதரிசி வெளியில் வந்த சமயம் பார்த்து அவரிடம் "மிஸ்டர்! நான் பத்திரிகைப் பிரதிநிதி. உள்ளே போகலாமா?" என்றேன். அடடா! உடனே அவர் செய்த உபசாரத்தைப் பார்க்கவேண்டும்! "அப்படியா! —எந்தப் பத்திரிகை?—சரி! சரி!—இந்தாருங்கள் டிக்கட்-நான் எவ்வளவு வேலை செய்கிறேன் பார்க்கிறீர்கள் அல்லவா?—என் பெயர் ஸ்ரீதர சர்மா—பத்திரிகையில் விவரமாக எழுதுங்கள்—நான் நன்றாகப் பிரசங்கங் கூடச் செய்வேன்." என்று என்னைக் கையைப் பிடித்து அவரே அழைத்துக்கொண்டுபோய் உட்காரவைத்தார்.

இப்போது மேற்படி யுக்தி எனக்கு ஞாபகத்திற்கு வரவே, இங்கும் அதையே கையாளத் தீர்மானித்தேன்.

"தொண்டரே! நான் பத்திரிகைப் பிரதிநிதி இப்போதாவது விடலாமா?" என்று கேட்டுக் கொஞ்சம் விரைப்பாகப் பார்த்தேன்.

"அப்படியானால் உம்மைக் கட்டாயம் விடவேகூடாது" என்ற பதிலைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. அக் குழந்தைத் தொண்டர் மேலுங் கூறியதாவது:— "எங்கள் பெரியோர்கள் செய்யும் தவறை நாங்களும் செய்யப் போவதில்லை. உங்களை உள்ளே விட்டால் இஷ்டம்போல் ஏதேதோ எழுதி விடுவீர்

கள். அப்புறம் அவற்றிற்கெல்லாம் நாங்கள் மறுப்பு எழுதிக்கொண் டிருக்க நேரும். அதைவிட நாங்களே ஒரு விவரம் எழுதிப் பத்திரி கைகளுக்கு அனுப்பிவிடப் போகிறோம்.''

அந்த சொண்டரின் காதைப்பிடித்து ஒரு கிள்ளு கிள்ளலாமா வென்று என் கை ஊறிற்று. ஆனால் நல்ல வேளையாக அப்படிச் செய்யவில்லை. சத்தம்போட்டு அழுவதிலே அந்தக் குழந்தை வெகு சமர்த்து என்று பின்னால் தெரிந்து கொண்டேன். எனவே, நான் அதன் காதைக் கிள்ளியிருந்தால் என்ன வந்திருக்குமோ கடவு ளுக்கே தெரியும். பின்னர், மிகவும் பிரயாசைப்பட்டு இரண்டு நிபந் தனைகளின் மேல் மகா நாட்டுக்குச் செல்ல அநுமதி பெற்றேன். அந்த நிபந்தனைகள் வருமாறு:— (1) குழந்தைகளின் கொச்சைப் பேச்சை யெல்லாம் அப்படியே எழுதக்கூடாது. ஏனெனில் பெரிய வர்கள் சிரித்து அலட்சியமாகத் தள்ளி விடலாம். பெரியவர்களின் பாஷையிலேயே எழுத வேண்டும். (2) நான் எழுதும் விவரத்தை மகா நாட்டு அதிகாரிகளிடம் காட்டி அநுமதி பெற்ற பிறகே பத்திரி கைகளுக்கு அனுப்பவேண்டும். மேற்படி நிபந்தனைகளுக் கிணங்க, மகா நாட்டு அதிகாரிகளால் எடுக்கப்பட்ட பகுதிகள் போக, மற்ற விவரங்களைக் கீழே தந்திருக்கிறேன்:—

தலைமைப் பேருரை.

மகா நாடு கூடியதும் ஏழு வயதுள்ள ஸ்ரீமான் பி. ஏ. ராகவன் அவர்கள் அக்கிராசன பதவிக்குப் பிரரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப் பட்டு அக்கிராசன பீடத்தில் அமர்ந்தார். சுமார் ஐந்து நிமிஷ நேரம் காது செவிடு படும்படியான கரகோஷம் நடந்தது. ஆரவாரம் அடங் கிய பின்னர் அக்கிராசனர் செய்த தலைமைப் பிரசங்கத்தின் சாராம்ச மாவது:—

''சகோதரிகளே! சகோதரர்களே! இன்றைய தினம் பாரத நாட் டின் குழந்தைகளாகிய நமக்கு ஒரு புதிய யுகம் பிறந்திருக்கிறது. இத்தகைய குழந்தைகளின் மகாநாடு கூடியிருப்பது இதுதான் முதல்

நடவை யென்று உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. பெரியவர்களுடைய மகாநாடுகளில் போல நான் என்னுடைய தலைமைப் பேச்சை அதிகமாக வளர்த்தப் போவதில்லை. பேச்சிலே என்ன இருக்கிறது ? ஒரு பெப்பர்மிண்டில் உள்ள ருசி பேச்சில் இருக்கிறதா ? (சிரிப்பு) ஒரு வெல்லச் சீடையின் ருசியாவது அதில் உண்டா? (சிலர் நாவைச் சப்புக் கொட்டுகின்றனர்.) ஒன்றுமே கிடையாது. மேலும் மகாநாடு முடிந்ததும் நமக்கு முக்கியமான ஒரு காரியம் இருக்கிறது. எல்லாரும் கடற் கரையிலே போய் அங்குள்ள கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கடலில் எறிந்து யார்தான் அதிக தூரம் எறிகிறார்களென்று பார்க்க வேண்டும். அவ்வளவு முக்கியமான காரியமிருக்கும்போது நான் நமது மூத்தோர்களைப்போல வெறுமே பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. ("கேளுங்கள் கேளுங்கள்.") ஆனால் ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நாம் இனிமேல் ஒரு நிமிஷ நேரமேனும் இந்தப் பெரியவர்களின் கொடுங்கோன்மையின் கீழ் உயிர் வாழ முடியாது, (கரகோஷம்) நமக்கு விடுதலை வேண்டும். பூரண சுதந்திரம் வேண்டும். (கரகோஷம்) வேறெதுவும் நமக்கு வேண்டாம். இக்காலத்திலே சில பெரியவர்கள் "பேபி வீக்" என்றும், "சிசு சம்ரக்ஷண வாரம்" என்றும் ஏற்பாடு செய்கிறார்கள். ("மோசம் மோசம்" என்ற கூக்குரல்) ஆம் ; அவை யெல்லாம் பெரும் மோசந்தான். நம்மை அடிமைகளாக வைத்து நம் உடம்பை மட்டும் கொழுக்க வைப்பதால் நாம் திருப்தி யடைந்து விடுவோமா ? ("மாட்டோம், மாட்டோம்.") சந்தோஷம். இன்னும் குழந்தைகளாகிய நமக்கிருக்கும் குறைகள் பல. அவையெல்லாம் இம் மகாநாட்டில் வரப்போகும் தீர்மானங்கள் மூலம் தெரியவரும், ஆகையால் உங்களுக்கெல்லாம் என் மனமார்ந்த வந்தனம் அளித்து இத்துடன் என் முகவுரையை முடித்துக் கொள்கிறேன்."

முதல் தீர்மானம்

பின்னர் ஐந்து வயதுள்ள ஸ்ரீமதி அலமு அம்மாள் பின்வரும் தீர்மானத்தைப் பிரேரணை செய்தாள்:—

"பெற்றோர்களுக்குக் குழந்தைகள் நன்றி பாராட்ட வேண்டுமென்னும் கொள்கை முற்றும் நியாய விரோத மானதென்றும், அதற்கு எவ்வித ஆதாரமும் கிடையா தென்றும் இந்த மகாநாடு பலமாக வலியுறுத்துகிறது."

மேற்படி தீர்மானத்தின் மீது ஸ்ரீமதி அலமு அம்மாள் வீரமும் உற்சாகமும் ததும்ப ஆவேசத்துடன் பேசியதின் சாரமாவது:— "சகோதரிகளே! சகோதரர்களே! இத்தீர்மானத்தைப் பற்றி உண்மையில் எதுவும் பேசுவதற்கு அவசியமில்லை. அது அவ்வளவு தெளிவாயிருக்கிறது. ஆனால் இந்த உலகம் தோன்றின காலந் தொட்டு, பெற்றோர்களுக்குக் குழந்தைகள் நன்றி பாராட்டவேண்டு மென்னும் பொய்க் கொள்கையைப் பெற்றோர்கள் பரப்பி வந்திருக்கிறார்கள். இதை நம்பி நம்பி நமது உள்ளங்க ளெல்லாம் ஒருவகை மாயையில் கட்டுப்பட்டுக் கிடக்கின்றன. இந்த மாயையை நாம் உடைத்துத் தகர்த்து எறியவேண்டும். (கரகோஷம்) அன்பர்களே! யோசித்துப் பாருங்கள். இரக்கம், அநுதாபம் முதலியவற்றைச் சிறிது நேரம் தூர ஒதுக்கி வைத்துவிட்டு, அறிவைமட்டும் உபயோகித்து ஆலோசனை செய்யுங்கள். நாம் எதற்காகப் பெற்றோர்களிடம் நன்றி பாராட்டவேண்டும்? எந்த விதத்திலே நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்? சாதாரணமாகத் தாய் தந்தையர்கள் என்ன சொல்கிறார்களென்றால், "நாங்கள் உன்னைப் பெற்றோம், வளர்த்தோம், பால் புகட்டினோம், நல்ல ஆடையாபரணங்கள் அணிவித்தோம். அறுசுவை யுண்டி அளித்தோம். ஆகையால் நீ எங்களிடம் நன்றி பாராட்டவேண்டும். அதற்குப் பதிலாக நீ விஷமம் செய்கிறாய். கொஞ்சமாவது உனக்கு நன்றி கிடையாது, என்று இப்படிச் சொல்லுகிறார்கள். இதில் ஓர் அணுவளவாவது நிஜக் கலப்பு இருக்கிறதா, பாருங்கள். முதலில், என் பெற்றோர் என்னை எதற்காகப் பெற்றார்கள்? (கரகோஷம்,) என்னைப் பெறுவதற்கு முன் என்னைக் கலந்துகொண்டார்களா? என் சம்மதத்தைக் கேட்டார்களா? ("சபாஷ் சபாஷ்.") என்னை எப்படியாவது உங்கள் குழந்தையாக ஏற்றுக்கொள்ளத் திருவுளம் பற்றுங்கள், என்று நான்

அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேனு? (சிரிப்பு.) அன்பர்களே! நீங்கள் சிரிக்கிறீர்கள். இந்த அநீதியை எண்ணும்போது என் நெஞ்சம் கொதிக்கிறது. உண்மையில், என் தாய் தந்தையர்கள் என்னைப் பெற்றபோது, என் விருப்பத்தைச் சிறிதாவது கேட்கவில்லை. என்னைக் கேட்டிருந்தால், குழந்தைகளை அடிமைமையாக வைத்திருக்கும் இந்தப் பாழும் உலகத்தில் பிறக்க நான் ஒரு நாளும் சம்மதித்திருக்கமாட்டேன். பிறகு, என் பெற்றோர் எனக்குச் சாப்பாடு போடுவதற்காக நன்றி பாராட்டவேண்டுமாம். இதைவிட அக்கிரமம் வேறில்லை. என்னுடைய சம்மதத்தைக் கேளாமல் என்னைப் பெற்றவர்கள் எனக்குச் சாப்பாடுபோடக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நான் எதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டும்? உண்மையில், இதுகூட அவர்கள் சுயநலத்துடனே தான் செய்கிறார்கள். நான் வேண்டாமென்றாலும் கேளாமல் தினம் நாலுவேளை திணியத் திணியச் சோறு ஊட்டுகிறார்களே, அது எதற்காக? சீக்கிரத்தில் நான் வளர்ந்து அம்மாவுக்கு உபகாரமாக வேலைசெய்வதற்குத்தான்! ("கேளுங்கள், கேளுங்கள்") நமக்கு ஆடையாபரணங்கள் அணிவிக்கிறார்களாம்! எதற்காக என்று நான் கேட்கிறேன்: நம்மைத் திருப்தி செய்வதற்காகவா, தங்களுடைய பணப் பெருமையை வெளிக்காட்டுவதற்காகவா? சகோதரிகளே! சகோதரர்களே! எல்லாம் மோசம், வேஷம்: வெகு நாளாக நாம் மயக்கத்தி லாழ்ந்திருந்தோம். இப்போது விழித்துக் கொண்டுவிட்டோம். இனிமேல், ஒரு பெரிய புரட்சி நடத்தி நமது பரிபூரண சுதந்திரத்தை நிலைநாட்டவேண்டும். நமது மேல் முயற்சிகள் எல்லாவற்றிற்கும் இந்தத் தீர்மானமே அஸ்திவாரம். ஆகையால் இதை ஏகமனதுடன் நிறைவேற்றி வைக்கும்படி உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்." (பலமான கரகோஷம்)

நான்கு வயதுள்ள திருவாளர் "ஒற்றைக் கண்" நொண்டிக் கந்தன் அவர்கள், மேற்படி தீர்மானத்தை ஆமோதிக்க எழுந்தார். அப்போது சபையினர் அனைவரும் ஒரே குரலாக,

"ஒண்ணரைக்கண் டோரியா
சென்னைப்பட்டணம் போரியா
நொண்டிக்கர்தா வாரயா
தக்கடதக்கட ததிங்கிடதோம்"

என்று பாடி அவரை வரவேற்றார்கள். அவர் சபையோருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் பேசியதாவது:—"இத்தனை சீமான்களும் சீமாட்டிகளும், திருவாளர்களும், திருவாளர் செல்விகளும் கூடியிருக்கும் சபையில் அடியேனுக்குப் பேச அநுமதி கொடுத்தது குறித்து உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். ஆனால் நான் பேச வேண்டிய அவசியமே யில்லை. என்னை நீங்கள் சற்றே உற்றுப் பார்த்தாலே போதும். என் கால் சற்றே நொண்டி, கண் பார்வை கொஞ்சம் கோணல். இக்காரணத்தினால் குழந்தை சமூகத்திலே நான் தீண்டப்படாதவனா யிருக்கிறேன். என்னை யாரும் எந்த விளையாட்டிலும் சேர்த்துக் கொள்வதில்லை என்னைக் கண்டாலே நீங்கள் கேலி செய்யத் தொடங்குகிறீர்கள். ஆனால் இப்படி நான் அவலட்சணமா யிருப்பது என்னுடைய தவறா என்று யோசித்துப் பாருங்கள். என்னைப் பெறுவதற்கு முன்னால் என் தாய் தந்தையர் என் சம்மதத்தைக் கேட்டிருந்தால் நான் இப்படிப் பிறப்பதற்குச் சம்மதித்திருப்பேனா? ஆயினும், நான் என் பெற்றோர்களிடம் நன்றி செலுத்தவேண்டுமாம்! சகோதரிகளே, சகோதரர்களே, இன்று ஓர் இரகசியம் சொல்லுகிறேன் கேளுங்கள். எனக்கு அவமானம் பொறுக்க முடியாமல் ஒரு முறை தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தேன். (சபையினர் கண்களில் நீர் ததும்புகிறது.) எங்கள் வீட்டுக் கொல்லைக் கிணற்றில் போய் விழுந்தேன். ('ஆஹா' என்ற சத்தம்.) ஆனால் என்னுடைய துர்ப்பாக்கியம் என்னைவிடவில்லை. என் தாயார் பலமாய்க் கூச்சலிடவே என் தந்தை ஓடி வந்து கரையேற்றிவிட்டார். இதிலே வேடிக்கை என்ன தெரியுமா? இதற்காக நான் என் பெற்றோர்களிடம் இருமடங்கு நன்றிபாராட்ட வேண்டுமாம்! ("வெட்கம் வெட்கம்") ஆகையால், அன்பர்களே! இத்

தீர்மானத்தை நீங்கள் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளுங்கள். அத்துடன் இன்னொரு விஷயம். என்னுடைய நொண்டிக்காலுக்கும், ஒண்ணரைக் கண்ணுக்கும் நான் பொறுப்பாளியல்லவாதலால் அவற்றின் பொருட்டு என்னை நீங்கள் பரிகாசம் செய்யாமலிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.''

இப்பொழுது சபையில் சிறிது குழப்பம் உண்டாயிற்று. ஸ்ரீமான் மோக்கிரி முத்து என்னும் பிரதிநிதி எழுந்திருந்து "இப்போது பேசியவர் கடைசியாகக் கூறிய விஷயம் தீர்மானத்துக்குச் சம்பந்தமற்றதாகையால் அது ஒழுங்கீனம் என்று நான் ஆட்சேபிக்கிறேன்'' என்றார். சிறிது வாக்குவாதம் நடந்த பிறகு "ஸ்ரீமான் ஒண்ணரைக்கண் நொண்டிக் கந்தன் அவர்கள் கடைசியாகக் கூறிய விஷயம் மகாநாட்டைக் கட்டுப்படுத்தாது" என்று அக்கிராசனர் தீர்ப்புக் கூறினார்.

பின்னர் தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டு, பலமான ஆரவாரங்களுக்கிடையே ஏகமனதாக நிறைவேறியது.

இரண்டாவது தீர்மானம்

> "பொய் சொல்லுதலும், கண்ணீர்விட்டு அழுதலும் குழந்தை மகா ஜனங்களின் ஜீவாதார உரிமைகளென்றும், அந்த உரிமைகளுக்குப் பாதகமான எல்லா முயற்சிகளையும் பலமாக எதிர்க்கவேண்டுமென்றும் இந்த மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.''

ஆறு வயதுள்ள ஸ்ரீமான் கோபு மேற்படி தீர்மானத்தைப் பிரேபிணை செய்து பேசியதாவது:—"அன்பர்களே! இந்தத் தீர்மானத்தின் முக்கியத்தை ஏறக்குறைய நீங்கள் எல்லாரும் உங்கள் அநுபவத்திலிருந்தே உணர்ந்திருப்பீர்கள். குழந்தைகள் பொய் சொல்லக்கூடாதென்றும், நிஜந்தான் சொல்லவேண்டு மென்றும் சிற்சில போலிக் கொள்கைகளைப் பெற்றோர்களும், உபாத்தியாயர்க

ளும் சேர்ந்து நாட்டில் பரப்பி வருகிறார்கள். முதலில், நிஜம் சொல்வதினால் ஏதேனும் பயனுண்டா? என்று பார்ப்போம். ஒன்றுமே கிடையாது. உங்களுக்கு ஓர் உதாரணம் சொல்கிறேன், கேளுங்கள். நேற்றுக் காலையில் நான் எங்கள் வீட்டு ஜன்னலருகில் உட்கார்ந்து பாடம் படித்துக்கொண்டிருந்தேன். "எப்போதும் நிஜமே பேசு" என்று அதில் போட்டிருந்தது. அந்த சமயத்தில் ஜன்னலுக்கு வெளியே ஒரு காக்கை வந்து உட்கார்ந்து "கா" என்று கத்திற்று. எனக்குக் கோபம் வந்தது. உடனே கையிலிருந்த புத்தகத்தை வீசி அதன்மேலெறிந்தேன். அந்தப் பொல்லாத காக்கை புத்தகத்தை மூக்கினால் கொத்தி எடுத்துச் சாக்கடையில் போட்டுவிட்டு ஓடிவிட்டது. இதில் என்மேல் ஏதேனும் தப்பு உண்டா என்று யோசித்துப் பாருங்கள். பிறகு, நான் என்ன செய்தேன்? துரதிர்ஷ்டவசமாக, நிஜம் சொல்லிப் பார்க்கலாமென்று தீர்மானித்தேன். அப்பாவிடம் போய் நடந்தது நடந்தபடி சொன்னேன். அதற்கு என்ன பலன் கிடைத்தது என்று நினைக்கிறீர்கள்? "என்னடா, மடையா? ஏதோ சாமர்த்தியமான காரியம் செய்துவிட்டதுபோல் வந்து கூறுகிறாயே?" என்று திட்டித் தலையில் ஒரு குட்டும் வைத்தார். ("வெட்கம் வெட்கம்") ஏன்? நிஜம் சொன்னதின் பயனைப் பார்த்தீர்களா? நான் உண்மையாகச் சொல்கிறேன். நிஜத்தில் ஒன்றும் கிடையாது. அதனால் நன்மையுமில்லை. அதில் ருசியுமில்லை. உப்புசப்பே கிடையாது. நிஜம் பேசுவதற்குப் புத்தி வேண்டுமா? யோசனை வேண்டுமா? ஒன்றும் வேண்டாம். எங்கள் அப்பா சொன்னது நிரம்ப சரி. மடையன்கூட நிஜம் கூறமுடியும். உண்மையில், மடையன்தான் நிஜம் சொல்வான். (சிரிப்பு) அன்பர்களே! பொய் சொல்வதைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். பொய் சொல்லப் புத்திவேண்டும்; சாமர்த்தியம் வேண்டும். ஆஹா! பொய் சொல்வதில் எவ்வளவு ருசி இருக்கிறது? ஹல்வா பண்டத்தில் கூட அவ்வளவு ருசி கிடையாது. பொய் சொல்வதில் நன்மையும் இருக்கிறது. ஓர் உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள். ஒரு நாள் எங்கள் வீட்டு

சைகிள் வண்டியின் விளக்கை உடைத்துவிட்டேன். சாயங்காலம் அப்பா சைகிளை எடுத்துக்கொண்டு வெளியே போவாரென்று எனக்குத் தெரியும். எனவே ஒரு யுக்தி செய்தேன். ஒரு பெரிய கல்லை எடுத்துக்கொண்டுபோய் ஜன்னலருகில் உட்கார்ந்துகொண்டேன். 'அடே கோபு!' என்று கத்திக்கொண்டே அப்பா உள்ளே வந்தார். நான் கல்லைக் கையிலெடுத்துக்கொண்டு 'அப்பா! அப்பா!...' என்றேன். 'அடே, சைகிளைத் தொடாதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்' என்பதாக அவர் ஆரம்பித்தார். உள்ளுக்குள் எனக்குப் பயமாயிருந்தாலும் வெளிக்குத் தைரியத்தைக் கைவிடாமல் அவரைவிட அதிகமாகச் சத்தம்போட்டு 'அப்பா! இந்தக் கல்லை ஒரு தடிப் பையன் என்பேரில் எறிந்துவிட்டுப் போகிறான்' என்று கத்தினேன். ("சபாஷ் சபாஷ்") உடனே அப்பா தடிப்பையனைத் தேடிக்கொண்டு வீதியில் ஓடினார். (உரத்த சிரிப்பு) அதுதான் சமயமென்று நானும் கோபிலைப் பார்க்க ஓட்டம் பிடித்தேன். பிறகு, அப்பா திரும்பிவந்து சைகிளை சரிபண்ணி எடுத்துக்கொண்டு போனாராம். நான் அதிசீக்கிரமாகப் படுக்கச் சென்று அவர் வருவதற்குள் தூங்கியே போய்விட்டேன். பார்த்தீர்களா? பொய் சொல்லுவதில் எவ்வளவு சுவாரஸ்யம் இருக்கிறது? எவ்வளவு நன்மை யிருக்கிறது? இப்படிப்பட்ட உரிமையை நாம் விட்டுவிடுவதா? ("கூடாது கூடாது") நமது உயிரைக் கொடுத்தாவது அந்த உரிமையைப் பாதுகாக்கவேண்டும். (கரகோஷம்) நமது உடம்பில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் அவ்வுரிமைக்காக நாம் போராடவேண்டும் (பலத்த கரகோஷம்) இந்தத் தீர்மானத்தின் மற்றொரு அம்சத்தைப் பற்றி எனது சகோதரியார் பேசுவார். எனவே, இத்துடன் நான் முடித்துக் கொள்கிறேன்."

பிறகு, மூன்று வயதுள்ள ஸ்ரீமதி ராஜம்மாள் மேடையிலேறி வீர முழக்கத்துடன் ஆர்ப்பரித்துப் பேசியதாவது:—

"சகோதரிகளே, சகோதரர்களே, அழுகை! அழுகை!! அழுகை!!! கண்ணீர்! கண்ணீர்!! கண்ணீர்!!! அம்மா, அப்பா என்[illegible]கொடுங்

கோலர்களைச் சரிப்படுத்த அழுகை, கண்ணீர் இவற்றைப் போன்ற ஆயுதங்கள் ஈரேழு பதினாலு உலகங்களிலும் இல்லை! இல்லை!! இல்லை!!! இந்த ஆயுதங்களை சமயோசிதம் போல் உபயோகப் படுத்தவேண்டும். நேற்று என்ன செய்தேன் தெரியுமா? சாப் பாட்டுப் பிங்கான் தட்டுடன் எங்கள் வீட்டு முற்றத்தில் விழுந்து விட்டேன். கீழே விழுவது நமக்கெல்லாம் பிரமாத மன்று வெகு சகஜம். கொஞ்சம் இரத்தம் வந்தால்கூட நாம் சாதா ரணமாய்க் கவனிக்கப் போவதில்லை. இப்பொழுதோ தட்டுவிழுந்து சுக்கு நூறாய் உடைந்துவிட்டது. எனக்குத் தாங்கமுடியாத சிரிப்பு வந்தது. ஆனால் சிரித்திருந்தேனே கட்டாயம் முதுகில் இரண்டு அடி விழுந்திருக்கும். ஆகவே, கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டேன். பிறகு, முதல் நாள் கோயிலில் விழுந்தபோது முழங்காலில் பட்ட காயத்தை நினைத்துக் கொண்டேன். உடனே எனக்குப் பொறுக்க முடியாமல் அழுகை வந்தது. நல்ல வேளை யாக அப்போது காயமான இடத்தில் இப்போது கொஞ்சம் தேய்ந்து ஒரு துளி இரத்தமும் வந்தது. விம்மி விம்மி அழத் தொடங்கி னேன். அம்மா வந்து என்னைச் சமாதானம் செய்து வாய் நிறையத் திரட்டுப்பால் அடைத்த பிறகுதான் அழுவதற்கு முடியாமல் தானே அழுகை நின்றது. (கரகோஷம்.) ஆகையால், அன்பர்களே! இவ் வளவு அற்புதமான ஆயுதத்தை நாம் ஒரு நாளும் கைவிடக்கூடாது! கூடாது! நீங்கள் இந்தத் தீர்மானத்தை ஒரு முகமாக ஒப்புக்கொள் வீர்களென்று நம்புகிறேன்." (கரகோஷம்.)

பின்னர், மேற்படி இரண்டாவது தீர்மானமும் வோட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

மூன்றாவது தீர்மானம்

"பள்ளிக்கூடங்கள் என்பவை குழந்தைக் குலத்தின் பரம விரோதிகளால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்கள் என்றும், அவை குழந்தைகளை மயக்கி ஏமாற்றி அவர்க ளுடைய சுதந்திரங்கள் எல்லாவற்றையும் பறிப்பதற்

காகவே ஏற்பட்டவை யென்றும் இந்த மகாநாடு கண்டிப்பாக அபிப்பிராயப்படுகிறது. ஆகையால் மேற்படி பள்ளிக்கூடங்களை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று இம்மகாநாடு பலமாக வற்புறுத்துகிறது.”

மேற்படி தீர்மானத்தை ஆறு வயதுள்ள ஸ்ரீமதி பாலாம்பாள் பிரேரேபிணை செய்து பேசியதாவது:—“ஓ! என் அருமைச் சகோதரிகளே! சகோதரர்களே! தாய் தந்தையர்களின் நன்றி கெட்ட தன்மையை நான் என்னவென்று சொல்வேன்? அதை நினைக்கும் போதே எனக்கு அளவிறந்த துக்கம் உண்டாகிறது. பெற்றோர்களுக்கு நாம் செய்யும் உபகாரங்களைப்பற்றி நான் பெருமை யடித்துக் கொள்ளப் போவதில்லை. அவர்கள் மார்பில் கையை வைத்து யோசித்துப் பார்த்தார்களானால் யாருக்கு யாரால் நன்மை யென்று தாங்களே தெரிந்து கொள்வார்கள். ஒன்றிரண்டு மட்டும் இங்கே சொல்கிறேன். நான் பிறந்திரா விட்டால் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் முதலில் பொழுது எப்படிப் போகும்? சமைப்பதும், சாப்பிடுவதும், சண்டை போடுவதும் தவிர வேறு அவர்களுக்கு வேலையிராது. இன்னும் பாருங்கள். அம்மாவுக்காக நான் நாலு வேளை சாப்பிடுகிறேன். அம்மாவுக்காகத் தலைவாரிப் பின்னிக் கொள்கிறேன். அம்மாவுக்காகக் குளிக்கிறேன். அம்மாவுக்காகச் சட்டை போட்டுக் கொள்கிறேன். நகை அணிந்து கொள்கிறேன். அப்புறம் அம்மாவுக்காக விளக்கெண்ணெய் கூடக் குடித்துத் தொலைக்கிறேன். இவ்வளவு உபகாரம் நான் செய்வதற்கு அவர்கள் பிரதி உபகாரம் என்ன செய்கிறார்கள்? பள்ளிக்கூடம் என்னும் சிறைக்கூடத்துக்கு என்னை அனுப்புவதுதான். (“வெட்கம் வெட்கம்.”) ஆம்; இதைப்போன்ற வெட்கக்கேடு உலகிலே ஒன்றுங் கிடையாது. பள்ளிக்கூடங்களிலே என்ன செய்கிறார்கள்? நம்மை யெல்லாம் ஏமாற்றுகிறார்கள். புத்தகத்திலே யானை போட்டு நமக்குக் காட்டுகிறார்கள். புத்தகத்து யானை இங்கே யாருக்கு வேண்டும்? அது நடக்கிறதா? தும்பிக்கையை ஆட்டுகிறதா? வாழைப்பழம் கொடுத்தால் வாங்கித் தின்கிறதா? ஒன்றுமேயில்லை. இது ஏமாற்றல்லவா?

மோசமல்லவா? ("ஆம் ஆம்") ஏன் நமக்கு நிஜ யானை காட்டக் கூடாது? இப்படித்தான் எல்லாம். கிளியாம் கிளி! அது வாயைக் கூடத் திறப்பதில்லை. (சிரிப்பு) ஒருநாள் நான் பீபில்ஸ் பார்க்குக்குப் போயிருந்தேன். அங்கே நிஜ சிங்கம், நிஜக் குரங்கு, நிஜக் கரடி எல்லாம் பார்த்தேன். ஆஹா! எவ்வளவு சந்தோஷமா யிருந்தது? ஏன் தினமும் அங்கே அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்று கேட்கிறேன். இது மட்டுமா? புத்தகத்தில் வாழைப்பழம், பலாப் பழம், மாம்பழம் இவை இருந்தன. பார்த்ததும் வாயில் ஜலம் ஊறிற்று. ஆனல் என்ன ஏமாற்றம்? என்ன மோசம் பாருங்கள்! புத்தகத்தில் உள்ள ஒரு கூடை வாழைப்பழம் நிஜ வாழைப்பழம் ஒன்றுக்குச் சமானமாகுமா? (கரகோஷம்) அன்பர்களே! இத்தீர் மானத்தைப்பற்றி நான் அதிகம் பேசவேண்டியதில்லை. ஏனென் ருல் உங்கள் இயற்கை உணர்வே இதைப்பற்றி உங்களுக்குச் சொல் லும். பள்ளிக்கூடம் என்ற பெயரைக் கேட்டாலே உங்களுக்கு வெறுப்பா யிருக்கிறது. பள்ளிக்கூடத்து அருகில் போனவுடனேயே மன நடுக்கம் உண்டாகிறது. ஆகையால் இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்வீர்களென்று நம்பி என் சிற்றுரையை முடித்துக் கொள்கி றேன்." (கரகோஷம்)

இப்பொழுதுதான் மகாநாட்டு நடவடிக்கைகளில் அபிப்பிராய பேதம் தலை காட்டிற்று. ஏழு வயதுள்ள ஸ்ரீமான் வக்கிர தந்தர் என்பவர் எழுந்திருந்து "சபையோர்களே. எனக்கு இந்தத் தீர் மானத்தின் நோக்கத்தில் அநுதாபம் உண்டு. ஆனல்......" என்று சொல்வதற்குள் சபையில் பெருங் கூச்சல் உண்டாகி விட்டது. "தீர்மானத்தை நீர் ஆதரிக்கப் போகிறீரா? எதிர்க்கப் போகிறீரா?" என்று ஒரு பிரதிநிதி கேட்டார். "ஆட்சேபிக்கப் போகிறேன்" என்று வக்கிரதந்தர் பதில் சொன்னர். உடனே அந்தப் பிரதிநிதி சபைத் தலைவரை நோக்கி, "அக்கிராசனர் அவர்களே! குழந்தை மகாஜனங்கள்தான் இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளலாமென் பது மகாநாட்டின் விதிகளில் முக்கியமானது. பிரஸ்தாப தீர்மானத் தை எதிர்க்கக்கூடியவர் குழந்தையா யிருக்க முடியாது. ("கேளுங்

கள் கேளுங்கள்") அவர் வயது வந்த மனிதராகவே யிருக்கவேண்டும். இன்னும் கிழவராய்க்கூட இருக்கலாம். தலை மயிரைச் சோதித்துப் பார்த்தால் அது தெரியவரும். (சிரிப்பு)ஒருவேளை இது பெரியவர்களின் சூழ்ச்சியாக இருக்கலாம். எப்படியிருந்தாலும் இவர் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள உரிமையற்றவர் என்று ஆட்சேபிக்கிறேன்'' என்றார்.


உடனே சபையில், 'சூழ்ச்சி சூழ்ச்சி'' ''தூரத்துங்கள் தூரத்துங்கள்'' என்ற கூக்குரல்கள் எழுந்தன. அக்கிராசனர் கையமர்த்தி அமைதி உண்டாக்கிய பின்னர், ''ஆட்சேபத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். ஸ்ரீ வக்கிரதந்தருக்கு இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள உரிமை கிடையாது'' என்று தீர்ப்பளித்தார். உடனே, நான்கு தொண்டர்கள் முன்வந்து வக்கிரதந்தரின் கையைப் பிடித்துக் கொண்டுபோய் வெளியேற்றி வந்தனர். பிறகு, மேற்படி தீர்மானம் எவ்வித ஆட்சேபமுமின்றி ஏகமனதாக நிறைவேறியது.

நாலாவது தீர்மானம்.

''சாப்பிடவும், சாப்பிடாம லிருக்கவும், தூங்கவும், தூங்காம லிருக்கவும், பள்ளிக்கூடம் போகவும் போகாம லிருக்கவும், குளிக்கவும், குளிக்காமலிருக்கவும், இன்னும் இதுபோன்ற எல்லாக் காரியங்களிலும் குழந்தைக் குலத்துக்குப் பரிபூரண சுதந்திரம் உண்டென்று இந்த மகாநாடு வலியுறுத்துகிறது. சாத்வீகச் சட்ட மறுப்பு உள்பட எல்லா முறைகளையும் கையாண்டு மேற்படி சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.''

இத்தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது. வந்தனோபசாரங்கள் கூறியான பின்னர், மிகுந்த உற்சாகத்துக்கிடையே மகாநாடு கலைந்தது. சிறுவர்களும், சிறுமிகளும் கூட்டங் கூட்டமாகக் கடற்கரைக்கு வந்து, கிளிஞ்சல் ஓடுகளைப் பொறுக்கி வீசி எறிந்து விளையாடி மகிழ்ந்தார்கள். நானும், கடற்கரையில் அமர்ந்து பகற் கனவு காண்பதை நிறுத்தி வீடு நோக்கினேன்.

தீப்பிடித்த குடிசைகள்



1929-ம் வருஷத்தில் சட்ட சபைத் தேர்தல்கள் இல்லை என்று இர்வின் மகாப் பிரபு தீர்மானித்து விட்டதில் என்னைப் போல் வருத்தமடைந்தவர்கள் யாரும் இருக்கமுடியாதென்று நினைக்கிறேன். என் துக்கத்தின் காரணங்களைச் சொல்கிறேன் கேளுங்கள். (1) இந்த வருஷத்தில் தேர்தல் நடந்து நான் இந்திய சட்ட சபைப் பதவிக்கு நின்றிருக்கும் பட்சத்தில், என் எதிரி யாராயிருப்பினும் அவர் தேர்தலுக்கு முதல் நாள் யமலோகத்துக்கு வோட்டுக் கேட்கப் போய்விடுவாரென்றும், நான் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் படுவேனென்றும், ஜோசியர் சொல்லியிருந்தார். அது இல்லாமற் போயிற்று. (2) தேர்தல் விநோதங்களைப் பற்றி சிற்சில கட்டுரைகள் எழுதியிருக்கலாம். அதற்கும் இடமில்லை. (3) என்னுடைய துக்கத்திற்கு இன்னும் 98 காரணங்கள் இருக்கின்றன. ஆனால் அவை ஒன்றும் இப்போது ஞாபகம் இல்லை. ஞாபகம்வந்ததும் நேயர்களுக்குத் தந்திமூலம் தெரிவிக்கிறேன். இது நிற்க.

புதுத் தேர்தலைப் பற்றி எழுத இடமில்லையே யென்று நினைத்துக் கொண்டிருந்தபோது பழைய தேர்தலில் நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. பல்லில்லாத கிழவன் பாலிய பருவத்தில் வெல்லச் சீடை தின்றதை யெண்ணிச் சந்தோஷப்படுவது போல், அந்தப் பழைய தேர்தல் சம்பவத்தைப் பற்றியாவது எழுதலாமென்று தீர்மானித்தேன். "கல்கி" தீர்மானித்து விட்டால் என்ன நடக்குமென்பதுதான் உங்களுக்குத் தெரியுமே?......ஆமாம். ஜாக்கிரதை! குறைந்தது எழெட்டு பக்கம் சாரமற்ற சங்கதி ஒரே மூச்சில் படிப்பதற்கு நீங்கள் சித்தமாகியே தீரவேண்டும்.

1926-ம் வருஷத்தில் சட்ட சபைகளுக்கு நடந்த பொதுத் தேர்தலில் பல அதிசயமான முடிவுகள் ஏற்பட்டன. வெற்றி நிச்

சயமென்று எண்ணியிருந்தவர்கள் பலர் தோல்வி யடைந்தார்கள். நம்பிக்கை யெல்லாம் இழந்து சர்வ நாடியும் ஒடுங்கிப் போயிருந்தவர் பலர், பெரும் வெற்றியடைந்தார்கள். இந்த அதிசயமான முடிவுகளுக்குள்ளே மிகவும் அதிசயமானது ஸ்ரீமான் காவடி கோவிந்தப் பிள்ளையின் வெற்றியே யாகும். இவர் தமது ஜில்லாவில் முதன்மையாக வெற்றி பெறுவார் என்று அரசியல் ஜோதிடத்தில் வல்ல பத்திரிகை நிருபர்கள்கூட எதிர்பார்க்கவில்லையென்றால் நீங்களும் நானும் மூக்கில் விரல் வைத்து ஆச்சரிய மடைந்ததில் வியப்பில்லையன்றோ?

ஆம்; இப்பொழுது நினைத்தாலும் அந்தக் காட்சி என் கண் முன்னே நிற்கின்றது. தேர்தல் முடிவுகள் பெருவாரியாக வெளியாகிக் கொண்டிருந்த அன்று, சென்னையில் தினசரிப் பத்திரிகாலயங்களின் வாயில்களில் கும்பல் கும்பலாய் ஜனங்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். செய்திகள் வர வர, வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் வர வர, வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் வாசலில் ஒரு கறுப்புப் பலகையில் எழுதப்பட்டு வந்தன. பிரபல ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் ஒருவர் தோற்றுப் போனார் என்று தெரிந்ததும், காங்கிரஸ் அபிமானி ஒருவர் அவசரமாகப் பக்கத்துக் கடைக்குச் சென்று ஒரு டஜன் சுருட்டுக் கட்டுகள் வாங்கி வந்து எல்லாருக்கும் வழங்கினார். (யாராவது இறந்து போனால் புகையிலை வழங்குவது சென்னையில் வழக்கம்.) இந்த விநோதத்தை நான் பார்த்துக்கொண்டிருக்கையில் ....ஜில்லா தேர்தல் முடிவுகள் கறுப்புப் பலகையில் எழுதப்பட்டன. வெற்றிபெற்ற மூவரில் ஸ்ரீமான் காவடி கோவிந்தப் பிள்ளை முதன்மையாக நின்றார். அவருக்கடுத்தபடியில் வந்தவருக்கும் அவருக்கும் 3000 வாக்கு வித்தியாசம்!

ஒரு துள்ளுத் துள்ளி மூன்று முழ உயரம் மேலெழும்பிக் குதித்தேன். உடனே எனக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. சுற்று முற்றும் பார்த்தேன். மற்றவர்கள் என்னைவிட மோசம் என்று தெரிந்த பிறகுதான் கொஞ்சம் சமாதானமாயிற்று. என்னைப் போலவே ஆகாயத்தில் கிளம்பிய பலர் அப்போது தான் தரையி

விறங்கினார்கள்! அவர்களி லொருவர் கீழே கிடந்த சுருட்டு நெருப்பில் காலை வைத்துவிட்டு மறுபடியும் மேலெழும்புவதையுங் கண்டேன். வேறு சிலரோ ஆச்சரியத்தினால் திகைத்துப் போய் பிளந்த வாய் மூடாமல் நின்றார்கள். அவர்கள் திறந்த வாய்க்குள்ளே தாரா ளமாய்க் கொசுக்கள் பிரவேசித்துக் கொண்டிருந்தன. (கொசுக்களைக் கொல்வதற்கு இது ஒரு நல்ல வழியல்லவா? ஆனால் சென்னை நகர சபையாருக்கு இந்த யோசனையை யாரும் தெரிவிக்கவேண்டாம். நல்ல யோசனைகளை ஏற்றுக்கொள்ளும் கெட்ட வழக்கம் அவர்களிடம் கிடையாது. மேலும் இவ்வளவு சுலபத்தில் கொசுக்களைக் கொன்றுவிட்டால் சுகாதார உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் வேலை வேண்டாமா?) ஆனால் இப்படி ஆச்சரியப்பட்டவர்களில் எவரும் துக்கமோ, மகிழ்ச்சியோ காட்டவில்லை. ஏனெனில் ஸ்ரீமான் காவடிப் பிள்ளை காங்கிரஸ் கட்சியையோ, ஜஸ்டிஸ் கட்சியையோ சேர்ந்தவரல்லர். அவர் சுயேச்சை வாதி.

அதுதான், சுவாமிகளே! இதில் பெரிய அதிசயம். ஸ்ரீமான் காவடி கோவிந்தப் பிள்ளை எந்தக் கட்சியையும் சேர்ந்தவரல்லர். அவரை ஆதரிக்கப் பத்திரிகைகள் இல்லை, பிரசாரகர்கள் இல்லை. அவர் பெரிய வக்கீல் அல்ல; ஜில்லா போர்டு தலைவர் அல்ல; பெரும் பணக்காரருமல்ல. அந்த ஜில்லாவுக்கு வெளியே அவர் பெயரை யாரும் கேட்டது கிடையாது. பின் எப்படி அவர் இம்மாதிரி ஒரே யடியாகத் தாண்டிக் குதித்தார்? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லக் கூடியவர் சென்னைப் பட்டணத்தில் யாரும் இல்லை. கூளிப்பட்டி ஜமீன்தாரைப் பிடித்தால் ஒரு வேளை இந்த மர்மம் விளங்கலாமென்று நினைத்தேன்.

கூளிப்பட்டி ஜமீன்தாரைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா? அவர் எனது பழைய நண்பர். இது குறித்து நீங்கள் என்மீது பொறாமைப்படவேண்டாம். பொறாமை உடம்புக்காகாது. மேலும் அது என்னுடைய தப்புமன்று; ஜமீன்தாரின் தப்பு மன்று. ரயில்காரனுடைய தவறு. நாங்களிருவரும் ஒரு

தடவை ஒரே ரயில் ஸ்டேஷனில் ரயிலேறும்படி நேர்ந்தது. இல்லை இல்லை. ரயிலேறுதிருக்க நேர்ந்தது. நாங்கள் கையில் மூட்டையை வைத்துக்கொண்டு தயாராய்க் காத்துக்கொண்டுதா னிருந்தோம். நான் நின்ற இடத்துக்கு நேரே இரண்டாம் வகுப்பு வண்டி வந்து நின்றது. அந்த மனிதருக்கு நேரே மூன்றும் வகுப்பு ஸ்திரீகளின் வண்டி நின்றது. நான் மூன்றும் வகுப்பையும் அவர் இரண்டாம் வகுப்பையும் தேடிக்கொண்டு போனோம். நான் என் வண்டியை விரைவில் கண்டு பிடித்துவிட்டேன்.

“ஸார்! ஸார்!! ஸார்!!! கதவைக் கொஞ்சம் திறவுங்கள்” என்றேன்.

“ஸார்! ஸார்!! ஸார்!!! தயவுசெய்து கொஞ்சம் அடுத்த வண்டிக்குப் போங்கள்” என்று உள்ளிருந்து பதில் வந்தது.

மீறி ஏறுவதற்கு முயன்றேன். உடனே என்னை நோக்கி ஒரு டஜன் கைகள் முன்வந்தன. எனவே, நான் பின்வாங்க வேண்டியதாயிற்று. இந்த மாதிரி இரண்டு மூன்று வண்டி பரிசோதிப்பதற்குள் ரயில் கிளம்பி விட்டது. கொஞ்ச தூரம் ரயிலுடன் நானும் ஓடினேன். பின்னர், சை! சை! இந்த ரயிலுக்கு நம்முடன் கூட ஓடும் சக்தி உண்டா? சுத்த சோதா ரயில்!” என்று தீர்மானித்து நின்றுவிட்டேன். திரும்பிப் பார்த்தபோது கூளிப்பட்டி ஜமீன்தாரும் கையில் பெட்டியுடன் நின்றுகொண் டிருந்தார். இரண்டாம் வகுப்பில் தம்பதி ஸமேதராய் எழுந்தருளியிருந்த ஒரு வெள்ளைக்காரன் அவரை “நரகத்துக்குப் போகும்படி” ஆக்ஞாபித்ததாய் எனக்குப் பின்னால் தெரிய வந்தது. ரயில் போனதும் நாங்கள் இருவரும் சந்தித்தோம்.

“இந்த ரயில் நாசமாய்ப் போனாலென்ன?” என்று நான் கேட்டேன்.

“ரயில் கம்பெனி பாதாள லோகத்துக்குப் போனாலென்ன?” என்று ஜமீன்தார் திருப்பிக் கேட்டார்.

"கொஞ்சமும் ஆட்சேபமில்லை" என்றேன்.

இவ்வாறுதான் நாங்கள் நண்பர்களானோம்.

கூளிப்பட்டி ஜமீன்தார் மிக்க செல்வாக்குள்ளவர். அந்த ஜில்லாவில் 4000 வாக்குகள் அவர் கைக்குள் அடக்கம் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஏழை எளியவர்களிடம் அவர் மிக்க கருணை யுள்ளவர் என்பதும் பிரசித்தியான விஷயம். ஆனால் அவர் அரசியல் விஷயங்களில் மட்டும் தலையிட்டுக்கொள்வது கிடையாது. தலையை மட்டுமன்று; கால், கை, காது முதலிய எந்த அவயவத்தை யுமே அவர் அரசியலில் இடுவது கிடையாது. சட்டசபை அபேக்ஷ கர்களாக நின்ற ஒவ்வொருவரும் ஜமீன்தாரின் ஆதரவைப் பெறப் பிரயத்தனம் செய்தார்கள். எல்லாருக்கும் "ஆகட்டும், பார்ப்போம்" என்ற பதிலே அவர் சொல்லி வந்தார். ஆகவே, இப்பொழுது காவடி கோவிந்தப் பிள்ளையின் மகத்தான வெற்றியைப்பற்றித் தெரியவந்ததும், ஒருகால் நமது நண்பரின் கைவேலை இதில் இருக்குமோ வென்று நான் சந்தேகித்தது இயல்பே யல்லவா?

கூளிப்பட்டிக்குப் போனேன். ஆனால் ஏமாற்ற மடைந்தேன். ஜமீன்தார் "எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று ஒரே யடியாகச் சாதித்து விட்டார். எவ்வளவோ சாமர்த்தியமாக வெல்லாம் கேட்டும் பயன்படவில்லை. ஆனால் கூளிப்பட்டிக்குப் போனதில் லாப மில்லாமலும் போகவில்லை. தேர்தலுக்கு நாலு தினங்களுக்கு முன்பு அங்கு நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றித் தெரிந்து கொண்டேன். அதை இங்கே சொல்லிவிடுகிறேன். அதற்கும் கோவிந்தப் பிள்ளையின் வெற்றிக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டாவென்று நீங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

தேர்தலுக்கு நாலு நாளைக்கு முன்பு கூளிப்பட்டிக்குத் தெற்கே எட்டு மைல் தூரத்திலுள்ள கிராமத்தில் பெரிய சமூக மகாநாடு ஒன்று நடந்ததாம். ஆயிரக் கணக்கான வாக்காளர்கள் இங்கே கூடுவதை முன்னிட்டுச் சட்டசபை அபேட்சகர்கள் எல்லாரும் தங்கள்

தங்கள் பரிவாரங்களுடன் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்தார்கள். ஜமீன்தாரும் போயிருந்தார். திரும்பிப் போகும்போது அபேட்சகர்கள் எல்லாரும் கூளிப்பட்டி வழியாகத்தான் போக வேண்டியிருந்தது. மாலை ஐந்து மணிக்கு மகாநாடு "பலமான கரகோஷங்களுக்கிடையே இனிது நிறைவேறிய" பின்னர், அபேட்சகர்களின் மோட்டார் வண்டிகள் ஒவ்வொன்ருகப் புறப்பட்டன.

இப்பொழுது வாசகர்கள் என்னுடன் கிளம்பி மோட்டார் வண்டிகளைவிட வேகமாய்ப் பிரயாணம் செய்து, கூளிப்பட்டிக்கு வடக்கே ஒரு மைல் தூரத்திலிருந்த "பறச்சேரி"க்கு வந்துவிட வேண்டும். ஆஹா! என்ன பயங்கரமான காட்சி! சேரியிலுள்ள குடிசைகளில் சில தீப்பற்றி எரிகின்றன. தீ வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது: காற்று பலமாக அடிக்கிறது. ஐயோ! குடிசையிலிருந்து பக்கத்திலுள்ள வைக்கோற் போரிலும் தீப்பிடித்துக் கொண்டது. "வானை நோக்கிக் கைகள் தூக்கி வளரும்" தீயின் காட்சி என்ன பயங்கரம்! தீயை அணைப்பதற்கு எவ்வித முயர்சியும் காணப்படவில்லை. ஆண் மக்களையே அதிசமாய் அங்கே காணேம். ஸ்திரீகளும் குழந்தைகளுந்தான் சுற்றிசுற்றி வந்து அழுதுகொண்டிருக்கிறார்கள். அங்கிருந்தும் இரண்டோர் ஆண் மக்கள் அந்த ஸ்திரீகளையும் குழந்தைகளையும் தீ விபத்துக் காளாகாமல் தப்புவித்துக் கொண்டிருக்கிறார்கள். எரியும் குடிசைகளுக்கருகே அவர்கள் போகாவண்ணம் தடுத்துக்கொண் டிருக்கிறார்கள்.

ஜில்லா போர்டு பெரியசாலை இந்தச் சேரியைப் பிளந்துகொண்டு போகிறது. சாலைக்கு இடது புறத்திலிருந்த குடிசைகள் எல்லாம் ஏறக்குறைய எரிந்துபோயின. வலது புறத்திலுள்ள குடிசைகளுக்கு இன்னும் நெருப்பு வரவில்லை. ஐயோ! காற்று இப்படிச் சுழன்றடிக்கின்றதே! ஒரு ஜுவாலை பறந்து சென்று வலது புறத்துக் குடிசைகளில் ஒன்றின்மீது விழுகின்றது! ஆகா! சட்டென்று சென்று அந்த ஒரு கீற்றை இழுத்தெறிந்து ஒரு குடம் தண்ணீரைக்

கொட்டினால் நெருப்புப் பரவாமல் தடுக்கலாம். யாரேனும் அப் படிச் செய்யப்போகிறார்களா? அந்தோ! ஒருவரையுங் காணோம். பெண்களும் சிறுவர், சிறுமிகளும் சுற்றிச் சுற்றி வந்து வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொள்கிறார்கள். அங்கிருந்த இரண்டோர் பெரிய ஆட்களுக்கு இவர்களை வெளியே பத்திரமாய்க் கொண்டு வந்து சேர்ப்பதே பெரிய காரியமா யிருக்கிறது. அதுவரையில் புத்திசாலிகள்தான். அப்படியும் ஒரு சிறுவன்மீது நெருப்புப்பட்டு முதுகு வெந்துபோயிற்று. அவனைச் சாலையில் கொண்டுவந்து போட்டார்கள்.

பூம்! பூம்! பூம்! ஒரு மோட்டார் வண்டி அதிவேகமாய் வருகிறது. சமூக மகாநாட்டுக்குச் சென்றிருந்த திவான் பகதூர் வீரண்ண பிள்ளையும், திருவாளர் பெரிய சாமித் தேவரும் அதிலே வருகிறார்கள். தீப்பிடித்த குடிசைகளுக்கருகே மோட்டார்வண்டி நிற்குமா? இந்த ஏழை ஆதித்திராவிடர்மீது இப்பெரிய மனிதர்கள் கண்ணோட்டம் செலுத்துவார்களா? இல்லை; இல்லை. கண்மூடித் திறக்கும் நேரத்தில் மோட்டார் பறந்து போகிறது. அன்றிரவு ஜில்லா கலெக்டர் விருந்துக் கச்சேரி. அவர்களெப்படி இங்கே நிற்க முடியும்?

ஒரு நிமிஷத்திற்கெல்லாம் மீண்டும் பூம், பூம், பூம் என்ற சத்தம். ராவ் பகதூர் சடையப்ப முதலியாரின் மோட்டார் அதிவேகமாய் வருகிறது. இதுவும் இங்கு நில்லாமலே போய்விடுகின்றது. அடுத்தாற்போல் ஸ்ரீமான் வராகவதாரமையங்காரின் வண்டி. ஆகா! இவரல்லவோ புண்ணியவான்? ஏழைகளின் நண்பர்? வண்டி மெதுவாக நிற்கிறது. உடனே பலர் ஓடிவந்து மோட்டாரைச் சூழ்கிறார்கள்.

ஐயங்கார்:—தீ எப்படிப் பிடித்தது?

கூட்டத்தில் பலர்:—சாமி! தெரியவில்லை. (கூச்சலும் அழுகையும்)

ஐயங்கார்:—அட, சனியனே! சும்மா யிருங்கள். வெறும் மூடத்தனம். தீப்பிடித்தவுடன் ஏன் அணைக்கக்கூடாது? இப்படி வெறுங் கூச்சல் போட்டால் என்ன பிரயோஜனம்?

ஒருவன்:—ஐயா, சாமி! இந்தப் பையன் முதுகு எரிந்துபோய்விட்டது.

ஐயங்கார்:—டிரைவர்! பலமான காயமா, பார்.

டிரைவர்:—அதெல்லாம் இல்லே. சொற்ப காயந்தான்.

ஐயங்கார்:—சரி, தேங்காய் எண்ணெய் தடவு, தெரிகிறதா? சீக்கிரம் வண்டியை விடு.

அடுத்த கணத்தில் மோட்டார் மாயமாய்ப் பறந்து போகிறது.

மேற்கூறியவை யெல்லாம் ஐந்து நிமிஷத்திற்குள் நடந்தன வென்பதை நேயர்கள் நினைவில் வைக்க வேண்டும். கடைசியாக காவடி கோவிந்தப் பிள்ளையின் மோட்டார் வந்து குடிசைகளுக் கருகில் நின்றது. பிள்ளை சட்டென்று மோட்டாரிலிருந்து வெளியே குதித்தார். வலது புறத்துக் குடிசைகளில் ஒன்றில் இப்பொழுதுதான் தீப்பிடித்துக்கொண்டிருப்பதை அவர் உடனே கவனித்தார். "டிரைவர்! ஓடி வா! ஓடி வா!" என்று கூவிக்கொண்டே அவர் அந்தக் குடிசையை நோக்கி ஓடினர். டிரைவரும் பின்னல் சென்றான். இருவரும் அக்குடிசையின் கூரையில் தீப்பிடித்திருந்த கீற்றை இழுத்துக் கீழே போட்டார்கள். "குடம்! குடம்! குடம்!" என்று காவடிப் பிள்ளை கத்தினர். சில பெண்கள் மண்குடம் கொண்டுவந்தார்கள். அவற்றுள் ஒன்றைப் பிள்ளை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு போய்ப் பக்கத்திலிருந்த வாய்க்காலிலிருந்து ஜலம் மொண்டு வந்தார். அவரைப் பின்தொடர்ந்து இன்னும் பலரும் ஜலங் கொண்டு வந்து கொட்டினர்கள். தீயணைந்தது. சாலைக்கு வலது புறத்திலிருந்த இருபது குடிசைகள் தப்பிப் பிழைத்தன.

காவடிப் பிள்ளையும், டிரைவரும் திரும்பிவந்து மோட்டாரில் உட்கார்ந்தார்கள்.

டிரைவர்:—சுத்த மூட ஜனங்கள். சுலபமாய்த் தீயை அணைத்திருக்க லாம். பக்கத்திலே வாய்க்கால்.

காவடிப்பிள்ளை:—பாவம்! அவர்களைக் குறை சொல்லி என்ன பயன்? அவர்களை மூடர்களாய் வைத்திருப்பது யார்? மேலும் ஆண்பிள்ளைகளெல்லாம் வயல் வெளிக்கு வேலைக்குப் போய் விட்டார்கள். குழந்தைகளும் ஸ்திரீகளும் என்ன செய்வார்கள்?

டிரைவர்:—சுமார் ஐம்பது குடிசை போயிருக்கும்.

காவடிப்பிள்ளை:—பட்ட காலிலே படும். எல்லாம் ஏழைகளுக்குத் தான் வருகிறது. இரவு தூங்க என்ன செய்வார்களோ?

கூட்டத்தில் ஒருவன்:—சாமி! இந்தப் பையன் முதுகு வெந்து போய்விட்டது.

காவடிப் பிள்ளை:—எங்கே? எங்கே? கொண்டுவா!

பையனைக் கொண்டு வந்தார்கள். பிள்ளை பார்த்துவிட்டு உடனே அவனை மோட்டாரில் தூக்கிப்போடச் செய்தார். பின்னர் வண்டி கிளம்பிற்று.

மறுநாள் காவடிப் பிள்ளையிடமிருந்து கூளிப்பாட்டி ஜமீன்தாரு க்கு ஒரு கடிதமும், 50—ரூபாய் பணமும் கிடைத்தது "இந்தச் சிறு தொகையைப் புதிய குடிசைகள் போட்டுத் தர உபயோகப்படுத்துங் கள். பையன் வைத்தியசாலையில் குணமடைந்து வருகிறான் என்று அவன் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று பிள்ளை எழுதி யிருந்தார்.


மேற்கண்ட சம்பவத்துக்கும் காவடிப் பிள்ளையின் வெற்றிக்கும் ஏதேனும் சம்பந்த முண்டாவென்று நான் ஜமீன்தாரை ஆன மட்டும் கேட்டுப் பார்த்தேன். அவர் வாயிலிருந்து பதில் வருவிக்க முடியவில்லை. ஆயினும் பின்வரும் விஷயங்களைக் கோவைசெய்து நேயர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்:—(1) அந்த நேரத்தில் அந்த ஏழைகளின் குடிசைகள் தீப்பிடிக்கக் காரணமே யில்லை. ஒரு வீட்டிலும் அப்போது அடுப்புக்கூட மூட்டவில்லை யென்று எல்லாரும் சத்தியம் செய்கிறார்கள். (2) ஒருவர் இருவரைத் தவிர பெரிய ஆட்கள் யாருமில்லாமல் அச்சமயம் மாயமாய்ப் போனார்கள்.




யானை குட்டி போட்டதும் குதிரை முட்டை யிட்டதும்

கனவில் கண்ட காட்சிகள்






ஒரு காலத்தில் ஒரு யானை இருந்தது. அதன் நிறம் கறுப்பு. அதன் பெயர் "காங்கிரஸ்". அது பாரத நாடெங்கும் சுற்றி யலைந்து கடைசியாக ஒரு முறை கல்கத்தா நகரம் சென்றது. கல்கத்தா வாசிகள் பெருந் திரளாக வந்து அந்த யானையைப் பரிந்து வரவேற்றார்கள். அதற்குப் பூமாலைகள்போட்டார்கள். வேண்டு மளவு தீனியும் கொடுத்தார்கள்.



ஆனால் அந்த யானைமுரட்டுக் காட்டு யானை யன்று, தறி தலையுமன்று. மனிதர் கையில் அடங்கிய யானை தான். அது பலர் கைதாண்டி "நேரு" என்னும் மாவுத்தர் கையில் இப்போது சிக்கிக் கொண்டிருந்தது.



இங்ஙன மிருக்கையில், அந்த யானை கல்கத்தாவில் குட்டி போடப் போகிறதென்பதாக எப்படியோ ஒரு வதந்தி கிளம்பிவிட்டது. இவ்வதந்தி தேசத்தில் அதி வேகமாகப் பரவிற்று. சிலர் பறையடித்து இந்தச் செய்தியைப் பரப்பினார்கள். மற்றும் சிலர் இதை மறுத்தார்கள். "அது ஆண் யானை அப்பா! அது குட்டி போடாது" என்று அவர்கள் கூறினார்கள். விவாதம் பலமாக நடந்தது. வேடிக்கை பார்க்க ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் கல்கத்தாவை நோக்கிச் சென்றார்கள்.




இதற்குள் இன்னொரு சண்டையும் மூண்டு விட்டது. "குட்டி பிறந்தால் அதற்கு என்ன பெயரிடுவது? அது யாருக்குச் சொந்தமாவது?" என்னும் கேள்விகளை ஒருவர் கிளப்பி விட்டார். இந்த யானை ஏற்கனவே "ஐயங்கார்" என்னும் மாவுத்தர் கையில் கொஞ்சம் கான் இருந்ததுண்டு. அந்த மாஜி மாவுத்தர் "யானை என் வசம் இருந்தபோதுதான் கர்ப்பந் தரித்தது. ஆகையால் குட்டி என்னுடையதுதான். அதற்குப் பூரண சுதந்திரம் என்று பெயரிடவேண்டும்" என்று சொன்னார். புதிய மாவுத்தர் நேரு இதற்கிணங்கவில்லை. அவர் "கிடையாது! பிறக்கப்போகும் குட்டி என்னுடையதுதான், நான்தானே மருத்துவம் பார்க்கப் போகிறேன்?

குட்டிக்குக் 'குடியேற்ற நாட்டுப் பதவி' என்றுதான் நாமகரணம் செய்யவேண்டும்" என்று விதண்டாவாதம் செய்தார்.




கல்கத்தாவில் ஒரு பெரிய மைதானத்தில் கூடாரம் அடித்து யானையைக் கட்டியிருந்தார்கள். அந்த மைதானத்தில் இரு கட்சியையும் சேர்ந்த போர் வீரர்கள் வந்து கூடினுர்கள். அந்த மைதானம் பெரிய குருக்ஷேத்திரப் போர்க்களமாகும் போல் தோன்றிற்று. ஆனுல் தமது புதல்வர்கள் இவ்வாறு அநியாயமாகச் சண்டையிட்டு மடிவது சர்வேசுவரனுக்கு விருப்பமில்லை. எனவே "மோகனர்" என்னும் தமது தூதரைக் கல்கத்தாவிற்கு பகவான் அனுப்பி வைத்தார். இந்த மோகனர், தமது மோகன சக்தியினுல் எவ்வளவு பெரிய விரோதிகளையும் சமாதானம் செய்விக்கும் ஆற்றல் வாய்ந்தவர்.




"பொறுங்கள், பொறுங்கள்! முதலில் யானை குட்டி போடட்டும். பின்னர் யாருக்குச் சொந்தம் என்பதையும், அதற்கு என்ன பெயரிடுவதென்பதையும் பற்றி யோசிப்போம்" என்று மோகனர் கூறினுர். இதற்கு இரு கட்சியாரும் இணங்கினுர்கள். உடனே திரை போடப்பட்டது. குட்டி பிறக்கும்போது முக்கிய

மான சிலர் மட்டுமே உள்ளே விடப்பட்டார்கள். மற்றவர்களெல்லாரும் வெளியில் ஆவலுடன் காத்துக்கொண் டிருந்தார்கள்.

கடைசியாக நல்ல சுபதினத்தில், சுபலக்கினத்தில் யானை குட்டி போட்டது. திரையும் தூக்கப்பட்டது. ஜனங்கள் பலத்த ஆரவாரம் செய்தார்கள். மோகனர் ஒருவிதமாக ராஜிசெய்து வைத்தார். ராஜியின் நிபந்தனைகள் வருமாறு:—(1) குட்டி இரு கட்சியாருக்கும் சொந்தம். (2) தற்போதைக்கு அதற்கு "நிர்மாண திட்டம்" என்று பெயரிடுவோம். (3) குட்டிக்குத் தந்தங்கள் முளைக்கும்போது ஒரு தந்தத்துக்கு



"பூரண சுதந்திரம்" என்றும் மற்றொரு தந்தத்துக்கு "குடியேற்ற நாட்டுப் பதவி" என்றும் பெயர் வைக்கலாம். இந்த ராஜிஏற்பாட்டை எதிர்த்து மாஜி மாவுத்தரின் சீடர்கள் சிலர் கலகம் விளைத்தார்கள். ஆனால் அது பலிக்கவில்லை: கடைசியில் ராஜி எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.



மாவுத்தர் நேருவும் அவர் கட்சியாரும் "குடியேற்ற நாட்டுப்பதவி" என்னும் தந்தம் முளைத்துவிட்டதாக கற்பனைக் கண்ணால் கண்டு மகிழ்ச்சி யுற்றனர். மாஜி மாவுத்தர் ஐயங்காரும் அவரைச் சேர்ந்தவர்களும் "பூரண சுதந்திரம்" என்னும் தந்தத்தை அவ்வாறே கற்பனைக் கண்ணால் பார்த்து சந்தோஷப்பட்டனர். ஆனால் யானைக்

குட்டிக்குத் தீனி போடுவது யார்? இந்தப் பொறுப்பை ஒப்புக்கொள்ள யாரும் சித்தமாயில்லே. இருகட்சியாரும் மெதுவாக நழுவி விட யோசித்தார்கள்.

[பின்னர், நான் இரண்டு காட்சிகளைக் கனவில் கண்டேன். அவற்றில் எது உண்மையோ நான் அறியேன். இரண்டையும் இங்கே தந்து விடுகிறேன். நேயர்களே முடிவு செய்து கொள்க.]



யானைக் குட்டி உணவு இல்லாத காரணத்தினுல் நாளுக்குநாள் மெலிந்து கடைசியில் எலும்புந் தோலுமாகக் கீழே விழுந்து மாணுவஸ்தையில் இருந்தது. இன்னும் தந்தங்களே முளேக்கவில்லே. அதனருகே மோகனர் ஒருவர் மட்டும் நின்று கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார். அந்தோ! கனவில் கண்ட இந்த பரிதாபக்காட்சி ஒரு வேளை பலித்துவிடக் கூடுமோ? அல்லது...........




மற்ருேர் அற்புத, ஆனந்தக் காட்சியுங் கண்டேன். யானைக் குட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து யுவதசை யடைந்தது. அதற்கு இரண்டு அழகிய இளந் தந்தங்கள் முளேத்தன. பாரததேவி சுயராஜ்ய மென்னும் ஒளிவீசும் மணிமுடி தரித்து அதன் முதுகின்மீது கம்பீரமாய்க் கொலுவீற்றிருந்தாள். மோகனர் முகத்தில் புன்னகை

பொலிய யானையின் துதிக்கையைப் பிடித்துக்கொண்டு நின்றார். நாலு புறங்களிலும் கணக்கில்லாத ஜனங்கள் சூழ்ந்து ஆரவாரித்த னர். சுதந்திர பேரிகைகள் முழங்கின. "வந்தேமாதர" கோஷம் வானமளாவிற்று.........ஆகா! இந்த தெய்விகக் காட்சியே உண்மை யாதல் கூடாதா?



இது இங்ஙன மிருக்கையில் நாட்டில் வேறொரு விசேஷம் நடந்துகொண்டிருந்தது. கடலுக் கப்பாலிருந்து ஒரு வெள்ளைக் குதிரை வந்து பம்பாயில் இறங்கிற்று. அதன் பெயர் "சைமன் கமிஷன்." அந்த வெள்ளைக்குதிரை முட்டையிடப் போகிறதென்று தேசமெங்கும் வதந்தி பரவலாயிற்று.

ஆனால் இவ்வதந்தியை அநேகர் நம்பவில்லை. அது மாயப் புரவி என்றும், ஜனங்களை மயக்கிக் கொண்டுபோய்ப் படுகுழியில் வீழ்த்திவிடும் என்றும் சிலர் எச்சரிக்கை செய்தார்கள். கல்கத்தாவில், யானை குட்டி போடும் சம்பவத்தின்மீது ஜனங்கள் கவனம் செல்லாமல் தடுப்பதற்கே, இந்த வெள்ளைக்குதிரை வந்திருப்பதாக வேறு சிலர் சொன்னார்கள். "குதிரையாவது? முட்டையிடவாவது!" என்று மற்றும் சிலர் பரிகசித்தார்கள். இதற்கிடையில், அவ்வெள்ளைக்கால் யா-




வழியில் எதிர்ப்படுவோரை யெல்லாம் இடறித் தள்ளிக்கொண்டு தேசமெங்கும் சுற்றிவந்தது.



குதிரை, முட்டையிடத்தான் போகிறதென்று நம்பியவர் சிலரும் இல்லாமற் போகவில்லை. இவர்கள், அதன் முட்டை "இவ்வளவு பெரிதாயிருக்கும்" என்றும். "அத்துணை அழகாயிருக்கும்" என்றும் பேசிக்கொண்டார்கள். இவர்கள், ஆங்காங்குக் குதிரைக்குத் தீபதூபங்கள் காட்டி உபசரித்தார்கள். கொள்ளும், புல்லும் வேறு தீனிகளும் கொடுத்தார்கள்.

[பின்னர், அந்த அற்புதக் கனவினிலே, வெவ்வேறு மூன்று காட்சிகளைக் கண்டேன். அவற்றில் எது உண்மையாகுமோ, நான் அறியேன்.]



திரை போடப்பட்டது. குதிரை முட்டை யிடத்தான் போகிறதென்பது நிச்சயமாயிற்று. குதிரையை வரவேற்று உபசரித்தவர்களும், அதனருகில் போகக்கூடாதென்று சொன்னவர்களும், எல்லாரும் வெளியில் நின்று ஆவலுடன் காத்திருந்தார்கள். கடைசியில், திரை தூக்கப்ய[illegible]கா குதிரை மாயமாய மறைந்து போயிற்று. அங்கே ஒன்

G[illegible]

றுங் காணோம். சிலர் பூதக்கண்ணாடி வைத்துக்கொண்டும் தேடிப் பார்த்தார்கள். அப்படியும் முட்டை யென்று சொல்லக்கூடிய எதுவும் அகப்படவில்லை; ஆஹா! என்ன ஏமாற்றம்?........



வேறொரு காட்சி பிரம்மாண்டமான, கோர ரூபமான, ஒரு முட்டை, குதிரை இருந்த இடத்தில் காணப்பட்டது. ஜனங்கள் அதைக் கண்டு பயந்து நாலுபுறமும் ஓட்டம் பிடித்தார்கள். என்ன பயங்கரம்?...



மீண்டும் ஒரு முறை திரை தூக்கப்பட்டது. பார்வைக்கு மிக வசீகரமான பொன் முலாம் பூசிய ஒரு முட்டை அங்கே இருந்தது. ஜனங்கள் அதைப் பார்த்தார்கள். அதன் மோகத்திலே விழுந்தார்கள். உடனே பெருஞ் சண்டை விளைந்தது. முட்டை எனக்கு உனக்கு என்று அடித்துக்கொண்டார்கள். அந்தோ! பரிதாபம்!

சென்னை அகராதி

அரசியல்:—இது ஒருவகைச் சூதாட்டம். சென்னையிலுள்ள பிரபல வக்கீல்கள் பலரும், இன்னும் வேலையற்ற பிரபுக்களும் இந்தச் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். "பொது ஜனங்கள்" "வாக்காளர்" "ஏழை எளியவர்கள்," "ஒடுக்கப்பட்டவர்கள்" முதலியோர் இந்த ஆட்டத்தில் பணமாக வைக்கப்படுகிறார்கள். ஆட்டத்தில் கெலிப்பவர்களுக்கு கௌரவ மாஜிஸ்ரேட் பதவிமுதல், நிர்வாகசபை அங்கத்தினர் பதவி வரையில் கிடைக்கலாம்.

ஆனந்தம்:—சென்னை நகரைப்பற்றி அகராதியில் இந்த வார்த்தைக்கு நியாயமாக இடமிருக்கக்கூடாது. ஆனால் தங்கசாலைவீதி 244-ம் நெம்பர் கட்டிடத்தில், சென்னையின் இந்த நற்பெயரைக் கெடுப்பதற்குக் சதியாலோசனை செய்து, மாதந்தோறும் "ஆனந்த விகடன்" என்னும் தூதனை அனுப்பி வருகிறார்கள்.

இல்லறம்:—இந்த அறம் சென்னையில் மிகமேலான முறையில் நடந்து வருகிறது. பெண்டாட்டிமீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தும் உத்தமக் கணவர்களையும், புருஷனை விஷமிட்டுக் கொல்லும் பதிவிரதா சிரோமணிகளையும் சென்னையில் காணலாம்.

ஈகை:—சென்னை வீதிகளில் நடமாடும் குஷ்டரோகிகளும், க்ஷயரோகக்காரர்களும் இந்தச் சிறந்த தர்மத்தைக் கடைப்பிடித்துத் தங்கள் நோய்களை எல்லாருக்கும் தாராளமாய் வழங்கி வருகிறார்கள். மற்றப்படி சென்னையில் இந்த "ஈகை"யைக் காண்பது சிறிது பிரயாசையான காரியந்தான்.

[illegible]க்கை:—அரிசி குத்தும் இயந்திரங்கள் வந்த பிறகு சென்[illegible]கிரந்த ஆயுதம் மிகவும் அபூர்வமாயிருந்து வருகிறது. எனி

னும், செங்காங் கடையிலுள்ள கற்பரசிகள் சிலர் வீட்டில் பண மிழந்த மைனர்களுக்கு இந்த ஆயுதத்தினால், அடிக்கடி பூஜை நடப்பதுண்டென்று அறிகிறோம்.

ஊமை:—சென்னைச் சட்டசபை அங்கத்தினரில் 100-க்கு 70 பேர் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லப்படுகிறது.

எக்ஷா பிராண்டி:—தீவிரமாக மதுவிலக்கை ஆதரிக்கும் சென்னை தினசரிப் பத்திரிகைகள் சிலவற்றில் இந்தச் சரக்கின் விளம்பரங்களைக் காணலாம். நேயர்கள் அவ்விளம்பரங்களைப் பார்த்து இதன் மகிமைகளை நன்கு தெரிந்து கொள்க.

ஏகாதசி:—சென்னை நகரின் வக்கீல்களிடமும், வைத்தியர்களிடமும் ஒரு முறை சிக்கிக்கொண்டவர்கள், பின்னர் தங்கள் வாழுள் முழுதும் தினந்தோறும் மேற்படி விரதம் அனுஷ்டிக்க வேண்டிவரும். ஒரு குழி நிலமாவது ஒரு தம்பிடி காசாவது பாக்கியிருக்கும் வரையில் அவ்வக்கீல்களும் வைத்தியர்களும் உம்மைவிட மாட்டார்கள்.

ஐகோர்ட்:—சென்னைக்கு வருவோர் எவரும் இந்தக் கட்டிடத்தைப் பாராமல் திரும்பிச் செல்லக்கூடாது. அவ்வளவு முக்கியம் பொருந்தியது. பட்டணத்து நவநாகரிக சிலர்கள் முதல் பட்டிக் காட்டுக் குடியானவர்கள் வரையில் எல்லா வகை மனிதர்களையும் இங்கே காணலாம். நாலு கையுள்ள மனிதர்களை இந்த இடத்தில் தவிர வேறெங்கும் பார்க்கமுடியாது. கட்சிக்காரர்களிடம் பணம் பறிப்பதற்குக் கடவுள் கொடுத்த இயற்கைக் கைகள் இரண்டு போதாவென்று செயற்கைக் கைகள் இரண்டு அவர்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்று:—சென்னைப் பட்டணத்திலுள்ள மார்வா[illegible] கடன் வாங்கியவர்கள் தப்பிப் பிழைப்பதற்கு வழி ஒன்றில் யா[illegible]

தான். கழுத்தில் கல்லைக் கட்டிக்கொண்டு வங்காளக் குடாக்கடலில் விழுவது தான் அந்த வழி.

ஓடு:—மௌண்ட் ரோட்டிலுள்ள வெள்ளைக்காரர் கடைகளுக்குள் ஒருவன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு புகுந்துவிட்டால், வெளியே வந்ததும் கையில் எடுத்துக் கொள்ள வேண்டியது ஓடு.

ஔடதம்:—முற்காலத்தில் இது நோய் போக்கும் சாதனமாயிருந்ததாகச் சொல்லப்படுகிறது. தற்போது சென்னையில் ஒரு சிலர் ஊரைக் கொள்ளையடிப்பதற்கு சாதனமாயிருந்து வருகிறது.

ஃ:—ஆங்கிலேயர் முதன் முதலில் சென்னைக்கு வந்தபோது ரூபாய் அணு பைசா மூன்று இனத்திலும் கொண்டு வந்த பணத்தை இது சுட்டிக் காட்டுகிறது.

கண்காட்சி:—எழும்பூரில் கண் காட்சிச் சாலை ஒன்றிருக்கிறது. அதில் ஆட்டுக் கொம்பு, அணில் வால், தேங்காய் நார், பருத்திக் கொட்டை, மண்பானை முதலிய அபூர்வ சாமான்களைக் காணலாம். இங்குள்ள சேவகர்கள் ஒவ்வொருவருக்கும் தலைக்குக் காலணு வீதம் கொடுப்பதற்கு மூன்று ரூபாய்க்குக் காலணு மாற்றிக் கொண்டு போகவும்.

காலாடிகள்:—இவர்களுக்குக் "காலிகள்," "சோம்பேறிகள்," "தேர்தல் ஏஜண்டுகள்" என்னும் வேறு பெயர்களும் உண்டு. அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களில் ஒரு கட்சியார் மற்றக் கட்சியாரைக் குறிப்பிடுவது இந்தச் சிறப்புப் பெயரினல் தான்.

"நப்போல் வளை":—இந்த அறமொழியைச் சென்னை கம் [illegible]லுள்ள தலைமைக் குமாஸ்தாக்கள் பெரிதும் அநுசரிக்கிறார் [illegible] [illegible]கொனு மொரு முறையில் இவர்களுடைய பந்துக்களாயிருந்

தாலன்றி, மற்றப்படி கம்பெனிகளில் குமாஸ்தா வேலைக்கு மனுச் செய்து கொள்ளுதல் விருதா, விருதா, விருதா.

ஙா:—'ஙா' முதல் 'ஙௌ' வரையில் உள்ள எழுத்துக்களைப் போல் சென்னைப் போலீசார் பொது ஜனங்களுக்கு உபயோகப் பட்டு வருகிறார்கள்.

சத் காலட்சேபம்:—இதற்குரிய வசதிகள் சென்னையில் நாளுக்கு நாள் பெருகிவருகின்றன. சலனப்படம் (சினிமா) பேசும் படம், சர்க்கஸ், நாடகம், நடனம், லேடி பாகவதர்கள் கதை முதலியவற்றில் எந்த சத்காலட்சேபத்திற்குப் போவது என்று தீர்மானித்தல் கஷ்டமான காரியம்.

சாது:—சென்னையில் சாதுக்களைப் பார்க்கவேண்டுமானால் பீபில்ஸ் பார்க்குக்குச் செல்லுங்கள். சிங்கம், புலி, கரடி முதலியவை அங்கே இனத்துக்கு ஒன்றிரண்டு இருக்கின்றன.

ஞயம்:—மூர்மார்க்கெட் வாசலில் ஒன்றரை அணா பௌண்டன் பேனாவை உம்மிடம் மூன்றே கால் ரூபாய்க்கு விற்க வருகிறவனின் பேச்சு "ஞயம்பட உரைத்த"லுக்கு உதாரணம்.

ஞானம்:—சைனாபஜாரில் நீர் உல்லாசமாக நடந்து செல்கிறீர். நல்ல சாமான்களெல்லாம் பாதி விலைக்கும், கால்விலைக்கும் கொள்ளை போவதைப் பார்த்து உமக்கு வயிறு எரிகிறது. எதை வாங்குவது, எதை வாங்காமலிருப்பது என்பதே தெரியவில்லை. கடைசியாக, அரையணா பெறுமான ஒரு ரப்பர் பொம்மையை "குறைந்த விலை" யான ஏழு அணாவுக்கு வாங்கத் தீர்மானித்துச் சட்டைப்பையில் கையை விடுகிறீர். அங்குப் பணப்பையைக் காணோம். அப்போது உமக்கு உதயமாவது ஞானம்.

டமாரம்:—சென்னை அரசியல் தலைவர்கள் தங்கள் பெருமையைப் பரப்புவதற்கு உபயோகிக்கும் கருவி. இதற்கு "பத்திரிகை" என்னும் வேறு பெயரும் உண்டு.

டாம் டாம்:—தலைவர்கள் டமாரம் அடித்தால் சீடர்கள் டாம் டாம் போடுவார்கள்.

ண, ஞ:—இந்த இரண்டு எழுத்துக்களையும் நாம் இங்கே புறக்கணித்துவிட்டுப் போவதுபோல், சென்னை மோட்டார் பிரபுக்கள் தாங்கள் கீழே தள்ளின பாதசாரிகளைத் திரும்பிப் பார்க்காமல் செல்வது வழக்கம்.

தண்ணீர்:—சென்னையில் ஏராளம். ஆனால் தாகமெடுக்கும் போது மட்டும் கிடைக்காது. வியாபார தந்திரம் அறிந்தவர்கள் சிலர் இதைப் புட்டிகளில் அடைத்து அரையணு முதல் நாலு அணு வரையில் சோடா என்றும், வேறு பல பெயர்கள் சொல்லியும் விற்கிறார்கள். சென்னை ஹோட்டல்களில் இது "காப்பி" என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

தாராளம்:—சென்னை வீதிகளில் பலவகைத் துண்டுப் பிரசுரங்கள் கொடுக்கும் சிறுவர்களிடம் இந்தச் சிறந்த குணம் பொலிவதைக் காணலாம். நீர் வேண்டாமென்றாலும் கேளாமல் கையில் கட்டு விளம்பரம் திணித்து விடுவார்கள்.

நண்டு:—சென்னைக் கடற்கரையின் பிரசித்திக்கு முக்கிய காரணமாயிருப்பவைகளில் ஒன்று. அதன் பிரசித்திக்கு மற்றொரு காரணம், ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, குழந்தை வகையறாவின் பிரசங்கங்கள்.

அல்லது

நகர சபை:—எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கி ஜார்ஜ் டவுனுக்குப் போகும்போது வழியில் ஒரு பெரிய வெள்ளைக் கட்டிடம் காணப்படும். அந்தக் கட்டிடத்தில் போடப்படும் கூச்சலையும், [illegible] 'கலாட்டா'வையும் பார்த்து அது மீன் கடையென்று ய[illegible] [illegible]கொட வேண்டாம். அதுதான் நகர சபை மண்டபம் என்

றும், நகர சபைப் பிரதிநிதிகள் அப்போது ஏதோ முக்கியமான விஷயத்தைப்பற்றி வாதமிடுகிறார்கள் என்றும் அறிந்து கொள்க.

நாகரீகம்:—சென்னையில் நாகரிகம் வளர்ந்து வருகிற தென்பதைப்பற்றி அபிப்பிராய பேதமே இருக்கமுடியாது. சாராயக்கடை, சுருட்டுக் கடைகளின் வளர்ச்சியையும், கொசுக்களின் பெருக்கத்தையும் கொண்டு சென்னையில் நாகரிகத்தை ஒருவாறு அளந்தறியலாம்.

பணம்:—இந்த வஸ்துவை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் தவிப்பவர்கள் அடுத்த ரயிலில் சென்னைக்குப் புறப்படுவார்களாக.

பால்:—வெளியூர்களில் இதற்குத் தண்ணீர் என்று பெயர். சென்னையில் ‘பால்’ என்பதாக வழங்குகிறது.

மகாஜனசபை:— பத்திரிகைகளில் அடிக்கடி இந்தப் பெயர் காணப் படுவதிலிருந்து சென்னையில் இம்மாதிரி சபை ஒன்றிருப்பதாக வெளியூர் நேயர்கள் பலர் அறிந்திருக்கலாம். ஆனால் அவர்கள் சென்னைக்கு வந்தால் மேற்படி சபையை எளிதில் கண்டுபிடித்து விடலாமென்று எண்ணி ஏமாற வேண்டாம். அது இருக்குமிடத்தைப் பகிரங்கப்படுத்தக்கூடிய தவறான காரியம் எதுவும் சபை நிர்வாகிகள் செய்வதில்லை.

மான்விழியார்:—(ஆடவர்களுக்கு மாத்திரம்) இவர்கள் கண் வலையில் விழுந்து படவேண்டாம். எச்சரிக்கை!

யமன்:—இந்த ஆசாமிக்குச் சென்னை நகரில் அதிக வேலை கிடையாது. பெயர்பெற்ற ஆங்கிலேய டாக்டர்களும், அரசாங்க மெடல்கள் பெற்ற ஆயுர்வேத வைத்தியர்களும் கேஸுக்கு ஆயிரம் ரூபாய் வாங்கும் யூனானி ஹக்கிம்களும், மோட்டார் வண்டிகளும், கொசுக்களும் சென்னையில் ஏராளமாய் இருப்பதால் யம[illegible]ப வேலை பெரிதும் மிச்சப்பட்டு வருகிறது.

யார்:—சென்னை நகரில் உள்ள உமது அருமை நண்பரையோ, உற்ற பந்துவையோ ஒருவேளைச் சாப்பாட்டுக்காக நீர் தேடிச் சென்றால், அவர் உம்மைப் பார்த்துக் கேட்கும் கேள்வி "நீ யார்?"

ரயில்:—அவசரமான காரியங்களைத் தடை செய்வதையே தொழிலாகக் கொண்ட பேய். மோட்டார் பஸ்ஸிலோ, வேறு வாகனத்திலோ நீர் கடுவேகமாய்ப் போய்க் கொண்டிருக்கும்போது சட்டென்று ரயில்கேட் சாத்தப்படுவதைத் தவறாது பார்க்கலாம்.

(பி)ராட்வே:—உங்களுக்கு என்னவேண்டும்? உடுப்பு ஜோடு வேண்டுமா? கிராமபோன் பெட்டி வேண்டுமா? பத்திரிகை வேண்டுமா? "பார்க்" வேண்டுமா? சிற்றுண்டி வேண்மோ? புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டுமா? பணப் பையைப் பறிகொடுக்க வேண்டுமா? அல்லது உங்கள் மேலே மோட்டார் ஏறவேண்டுமா? இவ்வளவும் மேற்படி ஒரு வீதியிலேயே நீங்கள் அடைதல் கூடும்.

லஞ்சு ஹோம்:—காலணு வடையை ஓர் அணுவுக்கும், 'கலர்' கொடுத்த தண்ணீரை ('ஸ்குவாஷ்' என்றும் 'கிரஷ்' என்றும் பெயர் சொல்லி) ஒன்றரையணுவுக்கும் விற்கும் பகல் கொள்ளைக்காரர்கள் தமக்குச் சாதகமாக வைத்துக் கொள்ளும் நாகரிகப் பெயர்.

லாப நஷ்டம்:—மேற்சொன்ன லஞ்சு ஹோம் ஒன்றில் நீங்கள் ஆறு அணுவுக்குச் சிற்றுண்டி அருந்தினுல் உங்களுக்கு ஆறு அணு நஷ்டம்; அவர்களுக்கு ஐந்தே முக்காலணு லாபம்.

வண்டி:—மோட்டார், டிராம், ரயில், ரிக்ஷா, குதிரை வண்டி, மாட்டு வண்டி, முதலியவைகளுக்குச் சென்னையில் கணக்கென்பது கிடையாது. ஆனுல் உமக்கு அவசரமாய் வேண்டும்போது மட்டும் இவற்றில் ஒன்றுகூடக் கிடைக்காது.

[illegible]டகை:—கண்யமான அபிப்பிராய பேதம் ஏற்படுவதற்கு ய[illegible]ாய் விளங்குவது. சென்னையில் வீடுகளின் சொந்தக்கா
[illegible]

ரர்களைக் கேட்டால் "வாடகை மிகவும் குறைவு" என்று சொல்வார்கள்: குடியிருப்பவர்களைக் கேட்டால் "ஐயோ! வீட்டுவாடகையா? அநியாய அதிகம்!'' என்பார்கள். வண்டி வாடகை விஷயத்திலும் இது பொருந்தும்.

(வ)ழ(வ)ழ:—அரசாங்கத்தின் செயல்களைக் கண்டிக்கும் போது சென்னைப் பத்திரிகைகளும் தலைவர்களும் சாதாரணமாய்க் கையாளும் முறை. சட்ட சபையில் சங்கடமான கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது அரசாங்கம் கடைப் பிடிக்கும் முறையும் இதுவே.

ள, ற, ல:—இந்த மூன்று எழுத்துக்களின் விஷயத்தில் மேற்குறிப்பிட்ட முறையை நாம் அனுசரிக்க வேண்டியதாயிருப்பது குறித்து நேயர்கள் வருத்தப்பட மாட்டார்களென்பதை நன்கறிந்துள்ளோம் என்று தெரிவித்துக் கொண்டு இந்த அகராதியை இனிது முடிக்கிறோம்.



இருப்பதா? இறப்பதா?

[சட்டசபை அங்கத்தினர் பிரலாபம்.]

ஐயா! கல்கியே! ஏதேதோ கதை வளர்த்துக்கொண்டிருக்கிறீரே? சிரிப்பு விளையாட்டுக்கெல்லாம் இது தானா சமயம்? தேசத்திலே பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. என் வாழ்க்கையிலோ அதை விடப் பெரிய நெருக்கடி தோன்றியிருக்கிறது. "இருப்பதா? இறப்பதா?" என்னும் கேள்விக்கு இப்போது பதில் சொல்லியாக வேண்டும். இருப்பதிலும், இறப்பதிலும் உள்ள லாப நஷ்டங்களையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்து முடிவு செய்யவேண்டும். இத்தகைய நெருக்கடியில் நீர் எனக்கு உதவி செய்யப் போகிறீரா, அல்லது வெறும் அரட்டையே அடித்துக்கொண்டிருக்கப் போகிறீரா?

நல்லது அப்படியானால் நான் சொல்லப்போவதையெல்லாம் கவனமாய்ச் செவிகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்து, கடைசியில் உமது ஆலோசனையைச் சொல்லும் பார்க்கலாம். மகாத்மாவையும், பண்டித நேருவையும் போல நீர் பிறர் கஷ்டம் தெரியாத மனிதரல்ல. அதனால்தான் உம்மிடம் வந்தேன். சட்டசபை அங்கத்தினர் பதவி என்றால் ஏதோ ரோஜாப்பூ மெத்தையென்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த ரோஜா மெத்தையில் முள்ளுகள்தான் அதிகம் என்பது அதில் படுத்து அனுபவித்தவர்களுக்கே தெரியும். ஐயோ! இந்தப் பதவி அடைவதற்காக நான் பட்ட பாடுகளையும், பதவி அடைந்த பிறகுகூட நான் நாளதுவரை அநுபவித்து வரும் துன்பங்களையும் எண்ணிப் பார்த்தால் "சை! இதைத் தொலைத்துத் தலை முழுகலாம்" என்று தோன்றுகிறது. ஆனால் எந்தக் காரியமானாலும் அதிலுள்ள லாப நஷ்டங்களைத் தீர ஆலோசித்துப் பார்க்கவேண்டும். எதற்காக இவ்வளவு கஷ்டங்களெல்லாம் ... அந்த நோக்கம் நிறைவேறுவதற்குள், வெண்ணெய்

திரளும் சமயத்தில் தாழி உடைந்தாற்போல, சட்டசபையை விட்டு விடுவதென்றால் மனம் வரவில்லை.

முதலிலிருந்து தொடங்குகிறேன், கேளுங்கள். சுமார் பதினைந்து வருஷத்திற்கு முன்னால் எனக்கு இந்த எண்ணம் உண்டாயிற்று. அது முதல் எல்லா வகையான பொதுக் காரியங்களிலும் ஈடுபட்டு வந்தேன். காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்தேன். ஹோம்ரூல் சங்கத்தில் சேர்ந்தேன். தொழிலாளர் இயக்கத்தில் கலந்தேன். சமூக சீர்திருத்த சபைகளில் அங்கத்தின ரானேன். எந்த வேளையில், எந்த ஸ்தாபனத்தின் ஆதரவில், எந்த விதமான கூட்டம் நடந்தாலும் போகத் தவறமாட்டேன். குறைந்தது அரைமணி நேரமாவது பிரசங்கம் செய்யாமல் விடமாட்டேன். சாதாரணமாய் எப்போதும் என்னைக் கடைசியில்தான் பேசச் சொல்வார்கள். ஏனென்றால் எந்தக் கூட்டத்திலும் நான் பேசிவிட்டால் அப்புறம் ஒருவரும் இருக்கமாட்டார்கள். சபையில் ஒருவராவது பாக்கி இருக்கும் வரையில் நான் பேச்சை நிறுத்தமாட்டேன். சிலசமயம் வழக்கம்போல் "கனவான்களே!" என்று அழைத்துவிட்டு, அப்புறம் என்னை நானே திருத்திக்கொண்டு "ஐயாவே!" என்று அழைத்துப் பேசியதுண்டு. வேறு சில கூட்டங்களில் அக்கிராசனரை மட்டும் வைத்துக்கொண்டு சரமாரியாய்ப் பொழிந்திருக்கிறேன்.

பிரசங்கம் செய்வதுடன் வேலை முடிந்து விட்டதென்று நினையாதீர்கள். பிரசங்கத்தை ஒரு சிலர் தான் கேட்பார்கள். ஆனால் அதுவே பத்திரிகையில் வந்தால் ஆயிரக் கணக்கானவர்கள் படிப்பார்கள். ஆகையால் என் பிரசங்கத்தை முழுதும் பத்திரிகையில் போடுவதற்கு ஏற்பாடு செய்து வந்தேன். இது இலேசான வேலையா? பத்திரிகை நிருபர்களை எவ்வளவோ தழுவிக் கட்டியாகவேண்டும். மேலும் அவர்களில் சிலர்,விஷயம் தெரியாதவர்கள். பேசியது பேசியபடியே போட்டு விடுவார்கள். இதற்காக நானே என் பிரசங்கத்தை எழுதி, முன்னுக்குப் பின் உதையாமல் அழகு படுத்திக் கொ[illegible]

[illegible]ல் யா[illegible]

கூட்டங்களில் அக்கிராசனம் வகிப்பதற்கு நான் சிறிதும் பின் வாங்கியதில்லை. பொதுக்கூட்டங்கள்; ஆண்டு நிறைவிழாக்கள்; தொழிலாளர் சங்கங்கள்; ரெட்டியார், முதலியார், கவுண்டர், வன்னிகுல க்ஷத்திரியர், தேவேந்திரகுல வேளாளர் முதலியோரின் சாதி மகாநாடுகள்; வர்ணாசிரம பரிஷத்துகள்; ஜில்லா, தாலூகா, கிராம அரசியல் மகாநாடுகள்; கூட்டுறவுச் சங்கங்கள்; மாஜி கைதிகள் சங்கங்கள்; பழைய மாணுக்கர், புதிய மாணுக்கர் சங்கங்கள்; வாசக சாலைகள்; வரிகொடுப்போர் சங்கங்கள்; சன்மார்க்க சபைகள்; ஜீவகாருண்ய சபைகள்; ஆகிய இவைகளின் சாதாரண கூட்டங்களிலும் வருஷோற்சவங்களிலும் நான் அக்கிராசனம் வகித்தவைகளைக் கணக்கிட்டால் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லட்சம், கோடி, சங்கம், பதுமம், வெள்ளம், மகா வெள்ளம் என்று கணக்கில்லாமல் போகும். இந்த வைபவங்களில் அக்கிராசனருக்குப் பூமாலை வாங்கிப் போடுவதற்காக நான் கொடுத்திருக்கும் பணம் மட்டும் எவ்வளவு இருக்கும் தெரியுமா? நினைத்தால் பெருமூச்சு வருகிறது.

கொடுத்த பணம் இவ்வளவென்ருல் கொடுக்காத பணத்துக்கு அளவு சங்கையே கிடையாது. உமக்குப் புரியவில்லை யல்லவா? விளக்கமாய்ச் சொல்கிறேன், கேளும். நான் பொது வாழ்வில் ஈடுபட்டதிலிருந்து கையெழுத்துப் போட்டிருக்கும் சந்தாத்தொகைகளையும், நன்கொடைகளையும் கணக்கிட்டால் இந்தப் பாரத நாட்டையே விலைக்கு வாங்கி விடலாம். யார் என்ன காரியத்துக்காக வந்து பணங்கேட்டாலும் நான் "இல்லை" யென்று சொல்வது மட்டும் கிடையாது. அற்ப சொற்பமாய்க் கொடுக்கவும் எனக்குத் தெரியாது. பண்டித மாளவியா காசி ஹிந்து சர்வ கலாசாலைக்காக யாசகத்துக்கு வந்தார். முதலில் ரூ. 5000-த்துக்குக் கையெழுத்துப் போட்டவன் நான்தான். கவி ரவீந்திரநாத தாகூர் தமது சாந்தி நிகேதன[illegible]ாக வந்தார். கூசாமல் ரூ. 2000-கையொப்பம் செய்[illegible] [illegible]ாத்மா காந்தி திலகர் சுயராஜ்ய நிதிக்காக வந்தார்.

ரூ. 20,000-கொடுத்தேன். (அதாவது கொடுப்பதாகச் சொன்னேன்.) இதேமாதிரியாகக் கதர் இயக்கம்,மதுவிலக்கு, ஹிந்திபிரசாரம், ஹிந்து மகாசபை, சுத்தி இயக்கம் முதலியவைகளுக்கும் கையொப்பமிட்டேன். இந்தப் பெரிய அகில இந்திய இயக்கங்களை யல்லாமல். உள்ளூர் இயக்கங்கள், கமிட்டிகள், சங்கங்கள், சபைகள், திருவிழாக்கள், பள்ளிக்கூடங்கள், வாசகசாலைகள், வருஷோற்சவங்கள், வெள்ளக் கஷ்ட நிவாரணங்கள் இவைகளுக்கெல்லாம் கணக்கில்லாமல் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் முதவில் என் பெயர் பத்திரிகைகளில் வருவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆனால் இவ்வளவுக்கும் பணங் கொடுத்துவிட்டேன் என்று நினைக்கிறீரோ? அப்படிச் செய்திருந்தால் இன்று நான் ஓட்டையாண்டியாய் நிற்க வேண்டியதுதான். அந்தப் பருப்பு இங்கே வேகாது. கையெழுத்துப் போடவேண்டியது என்கடமை. வசூலிக்க வேண்டியது அவர்கள் கடமை. ஆஹா! அவர்கள் வசூலித்தால் வசூலித்துக் கொள்ளட்டும்.

1918-ம் வருஷத்தில் மாண்டகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் வந்தபோது, சட்டசபைக்குச் செல்ல இதுதான் சந்தர்ப்பம் என்று தீர்மானித்து, காங்கிரஸ் மகாசபையின் முன்னணியில் நின்று அதிதீவிரமாய் வேலைசெய்து வந்தேன். ஆனால் உமது மகாத்மா இருக்கிறாரே, மகாத்மா, அவர் குறுக்கே வந்து கெடுத்தார். ஒத்துழையாமை தீவிரமாய் நடந்தவரையில் கொஞ்சம் விலகி யிருத்தல் தான் நல்லது, என்று தீர்மானித்து அப்படியே இருந்தேன். ஆனால் காந்தி சிறைக்குப் போய் தேசபந்து தாஸர் சட்டசபைக் கொடியை உயர்த்தியபோது முதலில் அந்தக் கொடியின்கீழ் சென்றவன் நான் தான்! உமக்குத்தான் அந்த விஷயங்க ளெல்லாம் தெரியுமல்லவா? ஆகையால் சுருக்கமாய்ச் சொல்கிறேன். தேசபந்து என்னைத் தன் வலது கண்ணு யெண்ணி யிருந்தார். வழக்கம்போல் சுயராஜ்யக் கட்சிக்கு ரூபா 10,000 வீசி யெறிந்தேன்—காகிதத்தி[illegible] யாதா? உனக்கும் பெப்பே! உங்கப்பனுக்கும் பெப்பேதல் ய[illegible]

பிறகு தேர்தல் வந்தது. அடடா! அப்போது நான் பட்ட பிரயாசையை நினைத்துப் பார்த்தால்!—இராப் பகல் தூக்கமுண்டா? ஒரு நிமிஷம் ஒய்வு ஒழிவு உண்டா? வேளா வேளையில் சாப்பாடுண்டா? ஒன்றும் கிடையாது. அப்போது நான் அளித்த வாக்குறுதிகளை எண்ணினுல், இந்த நெருக்கடியான சமயத்திலும், எனக்குச் சிரிப்பு வருகிறது. உதாரணத்துக்கு ஒன்றிரண்டு சொல்கிறேன், கேளுங்கள்!

(1) வர்ணுசிரம தர்மத்தை நிலை நாட்டுவதற்காக என் உடல் பொருள் ஆவிகளை யெல்லாம் அர்ப்பணம் செய்வதாய் அக்கிரகாரங்களில் உறுதிமொழி கூறினேன்.

(2) சாதி வித்தியாசத்தையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்காக அல்லும் பகலும் அனவரதமும் உழைப்பே னென்று சீர்திருத்தக்காரர்களுக்கு வாக்களித்தேன்.

(3) சுமார் நூற்றைம்பது கிராமங்களில் கோயில்கள் கட்டுவதற்கும், பழைய கோயில்களைப் புதுப்பிப்பதற்கும் நன்கொடை யளிப்பதாகக் கையொப்பமிட்டேன்.

(4) சட்ட சபைக்குச் சென்றதும், கோயில்களிலுள்ள விக்கிரகங்களை யெல்லாம் அப்புறப்படுத்தி அவைகளைப் பள்ளிக்கூடங்களாகவும், தொழிற் சாலைகளாகவும் மாற்றுவதற்கு ஒரு மசோதா கொண்டு வருவதாய் சுயமரியாதை வாலிபர் சங்கத்தில் "குடியரசு" சாக்ஷியாக சத்தியப் பிரமாணம் செய்தேன்.

(5) விதவா விவாகத்தைச் சட்ட மூலம் தடுப்பதற்குக் கிளர்ச்சி செய்வதாய் வைதிக கோஷ்டியில் உறுதி கூறினேன்.

(6) விதவா விவாக இயக்கத்தைப் பூரணமாய் ஆதரிப்பதாயும், தேர்தல் முடிந்தவுடன் நானே குறைந்தபட்சம் ஐந்தாறு விதவைகளை கலியாணம் செய்துகொள்வதாயும் விதவா விவாக சங்கத்தில் வாக்ய[illegible]ன்.

[illegible] கா[illegible]

மாதிரிக்கு இவையே போதும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதமல்லவா?

தேர்தல் முடிந்தது. வோட்டு கணக்கெண்ணியதும், எனக்கும் என் விரோதிக்கும் நெருக்கடியான போட்டி ஏற்பட்டு வந்ததும், கடைசியில் இருபது வோட்டுகள் அதிகத்தினால் நான் ஜெயமடைந்ததும், உடனே நான் மூர்ச்சையாகி விழுந்ததும், இந்தச் செய்தி கேட்க சுயராஜ்யக் கட்சித் தலைவர் ஓடி வந்ததும், நான் மூர்ச்சை தெளிந்து அவரைக் கட்டித் தழுவிக்கொண்டு சந்தோஷப் பெருக்கால் அழுததும்,—முன்னும் மற்ற சங்கதிகளும் நீர் அறிந்தவையே. ஆதலின் அவைகளை விட்டு மேலே செல்கிறேன்.

தேர்தல் முடிவோடு என் கஷ்டங்களும் முடிந்துவிடு மென்று எண்ணியிருந்தேன். ஏமாந்து போனேன். நாளதுவரை என்னுடைய பதவியினால் ஒரு தம்பிடிகூட லாபம் கிடையாது. நான் சென்னை நகரிலேயே குடி யிருப்பதால் மற்ற அங்கத்தினர்களுக்குக் கிடைக்கும் முதல் வகுப்புப் படிச் செலவுப் பணம் கூட எனக்குக் கிடைப்பதில்லை. என்னுடைய சகோதர அங்கத்தினர் சிலர் பணஞ் சம்பாதிக்கச் சிற்சில வழிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். சட்டசபையில் கேள்விகள் போடுவதற்கு, கேள்விக்கு இவ்வளவு ரூபாய் என்று சிலர் கட்டணம் வாங்குகிறார்கள். ஆனால் நான் ஜமீன்தாரனாகையால் அற்பசொற்பமான தொகைகளைக் கொடுக்க யாரும் முன்வருவதில்லை. வெட்கத்தை விட்டுப் பத்தும் இருபதும் வாங்கி என் தரித்திரம் தீரப்போவதுமில்லை. தேவஸ்தான மசோதா, தேவதாசி மசோதா இவைகளை எதிர்ப்பதற்காகச் சிலர் மடாதிபதிகளிடமிருந்தும் கோயி லதிகாரிகளிடமிருந்தும் பணஞ் சம்பாதித்தார்கள். ஆனால் நானே மூன்று கோயில்களின் தர்ம கர்த்தாவாகையால் நான் அதைக் கட்டாயம் எதிர்ப்பேனென்று நம்பி ஒருவரும் எனக்குப் பணங் கொடுக்கவில்லை.

லாபந்தான் இல்லையே? நஷ்டமாவது இல்லாமலிருந்[illegible] டாமா? அதை என் கேட்கிறீர்கள், ஐயா! சொன்னால் [illegible]

சல். கையெழுத்துப் போட்டுப் பணங் கொடுக்காதிருக்கும் முறை பெரிய மனிதர்களிடந்தான் பலிக்கும். தேர்தல் ஏஜண்டுகளிடமும் கிராமவாசிக ளிடமும் அது பலிக்கவே பலிக்காது. தேர்தல் ஏஜண்டுகள் சங்கதிதான் உமக்கு நன்ருய்த் தெரியுமே? அவர்கள் வீட்டில் பெண்கள் புஷ்பவதிகளாகும் சுபகாரியம் முதற்கொண்டு அவர்களுடைய பாட்டன் பாட்டிமார் சாகும் அசுபகாரியம் வரையில் எல்லாவற்றிற்கும் நான் பணங் கொடுக்கவேண்டும். கிராமவாசிகளைப் மற்றியோ சொல்லவேண்டியதில்லை. ஒரு கிராமத்துக் கோயிலுக்கு 100-ரூபாய் தருவதாய் வாக்களித் திருந்தேன். தேர்தல் முடிந்து மூன்றுமாதம் வரை அவர்கள் பொறுத்துப் பார்த்தார்கள். அது வரை பணம் வராமல் போகவே பத்துப் பன்னிரண்டு பேர் போவதற்கு மட்டும் ரயில் சார்ஜ் எடுத்துக்கொண்டு கிளம்பி இங்கே வந்து சேர்ந்தார்கள். அந்தப் பட்டிக்காட்டான்களுக்கு ஒரு வாரம் சோறும் போட்டு நகரெல்லாம் சுற்றிக் காட்டி, வாக்களித்த நூறு ரூபாயுடன் ரயில் செலவுக்கும் பணம் சேர்த்துக் கொடுத்து அனுப்ப வேண்டியதாயிற்று.

பணந்தான் நஷ்டமாகிறதே? கஷ்டமாவது இல்லாம லிருக்கிறதா? இந்தப் பதவி கிடைத்தது முதல் நான் அடைந்து வரும் தொல்லைகளைச் சொல்லி முடியாது. யாரார் இன்னின்ன வேலைதான் எனக்கிடுவது என்று ஒரு வரம்பே இல்லை. ஓர் ஊரில் மழை பெய்யாவிட்டால் அதைப்பற்றி உடனே தக்க எற்பாடு செய்யும்படி கடிதம் வருகிறது, வருண பகவானுக்குத் தந்தி யடிக்கலாமென்றால், 'இராஜத் துரோகம்', என்று தபாலாபீஸில் எடுத்துக் கொள்வதில்லை. "என் பிள்ளை பி. ஏ. பரீட்சை தேறி யிருக்கிறான். அவனுக்கு ஓர் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுங்கள்" என்று ஒருவர் வருகிறார். "என் மருமகன் பி. எல். பரீட்சைக்குப் போயிருக்கிறான். அவன் பரீட்சை தேறுவதற்கு எற்பாடு செய்யுங்கள்." என்று மற்[illegible]வர் சொல்கிறார். "என் பெண்ணுக்கு வயதாகிவிட்டது, ய[illegible] கேட்காத மாப்பிள்ளை தேடிக் கொடுங்கள்" என்று [illegible]

வேறொருவர் கேட்கிறார். "என் பிள்ளைக்கு ரூ 4000-வரதட்சிணை யுடன் பெண் தேடிக் கொடுங்கள்" என்கிறார் இன்னொருவர். எதைத் தான் நான் செய்வேன்?

மூன்றாம்வகுப்பு ரயில் பிரயாணத்தில் நெருங்கித் துகையலான ஒரு வாயாடி "சட்டசபை அங்கத்தினர் இந்த அநியாயத்துக்குப் பரிகாரங் தேடாமல் வேறென்ன செய்கிறார்?" என்று ஆத்திரமாய் வினவுகிறார். "ஊரில் மாட்டுநோய் வந்திருக்கிறது. கால் நடைகளெல்லாம் சாகின்றன: சட்டசபை அங்கத்தினரோ தூங்குகிறார். அடுத்ததடவை வோட்டுக்கு வரும்போது அவருக்குப் பாடங் கற்பிக்கவேண்டும்" என்று ஒருவர் பயமுறுத்துகிறார். "எங்கள் ஊரில் நாவிதர்களெல்லாம் கட்டுப்பாடு செய்து க்ஷவரம் பண்ணுவதில்லை யென்கிறார்கள். உடனே வரவேண்டும்" என்று ஒரு கிராமத்திலிருந்து தந்தி வருகிறது. ஐயா! கல்கியே! நீரே சொல்லும், நான் எதை யென்று செய்வேன்? மாப்பிள்ளை தேடுவேனா? மாட்டு வைத்தியம் பண்ணுவேனா? க்ஷவரம் செய்யப் போவேனா?

நல்லது, இவ்வளவு தொல்லைகளுக் கிடையில் என் இப்பதவியைக் கட்டிக்கொண்டு அழவேண்டுமென்று நீர் கேட்கலாம். நியாயமான கேள்வி. அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டவன். ஜனங்கள் குதிரைப் பந்தயத்துக்கு ஏன் பணம் கட்டுகிறார்கள்? நூறு பேர் நஷ்டப்பட்டால் ஒருவனுக்கு லாபம் வருகிறதல்லவா? அந்த ஒருவன் நாமா யிருக்கக்கூடாதா என்ற ஆசைதான். அதே மாதிரி அடுத்ததடவை மந்திரி உத்தியோகம் நமக்குக் கிடைக்காதா என்ற ஆசையினால் எனக்கும் சட்டசபைப் பாசம் விடமாட்டேனென்கிறது. அப்போது கூட்டுவட்டியுடன் லாபம் பெறலாமல்லவா? மந்திரிபதவிதான் வேண்டுமென்னும் அவசியம் கூட இல்லை. மந்திரி கட்சியிலிருந்தாலே போதும். ஒரு ஜில்லா போர்டு சபை என் கைக்கு வரவேண்டியது. அதன் அக்கிராசன ஞகிவிட்டால் அப்புறம் என் உடம்பில் உயிர் உள்ளவரையில் அதைவிட்டு ல ய


அசைக்கமுடியுமா? நாய்க்கு எலும்புத் துண்டு எறிவதுபோல் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கண்டிராக்டு கொடுத்து வந்தேனுனல் தீர்ந்தது.

ஏன்? இப்பொழுதுகூட பேற்படி நிபந்தனையின்பேரில் மந்திரிக் கட்சியைச் சேர நான் தயார்தான். ஆனல் என் ஜில்லாவில் இப்போதிருக்கும் ஜில்லா போர்டு தலைவர் மந்திரிக் கட்சியாதலால் அவரை விரட்ட முடியாது. ஆகையால் மந்திரி சபையையே கைப்பற்றிக் கொள்வதைத் தவிர எங்களுக்கு வேறுவழி கிடையாது. எனவே மந்திரி சபைக்குள்ளும் நுழைந்து பூரண சுதந்திரக் கொடியை நாட்டுவதற்காக நாங்கள் பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கையில் லாகூர் காங்கிரஸ் பெரிய கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டது. எங்கள் ஆசையை யெல்லாம் நிராசையாகச் செய்துவிட்டது.

என்ன அநியாயம், பாருமையா! தற்போது எங்களைச் சட்டசபையிலிருந்து விலகச்சொல்லக் காங்கிரஸுக்கு அணுவளவேனும் உரிமையுண்டா? கிடையவே கிடையாது. நாங்கள் காங்கிரஸ் அபேட்சகர்களாக நின்றது உண்மைதான். ஆனல் அப்போது சட்டசபையின் காலம் மூன்று வருஷமென்று தானே இருந்தது? ஆகையால் அந்த மூன்று வருஷத்துக்குத்தானே நாங்கள் காங்கிரஸுக்குக் கடமைப்பட்டவர்கள்? சென்ற வருஷத்தோடு அந்த மூன்று ஆண்டுகளும் முடிந்து போயின. இப்போது நாங்கள் சட்டசபையி லிருப்பது காங்கிரஸின் தயவினலா? ஒரு நாளுமில்லை. சர்க்கார் தயவினல் அல்லவா இந்த வருஷம் நாங்கள் சட்டசபையி லிருப்பது? போனவருஷமே தேர்தல் நடத்தவேண்டியிருந்தும் அப்படிச் செய்யாமல் சட்டசபையின் காலத்தை நீடித்தவர்கள் அரசாங்கத்தார் அல்லவா? அப்படியிருக்க ராஜிநமா செய்யச்சொல்லக் காங்கிரஸுக்கு என்ன அதிகாரமிருக்கிறது?

ஆனல் இதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. காங்கிரஸின் ய[illegible]ம் கட்டளையும் என்னை என்ன செய்துவிடும்? நான் கவ
[illegible]கிர

லைப்படுவ தெல்லாம் அடுத்த தேர்தலைப்பற்றித்தான். இதை எண்ணும்போது தான் பெரிய தர்மசங்கடமா யிருக்கிறது. இத்தனைநாள் காங்கிரஸ்வாதியா யிருந்த நான் இப்பொழுது ராஜிநாமா செய்யா விட்டாலும், அல்லது ராஜிநாமா செய்து மறுதேர்தலுக்கு நின்றாலும் பெரிய அபகீர்த்தி ஏற்படலாம். இது ஒருவேளை அடுத்த பொதுத் தேர்தலில் எனக்குப் பாதகமாகக்கூடும். ராஜிநாமா செய்து சும்மா விருந்தாலோ என் எதிரி அந்த ஸ்தானத்தைப் பற்றிக்கொண்டு விடுவான். பிறகு அவனை அங்கிருந்து கிளப்புவது அசாத்தியமாகலாம். சட்டசபைக்குப் போகும் ஆசையையே விட்டு விடுவதென்றால் அரசியல் வாழ்க்கையில் நான் இறந்து போனதாகவே முடியும். சட்ட மறுப்பு, சிறைச்சாலைப் பிரவேசம் முதலியவைகளுக்கும் எனக்கும் வெகு தூரம். இதுதான், ஐயா! இப்போது ஏற்பட்டிருக்கும் மகா நெருக்கடியான நிலைமை. நீர் என்ன யோசனை சொல்கிறீர்? நான் இருப்பதா? இறப்பதா?



புது ஓவர்ஸியர்



1

ஹிதோப தேசம்

சம்பந்தம்பிள்ளை ஹைஸ்கூலிலும், காலேஜிலும் மாணாக்காரா யிருந்தபோது அவருக்கும் மற்ற மாணாக்கர்களுக்கும் வித்தியாசம் ஏதேனு மிருப்பதாக எவருக்கும் தோன்றவில்லை. பின்னர் அவர் கிண்டி என்ஜினியரிங் கலாசாலையில் பயிற்சி பெற்ற காலத்திலும் முதல் இரண்டு, மூன்று வருஷங்கள் சாதாரணமாய் மற்ற மாணாக்கர்களைப் போலவே வாழ்க்கை நடத்திவந்தார். பாடம் படித்தல், பரீட்சையில் தேறுதல், உத்தியோகம் பார்த்தல், பணந்தேடுதல்; இவையே அவர் வாழ்க்கை இலட்சியங்கள். சீட்டாட்டம், சினிமா, சிகரெட், சிறுகதை, சில்விஷமம்—இவைதான் அவர் சந்தோஷானுபவங்கள். ஆனால் என்ஜினியரிங் கலாசாலையில் அவர் படித்த கடைசி வருஷத்தில் அவரிடம் சிற்சில மாறுதல்களை அவருடைய தோழர்கள் கண்டார்கள். காந்தி, டால்ஸ்டாய், ரஸ்கின் முதலியோருடைய புத்தகங்களை அவர் அதிகமாகப் படிக்க ஆரம்பித்தார். அக்கலாசாலைக் கோட்டைக்குள் முதன் முதல் தைரியமாகக் கதர்க்கொடியை நாட்டியவர் அவர்தான். சீட்டாட்டம் முதலியவற்றில் அவருக்குச் சுவை குறையத் தொடங்கிற்று. அடிக்கடி தனிமையில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்துவிடும் பழக்கத்தைக் கைக் கொண்டார்.

பரீட்சை முடிந்ததும் சம்பந்தம் பிள்ளை தமது மாமாவும், மாமனாருமான அம்பலவாணம் பிள்ளையிடம் யோசனை கேட்கச் சென்றார். ஸ்ரீமான் அம்பலவாணம் பிள்ளை மயிலாப்பூரில் மத்தியதரமான வருவாயுள்ள வக்கீல்களில் ஒருவர். அவரிடம் சம்பந்தம் கூறியதாவது:— "மாமா! உத்தியோக வாழ்க்கை என் இயல்புக்கு ஒத்து வராதென்று தோன்றுகிறது. டால்ஸ்டாய் முதலியவர்களின் நூல் ய[illegible]க்ததினால் எனக்குச் சில வாழ்க்கை இலட்சியங்கள் ஏற்பட்[illegible]

டிருக்கின்றன. பகவானருளால் எனக்குக் கொஞ்சம் பூமி காணி இருக்கிறது. ஆதலின் என் சொந்த கிராமத்துக்கே யென்று நிலத்தைப் புதிய சாஸ்திரீய முறையில் சாகுபடிசெய்து அமைதியான வாழ்க்கை நடத்தலாமென எண்ணுகிறேன். எனக்கிருக்கும் என் ஜினியரிங் அறிவைக்கொண்டு மற்றக் கிராமவாசிகளுக்கும் பல வழிகளில் நன்மை செய்வதற்குச் சில திட்டங்கள் போட்டிருக்கிறேன். இதைப்பற்றித் தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

அம்பலவாணர் புன்னகை புரிந்தார். "இதென்ன பைத்தியம்?" என்ருர். அவர் மருமகருக்குச் சிறிது கோபம் வந்தது. ஆனல் வக்கீல் மகா புத்திசாலி; அத்துடன் உலகானுபவம் நிரம்ப உள்ளவர். இல்லாவிடில் மயிலாப்பூரிலிருந்து வக்கீல் தொழிலில் பேர் சொல்ல முடியுமா? வெறுமே பரிகாசம் பண்ணினல் மருமகனுக்குப் பிடிவாதமே அதிகமாகுமென்று அவருக்குத் தெரியும். ஆதலின் "கோபித்துக் கொள்ளாதே, தம்பி! என்னைப் போன்ற கருநாடகப் பெயர் வழிகளுக்கு இதெல்லாம் பைத்தியக்காரக் கொள்கைகளாய்த் தோன்றுகிறது" என்று சொல்லிப் பின்னர் பின்வருமாறு ஹிதோபதேசம் செய்தார்.—

"நீ புத்திசாலி. சிறிது சிந்தித்துப் பார்த்தாயானல் இதெல்லாம் நடவாத காரியம் என்று நீயே சொல்வாய். டால்ஸ்டாய் நூற்றுக் கணக்காகப் புத்தகங்கள் எழுதினரே! அவருடைய கொள்கைகளை அவரே அனுஷ்டிக்க முடியவில்லை யென்பது உனக்குத் தெரியாதா? காந்தியுங்கூட அல்லவா தமது இலட்சியங்கள் எல்லாவற்றையும் வாழ்க்கையில் நிறைவேற்றக் கூடவில்லை யென்று சொல்கிருர்? அவர்களாலெல்லாம் முடியாதது உன்னல் முடியுமென்று நினைக்கிருயா?

"மேலும், அவசரம் என்ன? இப்போதுதான் நீ வாழ்க்கை தொடங்கப் போகிருய். புதிய துறையில் இறங்கிக் கொ...
...தல் ய...

திற் கெல்லாம் அதிருப்தி கொள்கிறாய் என்று வைத்துக் கொள் வோம். அதற்குள் 25 வயது கடந்துவிட்டால் அப்புறம் உத்தியோ கம் 'வா' என்றால் வருமா? உத்தியோக வாழ்க்கையில் அதிருப்தி கொண்டால் அப்புறம் நீ உன் புதிய கொள்கைகளை நடத்திப் பார்ப்ப தற்கு எதுவும் குறுக்கே நில்லாது.

"இருக்கட்டும், உன்னுடைய குடும்ப நிலைமை என்ன? வீட் டிலே உட்கார்ந்து சாப்பிட்டால் உன்னுடைய இரண்டு வேலி நிலம் எத்தனை நாளைக்குக் காணும் என நினைக்கிறாய்? பத்து வேலி, இரு பது வேலி மிராசுதாரர்கள் எத்தனைபேர் ஆண்டியாய்ப் போகிறார்க ளென்பது எனக்குத் தெரியும். வேறு வருவாய்க்கு வழியில்லாத மிராசுதாரர் இக்காலத்தில் உருப்படவே முடியாது. இந்தக் காலத்தில் விவசாயம் செய்து முன்னுக்கு வந்தவன் உண்டா? உன் தம்பிமார்கள் இருவரையும் படிக்க வைத்தாக வேண்டும். தங்கைக்கும் கலியாணம் செய்து கொடுக்க வேண்டும். உனக்கும் இனிமேல் இரண்டு குஞ்சு குழந்தைகள் உண்டாகிவிடும். இவர்களுடைய கதி யெல்லாம் என்ன?

"இத்தனை காலம் ஏதோ அவ்வப்போது உனக்குப் பண உதவி செய்து வந்தேன். எனக்கும் இப்போது கை சளைத்து விட்டது. வக்கீல் தொழிலில் போட்டி சொல்ல முடியாது. 300 ரூபா ஆடம் பரத்தில் செலவழித்தால்தான் 500 ரூபா வருமானம் வருகிறது. மைலாப்பூரில் எத்தனையோ பெரிய பெரிய வக்கீல்கள் இருக்கிறார் கள். அவர்களில் காங்கிரஸ் வாதிகளாகட்டும், மிதவாதிகளாகட்டும், ஜஸ்டிஸ் வாதிகளாகட்டும், எந்த வாதிகளாகட்டும், தங்கள் பிள்ளை களுக்கும், பேரன்களுக்கும், மருமகன்களுக்கும், மாப்பிள்ளைகளுக் கும், மற்ற இஷ்ட மித்ர பந்துககளுக்கும் அரசாங்க உத்தியோகம் தேடிக் கொடாதவர்கள் உண்டா? அரசாங்க உத்தியோகத்துக்குச் சமானம் வேறெதுவுமில்லை. நாற்பது ரூபா சம்பளத்துக்குப் போனு [illegible] பிறகு வருஷம் ஆறு, ஆறு ரூபா நிச்சயமாய் ஏறிக்கொண்டு ய[illegible] கொ[illegible] சாகும் வரையில் பென்ஷன். அதிர்ஷ்டமும் சிபார்சும்

இருந்து நல்ல உத்தியோகம் கிடைத்து விட்டாலோ சொல்லவேண் டியதில்லே. உதாரணமாக அக்கவுண்டண்ட் ஜெனரல் காரியாலயத் தில் உத்தியோகம் கிடைக்கிறதென்று வைத்துக்கொள். செட்டிமார் கடையில் கணக்கெழுதும் குமாஸ்தாக்களுக்குக் கொஞ்சம் பயிற்சி யளித்து விட்டால் அந்த வேலையைச் செய்து விடுவார்களென்று கேள்விப்பட் டிருக்கிறேன். ஆயினும் அவ்வேலைக்கு ஆரம்பத்தில் ரு 300 சம்பளம். பின்னர் வருஷந்தோறும் 50, 50 ரூபா உயர்வு. 1500 வரையிலும், அதிர்ஷ்ட மிருந்தால் அதற்கு மேலும் போகலாம்.

"ஆனல் உத்தியோகங்களிலும் எல்லாம் உத்தியோக மாகா. மேல் வருமானம் உள்ள உத்தியோகந்தான் உத்தியோகம். சம்பளம் உயர உயர, வாழ்க்கை அந்தஸ்தும் உயர்ந்துகொண்டே போவதால் மாதச் சம்பளம் எவ்வளவு வந்தாலும் செலவழிந்து போகும். மேல் வருமான மிருந்தால்தான் மீதி செய்ய முடியும். இக்காலத்தில், பொதுவாக எல்லா உத்தியோகங்களிலுமே மேல் வருவாய்க்கு இட மிருக்கிற தாயினும், முக்கியமாக சில இலாகாக்கள் இருக்கின்றன. உன்னுடைய இலாகா அவற்றில் ஒன்று. புத்திசாலித்தனமாயும், சாமர்த்தியமாயும் நடந்து கொண்டால் கொஞ்ச நாளில் குடும்பக் கவலேயே யில்லாமல் பண்ணிவிட்டு அப்புறம் நீ என்ன வேண்டுமாஞ லும் செய்யலாம்..."

இத்தனே நேரம் பொறுமையாகவும் மரியாதையுடனும் கேட்டுக் கொண்டிருந்த சம்பந்தம் பிள்ளேக்கு இப்போது பொறுக்க முடியா மலே போய்விட்டது. அவர் இடைமறித்துச் சொன்னதாவது :—

"ஒருகால் நான் உத்தியோகத்துக்கே போனலும் நீங்கள் சொல் லும் வழிக்குப் போகவே மாட்டேன். மகா பாவமான காரியத்தை நீங்கள் சொல்கிறீர்கள். உத்தியோகம் பார்ப்பது போதாதென்று லஞ்சம் வாங்கியும் பிழைக்க வேண்டுமா!"

வக்கில் பிள்ளேயின் மனம் மகிழ்ந்தது. தம் ஹிதோபதேசம் முக்கால் வாசி பலிதமாகி விட்டதென்றும், பையனுக்குப் ... தல் ய...

நீங்கிற்று என்றும் கருதினார். “நல்லது, தம்பி, வாழ்க்கை தொடங்கும்போது எல்லாரும் இத்தகைய நல்ல தீர்மானங்களுடனே தான் தொடங்குகிறார்கள். ஆனால் வாழ்க்கையில் அநுபவம் ஏற்பட ஏற்பட அத்தீர்மானங்கள் எல்லாம் பறந்து போகின்றன. ஏதேனும் சாக்குப் போக்கினால் அவர்கள் ஆன்மத் திருப்தி செய்து கொள்கிறார்கள். உதாரணமாக, என்னுடைய கலாசாலைத் தோழர் ஒருவர் தற்போது டெபுடி கலெக்டரா யிருக்கிறார். அவர் நெறி தவறாதவ ரென்று பிரசித்தி பெற்றவர். ஆயினும் அவர் ‘வள்ளல்’ எனக்குத் தெரியும்; கிராம கணக்குப்பிள்ளை, மணியக்காரர்களுக்கும் தெரியும். ஒரு கிராமத்தில் போய் அவர் மூன்று நாள் முகாம் போட்டாரானால், முகாம் முடிந்ததும் மணியக்காரரைச் செலவுப் பட்டியல் கேட்கிறார். மணியக்காரர் $3\frac{1}{2}$ ரூபாவுக்குப் பட்டியல் போட்டுக் கொடுக்கிறார். டெபுடி கலெக்டர் 3 நாளில் முட்டை மட்டும் $3\frac{1}{2}$ ரூபாவுக்குத் தின்றிருக்கிறார். ஆயினும் அவர் பட்டியல்படி $3\frac{1}{2}$ ரூபாவை எண்ணிக் கொடுத்துவிட்டு ரசீது வாங்கிக்கொண்டு தம் மனச் சான்றைத் திருப்தி செய்து கொள்கிறார். ஆரஞ்சுப் பழம் பட்டணத்தில் டஜன் $1\frac{1}{2}$ ரூபா. அது அங்கிருந்து டெபுடி கலெக்டருக் கென்று கிராமத்துக்கு வாங்கிக்கொண்டு போகப்படுகிறது. அவருக்கு அளிக்கப்படும் பட்டியலில் அதன் விலை டஜன் 4 அணா ஆகிவிடுகிறது. ஆயிரக் கணக்கான தொகைகள் சம்பந்தமான அரசாங்கக் கணக்குகளைப் பரிசீலனை செய்து தப்புக் கண்டுபிடிக்கும் டெபுடி கலெக்டருக்கு தமது பட்டியலில் காணப்படும் இச்சிறு தவறு புலனாவதேயில்லை. தம்பி! அவரும் உன்னைப்போல் எவ்வளவோ நல்ல தீர்மானங்கள் எல்லாம் செய்து கொண்டவர்தான். இவ்வுலகம் அப்படிப்பட்டது” என்றார் வக்கீல்.

“மாமா, தங்கள் புத்திமதிக்காக வந்தனம். என்ன செய்வதென்று நான் தீர்மானித்துவிட்டேன். என்னுடைய உயரிய வாழ்க்கை இலட்சியங்களை யெல்லாம் இப்போதைக்கு ஒரு மூலையில் ய[illegible]க்க வேண்டியதுதான். ஆனால் இது என்னுடைய சுய [illegible]

நலத்தை முன்னிட்டோ, என் இலட்சியங்களில் எனக்கு நம்பிக்கைக் குறைவினாலோ அன்று. என் தம்பிமார்களையும், தங்கையையும் உத்தேசித்தே இம் முடிவுக்கு வந்தேன். எனக்காகிறது அவர்களுக்கு மாகட்டும் என்னும் தைரியம் எனக்கு வரவில்லை. ஆனால் ஒன்று கூறுகிறேன். தாங்கள் சற்று முன் கூறியது போல் பணம் சேர்ப்ப தற்கு நான் குறுக்கு வழி கடைப்பிடிக்கப் போவது மட்டும் இல்லவே இல்லை. அதை உங்களுக்குச் சத்தியமாகச் சொல்கிறேன். யோக்யன் எங்கும் எந்த நிலைமையிலும் யோக்யனாயிருக்க முடியுமென உங்களுக்கு நிரூபித்துக் காட்டுகிறேன்'' என்றார் சம்பந்தம்பிள்ளை.

காரிய சித்தியினால் மகிழ்ச்சி யடைந்த அம்பலவாணம் பிள்ளை சொல்கிறார் ;—''நான் விரும்புவதும் அதுதான், சம்பந்தம்! நான் கூறியதைத் தப்பர்த்தம் செய்து கொள்ளாதே. நான் உலகத்துக்குச் சொன்னேனே யொழிய உனக்குச் சொல்லவில்லை. எப்போதும் கண்யமாயிருந்தால் அபாயம் இல்லை. அயோக்யன்தான் பயப்பட வேண்டும். நாளடைவில் கண்யமே லாபமும் தரும். நீ உத்தியோகத்தில் நெறி தவறாதவனாய் நின்று மேன்மேலும் முன்னுக்கு வரவேண்டுமென்பது தான் என் பிரார்த்தனை.''

2

'கண்டிராக்டு' உடையார்

கோவிந்தராஜ உடையாரின் தந்தை அவருக்குப் பத்து வேலி நன்செய் நிலமும், மற்றும் வீடுவாசல், தோட்டம் துறவு, மாடு கன்று களும் வைத்துவிட்டுக் காலஞ்சென்றார். அப்போது உடையார் பாலிய வயதினர். தந்தை இறந்த இரண்டு வருஷத்தில், மைனர் விளையாட்டுகளில் பதினாயிரம் ரூபா வரையில் கடன்பட்ட பின்னர்த் திடீரென்று விழித்துக்கொண்டார். சொத்தில் பற்று, அவர் தந்தையிடமிருந்து அடைந்த பிதிரார்ஜிதங்களில் ஒன்று. தந்தை வைத்துப்போன நிலத்தில் ஒரு குழியேனும் விற்கக் கூடாதென்று ய

தீர்மானஞ் செய்து கொண்டார். மகசூல் வருமானத்தைக் கொண்டு வீட்டுச் செலவு செய்து, நிலவரியும், வட்டியும் கொடுத்துக் கடனையும் அடைப்பது இயலாத காரியமென்று தோன்றிற்று. உத்தியோகத்துக்குப் போவதற்கு வேண்டிய ஆங்கிலப் படிப்பு கிடையாது. என்ன வெல்லாமோ யோசனை செய்துவிட்டுக் கடைசியில் 'கண்டிராக்ட்' தொழிலை மேற்கொண்டார். நல்ல வாசாலகர்; ஆட்களை வைத்து நடத்துவதில் சமர்த்தர். எனவே, அந்தத் தொழிலில் அவர் வெற்றிபெற்றார். அந்தப் பக்கத்திலேயே சாலை, 'லயன்கரை', மதகு வேலை எதுவாயிருந்தாலும் அவரைத் தப்பிப் போகாது. சில "கண்டிராக்டு'களைத் தம் பெயருக்கே எடுத்துக்கொள்வார். சிலவற்றைத் தமக்கு வேண்டியவர்கள் பெயரால் எடுத்துக் கொள்வார். ஆயிரம் ரூபா கண்டிராக்டுக்கு ஒரு வேலை ஒப்புக்கொண்டால் இருநூறு ரூபா வேலைக்குச் செலவு செய்வார். 500 ரூபா தாம் எடுத்துக்கொள்வார். 300 ரூபா கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுத்துச் சரிப்படுத்தி விடுவது வழக்கம். ஆகவின், தற்போது அதாவது தமது நாற்பதாவது வயதில் அவர் அறுபது வேலி நிலத்துக்கும் 50,000 ரூபா ரொக்கத்துக்கும் எஜமானனு யிருந்ததில் ஆச்சரியமில்லை யன்றோ?

இன்றைய தினம் உடையார் தமது சவுக்கண்டியில் சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு சிந்தனை தேக்கிய முகத்தினரா யிருந்தார். அவரை இரண்டு கவலைகள் பிடுங்கித் தின்றன. ஒன்று மேட்டூர் மைனரின் 40 வேலி நிலத்தை வாங்கித் தம் நிலத்தை முழுதாக 100 வேலியாக்கிவிடவேண்டு மென்பது. அதற்கு இரண்டு லட்சம் ரூபா வேண்டும். ரூ. 50,000 கையில் இருந்தது. இன்னும் $1\frac{1}{2}$ லட்சத்துக்கு என்ன செய்வது ? கடன் வாங்குவதில்லை யென்பது உடையார் பாலியத்தில் செய்துகொண்ட உறுதி. அதிலும் இருபதாயிரம், ஐம்பதாயிரம் என்றாலும் யோசிக்கலாம். ஒன்றரை லட்சம் கடனு? பின்னர் என்ன உபாயம்?

மற்றொரு கவலை, கீழண்டைக் கிராமத்துப் பெரிய மிராசுதாரை யெட்டுப் பழி வாங்குவ தென்பது. அவர்களுக்குள் மனஸ்தாபம்

தாலுகா போர்டு தேர்தல் சம்பந்தமாக எழுந்தது. உடையார் தேர்தலுக்கு நின்றாரென நினைக்கிறீர்களோ? அத்தகைய அசட்டுக் காரியம் எதுவும் அவர் செய்வதில்லை. ஆனால் அந்தப் பக்கத்தைச் சேர்ந்த தாலுகா போர்டு, ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் எல்லாரும் 'கண்டிராக்ட்' உடையார் கைக்குள் அடக்கம் என்பது பிரசித்தம். கண்டிராக்டருக்கு அவர்களுடைய உதவி தேவை என்று சொல்லவேண்டுவதில்லை. அந்தப் பக்கத்தில் எந்தத் தேர்தல் நடந்தாலும் உடையாரின் ஆதரவு பெற்றோருக்குத்தான் வெற்றி. சென்ற வருஷம் வரை இந்தத் திருப்திகரமான பரஸ்பர ஒத்துழைப்பு நிலைமை இருந்து வந்தது. இவ்வருஷத்துத் தேர்தலில் கீழண்டைக் கிராமத்து மிராசுதார் தமது உறவினரான போட்டி அபேட்சகரை ஆதரித்தார். அந்த அபேட்சகருக்குச் சில அதிக வாக்குகளால் வெற்றி கிடைத்து விட்டது. இதை உடையார் சகித்துக்கொண்டு எப்படி இருப்பார்! அது முதல் அவரைப் பழி வாங்குவது எப்படி என்பதே உடையாரின் ஓயாக் கவலை யாயிற்று. மனஸ்தாபம் முற்றுவதற்குப் புதிய புதிய காரணங்களும் ஏற்பட்டு வந்தன.

இன்றையதினம் மேற் சொன்ன இரு விஷயங்களையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் திடீரென்று உடையார் முகம் விளக்க முற்றது. ஓர் அற்புதமான யோசனை அவர் உள்ளத்தில் உதயமாயிற்று. நதியிலே புது வெள்ளம் பெருக் கெடுத்தோடுவதைக் காலையில் போய்ப் பார்த்து வந்திருந்தார். 'லயன்கரை' மீது ஜலம் வழிந்தோட இன்னும் ஒரு முழமே பாக்கியிருந்தது. கையெழுத்து மறையும் நேரத்தில் அய்யனார் மூலைக்குச் சென்று மண்வெட்டியினால் ஒரு கோடு மட்டும் கிழித்து விட்டு வந்தால்? பகைவனுடைய நிலங்கள் அம்மூலைக்கு நேரே இருக்கின்றன. முப்பது வேலியும் ஓர் ஆள் உயரத்துக்குக் குறையாமல் மணலடித்துவிடும். அத்துடன் அவன் அழிந்தான். தமக்கோ ஒரு நஷ்டமுமில்லை. ஜலம் மேற்கே முட்டிக்கொண்டு வந்தாலும் வண்டல் படிந்து நிலம் இரு மடங்கு விளையுமே யன்றி வேறில்லை. பின்னர் ய-

அடைத்தல் சம்பர்தமாக ஏராளமான 'கண்டிராக்ட்' வேலைகள் இருபதினுயிரம், முப்பதினுயிரம் கிடைத்தாலும் கிடைக்கலாம். அப்போது மேட்டூர் மைனர் நிலம் வாங்குவதும் சாத்தியமாகி விடும். தர்மம், அதர்மம் என்னும் எண்ணங்கள் உடையாருக்குத் தோன்றவே யில்லை. அவற்றை யெல்லாம் அவர் மறந்து நீண்ட நாளாயிற்று.

ஸூரியன் அஸ்தமிக்கும் சமயத்துக்கு உடையார் கேசவனை ஒரு மண்வெட்டி எடுத்துக்கொண்டு வரச் சொல்லிவிட்டுக் கொல்லைப் புறத்தால் கிளம்பிச் சென்றார். அவர்கள் சில நிமிஷங்களுக்கெல் லாம் நதிக் கரையை அடைந்து அதிவேகமாகக் கிழக்கு நோக்கிச் சென்றார்கள் நதியில் பூரணப் பிரவாகம் ஓடிக்கொண்டிருந்தது. நீர் ஓட்டத்தின் 'ஹோ' என்ற இரைச்சலும், படுகையிலிருந்த மூங் கில் மரங்கள் உராயும் சத்தமும், மேலக்காற்றின் கோஷமும், தூரத் தில் நரியின் ஊளையும், நாயின் குலைப்பும் கலந்து பயங்கரமாகத் தொனித்தன. கண்ணுக் கெட்டிய தூரம் தண்ணீர் மயமாய் இருந்த பிரவாகத்தின் காட்சியும், மேன்மேலும் வந்து கவிந்த இருளும், மேற்குத் திக்கில் ஓடி ஒளிந்து கொண்டிருந்த மங்கிய ஒளியும், மரங் களின் நிழலும் பயங்கரத்தை மிகைப்படுத்தின. உடையாரும் கேசவனும் நதி வளைந்து செல்லும் ஒரு மூடுக்குக்கு வந்து சேர்ந் தார்கள். உடையார் அங்கு நின்று "சரி, வெட்டு" என்றார். இரு பது வருஷகாலமாய் எதிர்த்துப் பதில் சொல்லியறியாத கேசவன் இன்று தயங்கி நின்றான். "சீ, மடையா, இங்கே கொடு" என்று கூறி உடையார் மண்வெட்டியை வாங்கி மள மள வென்று கரை யை வெட்டினார். சுமார் பதினைந்து நிமிஷம் மூச்சு வாங்கும்படி வெட்டிய பின்னர், ஜலம் ஒரு சிறு மடையளவாக நகர்ந்து வந்து லயன் கரையின் மறுபுறத்தில் விழுந்தது. 'இன்னும் ஒரு மணி நேரத்தில் பாதி ஆறு இம்மடை வழியாகப் பாயும்' என்று உடை யார் எண்ணிக் கொண்டே தலை நிமிர்ந்தார். தமக்கு இரண்டு கஜ ... கில் இரண்டு மனிதர்கள் சைகில் வண்டிகளில் வந்திறங்கு

வதைக் கண்டார். "யார் அது?" என்ற சத்தம் வந்தது. உடையாருக்குப் "பகீர்" என்றது. மின்னொளிபோல் ஓர் எண்ணம் தோன்றிற்று. மண் வெட்டியை வீசி ஆற்றில் எறிந்தார். 'கொடக்' என்ற சத்தத்துடன் பிரவாகமானது உடையார் குற்றத்தின் சாட்சியத்தை விழுங்கி ஏப்பம் விட்டது.

3

நதி உடைப்பில்

சைகிளில் வந்து இறங்கிய இருவரில் ஒருவர் புது ஓவர்ஸியர் ஸ்ரீமான் சம்பந்தம் பிள்ளை என்று நேயர்கள் ஊகித்திருக்கலாம். மற்றொருவர் லயன்கரை மேஸ்திரி. நதியில் பிரவாகம் அதிகமாயிருப்பதை முன்னிட்டு அவர்கள் லயன்கரையில் பந்தோபஸ்துக்காகப் பிரயாணம் செய்துகொண் டிருந்தார்கள். சம்பந்தம் பிள்ளைக்கு முதலில் ஒரு நிமிஷம் நிலைமை தெளிவாக விளங்கவில்லை. உடையார் மண்வெட்டியை ஆற்றில் எறிந்ததுமே விஷயம் வெட்ட வெளிச்சமாய்ப் புலப்பட்டது அப்போது சம்பந்தம் பிள்ளைக்கு உண்டான ஆத்திரம் அவ்வாற்றின் பிரவாகத்தையேபோல் அளவிட முடியாததாயிற்று. அவர் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து வந்து உடையாரின் கழுத்துத் துணியை இறுக்கிப் பிடித்துக்கொண்டு "அடே பாதகா! துரோகி! என்ன கொலை பாதகம் செய்தாய்?" என்றார். அவர் உடல் நடுங்கிற்று. தலையைக் கையினால் பிடித்துக்கொண்டு ஒரு கணநேரம் யோசித்தார். பின்னர் உடனே திரும்பி மேஸ்திரியைப் பார்த்து, "ஓடும்! ஓடும்! கிராமத்துக்கு ஓடிப்போய் வைக்கோல், மண் வெட்டி சாமான்களுடன் ஆள் திரட்டிக்கொண்டு வாரும்" என்றார். மேஸ்திரி சைகிளில் ஏறிக் குறுக்கு வழியில் அதி வேகமாய்ச் சென்றார்.

உடையார் சிந்தித்தார். அவர் உள்ளத்தில் ஒரு கொடும் யோசனை உதித்தது. 'செய்வன திருந்தச் செய்' என்றப[illegible]ய

அதிகப் பிரசங்கியை வெட்டி ஆற்றில் விட்டு விட்டாலென்ன? அவன் ஒருவன்; நாம் இருவர். ஆனால் அடுத்த கணத்தில் இது உசிதமன்றெனத் தோன்றிற்று. ஆள் திரட்டச் சென்ற மேஸ்திரி சிறிது கோத்தில் திரும்பி விடுவான். அவனும் ஊராரும் சாட்சி சொல்வார்கள். ஆயுதமும் இல்லை. மேலும் நதி மண் வெட்டியை விழுங்குமே யல்லாமல் பிணத்தை விழுங்காது. எல்லாவற்றிற்கும் மேலாக இன்னொரு தடை குறுக்கிட்டது. பக்கத்திலிருந்த கேசவனைக் காணோம். ஏதோ பெருந் தொல்லை யிருக்கிற தென்றறிந்த அவன் சவாரி விட்டுவிட்டான்.

எனவே, அந்த யோசனையை உடையார் தள்ளி, வழக்கமான உபாயத்தையே கைக்கொள்ளத் தீர்மானித்தார். தொண்டையைக் கனைத்துக்கொண்டு "என் ஸார்? புது ஓவர்ஸியர் வந்திருப்பதாகச் சொன்னார்களே? தாங்கள் தானோ?" என்று வினவினார்.

சம்பந்தம் பிள்ளை, உடையாரின் கழுத்தில் மாலையாகப் போட்டிருந்த அங்க வஸ்திரத்தின் இரு முனைகளையும் சேர்த்து இறுக்கிப் பிடித்துக்கொண் டிருந்தார். ஆனால் அவர் கண் உடைப்பின்மீதே பதிந்து கிடந்தது. ஒவ்வொரு கணமும் கரை இடிந்து விழுந்து உடைப்பு பெரிதாகிக் கொண்டிருந்தது. நீரின் வேகம் கீழ் மண்ணையும் அறுத்துக்கொண்டு வந்ததென்று கரைக்கு மறு புறத்தில் விழும் தண்ணீரின் அளவினால் நன்கு தெரிந்தது. சம்பந்தம் பிள்ளையின் உள்ளம் பதைத்தது. உடைப்பு பெரிதாகாமற் றடுக்க எதுவும் செய்ய முடியாதிருந்த காரணத்தினால் அவர் துன்பம் அதிகமாயிற்று. பாதகன் மண் வெட்டியைக்கூட வல்லவா ஆற்றில் எறிந்து விட்டான்?

இத்தருணத்தில் உடையார் மேற்கண்டவாறு கேட்கவே சம்பந்தம் பிள்ளையின் கண் அவர்மீது சென்றது. பார்வைக்கு மட்டும் மனிதனை எரிக்கும் சக்தி யிருந்தால் சம்பந்தம் பிள்ளை அப்பார்வையினாலேயே உடையாரை எரித்திருப்பார். அது சாத்திய மில்லாமல் போகவே அவர் பதிலும் சொல்லவில்லை.

"தங்களைப் பார்க்க நேர்ந்தது குறித்து நிரம்ப சந்தோஷம். தங்களுக்கு முன்னுலிருந்த ஓவர்ஸியர் எனக்கு நிரம்பப் பழக்க மானவர். இந்தப் பக்கம் வந்தால் நம்முடைய பங்களாவில்தான் தங்குவார். ஏன்? ஸப் டிவிஷனல் ஆபீஸர், அஸிஸ்டன்ட் என்ஜினியர் முதலியோர் கூட நமக்கு அதிக பழக்க மானவர்கள்தான். என் பெயரைக் கூடத் தாங்கள் கேள்விப்பட் டிருக்கலாமே? நான் தான் கோவிந்தராஜ உடையார் என்பது" என்று கூறி உடையார் புன்னகை புரிந்தார்.

இந்த மனிதருடைய துணிவும், அகம்பாவமும் சம்பந்தம் பிள்ளைக்கு அளவிலா ஆச்சரிய மளித்தன. இந்த நிலையில் இப்படிப் பேசக்கூடிய ஒருவர் இருப்பாரென அவர் கனவிலும் கருதி யிருக்க முடியாது. எனவே, அவர் ஸ்தம்பித்துப் போனுர்.

உடையார் தன் கை விரலில் அணிந்திருந்த வைரக்கல் மோதிரத்தைக் கழற்றி, அதை நட்சத்திர ஒளியில் சிறிது காட்டி ஓவர்ஸியர் கண் முன் டால் வீசச் செய்து, பின்னர் புன்னகையுடன் "என்னுடைய ஞாபகார்த்தமாக இருக்கட்டும்" என்று சொல்லிக் கொண்டே அதை அவர் விரலில் மாட்டப் போனுர்.

இப்போது சம்பந்தம் பிள்ளையின் ஆத்திரம் கரை கடந்ததாயிற்று. அந்த மோதிரத்தை அவர் உடையார் கையிலிருந்து பிடுங்கி வீசி எறிந்தார். மோதிரம் ஆற்று மத்திக்குச்சென்று விழுந்த விடந் தெரியாமல் மறைந்தது.

"நல்லது, ஸார்! இவ்வளவு கோபம் எதற்காக? நாமெல்லாரும் பரஸ்பரம் உதவி செய்துகொள்ள வேண்டியவர்கள். ஆனுலும் இது கொஞ்சம் பெரிய விஷயந்தான். நம்முடைய வீட்டுக்கு வாருங்கள். ஒரு நோட்டு தந்து விடுகிறேன்" என்றுர் உடையார்.

"உம்முடைய நோட்டைக் கிழித்து இந்த உடைப்பில் கொண்டுவந்து போடும்! உமக்கு இவ்வுலகத்துக் கோர்ட் [illegible]யினுல்

அளிக்கப்படும் தண்டனை போதவே போதாது. கடவுளே உம்மைத் தண்டிக்கவேண்டும்" என்றார் சம்பந்தம் பிள்ளை. அவர் கண்ணில் தீப்பொறி பறந்தது.

உடையார் சிந்தித்தார். தண்டனை என்றதும் அவருக்குத் தம் செயலினால் விளையக் கூடியவையெல்லாம் சட்டென்று மனதில் தோன்றின. பணச்செலவு, அவமானம், போலீஸ், கோர்ட், சிறை எல்லாம் நினைவு வந்தன. முடிவில் ஆயுள் பரியந்தம் சிட்சை விதித்தாலும் விதிக்கலாம். உடையார் சிறிது அச்சமடைந்தார்.

"சரிதான், ஐயா! உமக்கு என்னதான் வேண்டும், சொல்லி விடும்." என்றார்.

"உமது தலையில் இடிவிழ வேண்டும்; இந்த வெள்ளம் உம்மை விழுங்கவேண்டும். அதுதான் எனக்கு வேண்டும்."

"ஐயாயிர ரூபா தந்து விடுகிறேன். உமக்கு நம்பிக்கை யில்லாவிடில் காகிதம் பேனா கொடும். இங்கேயே கைச்சிட்டு எழுதித் தருகிறேன்"

"இப்போது நீர் எழுத வேண்டுவது வாக்குமூலந்தான். ஆனால் இங்கே வேண்டாம். மாஜிஸ்டிரேட் முன்பு எழுதலாம்."

"இதற்குமுன் நான் எவருக்கும் பதினாயிரம் ரூபாவுக்கு மேல் கொடுத்ததில்லை. ஒரே ஒருமுறை ஒரு மூர்க்கியமான வாய்க்கால் தகவலில்மட்டுமே பதினாயிரம் கொடுத்திருக்கிறேன். இப்போது அந்தப் பதினாயிரம் உமக்குத் தருகிறேன். இதைத் தவிர, உடைப்பு சம்பந்தமான கண்டிராக்டுகளில் உமக்குரிய விகிதம் கொடுத்துவிடுகிறேன்."

"சும்மா வாயை மூடிக்கொண்டிரும். சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற குற்றம் வேறு உம்மீது சாரும், ஜாக்கிரதை!"

"புது ஓவர்ஸியர் கலியுக அரிச்சந்திரன் என்று சொன்னார்கள். இருந்தாலும் நீர் இவ்வளவு மோசமா யிருப்பீர் என்று நினைக்க வில்லை. நன்றாகச் சிந்தித்துப்பாரும். பதினாயிரம் ரூபா உம்முடைய பத்து வருஷச் சம்பளம். வட்டிக்குப் போட்டால் வட்டியே சம்ப ளத்துக் கீடாகும். வலிய வரும் லக்ஷ்மியை யாரேனும் உதைப்பார் களா? உமக்கு முன்னிருந்த ஓவர்ஸியர் பத்து ரூபா, ஐந்து ரூபா கூட வாங்குவார். நீர் பதினாயிரம் ரூபா வேண்டா மென்கிறீர். என்ன அநியாயம்!"

"அநியாயம்" என்ற வார்த்தையைக் கேட்டதும் சம்பந்தம் பிள்ளைக்குத் தம்மை யறியாமல் சிறிது சிரிப்பு வந்தது. ஆனால் திரும்பி உடைப்பைப் பார்த்ததும் சிரிப்பெல்லாம் பறந்துபோயிற்று. உடைப்பு இதற்குள் சுமார் பத்து கஜ அகலமுள்ளதாகி விட்டது. 'ஹோ' என்ற இரைச்சலுடன் ஜலம் மோதிக்கொண்டு பாய்ந்தது. தூரத்தில் ஆட்கள் ஓடிவருவது தெரிந்தது. ஆயினும் என்ன பயன்? இனி வெள்ளம் வடிந்தாலொழிய உடைப்பு அடை படுவது சந்தே கந்தான்.

ஆட்கள் தூரத்தில் வருவதை உடையாரும் பார்த்தார். இப் போது தான் அவருக்குப் பதைப்பு உண்டாயிற்று. அவர் கூறுவார். "ஐயா, இங்கே பாரும். கடைசியாக ஒரு வார்த்தை. உம்முடைய ஆயுளில் இத்தகைய அதிர்ஷ்டம் உமக்கு வாய்ப்போவதில்லை. எனக் குச் சொந்தமான பூஸ்திதி முதலியவற்றைத் தவிர இன்றையதினம் ரொக்கமாக என்னிடமுள்ளது ஐம்பதினாயிரம் ரூபா. அந்த ஐம்பதி னாயிரத்தையும் உமக்குக் கொடுத்து விடுகிறேன். கொஞ்ச நஞ்ச மன்று; அரைலட்சம். இதற்காக நீர் செய்ய வேண்டுவதோ ஒன்று மில்லை. என்னையும் உடைப்படைக்க வந்தவனாகப் பாவித்துக்கொள் ளும். அல்லது நான் இங்கிருந்ததாகவே தெரிய வேண்டாம். மேஸ் திரியையும் நான் கவனித்துக்கொள்கிறேன். என்ன சொல்கிறீர்?"

"முடியாது, முடியாது" என்று அழுத்தமாகக் கூறினார் சம்பந் தம்பிள்ளை. அவர் இதயத்தில் இன்பவெள்ளம் பாய்ந்தது. அம்பல

வாணம் பிள்ளையிடம் தாம் கூறிய சபதத்தை நினைவு கூர்ந்தார். அதை நிறைவேற்றி வைப்பதற்கு மன உறுதி அளித்ததின் பொருட்டு ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினர். நூறு? ஆயிரமா? அரைலட்சம். ஒரு பெரிய ஆஸ்தி! தம் சபதத்தை இவ்வளவு விரைவில் நிறைவேற்றச் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி அவர் அக மகிழ்ந்தார்.

4

வெற்றி

தெய்வாதீனமாக மறுநாளே வெள்ளம் வடிய ஆரம்பித்தது. ஒரு வாரத்திற்குள் உடைப்பு அடைபட்டது. வழக்கத்துக்கு மாருக உடைப்பு இவ்வளவு விரைவில் அடைபட்டதற்குப் புது ஓவர்ஸியரின் ஊக்கமும் முயற்சியுமே காரணங்கள் என்று ஜனங்கள் பிரசித்தியாகப் பேசிக்கொண்டார்கள். எனினும் ஐந்தாறு கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. முக்கியமாக, உடையாரின் பகைவரான மிராசுதாரின் நிலத்தில் ஏறக்குறையப் பாதி மணலடித்துச் சாகுபடிக்கே லாயக்கில்லாமல் போயிற்று.

கோவிந்தராஜ உடையார் கைது செய்யப்பட்டுப் பின்னர் பெருந்தொகை ஜாமீன்களின்மீது விடப்பட்டார். வழக்கு ஏழெட்டு மாத காலம் நடந்தது. உடையாரின் சார்பாகச் சென்னை வக்கீல்கள் ஏழு பேரை யல்லாமல் கல்கத்தாவிலிருந்து ஜூற்ற வழக்குகளில் பெயர்போன பாரிஸ்டர் ஒருவரும் வந்து பேசினர். வழக்கின் நடைமுறை விவரங்களைத் தெரிவித்து இச்சிறு கதையைப் பெருங் கதையாக்க நாம் விரும்பவில்லை. முடிவைமட்டும் கூறிவிடுகிறோம். சென்னை ஹைகோர்ட் நீதிபதிகள் மூவர் அமர்ந்து விசாரணை செய்து, கோவிந்தராஜ உடையார், 'நிரபராதி' என்று விடுதலை செய்தனர்.

உடையாருக்கு விரோதமாக ஓவர்ஸியரின் சாட்சியம் ஒன்றுதானிருந்தது. மேஸ்திரி, விசாரணையில், இருட்டிவிட்டபடியால் அங்

இருந்தது உடையார் தானென்று நிச்சயமாகச் சொல்ல முடியாதென்றும், அங்கிருந்தவர் யாராயினும் தான் பார்த்தபோது அவர் மண்வெட்டியால் வெட்டிக்கொண் டிருக்கவில்லை யென்றும், மண் வெட்டியை எறிந்ததையும் தான் பார்க்கவில்லை யென்றும் "ஐயோ! உடைப்பெடுத்து விட்டதே" என்பது போன்ற கூக்குரல் தன் காதில் வீழ்ந்ததென்றும், தான் உடனே கிராமத்துக்குச் சென்றதாகவும், வேறு விவரம் ஒன்றும் தெரியாதென்றும் சாட்சி சொன்னான். சேவகன் கோர்ட்டுக்கு வரவே யில்லை. உடையாரின் எதிரி மிராசுதார், உடையார் தம் பகைவர் என்று சாட்சி சொன்னாராயினும் குற்றம் நிரூபிக்கப் படுவதற்கு அது உதவி செய்யவில்லை. ஆகவே போதிய சாட்சியம் இல்லையென்று வழக்கு தள்ளப்பட்டது.

இதற்குச் சில தினங்களுக்கெல்லாம். ஓவர்ஸியர் சம்பந்தம் பிள்ளைக்கு மேலதிகாரிகளிடமிருந்து ஓர் உத்தரவு வந்தது. அதில் ஸ்ரீமான் சம்பந்தம்பிள்ளை உடைப்பெடுத்த காலத்தில் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை யென்றும், உடைப்பை யடைக்கத் தீவிர முயற்சி செய்திருக்கவேண்டிய சமயத்தில், ஒரு கண்யமுள்ள கனவான்மீது, அவருடைய எதிரியின் தூண்டுதலால், அபாண்டமான குற்றத்தைச் சாட்டித் தொந்திரவு கொடுப்பதில் ஈடுபட்டிருந்ததாகவும், அதனால் இலாகாவுக்கே அபகீர்த்தி தந்திருப்பதாகவும், இக்காரணங்களினால் அவர் வேலையினின்று தள்ளப்பட் டிருப்பதாகவும் எழுதி யிருந்தது.

5

முடிவு

சம்பந்தம் பிள்ளை தம் சொந்தக் கிராமத்துக்குத் திரும்புவதற்கு முன்னால், தமது வாழ்க்கையின் பெருஞ் சோதனையில் தாம் வெற்றி பெற்ற இடத்துக்கு ஒரு முறை செல்லவேண்டுமென விரும்பினார். அவ்வாறே, வேலையைத் தமக்குப் பதிலாக வந்தவரிடம் ஒப்புவித்த

அன்று மாலை, நதிக்கரைக்குச் சென்று உடைப்பெடுத்த இடத்தில் வந்து அமர்ந்தார். சென்ற ஆண்டில் ஏறக்குறைய இதே காலத்தில் தான் அச்சோதனை நிகழ்ந்தது. இவ்வருஷம் நதியில் சென்ற வருஷத்தைப்போன்ற வெள்ளம் வரவில்லையாயினும் சுமாரான பிரவாகம் ஓடிக்கொண்டிருந்தது. சம்பந்தப்பிள்ளை அன்றையதினம் மாலை நிகழ்ந்ததெல்லாவற்றையும் ஒரு முறை நினைந்தார். நதியின் வெள்ளத்தில் மேலக்காற்றின் வேகத்தினால் எழுந்த அலைகளைபோல் அவர் உள்ளத்தில் எத்தனை யெத்தனையோ எண்ணங்கள் எழுந்து மறைந்தன. அம்பலவாணம் பிள்ளையின் ஹிதோபதேசமும் அவர் ஞாபகத்துக்கு வந்தது. "ஆம்! மாமாவின் புத்திமதியை ஏற்றுக் கொண்டது நல்லதே யாயிற்று. 'பின்னால் உத்தியோகம் வா' என்றால் வருமா ? உத்தியோக வாழ்வில் அதிருப்தி ஏற்பட்டால் அதை விட்டு வேறு துறையில் இறங்குவதற்கு எதுவும் குறைக்கே நில்லாது' என்று அவர் கூறினாரன்றோ ? இப்போது உத்தியோக வாழ்வைப் பார்த்தாய்விட்டது. இனி, அதைப்பற்றிய சபலம் சிறிதும் இன்றி, நமது வாழ்க்கை இலட்சியங்களைப் பின்பற்றலாம்'' என்று சம்பந்தம் பிள்ளை எண்ணமிட்டார்.

கதிரவன், மேல் வான வட்டத்தின் அடிவாரத்தில், சுழலும் தங்கத் தகடெனத் திகழ்ந்தான். அவனுடைய பொன்னிறச் செங்கதிர்கள் நதியின் நீரில் படிந்தபோது அலைகள் மெருகு கொடுத்தாற் போல் தகதகவென்று பிரகாசித்தன. ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து நிமிஷம் சென்றது. கதிரவன் இருந்த இடத்தில் அவனது பொற்கிரணங்களைப் போர்வையாகப் போர்த்த சில முகிற் திட்டுக்களே காணப்பட்டன. இந்தக் காட்சியில் உள்ளத்தைப் பறி கொடுத்திருந்த சம்பந்தம் பிள்ளை தமக்கருகில் ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். கோவிந்தராஜ உடையாரைக் கண்டு திடுக்கிட்டார். உடனே எழுந்து சைகில் பிடியில் கை வைத்து எறப் போனார், "தம்பி, உன்னைத் தேடிக்கொண்டுதான் வந்தேன். சற்று உட்கார், போகலாம். உன் ஜாகைக்குப் போய் விசாரித்தேன்.

நதிக்கரைக்குப் போனதாகச் சொன்னார்கள். இங்கே தான் வந்திருப்பாய் என்று வந்தேன்." என்று உடையார் கூறினார்,

சம்பந்தம் பிள்ளை தம் காதுகளையும் கண்களையும் நம்பவில்லை. பிரமித்துப் போய் நின்றார்,

"ஆம், அப்பா! நான் உன்னைத் தேடிவந்தது உனக்கு அதிசயமா யிருக்கலாம். ஒரு காரியத்தைப்பற்றிப் பேச வந்தேன். தயவுசெய்து உட்கார மாட்டாயா?" என்று கூறிக்கொண்டே உடையார் கீழே மல் துணியை விரித்துப்போட்டு உட்கார்ந்தார்.

அவருடைய பரிதாபமான குரல் சம்பந்தம் பிள்ளையின் மனத்தை உருக்கிற்று. இந்த அதிசயத்தையும் பார்த்து விட வேண்டுமென எண்ணி அருகில் கிடந்த கட்டையின்மீது சம்பந்தம் பிள்ளை அமர்ந்தார்.

"என்ன சொல்லப் போகிறீர்கள்? தங்களுடைய வெற்றியைப் பற்றிச் சொல்லிக் காட்டப் போகிறீர்களா? அப்படியானால் வேண்டாம். ஏனெனில் நான்தான் வெற்றி யடைந்ததாக என்னுடைய எண்ணம். அல்லது என்னுடைய நிலைக்காக இரக்கம் காட்டப் போகிறீர்களா? அதுவும் தேவையில்லை. பகவான் எனக்குக் கொஞ்சம் பூமியையும் அதை உழுது பயிரிட உடம்பில் வலிவையும் அளித்திருக்கிறார்" என்று சம்பந்தர் கூறினார்.

அப்போது உடையார் சொல்கிறார்:—"அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை தம்பி! வேறு காரியம். நான் உங்களை யெல்லாம்போல் படித்தவ னல்லன். ஆகையால் சாமர்த்தியமாகப் பேசத் தெரியாது. இருந்தாலும் மனதி லுள்ளதை விட்டுச் சொல்கிறேன். போன வருஷத்தில் இதே இடத்தில் நீ சந்தித்தாயே, அந்த கோவிந்தராஜ உடையார் இப்போதில்லை! இந்த வழக்கினால் நான் முற்றும் புதிய மனிதனாகி விட்டேன். என் உடம்பும் உள்ளமும் நிரம்பத் தளர்ந்து போய்விட்டன. என்னால் இனி குடும்ப விவகாரங்களைப் பார்க்கவும் முடியாது. எனக்கு 60 வேலி நிலமும்

மற்றும் வரவு செலவுகளும் உண்டு. இவற்றையெல்லாம் கவனிக்க நம்பிக்கையான காரியஸ்தன் ஒருவன் வேண்டும், உன்னைவிட உண்மையான மனிதன் எனக்கு எங்கே கிடைப்பான்? அதற்காகத் தான் உன்னைத் தேடி வந்தேன்."

சம்பந்தம் பிள்ளைக்குத் தூக்கி வாரிப் போட்டது. அசாத்திய மான கோபம் வந்தது. "இந்தப் பொல்லாத மனிதனின் தைரியத் தைப் பார்த்தாயா? எனினும் அவர் முகத்தோற்றமும், குரலும் நம் மனதை இளக்குவதின் இரகசியம் என்ன? ஒருவேளை உண்மையி லேயே வேறு மனிதராகி விட்டாரோ?" என எண்ணினர். உடை யார் பின்னர் கூறிய மொழிகள் சந்தேகத்தை நிவர்த்தி செய்தன:—

"தம்பி! உனக்கு ஆச்சரியமா யிருக்கலாம். என் துணிவைக் கண்டு நீ வியப்புறலாம். ஆயினும் உண்மை அதுதான். என் விவ காரங்களைக் கவனித்துக்கொள்ள உண்மையான மனிதன் தேவை. இது மட்டுமன்று. இவ்வளவு காலமும் நான் செய்த பாவங்களுக் கெல்லாம் பரிகாரந் தேடவேண்டும். இதற்கு எனக்கு வழிகாட்ட ஓர் உத்தமத் தோழன் தேவை. அத்தகைய உத்தமன் உன்னை யல்லாமல் எனக்கு வேறு யார் கிடைக்கப் போகிறார்கள்? என் வாழ்நாளிலே நான் எத்தனையோ மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். இவர்களிலே யோக்யர்களும் அயோக்யர்களும், என்னைப்போன்ற பாதகர்களும் உண்டு..."


இச்சமயத்தில் சம்பந்தரின் கண்களில் நீர் ததும்பிற்று. உடை யாரின் தொண்டை கம்மலுற்றது: அவர் மெதுவாக எழுந்து வந்து சம்பந்தம் பிள்ளையின் அருகில் நின்று அவர் தலையைத் தன் கையி னல் தொட்டுக்கொண்டு சொல்வார்:—"...அத்தனை பேரிலும் உன் னைப் போன்ற உத்தமன் ஒருவனைச் சந்தித்ததில்லை. மற்றும் இன் னொரு செய்தி உனக்குத் தெரியுமா? எனக்குப் பிள்ளை குட்டிகள் ஒருவரும் இல்லை. நான் இன்று இறந்தால் ஒரு துளி கண்ணீர்

விடுவோர் கிடையாது. அப்போது, நான் எத்தனையோ அக்கிரமங்கள் செய்து சேர்த்த இந்தச் சொத்து முழுதும் என்னவாகும்? நேற்றைய தினம் இதை யெல்லாம் பற்றி எண்ண மிட்டுக்கொண்டிருந்தேன். உன்னைப் போன்ற ஒரு சத்புத்திரன் மட்டும் இருந்தால் நான் எவ்வளவு பெருமை யடைவேன்? அப்போது இந்த அக்கிரமச் சொத்து முழுவதையும் நல்வழியில் பயன்படுத்தி என் பாவங்களுக்குக் கழுவாய் தேடி விடுவா யல்லவா?...போகட்டும், அதைப்பற்றி நினைத்து என்ன பயன்? தம்பி, என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்குவாயா? மாதம் ரூ. 100 சம்பளத்தில் என் காரியஸ்தனாக வேலை பார்ப்பாயா?"

இவ்வாறு கூறி உடையார் கண்ணீர் உகுத்தார். அக்கண்ணீர் சம்பந்தம் பிள்ளையின் முகத்திலும் மார்பிலும் விழுந்து அவருடைய கண்ணீருடன் கலந்தது. பின்னர் அவ்விரு கண்ணீர் அருவிகளும் சேர்ந்து ஓடி நதி ஜலத்தில் விழுந்தன. இவ்வாறு அன்றைய தினத்திலே அந்தப் புண்ணிய நதி, கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்னும் மூன்று நதிகள் கூடும் பிரயாகையினும் விசேஷ மகிமை யுடையதாயிற்று.



சித்திரக் கொத்து



சித்திரம் என்றால் எனக்கு உயிர். சித்திரத்தின் சிறப்பு வேறெதற்கு மில்லை என்பதுதான் என் முடிவான அபிப்பிராயம். இதற்கு விரோதமாக யாரேனும் பேச முன் வந்தால் அவர்களுடன் ஒரு கை பார்க்கத் தயார். ஆஹா! சித்திரம் !! சித்திரம் !!! நேயர்களே! சித்திரத்தின் மகிமையை என்ன வென்று இயம்புவேன்? இப்பொழுது சித்திரத்தின் பெருமை உங்களுக்கு நன்கு விளங்கி விட்டதல்லவா? ஆச்சரியக்குறி எழும், கேள்விக்குறி ஒன்றும் சேர்ந்து உங்களுக்குச் சித்திரத்தின் சிறப்பை உணர்த்தா விட்டால், இனி எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் உங்களுக்கு அது விளங்கப் போவதில்லை.

நான் பள்ளிக் கூடத்தில் படித்தபோது சித்திர உபாத்தியாயரின் செல்லப் பிள்ளையாயிருந்தேன். ஏன் என்றால், சித்திர வகுப்புக்கு மணி அடித்ததோ இல்லையோ, எனக்கு எங்கிருந்தோ தலைவலி, வயிற்று வலி, அல்லது வேறு ஏதேனும் ஒருவலி வந்து விடும். உபாத்தியாயருக்கு இதில் பரம சந்தோஷம். "ஒரு சனியன் ஒழிந்தது" என்று விடை கொடுப்பார். எனக்கும் சந்தோஷந்தான். ஏனெனில், அவருடைய வகுப்பில் மட்டும் இருந்திருந்தால், சித்திரத்தில் எனக்கு இப்போதுள்ள பேரன்பில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் மிஞ்சி யிருக்குமென்று சொல்லமுடியாது.

இந்த நிலைமையில், கொஞ்சகாலத்துக்கு முன் ஔவை மூதாட்டியின் பாடல்கள் சிலவற்றைப் படிக்க நேர்ந்தது. "சித்திரமும் கைப் பழக்கம்" என்று அந்தப் பாட்டி கூறியிருப்பதைப் படித்தபோது எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஆகா! இந்த இரகசியம் இத்தனை நாள் தெரியாமல் போயிற்றே என்று ஒருதடவை துள்ளிக்


குறித்தேன். சித்திரங்களைப் பார்த்துச் சந்தோஷப்படுவது மட்டும் போதுமா? நாமே யல்லவா அக்கலையில் தேர்ச்சியடைய வேண்டும்? வழியோ ஔவையார் காட்டியிருக்கிருள். இன்னும் என்ன சந்தேகம்? உடனே காகிதமும் பென்ஸிலும் கையிலெடுத்துக் கொண்டேன்.

மிக விரைவிலேயே ஔவையின் மொழி எவ்வளவு உண்மையென்பது நன்கு விளங்கிற்று. "சித்திரமும் கைப்பழக்கம்" என்று சொன்ன வாயில் சர்க்கரையைப் போடவேண்டும். நான் தீட்டிய சித்திரங்களைப் பார்க்கப் பார்க்க அளவிலாத குதூகலம் உண்டாயிற்று. அவைகளைக் கண்காட்சி சாலைக்கு அனுப்பலாமா வென்று முதலில் எண்ணினேன். நல்ல வேளையாய் இந்தத் துர்யோசனையை எதிர்த்து வெற்றிகொண்டேன். கண்காட்சி சாலைக்கு அனுப்பினல் கண்டவர்களெல்லாம் பார்ப்பார்கள். ரவிகனுடைய கைத்திறமையை ரஸிகர்களல்லவா பார்த்து அநுபவிக்கவேண்டும்? ஆகவே இதைப் படிக்கும் நேயர்களுக்குத் தான் இந்தப் பாக்யெத்தை அளிப்பது என்று உறுதி கொண்டேன்.


ஆனல் ஒரு முக்கிய விஷயத்தை மனதில் நன்ருய்ப் பதித்துக் கொள்ளுங்கள். அதாவது பின்வரும் சித்திரங்களை மட்டும் தனியாய்ப் பார்த்து விட்டுக் குறைபாடு சொல்லக் கூடாது. அந்தந்தச் சித்திரத்துடன் சேர்ந்த விஷயத்தையும் சேர்த்துப் படிக்கவேண்டும். அப்போதுதான் அவைகளின் மகிமையை நன்குணர்ந்து கொள்வீர்கள். ஏனென்ருல், சித்திரம் எழுதுவதற்குப் பயிற்சி எப்படித் தேவையோ, அப்படியே சித்திரத்தின் அழகை உணர்ந்து அநுபவிப்பதற்கும் பயிற்சி தேவை. தற்காலத்தின் பிரபல ஓவியக் கலைஞர்களின் சித்திரங்களை (முக்கியமாக, வங்க நாட்டார் சிலரின் சித்திரங்களை) சாதாரண மனிதர்கள் பார்த்தால் ஒன்றும் விளங்காமல் விழிப்பார்கள். "இதென்ன? இந்தப் பெண்ணின் கண் ஏன் மூடியிருக்கிறது? இவளுடைய இடுப்பு ஏன் ஒடிந்து விட்டது? இவன் மனிதனு? கற்சிலையா? இது மாடா? பன்றியா?" என்று இது போன்ற

அபஸ்மாரமான கேள்விகள் கேட்பார்கள். ஆனால் தெரிந்தவர்கள், பயிற்சி பெற்றவர்கள் இதே சித்திரங்களைப் பார்த்தால், ஆகா என்ன கலை? என்ன, மனோபாவம் என்ன சௌந்தரியம்? என்று பூரித்துப் போவார்கள். ஆகவே, உங்களில் சித்திரம் பார்க்கும் பயிற்சியில்லாதவர்கள், அந்தச் சித்திரத்துடன் சேர்ந்த விஷயத்தைப் படித்து விட்டுப் பிறகு சித்திரத்தைப் பாருங்கள்.

இது ஒரு திமிங்கலம். உங்களுள் 100க்கு 99 பேர் திமிங்கலம் பார்த்திருக்க மாட்டீர்கள். ஆகையால் இது திமிங்கலம் என்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. உண்மையில் நானும் திமிங்கலம் பார்த்ததில்லை. ஆகையினால் தான் முதலில் திமிங்கலத்தை எடுத்துக் கொண்டேன். பார்க்காத பொருளைச் சுலபமாய் எழுதி விடலாமல்லவா? யாரும் குறை சொல்ல இடமிராது. உதாரணமாகத் திமிங்கலத்தின் முதுகில் சிறகு உண்டா என்பது எனக்கு ஞாபகமில்லை. இருந்தாலும் போட்டு வைத்தேன். உங்களுக்கு இது தெரியாதாகையால் வேலை கிடையாது. அந்தச் சிறகு போட்டதும் ஒரு அழகாய்த் தான் இருக்கிறது. இல்லையா?


1


இதவும் திமிங்கலந்தான் என்பதைச் சொல்லாமலே அறிந்து கொள்வீர்கள். ஆனால் அந்தப் புதிய சங்கதி என்ன? அது சொல்லித் தான் ஆகவேண்டும். திமிங்கல வேட்டை யாடுவோர் உபயோகிக்கும் சூலாயுதம் அது. நீண்ட கயிறு கட்டிய இவ்வாயுதத்தை வெகு தூரத்திலிருந்தபடி திமிங்கலத்தின் விலாப் புறத்தில் எறிவார்


2


கள். இவ்வாயுதம் திமிங்கலத்தின் விலாப்புறச் சதையில் உள்ளே பொத்துக்கொண்டு செல்லுமாதலால் அதன் முனை வெளியிலிருந்து பார்த்தால் தெரியாது. ஆனால் படத்தில் வெளியில் தெரியும்படி காட்டியிருக்கிறேன். தெரியாததைக் கூடத் தெரியும்படி செய்வதுதான் சித்திரக் கலைஞனின் சாமர்த்தியம்.

உலகிலுள்ள பொருள்கள் எல்லாம் சரம்-அசரம், அதாவது அசையும்பொருள், அசையாப்பொருள் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன. "ஓவியங்கள் உயிர் பெற்றிருக்கவேண்டும்" என்று சமீபத்தில் எங்கேயோ படித்தேன். ஆகையால்தான் கேவலம் மரம், மட்டை, செடி, கொடி, ஆறு, மலை முதலிய அசையாப் பொருள்களை விடுத்து உயிர்ப்பிராணிகளை எடுத்துக் கொண்டேன். உயிர்ப்பிராணிகளை நீரில் வாழ்வன, நிலத்தில் வாழ்வன என்று பிரித்திருக்கிறார்கள். நீர் வாழும் பிராணி இப்போது எழுதியாகி விட்டது. நிலத்தில் வாழும் பிராணிகளில் பறப்பன நடப்பன என்று இரண்டு பிரிவுகள் உண்டு. முதலில் பறப்பனவற்றை எடுத்துக்கொள்வோம்.


இது என்ன பட்சி என்று உங்களுக்கு உடனே தெரியவில்லையல்லவா? சற்று நிதானமாக யோசித்துப் பாருங்கள். இது வீட்டில் வளர்க்கும் பட்சிகளில் ஒன்று. காலையில் கொக்கரக்கோ என்று கத்தும். ஆமாம். கோழிதான்! சித்திரத்தில் கொஞ்சம் யோசித்துத்தான் கண்டு பிடிக்க வேண்டும். பார்த்தவுடன் தெரிந்து போனால் அப்புறம் சித்திரத்துக்கும் நிஜக் கோழிக்கும் என்ன வித்தியாசம்? அதைவிட நிஜக் கோழியையே பார்த்து விடலாமே? நிற்க. இவ்வளவு அற்புதமாக இந்தக் கோழியை எப்படி எழுதினேன் என்று அறிய உங்களுக்கு ஆவல் உண்




டாகலாம். இரகசியத்தைச் சொல்லி விடுகிறேன். பயிற்சி, பயிற்சி, பயிற்சி, பயிற்சிதான் இரகசியம்! ' பல துறையிலும் கவனம் செலுத்தி மேம்புல் மேயக் கூடாது. ஒன்றிலேயே ஈடுபட்டு நிபுணத்துவம் பெறவேண்டும்'' என்று ஒரு புத்தகத்தில் படித்தேன். ஆகவே, கோழியிலேயே என் முழு கவனத்தையும் செலுத்தி நிபுணனானேன். பின்வரும் சித்திரங்களைப் பார்த்தீர்களானால் என்னுடைய நிபுணத்துவத்தைப் பற்றி உங்களுக்குச் சிறிதும் சந்தேகம் தோன்றாது.




இதுதான் நான் பயிற்சி பெற்ற விதம். கோழிக்கு மூக்குதான் பிரதானம். ஆகவே மூக்கு, மூக்கு, மூக்கு, மூக்கு, எழுதியே பயிற்சிபெறவேண்டும். கவனம் செலுத்தி நூறு மூக்கு எழுதி விட்டால் அப்புறம் ஆயுள் முடியும்வரை மூக்கைப்பற்றிக் கவலை வேண்டியதில்லை. இப்படித்தான் ஒவ்வொன்றும்.



கோழி வரைவதில் நிபுணத்துவம் பெறுவதென்றால் இலேசில்லை. பற்பல சந்தர்ப்பங்களுக்குரிய பற்பல தோற்றங்களிலும் கோழி எழுதிப் பழக வேண்டும். இந்தக் கோழி இரை தேடிக் கொண்டிருக்கிறது. அதன் வாய் பிளந்திருப்பதைப் பாருங்கள். நெல்லு அல்லது வேறு தானிய மணி ஒன்றைக் கண்டதும் ' டபக் ' கென்று கொத்தித் தின்னும். ஆஹா ! எவ்வளவு இயற்கையாய் அமைந்திருக்கிறது பாருங்கள் !



இந்தக் கோழி முட்டை யிட்டிருக்கிறது. அதனால் அதற்குக் கர்வம் தாங்க வில்லை. இந்த அற்புத சம்பவத்தை ஊருக்கெல்லாம் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. இது பெண் குலத்துக்கே உரிய இயற்கைக் குணம். 'தலைச்சன் பிள்ளை' பெற்ற இளம் பெண் ஒருத்தியுடன் சற்று நேரம் பேசிப் பாருங்கள். தன் அதிசய, அற்புத, அபூர்வ, அசாதாரண, தெய்வீகக் குழந்தையைப்பற்றி யல்லாமல் வேறெதைப் பற்றியும் அவள் பேசமாட்டாள். இந்தப் பெட்டைக் கோழியும் அப்படித்தான். (கோழி, சேவலா, பெட்டையா என்னும் சந்தேகம் யாருக்காவது இருந்திருந்தால், இப்பொழுது அது நீங்கிப் போயிருக்குமென்று நம்புகிறேன்.) இந்தப் பிராணியின் மனோ நிலையை எப்படித் தத்ரூபமாய்ப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறேன், பாருங்கள்! உயர்தர ஓவியக்காரர்களின் ஆற்றல் இதில்தான் நன்கு விளங்கும்.



இந்தக் கோழியும் முதல் படத்தில் காட்டியதும் ஒன்றுதான். கீழே யிருந்து கூவியது போதாதென்று இந்தக் கர்வம் பிடித்த பெட்டைக் கோழி தான் முட்டை யிட்ட வைபவத்தைக் குட்டிச் சுவரின் மேலேறி


வெட்ட வெளிச்ச மாக்க முயல்கிறதென்பதை நான் சுட்டிச் சொல்ல வேண்டியதில்லை. (பாருங்கள்! கவிதை கூட வருகிறது. ஒரு கலையில் தேர்ந்தால் மற்றக் கலைகள் தாமே வரும் என்று தெரியாமலா சொன்னார்கள்? இந்த எட்டாவது படத்தில் கோழி எறக்குறையக் குட்டிச் சுவரின்மேல் எறிவிட்டது.





இந்த நிலைமையில் அதற்கு முட்டையை அடை காக்க வேண்டு மென்று நினைவு வந்தது. (சபாஷ்! அழகிய கதை யாகவே அமைந்து வருகிற தல்லவா?) எனவே திரும்பிப் போய்அடை காக்கின்றது. கீழே யிருப்பது கூடு. கோழிக்குக் கூடு கட்டத் தெரியுமா தெரியாதா வென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. இருந்தாலும் போட்டு வைத்தேன். என் பிரயாசையும் கோழியின் ஆசையும் வீண் போகவில்லை. குஞ்சு(கள்) வெளியே வந்தது (ன).

ஒரு முட்டையிலிருந்து ஒரு குஞ்சுதான் வருமா, இரண்டு மூன்று வருமா என்பது சந்தேகமா யிருக்கிறது. ஆகையால் இங்கே குஞ்சு போட்டுக் காட்டாமலே விடுகிறேன். ஆனல் குஞ்சைப் பார்த்ததும் கோழியின் கர்வம் தலைக்குமேல் போய்விட்டது. இந்திய சட்டசபையில் வாணங்கள் விட்ட வண்ணமா




யிருந்த அக்கிராசனர் வி. ஜே. படேலைவிட அதற்குப் பெருமை அதிகமாய் விட்டது. குட்டிச்சுவர் போதாதென்று வீட்டுக்கூறை மேலேயே ஏறுகிறது பாருங்கள்.

இப்போது கோழி கூறைமேலிருந்து கிளம்பி ஆகாயத்திலேயே பறக்கத் தொடங்கிவிட்டது. இதில் இன்னொரு விசேஷம். ஒருபுறம் பார்த்தால் கோழிபோல் காண்கிறது; மற்றொருபுறம் பார்த்தால் கொக்கைப்போல் காணப்படுகிறது. என்ன அற்புதம்? பாருங்கள்! இந்த அற்புதம் பயிற்சியைமீறிய விஷயம்; இதற்கெல்லாம் இயற்கை ஆற்றல் வேண்டும். கோழியைப்போல் இருக்க வேண்டுமானல் பயிற்சிபோதும். கோழி கொக்கைப்போல் விழுவதற்கு இயற்கை ஆற்றல் தேவை. பூர்வஜன்ம வாசனை என்றாலும சரிதான். இதைத்தான் விட்டகுறை தொட்டகுறை என்பது. "சித்திரமும் கைப்பழக்கம்" என்னும் ஔவை வாக்கு இந்த விடத்தில் பொய்ப்படுகிறது.



11




12

பறவைகள் எழுதிக் கைதேர்ந்து விட்டபடியால் இனிமேல் மிருகங்களை ஒரு கை பார்க்க வேண்டும். அதோ, 12-வது படத்தில் இருப்பது ஒரு வகை மான். அதன் தலையில் நீட்டிக்கொண்டிருப்பவை கொம்பு

கள் இல்லை, காதுகள். இந்த விடத்தில் எனக்கே கொஞ்சம் சந்தேகமா யிருக்கிறது. ஆ! ஆ! வந்துவிட்டது. கொம்புக்குக் கொம்பு, காதுக்கு காது; இரண்டுக்கும் பொதுவாய் வைத்துக்கொள்ளுங்கள். சித்திரத்திலும் இது விசித்திரமல்லவா? நிற்க, மானுக்கு வால் ஒரு மாதிரியா யிருக்கிறதே என்று நீங்கள் நினைக்கலாம். உண்மைதான். அந்த குறையை நானும் உணர்ந்திருக்கிறேன். ஒடிந்து போய் ஒட்டவைத்தது போல் காணப்படுகிறது. ஆனாலும் பாதகமில்லை, கொஞ்சம் நிமிர்த்திவிட்டால் சரியாய்ப் போய்விடும்.


நாலு கால் ஜந்துக்கள் விஷயத்தில் நான் இன்னும் பூரணத் தேர்ச்சி பெற வில்லையென்பதை ஒப்புக்கொள்ள வேண்டியது தான். இருந்தாலும் இதுபுலி யென்பதைத் தெரிந்துகொண்டிருப்பீர்கள். இதில் குறைபாடு கால்களில் இருக்கிறது. ஆனால் அது என்ன என்பதுதான் நன்கு விளங்க வில்லை.




புலி பாய்வதுபோல் காட்டவேண்டுமென்பது என் எண்ணம். ஒரு வேளை முன்னங்கால் பின்னங் காலாகவும் பின்னங்கால் முன்னங் காலாகவும் தவறி அமைந்து விட்டன போலும். போனால் போகட்டும்; எப்படியாவது காரியம் முடிந்தால் சரி

பதினாலாவது படத்திலுள்ள பிராணியைக் கழுதை யென்று உங்களில் யாராவது எண்ணினால், பெருந்தவறு செய்தவர்களாவீர்கள். கழுதை இப்படிப் பாய்ந்து ஓடுமா என்று நீங்களே சொல்லுங்கள். இந்தக் குதிரையில் ஒருவிசேஷம் என்னவென்றால், முன்னங்

கால் பாய்ச்சலில் நிற்கின்றன. பின்னங் கால் சும்மா விருக்கின்றன. ஆகவே குதிரை கொடித்துக் கீழே விழும் தறுவாயி லிருக்கின்றது. "நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்னும் கவியின் வாக்குக்கு உதாரணமாக இதை அமைத்திருக்கிறேன். குதிரை வாலைப் பாருங்கள். ஆகா! என்ன சேர்த்தி! இந்த வால் ஒன்றுக்கு மட்டும் ஆயிரம் பொன் கொடுக்கலாமே?






மிருகங்கள் எல்லாவற்றிலும் சிங்கம் எழுதுவதுதான் மிகவும் சுலபம். ஏனென்றால் அதற்கு மூக்கு, கண், வாய் முதலியவை போடவேண்டிய அவசியமே யில்லை. எல்லாவற்றையும் பிடரி மயிர் மூடிக்கொண்டு விடுகிறதல்லவா? இந்தச் சிங்கம் தற்போது தூங்கிக்கொண்டிருக்கிறது. அதை எழுப்பாமலே விட்டு மேலே செல்வோம். ஏனென்றால், ஏற்கனவே பிரிட்டிஷ் சிங்கத்தை காந்தி மகான் தட்டி எழுப்பி விட்டிருக்கிறார். ஒரு சமயத்தில் ஒரு சிங்கமே போதும். இந்தச் சிங்கம் தூங்கிக் கொண்டே யிருக்கட்டும்.

மிருகங்களை வேலை முடித்து விட்டபடியால் இனிமேல் மனிதர்கள்தான் பாக்கியிருக்கிறார்கள். இந்தப் படத்திலுள்ளவர் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர்; வெள்ளைக்கார துரை. துரைகள் தான் இரு படிக்காலைத் தலைக்கு மேல் தூக்கிக்கொண்டு உட்காருவார்கள். இவர் இப்போது தம் பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதிக் கொண்டிருக்கிறார். காந்தியைத் திட்டுவதற்குப் போதிய வார்த்தைகள் அகப்படவில்லை யாகையால் நடுவில் எழுதுவதை நிறுத்தி வாயில் பேனாவை வைத்துக்கொண்டு யோசிக்கிறார். புதிய திட்டு யாரேனும் கண்டு பிடித்து அவருக்குத் தெரிவித்தால் மிகவும் நன்றி யுடையவராயிருப்பார்.



இவர் ஓர் இந்திய தேசியப் பத்திரிகையின் ஆசிரியர். இத்தனை காலமும் காங்கிரஸையும் காந்தியையும் பலமாகத் தாங்கி எழுதி வந்தவர். ஆனால் லாகூர்க் காங்கிரஸுக்குப் பின் இவர் பாடு 'டலா' வில் வந்துவிட்டது. காந்தியையும், சட்ட மறுப்பையும், காங்கிரஸையும், கடன் மறுப்பையும் தாங்கி எழுதினால் சர்க்கார் கோபத்துக்கு ஆளாகநேரும்; வெள்ளைக்காரர் கொடுக்கும் விளம்பரப் பணத்தில் மண் விழுந்துவிடும். ஆனால் காங்கிரஸையும், காந்தியையும் தாக்கினாலோ ஜனங்களின் கோபத்துக்கு ஆளாக நேரிடும்; சந்தாத்தொகை குறைந்து விடும். இத்தகைய



நெருக்கடியான நிலைமையில் இவர் மாத்திலும் படாமல் மாங்காயி லும் படாமல், அப்படியும் சொல்லாமல் இப்படியும் சொல்லாமல், முன்னுல் பார்த்தால் வாதியின் குதிரை, பின்னுல் பார்த்தால் பிரதி வாதியின் குதிரை என்று எழுதவேண்டியதா யிருக்கிறது. இத் தகைய அற்புதமான விளக்கெண்ணெய்த் தலையங்கம் ஒன்றை இப் போதுதான் இவர் எழுதி முடித்தார். ஆகையினுல் தான் அவர் முகத்தில் இப்போது புன்னகை தாண்டவமாடுகிறது. சந்தோஷ மாக முடியும் இந்த கட்டத்திலேயே நானும் இந்த சித்திரக் கொத் தை முடித்து விடுகிறேன்.



நாடகம்

காலட்சேபங்களிலே முதல் ஸ்தானம் நாடகத்துக்குத்தான் கொடுக்க வேண்டும். (ஒருவேளை "நாடகம்" என்றால் என்ன வென்றே உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அதுதான் "டிராமா." இருந்தாலும் பழைய கருநாடக மாசிய நான் இங்கு "நாடகம்" என்றே சொல்லி வருவதற்கு அனுமதி தாருங்கள்.) நாடகத்துக்கு என் முதன்மை ஸ்தானம் தரவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். என் கூடாது என்று உங்களை நான் திருப்பிக் கேட்கிறேன். இந்த ஒரு கேள்வியினாலேயே உங்கள் வாதம் அடிபட்டுப் போய்விட்ட தென்றாலும் போனால் போகிறதென்று சில காரணங்களும் சொல் கிறேன். முதலாவது, நாடகத்திலேதான் உழைப்பாளிகள் அதிகம். இராமர் காட்டுக்குப் போகிறாரென்றால் வரிசையாக அறுபதுபேரை நிறுத்திக் கூச்சலிடச் செய்யலாம். பாகவதர்கள் எவ்வளவுதான் வயிற் றில் அடித்துக் கொண்டு அழுதாலும் அவ்வளவு சத்தம்போட முடி யாது. மேலும், நாலைந்து மணிநேரம் ஒரே ஆசாமியைப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட மாற்றி மாற்றிப் பலபேரைப் பார்த்தல் கண் ணுக்குக் குளிர்ச்சி யல்லவா?

இரண்டாவது, நாடகத்திலேதான் இடையிடையில் திரை போடும் நல்ல வழக்கம் இருந்துவருகிறது. நான் பார்த்திருக்கும் நாடகங்களுக்குள்ளே ஒன்று எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்த நாடகம் மொத்தம் 4½-மணிநேரம் நடந்தது. இதில் 3-மணி நேரம் வெளித்திரை விட்டிருந்தார்கள். சபையோருக்கு எவ்வளவு சௌக ரியம் பாருங்கள்! இந்த நல்ல முறையை மற்றவர்களும் கடைப்பிடித் தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்று நான் அடிக்கடி எண்ணுவ துண்டு. இப்படியே நாடகத்தின் சிறப்பைக் குறித்து நெடுகச் சொல் லிக்கொண்டே போகலாம். ஆனால் சுருங்கச் சொல்லி விளங்க வைத்

தல் என்னுடைய கொள்கையென்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? எனவே, இதை இத்துடன் நிறுத்தி, நாடகத்தைப்பற்றி என்னுடைய அநுபவங்கள் சிலவற்றைச் சொல்லப் புகுகின்றேன். காதைத் தீட்டிக்கொண்டு கேளுங்கள்.

நாடகங்களிலே இரண்டு வகை உண்டு. ஒருவகை, சந்தோஷ முடிவுள்ள நாடகங்கள். மற்றொரு வகை துயரமாக முடியும் நாடகங்கள். நான் பார்த்திருக்கும் நாடகங்கள் எல்லாம் சந்தோஷமாக முடிவுற்றனவே யாகும். அதாவது நாடகம் முடிந்ததும் நான் சந்தோஷ மடைவேன். நான் மட்டுமா? என் ஐந்து புலன்களும் சந்தோஷ மடையும். இவற்றில் மூக்கின் சந்தோஷம்தான் அபாரமானது. சுருட்டு, புகையிலை, கள், சாராயம், வெங்காயம், உள்ளிப்பூண்டு, வியர்வை ஆகிய இவ்வளவு வாசனைகளையும் இடைவிடாது ஐந்து மணிநேரம் பிடித்த மூக்கு, நாடகம் முடிந்ததும் பெருமூச்சு விட்டு மகிழ்ச்சி யடைவதில் ஆச்சரியமுண்டோ? சந்தோஷத்தை அளப்பதற்குத் 'தர்மாமீடரைப், போன்ற ஒரு கருவி யிருப்பதைக் காணலாம். இதற்கு அடுத்த படியில் வருவது கண். வைரம், இமிடேஷன் வைரம், தங்கம் முலாம் பூசிய பித்தளை, முகப்பவுடர் பூசிய வித விதமான முகங்கள், பொய் மீசை, பொய் மயிர் ஆகிய வற்றைக் காந்த விளக்கிலும், மின்சார தீபத்திலும் [illegible]ர்த்தும் பார்த்துப் பூத்துப் போன கண், இப்போது பெரிதும் மகிழ்ச்சி யடைவது இயல்பே. காதின் சந்தோஷத்தையோ சொல்ல வேண்டியதில்லை. நடிகர்களின் புலம்பல், பின் பாட்டுக் கா[illegible]ர்களின் ஹார்மோனியத்தின் ஓலம், "ஒன்ஸ்மோர்" கூச்சல், ஸ்திரீகள் பகுதியிலிருந்து வரும் குழந்தைகளின் அழுகைச் சத்தம் முதலிய வற்றினால் துளைபட்டு வெளியே போக வேண்டுமென்று கெஞ்சிக் கொண்டிருந்த காது நாடகம் முடிந்ததும் உண்மையிலேயே ஆனந்த மடைந்து விடும். அதற்குக் கால் மட்டும் இருந்தால் ஆனந்தக் கூத்தாடும் என்பதில் சந்தேகமில்லை.—ஐயோ! மறந்தே விட்டேன். காதுக்குக் கா[illegible]ந்தால் அப்பொழுதே எழுந்து ஓடிப் போயிராதா?

தற்காலத்தில் நடக்கும் நாடகங்கள், சம்பந்தமாக ஒரு விஷயம் எனக்குப் பிடிப்பதேயில்லை. அதாவது, நடிகர்களின் பெயர்களை முன்னாலேயே வெளியிட்டு விளம்பரம் செய்தல். இதன் பயனாக, நாடகத்தில் புகட்டப்பெறும் நற்போதனைகளை ஜனங்கள் பயன்படுத்திக் கொள்ள இயலாமற் போகிறது. எப்படி யென்றால் கேளுங்கள்! நாடக மேடையிலே சாவித்திரி பிரவேசிக்கிறாள். ஆனால் சபையில் வீற்றிருப்பவர்கள் எல்லாரும் "கிஜாம்பாள் வந்து விட்டாள்" "கிஜாம்பாள் வந்து விட்டாள்" என்று பேசிக் கொள்கிறார்களே யன்றி "சாவித்திரி வந்து விட்டாள்" என்று யாரும் சொல்வதில்லை. உடனே, கிஜாம்பாளின் பூர்வோத்தரம், அவளுக்கு மொத்தம் காதலர்கள் எத்தனைபேர், எத்தனை மைனர்கள் அவளால் ஒட்டை யாண்டியானவர்கள், தற்போது அவளுடைய ஆசை நாயகன் யார் என்பது போன்ற விஷயங்கள் உடனே ஞாபகத்துக்கு வருகின்றன. இந்த நிலைமையில், அவள் கற்பின் சிறப்பைக் குறித்துச் சரமாரியாகப் பொழியும் பிரசங்கத்தினால் யார் பயனடையப் போகிறார்கள்?

இந்த அம்சத்திலே, டிராமா அல்லது நாடகத்தைவிடத் தெருக்கூத்து மிகவும் சிரேஷ்டமானது என்று நான் கருதுகிறேன். உதாரணமாக, பொம்மலாட்டத்தை எடுத்துக்கொள்வோம்.

"ராஜாதி ராஜன் வந்துச்சே—அவன் பின்னாலே
சந்திரமதி அம்முணி வந்துச்சே—அவ பின்னாலே
லோகிதாச்சன் குஞ்சும் வந்துச்சே"

என்ற பாட்டு முழக்கத்துடன் ஒவ்வொன்றாய்ப் பொம்மைகள் வரும்போது, அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன் இவர்களைப் பற்றிய நினைவே நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. பின்னால் நின்று அப்பொம்மைகளை ஆட்டுவிப்போரைக் குறித்து யாரும் அப்போது எண்ணுவதில்லை.

நடிகர்கள் வேஷம்போட்டு நடிக்கும் தெருக் கூத்துக்கூட இந்த விஷயத்தில் பாதகமில்லையென்று சொல்லலாம். பட்டணம் படிக்கு இரண்டு படி பிடிக்கும் பெரிய கிரீடத்தைத் தலையில் அணிந்து, கடகம், வளை, வாகுவலயம் முதலிய ஆபரணங்கள் தரித்து, பாவாடை போன்ற பெரிய அங்கியை மாட்டிக்கொண்டு கையில் உருவிய பட்டாக் கத்தியுடன் அரிச்சந்திரன் அரங்க மேடையில் பிரவேசிக்கிறான். நாலைந்து தடவை கறகறவென்று தட்டா மாலை சுற்றி 'தகதகதித்தோம் தகதகதித்தோம்' என்று நாலுதடவை அரங்கம் கிடுகிடுக்கும்படி குதித்து, 'ஸையா' என்று முக்காலி பலகையில் உட்கார்ந்து, "அகோ வாரும் பிள்ளாய், மதி மந்திரியே!" என்று அவன் பேசத் தொடங்குங்கால், உண்மையிலே பண்டைக்காலத்து இராஜ சபை ஒன்றில் நாம் வீற்றிருப்பதாய் எண்ணுகிறோம். ஆனால் நவநாகரிகம் மிகுந்த இந்தக்காலத்து 'டிராமா'க்களில் இத்தகைய உணர்ச்சி உண்டாவதே கிடையாது.

இராஜபார்ட்டிலும், ஸ்திரீபார்ட்டிலும் பெயர்பெற்ற இரண்டு நடிகர்கள் வெகுநாள் பிரிந்திருந்த பின்னர் மறுபடியும் சேர்ந்து நாடகம் நடத்துகிறார்கள் என்று ஒரு முறை தடபுடலாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இந்த நாடகத்துக்கு நான் போயிருந்தேன். கதை கோவலன் சரித்திரம். கதா நாயகன் வேஷம் போட்டவர் கால் சட்டையும், மேல்சட்டையும் தரித்து, தலையில் வெல்வெட் குல்லாவும், கையில் மணிக்கட்டுக் கடியாரமும் அணிந்து, நெற்றியில் சாந்துப்பொட்டு விளங்க தியாகராஜ கீர்த்தனைஒன்று பாடிக்கொண்டு மேடையில் பிரவேசித்த போது, சபையிலிர் எல்லாரும் "வெல்லப் பையர் வந்துவிட்டார்" "வெல்லபையர் வந்துவிட்டார்" என்று சொன்னார்களே யல்லாமல் "கோவலன் வந்துவிட்டான்" என்று சொன்னவர் யாருமில்லை.

இதனால் நான் நடிகர்கள்மீது குறைசொல்வதாக யாரும் நினைக்கவேண்டாம். கிடையவே கிடையாது. ஒவ்வொருவனும் தன் தகுதிக்கேற்பவே எதுவும் அடைகிறான் அல்லவா? "[illegible]

பிரிய நண்பர்கள்'' தங்கள் தகுதிக் கேற்ற நடிகர்களையே பெறுகிறார்கள் என்பது என் நம்பிக்கை. ஒரு கதை கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு நாடகத்தில் கதா நாயகன் தற்கொலை செய்துக் கொண்டு இறக்கிறான். இந்த வேஷம் தரித்தவர் சோக ரசம் ததும்பி வெகு அற்புதமாய் ஒரு பாட்டுப் பாடிவிட்டுக் குத்திக்கொண்டு இறந்து விழுந்தார். அந்தப் பாட்டிலே மயங்கி உருகிப்போய் உட்கார்ந்திருந்த சபையினர் உடனே நாலாபுறத்திலிருந்தும் ''ஒன்ஸ்மோர்! ஒன்ஸ்மோர்!" என்று கூச்சலிட்டார்கள். சபையினரின் ஒருமுகமான விருப்பத்துக் கிணங்க கதா நாயகன் மறுபடியும் உயிர்பெற்று எழுந்து நின்று, மீண்டும் ஒருமுறை பாட்டும் பாடிவிட்டுக் குத்திக் கொண்டு விழுந்தானும்! இது வெறுங் கதையா, உண்மைச் சம்பவமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஏறக்குறைய இதனையொத்த சம்பவம் நான் மேலே குறிப்பிட்ட நாடகத்தில் உண்மையாகவே நிகழ்ந்தது.

மிகவும் உருக்கமான கட்டம். கோவலன் சிலம்பு விற்று வருவதற்காகக் கண்ணகியிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்படுகிறான். கண்ணகி ராகதாளங்களுடன் அழுகின்றாள். கோவலனும் ராகம் பிசகாமல், தாளம் தவறாமல் அவளுக்கு ஆறுதல் சொல்லுகிறான். பின்னர் இருவரும் பிரிந்து தலைக்கு ஒரு திசையாகத் தாளத்துக் கிசையக் கால் எடுத்து வைத்துச் செல்கிறார்கள். கண்ணகி மேடையிலிருந்து மறைந்துவிட்டாள். கோவலனும் உள்ளே செல்லும் சமயம். அந்த நெருக்கடியான துயரகரமான தருணத்தில் "தேசபந்து பாட்டு" என்று ஒரு குரல் எழுந்தது. அதைப் பின்பற்றி மற்றொருவரும் "தேசபந்து பாட்டு" என்று கத்தினர். பின்னர்,

"தேசபந்து பாட்டு!"

"தேசபந்து பாட்டு!"

"தேசபந்து பாட்டு!"

"தேசபந்து பாட்டு!"

என்ற கூச்சல் படிப்படியாக உச்ச ஸ்வரத்தை அடைந்து கொண்டு வந்தது. உள்ளேபோன கோவலன் திரும்ப மேடைக்கு வரும் வரையில் கூச்சல் நிற்கவில்லை. அவன் வந்ததும் ஐந்து நிமிஷம் பலத்த கரகோஷம். அந்த ஆரவாரம் அடங்கியதும், கண்ணகியைப் பிரிந்து அவள் காற்சிலம்பை விற்கச் சென்ற கோவலன்,

"அங்கதேச வங்கதேச பந்துவை இழந்தனம்"

என்று பாடத்தொடங்கினான். முதலிலே இந்தப் பாட்டுக்கு எனக்கு அர்த்தம் விளங்கவே யில்லை. கொஞ்சதூரம் கேட்டபிறகுதான், நான்கு வருஷத்துக்குமுன் இறந்துபோன தேசபந்து தாஸின் மரணத்தைக் குறித்து, இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்னாலிருந்த கோவலன், சிலம்புவிற்கப் போவதைக் கூட நிறுத்திவிட்டுப் பிரலாபிக்கிறான் என்று அறிந்துகொண்டேன். உண்மையிலேயே அப்போது எனக்குக் கண்ணில் நீர் ததும்பிவிட்டது. ஆனால் அது தேசபந்து தாஸ் செத்துப்போனதற்காக வல்ல வேறெதற்காக வென்பதை நீங்களே ஊகித்தறிந்து கொள்ளுங்கள்.

மேற்படி நாடகத்துக்கு என்னை அழைத்துச் சென்ற நண்பர், நான் அதில் அவ்வளவு உற்சாகம் காட்டாதது குறித்து ஏமாற்றமடைந்தார். "ஆனால் நீங்கள் ஞானசௌந்தரி நாடகம் பார்க்க வேண்டும். பார்த்தால் கட்டாயம் மயங்கிவிடுவீர்கள்." என்று அவர் கூறினார். ஆகவே அதையும் பார்த்துவிடுவதென்று தீர்மானித்தோம். ஞானசௌந்தரி கதை சுமார் இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால் ரோமாபுரியில் நடந்ததாம். ஆனால் இந்த நாடகத்தில் நடித்தவர்களின் நடை உடை பாவனைகள், இரண்டாயிர வருஷத்துக்கு முற்பட்ட ரோமாபுரி நடை உடை பாவனைகளுமல்ல; தற்போதைய இதாலியர்களின் நடை உடை பாவனைகளுமல்ல. அவ்வளவு ஏன்? அவை, முற்காலத்திலோ, தற்காலத்திலோ எந்தத் தேசத்தாரும் கைக்கொண்டிருந்த நடை உடை பாவனைகளே அல்ல. ஒரு பெரும் கதம்பமாகவே அவை காணப்பட்டன. [illegible]தா

நாயகன் தாலூகா கச்சேரி சேவகனைப்போல் உடைதரித்திருந்தான். கதாநாயகி ஏறக்குறைய ஓர் ஆங்கிலோ இந்தியச் சிறுமியைப்போல் காணப்பட்டாள் (அல்லது காணப்பட்டான்). கதா நாயகியின் மாற்றாந்தாய் அய்யங்கார் சாதிப்பெண்ணைப்போல் புடவை கட்டிக் கொண்டிருந்தாள். கதாநாயகி பேசியது தமிழ்நாட்டுப் பிராமண ஸ்திரீகள் பேசும் பாஷை. ஆனால் இடையிடையே ஒவ்வொரு வார்த்தை ஆங்கிலம் கலந்துகொண்டாள். ["பப்பா! இன்று என்ன லெஸ்ஸன் டீச் பண்ணப் போரயள்?" என்பது போல] இப்படி இரண்டொரு இங்கிலீஷ் வார்த்தை கலந்து பேசுவதால் தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த ரோமாபுரிப் பெண்ணாகி விட்டதாக அவள் எண்ணம். கதாநாயகன் என்ன பாஷை பேசினானென்பது எனக்குத் தெரியாது. ஏனெனில் அவன் பேசியது ஒருவார்த்தையாவது என் காதில் விழவில்லை.

இதைப்பற்றி என் நண்பரிடம் கேட்டேன். அதற்கு அவர் 'இந்த நடிகருக்குப் பேச்சுத் திறமை அவ்வளவு போதாது. ஆனால் ஆக்ட் அபாரம். வேட்டை ஸீன் ஒன்று வரப்போகிறது. அதில் மன்னன் என்ன ஷோக்காய் ஆக்ட் செய்யப் போகிறான் பார்!" என்று கூறினார். எனவே, வேட்டை ஸீன் எப்போது வரப் போகிறதென்று கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியில் என் நண்பர் கூறியது உண்மை யாயிற்று. அதாவது வேட்டை ஸீன் வந்தது. ஆக்டும் அபாரமாய்த்தான் இருந்தது. கதா நாயகன் பிரம்மானந்தமாக இங்கிலீஷ் நோட்டு ஒன்றைப் பாடிக்கொண்டு, வெகு கம்பீரமாய் இராஜநடை நடந்து மேடைக்கு வந்தான். உடனே சட்டென்று இடுப்பில் சொருகியிருந்த கைத் துப்பாக்கியை எடுத்து "டப் டப் டப்" என்று தாளந் தவறாமல் சுட்டான். என் நண்பர் என் விலாப்புறத்தில் ஒரு குத்துக் குத்தி "எப்படி பார்த்தாயா?" என்றார். "ஆஹா! அற்புதம்!" என்றேன் நான். "ஆனால் இரண்டொரு சந்தேகம். இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால் கைத்துப்பாக்கி இருந்ததா? அப்பொழுது பாட்டுப் பாடிக்கொண்டுதான் வேட்டை யாடுவது வழக்கமா?

14

சுடப்பட்ட மிருகங்கள் எங்கே?'' என்று கேட்டேன். "அதோ திரையில் பார் மிருகங்கள்'' என்றார் நண்பர். கதாநாயகனுக்குப் பின்னால் தொங்கிய திரையில் ஏதோ குறுக்கும் நெடுக்கும் கோடுகள் காணப்பட்டன. அவை சிங்கம், புலி, மான் முதலிய மிருகங்கள் என்று என் நண்பர் சொல்லத் தெரிந்து கொண்டேன். "அவை ஓடவும் இல்லை; செத்து விழவும் இல்லையே?'' என்று மறுபடியும் கேட்டேன், "இப்படிக் குதர்க்கம் செய்தால் என்ன பண்ணுவது? அவை செத்து விழுந்து விட்டதாகப் பாவனை!'' என்றார் நண்பர். இதற்குள்ளாக அரங்க மேடையில் உண்மையிலேயே வேட்டை ஆரம்பமாகி விட்டபடியால் நாங்கள் பேச்சை நிறுத்தினோம். விஷய மென்னவென்று கவனித்ததில், பின்பாட்டுக்காரனும், மிருதங்கக் காரனும் தாளந் தவறி விட்டதாகத் தெரியவந்தது. இதனால் கோபங் கொண்ட கதாநாயகன் அவர்களைத் துப்பாக்கிக் கட்டையால் அடிக் கப் போனான். "இதுதான் சரியான வேட்டை! முதலில் நடந்த விலங்கு வேட்டை சுத்த ஹம்பக்!'' என்று நண்பரிடம் சொன்னேன்.

இது சம்பந்தமாக நான் பலமான அபிப்பிராயம் கொண்டிருக் கிறேன். ஆமாம்! ரொம்ப பலமான அபிப்பிராயம். மேற் கூறிய காட்சியில் "மிருகங்கள் செத்து விழுந்ததாக பாவனை'' என்று என் நண்பர் கூறினாரல்லவா? இது போன்ற காட்சிகள் முழுவதையுமே சபையினரின் மனோ பாவனைக்கு ஏன் விட்டுவிடக் கூடாது? தென் னாலிராமன் கதையொன்று நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். இராஜா தன் சபைக்கு வந்த பெயர்பெற்ற சித்திரக்காரன் ஒருவனைக் கொண்டு அரண்மனைக் கொலுமண்டபத்தில் சித்திரம் எழுதுவித் தார். வேலை முடிந்த பின்னர் ஒருநாள் இராஜாவும் மற்றவர்களும் சித்திரம் பார்க்கச் சென்றார்கள். முதலில் பிள்ளையார் உருவம் எழுதியிருந்தது. "இது என்ன?'' என்று கேட்டான் தென்னாலி ராமன். "தெரியவில்லையா? இவர்தான் பிள்ளையார்''என்றார் இராஜா. "பிள்ளையாருக்கு முதுகு எங்கே?'' என்றான் தென்னாலிராமன். "முதுகு பின்னாலிருப்பதாகப் பாவனை'' என்றார் இராஜா. பின்னர்,

தென்னலிராமன் கொஞ்சகாலம் எங்கேயோ போய் இருந்துவிட்டுத் திரும்பிவந்தான். தான் சித்திரம் எழுதக் கற்றுக் கொண்டு வந்திருப்பதாகவும், ஒரு மண்டபமும், செலவுக்குப் பணமும் கொடுத்தால் சித்திரம் எழுதித் தருவதாகவும் கூறினன். இராஜா அவ்வாறே செய்தார். சில நாள் கழித்துத் தென்னலிராமன் இராஜாவைச் சித்திரம் பார்க்க அழைத்துக் கொண்டு போனன். மண்டபம் முழுவதும் ஆங்காங்கு விளக்குமாற்றைச் சாயத்தில் தோய்த்து அடித்திருப்பது போல் காணப்பட்டதைக் கண்டு இராஜா மிகவுங் கோபங்கொண்டார். "என்னடா இது அக்கிரமம்?" என்ருர். "அக்கிரமம் என்ன? சித்திரத்தைப் பாருங்கள்!" என்ருன் இராமன். "சித்திரமா? எங்கே இருக்கிறது?" என்று அரசர் கேட்டார். "நெடுகிலும்தான் இருக்கிறது. இதோ இது குதிரையின் படம்" என்ருன் இராமன். "என்ன உளறுகிருய்?" "உளறல் ஒன்றுமில்லை. இது குதிரையின் வால்!" என்ருன். "குதிரையின் உடம்பு, முகம் எல்லாம் எங்கே?" என்று கேட்க "பின்னல் இருப்பதாகப் பாவனை!!" என்று பதிலளித்தான.

தென்னலிராமன் முறையை நமது நடிகர்கள் பெரிதும் கையாள வேண்டுமென்று கருதுகிறேன். பல காட்சிகளை நடத்திவிட்டதாகப் பாவனை செய்துவிடல் பெரிதும் நலமா யிருக்கும். விளையாட்டுத் துப்பாக்கியை வைத்துக்கொண்டு மிருதங்கக்காரனை வேட்டை யாடுவதைப் பார்க்கிலும் அது நல்லதல்லவா? இதுபோன்ற அசந்தர்ப்பங்கள் இன்னும் பல இருக்கின்றன. உதாரணமாக, "தசாவதார" நாடகத்தில் காட்டப்பெறும் ஸ்ரீ வைகுண்டத்தின் காட்சியைக் குறிப்பிடலாம். இந்தக் காட்சியைப் பார்த்ததும் என் பக்கத்திலிருந்த அய்யங்கார் ஸ்வாமிகள் ஒருவர் "ஆஹா! சாக்ஷாத் வைகுண்டம்! சாக்ஷாத் வைகுண்டம்! பிரபோ!" என்று அலறிப் புடைத்துக் கன்னத்தில் அறைந்து கொண்டார், ஆனல் உண்மையில் வைகுண்டம் இப்படித்தான் இருக்கு மென்றால், [illegible]விஷ்ணு லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுத்து அழைத்தாலும் அந்த இடத்துக்குப் போகக் கூட[illegible] என்று நான் தீர்மானித்தேன். பளபளப்பிலும், பொன்


மூலாத்திலும் பெருமாளுக்கே இவ்வளவு ஆசை யிருந்தால், நம் போன்ற சாதாரண மனிதர்களைப்பற்றிக் கேட்க வேண்டுமா? இது போன்ற பல எண்ணங்கள் எனக்குத் தோன்றலாயின.

ஒரு முறை சம்பூரண இராமாயண நாடகத்துக்குப் போயிருந்தேன். இதில் இராமன் வேடம் பூண்டவர் பெயர் பெற்ற நடிகராகிய துட்டப்பா என்பவர். காட்டுக்குப்போன இராமர் கையில் மணிக்கட்டுக் கடிகாரம் கட்டிக்கொண் டிருந்ததைப் பார்த்தேன். காட்டிலே கடிகாரம் நிரம்ப அவசியமே யல்லவா? ஒருகால், "14 வருஷம் காட்டுக்குத்தான் போகிறேமே; சாவகாசமாக 'ஷார்ட் ஹாண்டு-டைப் ரைடிங்' கற்றுக்கொண்டு வரலாமே?" என்று இராமர் எண்ணி யிருக்கலாம். இராஜ்யந்தான் இல்லை யென்று தீர்ந்து விட்டது. திரும்பி வந்ததும் ஒரு கம்பெனியில் உத்தியோகத்திலாவது அமரலா மல்லவா? மற்றொரு விஷயம். இந்த நாடகத்தில் சீதை மேடைக்கு வந்ததும், அந்த வேஷம் பூண்டவள் அமலம் என்னும் பெண்மணி யென்றும், அவள் மேற்படி துட்டப்பாவின் அரை டஜன் காதல் நாயகிகளில் ஒருத்தி என்றும் என் பக்கத்திலிருந்தவர்கள் தயவு கூர்ந்து தெரிவித்தார்கள். இப்பொழுது எனக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்துவிட்டது. அதாவது இந்த இராமர் பழைய இராமரைப்போல் தயவு தாட்சண்யமின்றிச் சூர்ப்பனகையைத் துரத்தி விடுவாரா, அல்லது [illegible]வுடன் ஏழாக இருந்துவிட்டுப் போகட்டுமென வைத்துக்கொண்டு விடுவாரா என்பது சந்தேகம். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, இராமரும் பரதரும் பிரியும் கட்டத்திலேயே என் கண்ணில் நீர் பெரு[illegible] மூர்ச்சையுற்று விழுந்து விடுவேன்போல் ஆகிவிட்டேன். (காரணம் சோக ரசமன்று: பக்கத்தி லிருந்தவர் விட்ட சுருட்டுப் புகையும், சாராய நாற்றமும்.) எனவே, மேற்படி சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளாமலே வெளியேறும்படி ஆயிற்று.


பற்பல டிராமாக்களையும் பார்த்த பிறகு, தெருக் கூத்துப் பார்க்க வேண்டுமென்னும் ஆசை எனக்குப் பலமாய் உண்டா யிரு[illegible]து.

ஆனால் தெருக் கூத்து இக்காலத்தில் மிகவும் அபூர்வமாய் விட்டது. எங்கேனும் அருமையாக நடக்கும் கூத்துக்கும் "டிராமா" என்னும் நாகரிகப் பெயர் கொடுத்து விடுகிறார்கள். எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் திருவிழாவில் குடியானவர்கள் ஆடும் கூத்துக்குக்கூட "டிராமா" என்றுதான் பெயர். நாட்டிலே எத்தனையோ இயக்கங்கள் நடக்கின்றன. தெருக்கூத்தின் புனருத்தாரணத்துக் கென்று ஓர் இயக்கம் கிளம்பக் கூடாதா?

கடைசியாக ஒரு வார்த்தை. இந்தக் கட்டுரையில் காணப்படும் நடிகர்களின் பெயர்கள் யாரைக் குறிப்பிடக்கூடும் என்று யோசித்து மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டாம். அவை வெறும் கற்பனைப் பெயர்கள். கட்டுரையும் வெறும் கைச் சரக்குதான். உண்மை ஒரு வார்த்தைகூட இல்லை.



பொறுமைப் படு



பொறுமையின் பெருமையைக் குறித்து நீங்கள் எப்போ தேனும் எண்ணிப் பார்த்ததுண்டா? எனக்கும் இதுவரையில் அது தெரியாமலேதான் இருந்து வந்தது. சில தினங்களுக்கு முன்பு அதன் பெருமை எனக்குச் சட்டென்று புலனாயிற்று. "பொறுமைப் படு" என்னும் சூத்திரத்தில்தான் வாழ்க்கையில் வெற்றி யடையும் இரகசியம் அடங்கி யிருக்கிறது.

மேற்படி மகா ரகசியத்தை நான் எப்படிக் கண்டு பிடித்தே னென்று சொல்கிறேன், கேளுங்கள். ஒரு சமயம் நான் என்னு டைய சொந்த கிராமத்துக்குச் சென்றேன். நான் இறங்கவேண்டிய ஸ்டேஷனுக்கு முதல் ஸ்டேஷனில் எனக்குத் தெரிந்த ஒரு மனிதர் வந்து ரயிலேறினார். அவர் என் கிராமத்துக்குப் பக்கத்துக்குக் கிரா மத்தைச் சேர்ந்தவர். நாங்கள் ஒருவரை யொருவர், வீட்டு எருமைக் கன்றுக்குட்டியின் தேக சௌக்கியம் உள்பட யோக க்ஷேமங்க ளெல்லாம் விசாரித்து முடித்தோம். பின்னர், "நம் ஸ்டேஷனில் வாடகை வண்டி கிடைக்குமா?" என்று அவரைக் கேட்டேன். "அதைப்பற்றி என்ன கவலை? என்னுடைய வண்டி வந்திருக்கும்" என்றார் அந் நண்பர். அந்தக் கணத்திலே வாழ்க்கையில் வெற்றி யடையும் இரகசியத்தை நான் கண்டுபிடித்து அதைக் கெட்டியாய்த் தலைப்பில் முடிந்து கொண்டேன்.

"என்னுடைய வண்டி வந்திருக்கும்" என்று அவர் கம்பீர மாய்ச் சொன்னபோது என்னிடம் என்ன எதிர்பார்த்தார் என்று நினைக்கிறீர்கள்? "உனக்கு ... சொந்த வண்டி கிடையாது. ஆகை யால் நீ என்னிடம் பொறுமைப்படு" என்று அந்த நிமிஷத்தில் அவர் நெற்றியில் எழுதி யொட்டி யிருந்தது. "நல்ல ... !

இதற்குத்தான் உங்களைப் போன்ற நண்பர்களின் சிநேகம் வேண்டு மென்பது'' என்று நான் பதிலளித்தேன். அப்போது அவர் முகத்தை மறுபடியும் நோக்கினேன். கொஞ்ச நஞ்சம் எனக்கிருந்த சந்தேகமும் நீங்கி விட்டது. பொறுமையைப்போல் வாழ்க்கையில் வெற்றி யடைவதற்குச் சிறந்த உபாயம் வேறில்லை யென்று உறுதி பெற்றேன்.

ஸ்டேஷனில் வண்டி வரவில்லை. ஒரு மணி நேரத்திற்கு முன்பா யிருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா? "என்ன ஸார்! மதிப்பாய் வண்டி வருமென்று சொன்னீர்கள். ஒன்றையும் காணுமே?'' என்று அவரை மட்டந்தட்ட ஆரம்பித்திருப்பேன் ஆனல் இப்போது வாழ்க்கை இரகசியம் அறிந்தவனாதலின், அந்தப் பேச்சையே எடுக்கவில்லை. "சத்த வண்டி ஒன்று பிடிக்கலாமே?'' என்றேன். ஆவணி மாதம். சாகுபடி காலம். சத்த வண்டி, சத்தம் போடாத வண்டி ஒன்றையுமே பிடிக்க முயலவில்லை. கண்ணில் கண்டல்லவா பிடிப்பதற்கு? என்னிடம் ஒரு கைப்பெட்டியும், படுக்கையும் இருந்தன. நண்பரிடம் சாமான் ஒன்றும் கிடையாது. "நாமே தலைக்கு ஒன்றாய் எடுத்துக்கொண்டு நடந்துபோய் விடலாம், ஸார்! இதிலெல்லாம் கௌரவம் பாராட்டக் கூடாது'' என்று அவர் சொன்னர். கைப்பெட்டி நல்ல கனம். ஆனல் பார்ப்பதற்கு அந்தஸ்தா யிருந்தது. அதை நண்பர் எடுத்துக் கொண்டார். நான் படுக்கையைத் தூக்கிக் [illegible]ண்டேன்.

பாவம்! கைப்பெட்டியின் கனத்தினல் அவர் தோள்கள் வெகு பாடு பட்டுக்கொண் டிருந்தன. அந்த சமயத்தில் அவரிடம் எனக்கேற்பட்ட நன்றியறிதலைச் சொல்ல முடியாது. அந்த நன்றியைக் காட்டும் பொருட்டு அவர் என்ன காரியம் செய்யச் சொன்னலும் செய்திருப்பேன். ஆனல் அவர் கேட்டதென்ன? "என்னிடம் இன்னும் அதிக பொறுமைப் படு'' என்பதை யல்லாது வேறெதுவு மில்லை. திவான் பகதூர் முருகய்யங்[illegible]ருடன் தம்முடைய நெருங்கிய சிநேகத்தைக் குறித்தும், அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தூதரா[illegible]பூவிலாந்து தேசத்துக்குச் சென்றபோது தாம் அவருடன்

இலங்கை வரை போய் வந்ததைப் பற்றியும் அவர் கூறலானார். "ஆகா! பிரயாணம் செய்தால் அப்படி யல்லவா செய்ய வேண்டும்? ரயில்வே ஏஜண்ட் நேரில் வந்திருந்து எங்களுக்கு ஏற்படுத்தி யிருந்த தனி முதல் வகுப்பில் ஏற்றிவிட்டுப் போனார். வழி யெல்லாம் புஷ்ப ஹாரங்களும், பழங்களும் வந்து குவிந்து கொண்டிருந்தன. அவைகளை நான் வாரி வாரி எல்லாருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்படியும் ஒரு கூடை திராட்சைப் பழம் அழுகிப் போயிற்று. இலங்கையில் அரசாங்க விருந்தினர்களாய்த் தங்கினோம். மூன்று மோட்டார் வண்டிகள் எப்பொழுதும் தயாராய்க் காத்துக்கொண் டிருந்தன......" இப்படி அவர் சொல்லிக்கொண்டே போனார். நானும் என்னால் கூடிய வரையில் முயற்சி செய்து எவ்வளவு பொறுமைப் படலாமோ அவ்வளவும் பட்டுக்கொண்டு வந்தேன். சாலையில் மைல் கணக்கு ஆக, ஆக, அவரிடம் என் நன்றி யறிதலும், அந்த அளவில் என் பொறுமையும் ஏறிக்கொண்டே வந்தன.

பின்னால் இதைப்பற்றி நான் சாவகாசமாகச் சிந்தித்தபோது பழைய அநுபவங்கள் பல ஞாபகத்திற்கு வரலாயின. அவற்றில் ஒன்றை இங்கே சொல்கிறேன். நான் கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அடுத்த ஊரிலிருந்து ஒரு நண்பர் அடிக்கடி வருவதுண்டு. அந்தப் பக்கத்திலேயே இந்த நண்பர்தான் முதன் முதலாக பைசைக்கிள் வண்டி வாங்கி யிருந்தார். அவரைப் பார்த்து "எப்பொழுது வந்தீர்கள்?" என்று யாராவது கேட்டால் "இப்பொழுதுதான் சைகிளில் வந்தேன்" என்று பதில் சொல்வார்! கொஞ்ச நாளைக்குப் பிறகு "எப்பொழுது சைகிளில் வந்தீர்கள்?" என்றே நான் கேட்கத் தொடங்கினேன். நல்ல வேளையாக நான் பரிகாசம் செய்கிறே னென்பது அவருக்குத் தெரியாது. ஆகவே இன்று வரையில் அவர் என்னிடம் விசுவாசத்துடனேயே இருந்து வருகிறார்.

அப்போதெல்லாம் எனக்கு இந்த நண்பரைப்பற்றிக் கொஞ்சம் தாழ்வான அபிப்பிராயம் உண்டு. "பெரிய தற்பெருமைக்காரர்"

என்று எண்ணுவேன். ஆனால் இப்பொழுது அவ்வெண்ணம் அடியோடு மாறிவிட்டது. இந்த நண்பருடைய நோக்கமென்ன? தாம் சைகிள் சவாரி செய்வதைப்பற்றி நான் பொறாமைப்படவேண்டுமென்பதுதான். ஆனால் இது மனிதவர்க்கத்துக்கே பொதுவாக ஏற்பட்ட தர்மம். உலகில் மனிதரெல்லாரும் மற்றவர்கள் தங்களிடம் பொறாமை கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். நானும், நீங்களும் இந்த விதிக்கு விலக்கல்ல. பின்னர், மேற்படி நண்பரை மட்டும் இழிவாய்க் கருதுவதின் பொருளென்ன?

பிறருடைய பொறாமையைப்போல் உலகில் ஒருவனுக்குச் சந்தோஷந் தரக்கூடியது வேறொன்றும் கிடையாது. ஸர், திவான் பகதூர், ராவ்பகதூர் முதலிய பட்டங்களைப் பெரிய மனிதர்கள் ஏன் விரும்புகிறார்கள்? மற்றவர்களின் பொறாமையைக் கிளப்புவதற்குத் தான். இல்லாவிடில் இந்த பட்டங்களில் என்ன இருக்கின்றது? ஒத்துழையாமை இயக்கத்தின்போது பலர் இந்தப் பட்டங்களைச் சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டார்கள். ஏன்? ஜனங்கள் அப்பட்டங்களைக் குறித்துப் பொறாமைப்படுவதற்குப் பதிலாக இரக்கப்பட ஆரம்பித்தார்கள். அதுதான் காரணம்.

ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட மனிதர் தாம் ஒரு திவான் பகதூரின் சிநேகிதராயிருப்பது குறித்து என் பொறாமையைக் கிளப்ப விரும்பினார். அந்த திவான் பகதூர் என்ன செய்கிறார்? அவர் தமது சிநேகிதரிடம் "நேற்று கவர்னர் மாளிகையில் நடந்த விருந்தில் தங்களைக் காணோமே! அழைப்பு வரவில்லையோ? ரொம்பவும் சிறப்பாய் நடந்தது" என்று சொல்கிறார். கவர்னர் துரை செய்வதென்ன? சீமைக்குத் திரும்பிப் போனதும் தமது நண்பர்களையெல்லாம் கூட்டி வைத்துக்கொண்டு இந்தியாவில் தமக்குக் கிடைத்த உபசாரப் பத்திரங்கள், வெள்ளிப் பெட்டிகள், வைர மாலைகள் முதலியவற்றையெல்லாம் காட்டி "ஆஹா! இந்தியா தான் சொர்க்கலோகம்" என்று கூறுகிறார். இவர்களெல்லாம் விரும்புவதென்ன? மற்றவர்களின் பொறாமைதான்.

தேசியத் தொண்டர் ஒருவரை எடுத்துக்கொள்வோம். "சென்னைப் பட்டணத்துக்கு மகாத்மா காந்தி வந்திருந்தபோது அவர் பக்கத்தில் நின்று விசிறிக்கொண்டிருந்தேன்" என்று அவர் தம் நண்பரிடம் சொல்லிப் பொறாமை மூட்ட முயல்கிறார். என்னுடைய பொறாமையைக் கிளப்ப முயன்று தோல்வி யடைந்த இருவரைக் குறித்து மேலே சொன்னேனல்லவா ? ஆனால் மற்றொரு சமயம் ஒரு நண்பர் இந்த முயற்சியில் வெற்றியடைந்தார். "திருச்சிக்கு லோகமான்ய திலகர் வந்திருந்தபோது நானும் கூட்டத்துக்குப் போயிருந்தேன். திலகர் வருவதற்காக வழிவிட்டிருந்தது. வழியின் பக்கத்தில் நின்றேன். திலகர் வந்தபோது எல்லாரும் கைகூப்பி நின்றார்கள். நான்மட்டும் சட்டென்று குனிந்து அவர் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக்கொண்டேன்" என்று அவர் சொன்னபோது நான் உண்மையிலேயே அவரிடம் பொறாமை கொண்டேன்.

சென்ற வருஷம் நடந்த வேதாரண்யம் மகாநாட்டுக்கு நான் போயிருந்தேன். மகாநாடு முடிந்து ஜாகையிலிருந்து ஸ்டேஷனுக்குக் கிளம்பினேன். சாமான் எடுத்து வர ஆள் தேவையாயிருந்தது. ஜாகை வாசலிலிருந்த தொண்டரைப் பார்த்து 'போர்ட்டர் அகப்படுவானா?' என்று கேட்க எண்ணி போர்ட்டர் என்று ஆரம்பித்தேன். இதற்குள் அத்தொண்டர் "போட்டோ எடுக்கப் போகிறார்களா?" என்று சொல்லிக்கொண்டு அவசரமாய் எழுந்து ஓடத் தொடங்கினார். அவரை நிறுத்தி "இல்லே, இல்லே. போர்ட்டர் வேண்டும்" என்று சொல்வதற்குள் பெரும் கஷ்டமாய்ப் போய்விட்டது. அத்தொண்டர் புகைப்பட மெடுத்துக்கொள்வதில் இவ்வளவு ஆவல் காட்டிய காரண மென்ன ? "பார்த்தாயா? வல்லபாய்க்குப் பக்கத்தில் நான் நின்றுகொண்டிருக்கிறேன் !" என்று தம் நண்பர்களிடம் சொல்லி மகிழ்வதற்குத்தான். சென்னையிலே எனக்குத் தெரிந்த காங்கிரஸ் தொண்டர் ஒருவர் இருக்கிறார். அவர் வீட்டு மாடி முகப்பில் தெருவில் போகிறவர்களுக்குத் தெரியும்படியாக சுமார் 200 புகைப்படங்கள் மாட்டியிருக்கின்றன. அவ்வளவு படங்களிலும் அத்தொண்டர் இல்லாத படம் ஒன்றுகூடக் கிடையாது !

இவரைப்பற்றி நான் குறைசொல்வதாக நினைக்க வேண்டாம். தலைவர்கள் விஷய மென்ன? பத்திரிகையிலே படம் வருவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதை நழுவ விடக்கூடிய தலைவர் ஒருவர் உண்டா? மிக அபூர்வம். சென்னையில் வாலிபர்கள் சங்கம் ஒன்று சில காலமாக வேலைசெய்து வருகின்றது. இச்சங்க அங்கத்தினரின் படம் குறைந்தது மாதம் மூன்று தடவை பத்திரிகைகளில் வெளியாகி வருகின்றது. ஏனெனில் சென்னைக்கு வரும் எந்தப் பிரமுகருக்கும் ஓர் உபசார விருந்து நடந்தால் இவர்கள் விடுவதில்லை. விருந்துக்காக புகைப்பட மெடுக்கப்படுகிறதா அல்லது புகைப்பட மெடுப்பதற்காக விருந்து நடத்துகிறார்களா என்பது மட்டுந்தான் எனக்குச் சந்தேகமா யிருக்கிறது.

"எல்லாரையும் பற்றிச் சொல்லுகிறீரே? உம்முடைய சங்கதி என்ன?" என்று நீங்கள் கேட்கலாம். என்னுடைய சொந்த சங்கதி இரண்டொன்று சொல்கிறேன், கேளுங்கள். கொஞ்ச காலத்திற்கு முன்புதான் எனக்கு அறிமுகமான ஒருவர் இப்பொழுது என் அத்தியந்த நண்பராயிருக்கிறார். அதன் காரணம் என்ன தெரியுமா? சொல்ல வெட்கமாயிருக்கிறது......அவர் ஒருமுறை "நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்க்கிறேன். உங்களைப்போல் எழுத முடியவில்லை" என்று தெரிவித்தார். இப்படி என்னிடம் பொறுமை காட்டியதற்காக நான் அவரிடம் வெறுப்புக்கொண்டே னென்று நீங்கள் நினைக்கலாம். கிடையவே கிடையாது. அதுமுதல் அவரிடம் எனக்கு அபார அன்பு உண்டாகிவிட்டது. அவ்வின்பு நாளுக்கு நாள் வளர்ந்து பெரும் வெள்ளமாய்விடுமோ வென்றும் பயப்படுகிறேன்.

மற்றொரு சமயம் நான் ரயில் ஏறினேன். வண்டியி லிருந்தவர்களில் ஒருவர் எனக்குக் கொஞ்சம் இடம் ஒழித்துக் கொடுத்தார். அவரை எனக்கு முன்பின் தெரியாது. அடுத்த ஸ்டேஷனில் நான் இறங்கியபோது அந்த மனிதர் பக்கத்திலிருந்தவரைப் பார்த்து "இவர் யார் தெரியுமா? அவர்தான் "தமிழ்த் தேனீ" என்று கூறியது

என் காதில் விழுந்தது. ("தமிழ்த் தேனீ" என்ற பெயருடன் நான் சில காலம் எழுதியதுண்டு என்னும் குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுகிறேன்.) இராஜ நடையென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என் வாழ்நாளில் நான் எப்போதேனும் போலி இராஜ நடை நடந்ததுண்டானால் அந்த சமயத்தில்தானிருக்கவேண்டும். அன்று முழுதும் அந்த மனிதர் யாராயிருக்கலா மென்றும், அவருக்கு எப்படி என்னைத் தெரியுமென்றும் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

இத்தகைய அநுபவங்கள் தம் வாழ்நாளில் ஏற்பட்டதே கிடையாதென்று உங்களில் யாரேனும் நெஞ்சில் கைவைத்துக் கொண்டு சொல்ல முடியுமா? ஒரு நாளும் முடியாது. நீங்கள் ரயிலில் பிரயாணம் செய்கிறீர்கள். டிக்கட் பரிசோதகர் வந்து பக்கத்திலுள்ள குடியானவர்களிடம் டிக்கட் கேட்கிறார். உங்களை மாத்திரம் கேட்காமல் போகிறார். அப்போது உங்கள் கர்வம் ஓங்கி வளர்ந்து ரயில் கூரையைக் கூடப் பெயர்த்துவிட்டு மேலே கிளம்புவதில்லையா? "நம்மை யெல்லாம் டிக்கட் கேட்க மாட்டார்கள், ஸார்! ஆசாமியைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்வார்கள்" என்று எத்தனை சந்தோஷத்துடன் சொல்லுகிறீர்கள்? நம்முடைய சொந்தப் பெருமையை மட்டுமல்ல; பிறருடைய சிறப்பைக்கூட நம்முடையதென நினைத்துக் கொண்டு சில சமயம் நாம் சந்தோஷ மடைகிறோம். "நான் நேரில் பார்த்திருக்கிறேன்" என்ற பெருமைப் பேச்சைக் கேளாதவர் யார்? பார்த்தது மகாராஜாவின் தர்பாரா யிருக்கலாம்; காங்கிரஸ் மகா சபையா யிருக்கலாம்; பெருங் கலகம் நடந்த இடமா யிருக்கலாம்; காசி நகரமா யிருக்கலாம்; தாஜ்மகால் கட்டிடமா யிருக்கலாம்; குற்றவாளியைத் தூக்குப்போட்ட சம்பவமா யிருக்கலாம்; பெரிய பாம்பு அடித்த இடமா யிருக்கலாம்; ஆகாய விமானமா யிருக்கலாம்; மோட்டார் விபத்தா யிருக்கலாம்; குதிரைப் பந்தயமா யிருக்கலாம். எதுவா யிருந்தாலும் "நான் நேரில் பார்த்தேன்" என்று நீங்கள் பெருமை யடித்துக் கொள்ளும்போது மற்றவர்களுடைய பொறாமையைக் கிளப்பவே விரும்புகிறீர்களென்பதை ஒப்புக் கொள்ளுங்கள்.

நம்முடைய விஷயந்தான் இப்படி யென்றால் நம்முடைய மனைவிமார், சகோதரிகள், குழந்தைகள் எல்லாரும் இதே நிலையில்தான் இருக்கிறார்கள். குழந்தை ராமு பள்ளிக்கூடத்திலிருந்து ஓடி வந்து "அப்பா! எனக்குப் பன்னிரண்டு மார்க்கு, சீனுவுக்குக் கோழி முட்டை!" என்று உற்சாகம் ததும்பச் சொல்கிறான். தனக்கு 12 மார்க்கு கிடைத்ததை விட சீனு கோழிமுட்டை (பூஜ்யம்) வாங்கியதில்தான் அவனுக்கு அதிக சந்தோஷம்! வீட்டில் சாதாரணமா யிருக்கும் பெண்கள் எங்கேயாவது வெளியில் போவதென்றால் ஒரு மணங்கு நிறையுள்ள பட்டுப்புடவையும், (இரவல் வாங்கியாவது) அரை மணங்குக்குக் குறையாத நகைகளும் போட்டுக் கொண்டு கிளம்புவதேன்? மற்றப் பெண்களின் பொறாமையைக் கிளப்புவதற்குத்தான். உங்கள் சகோதரியாவது, மனைவியாவது அடுத்த முறை உங்களிடம் வந்து "கமலம் அசாத்திய ராங்கிக்காரி, அவளுடன் சகவாசமே உதவாது" என்று சொல்லும்போது அதை அப்படியே நம்பிவிடவேண்டாம். உங்கள் சகோதரி அல்லது மனைவியின் புடவை, நகைகளைப் பற்றியோ, படிப்பு, பாட்டுத் திறமைகளைப்பற்றியோ ஸ்ரீமதி கமலம் பொறாமை காட்டவில்லை யென்று தெரிந்து கொள்ளுங்கள். கோபத்திற்குக் காரணம் அதுதான்.


கேவலம் மனிதர்களிடம் மட்டுமல்ல; இன்னும் உயரிய இலட்சியங்களுக்காகப் பிறந்த மிருகங்களிடத்தில்கூட இந்தக் குணம்காணப்படுகிறது. ஒரு சமயம் பிராணிக் காட்சிசாலை ஒன்றுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு குரங்கும் ஒரு யானையும் மிகவும் சிநேகிதமாயிருந்தன. மற்றக் குரங்குகள் யானையின் அருகில் போகவும் துணிவதில்லை. ஆனால் அந்த ஒரு குரங்குமட்டும் யானையின் மேலேறியும், இன்னும் பலவிதமாகவும் விளையாடிக் கொண்டிருந்தது. இதைப் பற்றி அந்தக் குரங்குக் கிருந்த கர்வத்தைப் பார்த்து நான் மிகவும் வெட்கமடைந்தேன். என் தெரியுமா? நம்மிடந்தான் இந்தத் துர்குணமென்றால், நமது மூதாதைகளான குரங்குக் குலத்தினிடமுமா இது காணப்படவேண்டுமென்ற எண்ணம். அந்தப் பொல்லாத குரங்கு

யானையின் முதுகில் நின்று கொண்டு மற்றக் குரங்குகளைப் பார்த்துக் கெக்கலி கொட்டிச் சிரித்தபோது சாக்ஷாத் மனித அவதாரமாகவே காணப்பட்டது. முதல் வகுப்பில் ரயில் பிரயாணம் செய்பவன் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளைப் பார்ப்பது போலவும், சொந்த மோட்டாரில் போகிறவன் பாதசாரிகளை நோக்குவது போலவும், புதிதாய் திவான் பகதூர் பட்டம் பெற்றவன் மற்ற சாதாரண ஜனத் திரளைப் பார்ப்பது போலவும் அந்த மானங்கெட்ட குரங்கு தன் இனத்தைச் சேர்ந்த மற்றக் குரங்குகளைப் பார்த்தது. நிற்க.

இதுவரைக்கும் கூறியதிலிருந்து விளங்குவதென்ன? மனிதர்களுக்காகட்டும், மிருகங்களுக்காகட்டும், பிறருடைய பொறுமையைப் போல் மகிழ்ச்சி தருவது வேறொன்றுமில்லை. பிறருடைய பொறுமையைக் கிளப்ப முடியாவிடில் அதைப் போல் துயரந் தருவதும் வேறு கிடையாது. ஆகவே உங்களுக்கு சிநேகிதர்கள் வேண்டுமானால், மற்றவர்களைக் கொண்டு உங்கள் காரியங்களை முடித்துக் கொள்ளவேண்டுமானால், பொதுவாக உலகில் நீங்கள் வெற்றிபெற வேண்டுமானால், "பொறுமைப் படுங்கள்" என்று சொல்வேன். இந்தப் பிரரேபணையை எல்லாரும் ஒப்புக் கொள்கிறீர்களா? சரிதான்; உங்களுக்கு மகாநாட்டு அநுபவம் கிடையாது. எந்தப் பிரரேபணைக்கும் ஒரு திருத்தப் பிரரேபணை அவசியம். ஆதலின் நானே ஒரு திருத்தப் பிரரேபணை கொண்டு வருகிறேன். "பொறுமைப் படவேண்டாம்; ஆனால் பொறுமைப் படுவதாகக் காட்டிக் கொள்." இந்த சூத்திரத்தைக் கடைப் பிடித்து நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவிட்டால் பிறகு என்னைக் கேளுங்கள்.



துரிதப் பிரயாணம்



நாம் வசிக்கும் இந்தக் காலத்தைத் "துரித யுகம்" என்று சொல்கிறார்கள். வாயு வேகத்தையும், மனோ வேகத்தையும் விட அதிக வேகத்துடன் இந் நாளில் மக்கள் பிரயாணம் செய்கிறார்கள். முன்னெல்லாம் ஆறு மாதப் பிரயாணமா யிருந்தது. இப்போது ஆறு மணிப் பிரயாணமாகி விட்டது.





முற்காலத்தில் சித்த புருஷர்கள் சிலர் 'கமன குளிகை' என்று ஒரு மாத்திரை வைத்திருந்தார்க ளென்றும், அதை வாயில் அடக்கிக் கொண்டால் நினைத்த இடத்துக்கு நினைத்தமாத்திரம் செல்லலா மென்றும் கதைகள் வழங்குகின்றன. ஒருவேளை, இந்த 'கமன குளிகை' என்பது கஞ்சா உருண்டையாய் இருக்கலாமென்று சில குதர்க்க வாதிகள் கூறுகின்றனர். இது நிற்க.




உலகமெல்லாம் எவ்வளவு அவசா அவசாமாய் ஓடியபோதிலும், பாரத நாடு எப்போதும்போல் ஆமை நடையிலேயே போய்க்கொண் டிருக்கிறது. வாழ்க்கை யெப்படியோ அப்படித் தான் வாகனங்களும். ஆகவே, பாரத நாட்டின் தேசியக்கொடி "ஆமைக் கொடி"யாக இருக்தல் வேண்டுமென்று பல தேசாபிமானிகள் பிரரேபணை செய்கிறார்கள்.

இந்தத் "துரித யுகத்"திலும் நமது கிராமச் சாலைகளில் இரட்டைமாடுபூட்டிய கட்டை வண்டிகள் சாவகாசமாய்ப் போய்க்கொண் டிருப்பதைக் காணலாம். சாலையில் சிலவிடங்களில் இடுப்பு மட்டும் உளையாயிருக்கும். மூன்று நாள் வரை வண்டிகள் சேற்றிலேயே கிடப்பதுண்டு.







சிறு ஊர்களுக்குச் சாலையென்ற நாமதேயமும் கிடையாது. மேடும் பள்ளமுமான "இட்டேரி"கள் தான். இவற்றில் ஒற்றை மாட்டு வண்டி தான் போகும். அதுவும் சப்பாத்திக் கள்ளியில் மாட்டிக் கொண்டால் வெளிக் கிளம்புவது மிகப் பிரயாசை.



இந்தத் தொல்லைகளை எல்லாம் உத்தேசித்துச் சில விடங்களில் ஜனங்கள் கழுதை வாகனத்தை இன்னும் கை விடாதிருக்கிறார்கள். கழுதைபோய்க் கொண்டே யிருந்தால் நல்லது. நடுவில் தூங்கிப் போய் விட்டால் அப்புறம் எழுப்ப முடியாது. மனிதனும் தூங்க வேண்டியதுதான்.



ஆனால் பட்டணங்களில் இவ்வளவு மோசமில்லை. கொஞ்சம் கொஞ்சமாய்த் துரிதப் பிரயாண சாதனங்கள் ஏற்பட்டு வருகின்றன. இவற்றில் மிகவும் சௌகரியமான தொன்று ரிக்ஷா வண்டி. ரிக்ஷா வண்டியில் ஏறிச் சந்து பொந்துகளி லெல்லாம் போகலாம் ஆனால் சில வேளை மனிதர் முதுகு அதற்குத் தடையாகிறது.




ரிக்ஷா வண்டி [illegible]கல் பாவமென்று ஜீவகாருண்ய சிலர்கள் சிலர் சொல்கிறார்கள். ஆனால் ஒரு பக்கம் வயிற்றுக் கொடுமையும், மற்றொரு பக்கம் பணக் கொழுப்பும் இருக்கும்வரையில் ரிக்ஷா வண்டிக்கு ஆபத்தில்லை. அதற்குப் பதிலாக, ஜட்கா வண்டிக்குத்தான் அபாயம் கிட்டி யிருக்கிறது. மோட்டார் பஸ்களின் பிராபல்ய[illegible]னால் ஜட்கா வண்டிகள் அருகி விட்டன. அருமையாய்க் காணப்

படும் ஒன்றிரண்டு வண்டிகளில் கட்டியிருப்பது கழுதையா, குதிரையா வென்று கண்டு பிடிப்பது கஷ்டம்.




சென்னைப் பட்டணத்து டிராம்வண்டி சாதாரணமாகவே அதி வேகமாய்ப் பறக்கக் கூடியது. மயிலாப்பூரிலிருந்து பிராட்வே போவதற்கு ஒன்றரை மணிநேரந்தான் பிடிக்கும். நடுவில் **கர்ரண்ட் ஆப்** ஆகிவிட்டால் சொல்லவேண்டியதில்லை.



மோட்டார் பஸ் வேகமாய்ப் போகவில்லை யென்று எவரும் குறை சொல்ல முடியாது. ஆனால் அந்தப் பாழும் வண்டிக்கு 'ரிபேர்' அடிக்கடி வந்து விடுகிறது. நெருக்கடியான சமயத்தில் பெட்ரோலும் ஆகிவிடும். இத்தகைய சந்தர்ப்பங்களில் பிரயாணிகள்தான் மோட்டாரைத் தள்ளவேண்டும்.



பைசைகிள் ஏறத்தெரிந்தால் எவனையும் இலட்சியம் செய்யாமல்இஷ்டமானபோது இஷ்டமான இடத்துக்குப் போகலாம். ஆனால் சில சமயம் விருப்பமில்லாத இடத்துக்கும் போக நேரிடும். இதோ இந்தப் படத்திலுள்ள பைசைகிள்மீது அதோ போகும் மோட்டார் வண்டி ஏறிவிட்டது. அத பயனாக அதில் சவாரி செய்தவர், ஐம்பது வருஷ யாத்திரையை ஒரு நிமிஷத்தில் முடித்து நேரே வைகுண்டம் போய்ச் சேர்ந்தார்.



தரையில் போகும் எல்லா வாகனங்களிலும் வேகம் மிகுந்தது மோட்டார் பைசைகிள் தான். சென்னை பீச் சாலையைப்போல் ஒழுங்கான சாலையாயிருந்தால் உத்தமம். தப்பித் தவறிப் பட்டிக்காட்டுச் சாலைகளில் போனால்...?




கலியுகத்து அதிசயங்களிலெல்லாம் மகா அதிசயமானது ஆகாயவிமானம். ஆனால் இந்தியாவின் பெயர் சொன்னால் அதற்கும் அபாயம் வந்துவிடுகிறது. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் சமீபத்தில் ஆகாய விமானம் மூலமாய்க் கடிதப் போக்குவரவுக்கு ஏற்பாடு செய்தார்கள். இதற்குள் இரண்டு தடவை அந்த ஆகாயத் தபாலுக்கு ஆபத்து வந்துவிட்டது.



இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது எல்லா வகைப் பிரயாணங்களிலும் கால்நடைப் பிரயாணமே சிறந்ததென்று தோன்றுகிறதல்லவா? "பாதசாரிகள் சங்கம்" ஒன்று ஏற்படுத்திக் கால்நடைப் பிரசாரத்தைத் தீவிரமாகச் செய்ய ஏன் ஓர் இயக்கம் காணக்கூடாது?

[இக்கட்டுரை 1929-ம் வருஷம் டிசம்பர் மாதம் "விகட"னில் வெளியாயிற்று. 1930-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் மகாத்மா தமது கால்நடை யாத்திரை தொடங்கினர்.]

வல்தாது வேணு நாயக்கன்



(1)

“ஏய்! இப்படி உள்ளே வா! வேடிக்கை பார்த்தது போதும்” என்றான் வேணு நாயக்கன். அவனுக்கு எதிரில் பீங்கான் தட்டில் சோறு வட்டித்திருந்தது. மோர் கலந்து பிசைந்து கொண்டு ஊறு காய்க்காகக் காத்திருந்தான். அவன் மனைவி வீட்டு வாசற்படியில் நின்று ஏதோ தெருவில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

“ஏஹே! காது கேட்கவில்லையா? போலீஸ்காரன் குடி வருவதைப் பார்க்கக் கூடாது. சட்டத்துக்கு விரோதம்; ஜெயிலில் போட்டு விடுவார்கள்” என்று சொல்லி வேணு நாயக்கன் பலமாகச் சிரித்தான்.

ஆனால் மங்கம்மாளுக்கு இந்தப் பரிகாசம் புரியவில்லை. அவள் திரும்பி வந்து “ஜெயிலில் போட்டு விடுவார்களா? விளக்குமாற்றால் அடிப்பேன். இந்த நாற்றப் போலீஸ் வேலைக்கு எவ்வளவு ஜம்பம்? இரண்டு வண்டி சாமான்? கட்டில், மெத்தை, நாற்காலி, டிரங்குப் பெட்டி, வாத்தியப் பெட்டி ஒன்றிலும் குறைவில்லை. குட்டிகளுக் கெல்லாம் துரைசானி மாதிரி ஜாக்கெட். ஐயோ! என்ன ஜம்பம்?” என்று சொல்லிக் கையால் தன் கன்னத்தில் ஓர் இடி இடித்துக் கொண்டாள்.

“நீ சும்மாயிரு. அவர்கள் ரொம்ப காலம் இங்கே யிருந்து வாழப் போகிறார்களோ? பார்த்து விடுகிறேன்” என்றான் வேணு நாயக்கன்.

“வாழாமல் என்ன? அவர்களுக்கு என்ன கேடு? மாதம் முதல் தேதி சர்க்கார் சம்பளம் வருகிறது” என்றாள் மங்கம்மாள்.

"எல்லா சர்க்கார் சம்பளத்தையும் நான் பார்த்து விடுகிறேன். வேணு நாயக்கன் கிட்டவா அந்த ஜம்ப மெல்லாம் பலிக்கும்?"

"வந்தால் வரட்டுமே? நமக்கென்ன பயம்?" என்றாள் மங்கு.

"என்ன சொன்னாய்? வாயை அலம்பிவிட்டுப் பேசு. நானா பயப்படுகிறவன்? இவனைப் போல் ஆயிரம் சிகப்புத் தலைப்பாகையைப் பார்த்திருக்கிறேன்" என்று அதட்டிப் பேசினான் வேணு.

வஸ்தாது வேணு நாயக்கனைத் தெரியாதவர்கள் நெல்லிப் பாக்கத்தில் ஒருவரும் கிடையாது. ஏன்? சென்னைப் பட்டணத்திலேயே ஒருவரும் கிடையா தென்று கூடச் சொல்லலாம். முக்கியமாக சாயங்கால வேளைகளில் கள்ளு, சாராயக் கடைகளில் அவனுடைய ஆர்ப்பாட்டம் அதிகமா யிருக்கும். அவனைக் காணாத இடங்களில் ஜனங்கள் "போவன்னா நாயக்கன்" என்று அவனைப்பற்றிப் பேசுவார்கள். எதிரில் கண்டால் "என்ன, வஸ்தாது நாயக்கரே!" என்பார்கள்.



அவனுடைய ஜீவனோபாயம் எப்படி யென்பது யாருக்கும் நிச்சயமாய்த் தெரியாது. ஆனால் சென்னை நகரில் எந்த விதத் தேர்தல் நடந்தாலும் சரி, வேணு நாயக்கனை அங்கே பார்க்கலாம். யாராவது ஒரு கட்சியார் அவன் உதவியை நாடுவது நிச்சயம். மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு கையில் தடியுடன் நின்றானானால் எதிர்க் கட்சியாருக்குக் கொஞ்சம் கதி கலங்கத்தான் செய்யும்.

இவ்வளவு பிரபல மனிதன்மீது நெல்லிப்பாக்கம் போலீசார் 'கிகா' வைத்திருந்ததில் வியப்பில்லை யல்லவா? சுற்றுப் பக்கத்தில், எங்கே கலகம், அடிதடி நடந்தாலும் அதில் வேணு நாயக்கன் சம்பந்தப்பட்டிருப்பான் என்பது அவர்களுக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆனால் அவனைப் பிடித்து மாட்டுவதற்கு மட்டும் இதுவரை அவர்

களுக்குத் தக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லே. எவ்வளவு பலமான வழக்கு அவன்மீது கொண்டுவந்தாலும், தேர்தலில் அவன் உதவி பெற்ற பிரபல வக்கில்கள் ஆஜராகிக் 'கேஸை' உடைத்து வந்தார்கள். ஒரே ஒரு தடவை அவனிடம் ஒரு வருஷத்துக்கு நன்னடக்கை ஜாமீன் வாங்க முடிந்தது. மற்றொரு முறை முப்பது ரூபாய் அபராதம் போட்டார்கள். அதற்குமேல் ஒன்றும் நடக்கவில்லே.

இந்த நிலைமையில் வேணு நாயக்கனுக்குப் போலீஸ்கார னென்றால் "பூனைக்குட்டி விசுவாசம்" ஏற்படுவது இயல்பே யல்லவா? ஆகவே அடுத்த வீட்டிற்கு ஹெட்கான்ஸ்டேபிள் ஒருவன் குடி வருகின்றான் என்று அறிந்தது முதல் அவன் மனம் கொதித்துக் கொண்டிருந்தது. சாராயக் கடையில் யாரோ இதைப்பற்றிப் பிரஸ்தாபித்த போது "அடே! சும்மா பார்த்துக் கொண்டிரு. மூன்று நாளில் அந்த நெருப்புக் குச்சியைக் கிளப்பா விட்டால் என் பெயர் வஸ்தாது வேணு நாயக்கன் அல்ல!" என்று சொல்லிக்கொண்டு அவன் மீசையை முறுக்கினான்.

ஆனால் மாதம் மூன்று ஆகியும் அந்த நெருப்புக்குச்சி புறப்படுகிற வழியாயில்லே. இவ்வளவு நாளும் வேணு நாயக்கன் சும்மா யிருந்தானென்று நினைக்க வேண்டாம். தன்னாலியன்ற முயற்சி யெல்லாம் செய்துதான் வந்தான். அவன் உத்திரவுப்படி மங்கம்மாள் தினம் காலையில் வாசலைக் கூட்டிக் குப்பையை அடுத்த வீட்டு வாசலில் தள்ளிவிட்டு வருவாள். ஆனால் சற்று நேரத்திற் கெல்லாம் அவ்வளவு குப்பையும், வட்டியும் முதலுமாக, வேணு நாயக்கன் வாசலுக்கே திரும்பி வந்துவிடும்.

வேணு ஒருநாள் சாராயக் கடையிலிருந்து ஏராளமான கண்ணாடிப் புட்டிகள் கொண்டு வந்தான். கதவைச் சாத்திவிட்டு அவைகளைத் துண்டு துண்டாய் உடைத்தான். பாதி நிசிக்கு எழுந்து போய் அந்தத் துண்டுகளைப் போலீஸ்காரன் வீட்டுக் கொல்லேயில் வீசிக் கொட்டிவிட்டு வந்தான். இந்த நொறுக்கல் தொண்டு செய்த




போது அவன் கையில் இரண்டு மூன்று இடத்தில் காயம் உண்டாகி இரத்தம் வடிந்தது. அவன் அதைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால் மறுநாள் சாயங்காலம் அவன் குடி மயக்கத்துடன் வீடு திரும்பிக்கொல்லைப்புறம் போகையில் இரண்டு காலிலும் இரண்டு பெரிய கண்ணாடித் துண்டுகள் குத்திக் காலைக் கிழித்தபோது கட்டாயம் பொருட்படுத்த வேண்டியதாயிற்று. "ஐயோடி! அப்பாடி" என்று முனக ஆரம்பித்தான். "என்ன ஓய்! தேள் கொட்டி விட்டதா?" என்று அடுத்த வீட்டுக் கொல்லையிலிருந்து ஒரு சத்தம் வந்தது.

"பீங்கான் தட்டு வேண்டாம்; ஆசாரக் குறைவு; இனிமேல் இலை போட்டுத்தான் சாப்பிட வேண்டும்" என்றான் ஒருநாள் வேணு. இந்த ஊதாரிச் செலவின் இரகசியம் முதலில் மங்கம்மாளுக்கு விளங்கவில்லை. வேணு சாப்பிட்டு எழுந்ததும் "ஏய்! இலையை மேலண்டைப் புறமாய்ப் போடு. தெரிகிறதா?" என்று சொன்னபோதுதான் அவளுக்கு விஷயம் விளங்கிற்று. மங்கம்மாள் அப்படியே செய்துவிட்டு வந்தாள்.

சில நாள் வரையில் வேணு சந்தோஷமாக இருந்தான். ஆனால் ஒருநாள் இராத்திரி கொல்லைப்புறம் போனபொழுது அவன் சந்தோஷம் மாறி விட்டது. என்னமோ சந்தேகப்பட்டு அவன் கொல்லைச் சுவர் வழியாகப் பக்கத்துக் கொல்லையை எட்டிப் பார்த்தான். போலீஸ்காரன் புதிதாய் வாங்கியிருந்த பசு மாடு தான் மூன்று தம்பிடி கொடுத்து வாங்கிய வாழை இலையை ஆனந்தமாய் மென்று தின்று கொண்டிருப்பதை அவன் கண்டான். குப்பை,



கண்ணாடித் துண்டு முதலிய சாமான்கள் உடனுக்குடன் திரும்பி வந்துகொண்டிருக்க, எச்சில் இலை மட்டும் வராத காரணம் இப்போதுதான் வேணுவுக்குப் புலனாயிற்று.

பிறகு ஒருநாள் வேணு நாயக்கன் தன் வீட்டிலிருந்த ஓட்டைத் தகரங்களையெல்லாம் சேகரித்தான். கொல்லைப்புறம் கொண்டு



போய் ஒரு பெரிய தகரத்தை வீசி எறிந்தான். அடுத்த கொல்லையிலிருந்த போலீஸ்காரன் "இந்தா! இந்தத் தகரத்தை எடுத்து வை. மாட்டுக்குத் தீனி வைக்க உதவும்" என்று தன் பெண்சாதியிடம் அருமையாய்ச் சொன்னான். வேணுவுக்குப் பலத்த கோபம் வந்துவிட்டது. "ஓய்! அப்படி ஊர்ச் சொத்தைச் சுரண்டித்தான் நீர் காலட்சேபம் செய்கிறதோ?" என்று கத்தினான். "ஓஹோ! இது உம்முடைய தகரமா?" என்று அடுத்த கொல்லையிலிருந்து போலீஸ்காரன் சொன்னான். மறு நிமிடத்தில் அந்த ஓட்டைத் தகரம் வந்து வேணு நாயக்கன் தலைமேல் நேராய் இறங்கிற்று. பிறகு அவன் முதுகைத் தடவிக் கொடுத்துக்கொண்டு தரையில் விழுந்து ஒரு குதி குதித்தது. "என்ன ஓய்! தலைமேல் விழுந்துவிட்டதா என்ன?" என்றான் போலீஸ்காரன்.

"நாமாய்ப் போக! ஒரு நாளைக்கு உன் மண்டையை உடைக்காமல் விடப் போகிறேனா?" என்று வஸ்தாது நாய்க்கன் முணுமுணுத்துக்கொண்டான்.

—

2

வேணு நாயக்கனுக்கு ஒருமாத காலம் நல்ல தூக்கம் கிடையாது. இரவு பகல் இதே யோசனைதான். கள்ளு சாராயக்கடைகளில் அவன் பல மந்திராலோசனைகள் நடத்தினான். அந்தப் போலீஸ்காரனைக் கசக்கிச் சாறு பிழிந்துவிடவேண்டுமென்று அவன் நண்பர்கள் எல்லாரும் ஒருமுகமாய் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் அதற்கு வழியும் சாதனமும் சொல்லுவார் யாருமில்லை. வலிய அழைத்தாலும் சண்டைக்கு வாராதவனை என்ன செய்ய முடியும்? "எப்படியும் அவனை ஒருகை பார்க்காமல் விடாதே" என்று மட்டும் ஊக்கப் படுத்தி வந்தார்கள்.

ஒருநாள் மாலை மிக்க முகமலர்ச்சியுடன் வேணு வீடு திரும்பினான். "என்ன விசேஷம்?" என்று அவன் மனைவி கேட்டாள்.

"விசேஷம் இருக்கிறது" என்றான் வேணு. அவன் மனைவியின் ஆவல் பதின்மடங்கு அதிகமாயிற்று. "என்ன? என்ன?" என்று கேட்டாள்.

"இன்றைக்கு வக்கீல் ஐயனிடம் பேசிக்கொண்டிருந்தேன். ஒரு நல்ல யோசனை சொல்லியிருக்கிறான். இதற்குத்தான் படித்தவர்கள் சினேகம் வேண்டுமென்பது" என்றான்.

"என்ன யோசனை? சொல்லு, சொல்லு."

"போலீஸ்காரன் பிறத்தியான் வீட்டுக்குள் நுழையக் கூடாது. வாரண்டு வைத்துக்கொண்டுதான் நுழையலாம். அப்படி யில்லாமல் நுழைந்தால் அவனை மாட்டிவிடலாம்."

"அதற்கென்ன இப்போது?"

"என்னவா? அதுதான் சட்டம். அடுத்த வீட்டுச் சிகப்புத் தலைப்பாகையை ஒழிக்க வழி."

"எப்படி ஒழிக்கிறது?"



"ஐயோ! மக்கே! இன்னும் புரியவில்லையா? அடுத்த வீட்டுப் போலீஸ்காரனை நம் வீட்டில் நுழையும்படி செய்து இரண்டு சாட்சிகள் வைத்துவிடவேண்டியது. அப்புறம் வக்கீல் ஐயன் பார்த்துக் கொள்ளுகிறான்."

"எப்படி நுழையும்படி செய்கிறது?"

"ஆ! அதுதான் இரகசியம். இதோ பார். இந்தத் தடியினால் உன்னை இன்று நொறுக்கப் போகிறேன்" என்றான்.

"ஐயோ! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா, என்ன?"

உடனே வேணு நாயக்கன் விழுந்து விழுந்து சிரித்தான். "பைத்தியமில்லை. யுக்தி" என்றான்.

"இதோ பார். நன்றாய்க் கேட்டுக்கொள். பரண்மேல் பழைய மெத்தை கிடக்கிறதல்லவா? அதை எடுத்துப் போடு. இந்தத் தடியினால் அதைப் போட்டு அடிக்கப் போகிறேன். ஆனால் நீ உன்னைத்தான் அடிப்பதாகப் பாசாங்கு செய்யவேண்டும். கூ கூ வென்று கத்து. என்மேல் உனக்கிருக்கும் ஆத்திரத்தை யெல்லாம் காட்டித் திட்டு. 'கொல்கிறானே, கொல்கிறானே' என்று கூச்சல் போடு. வாசல் கதவைத் திறவிடாமல் இவ்வளவும் செய்யப் போகிறேன். அந்தச் சிகப்புத் தலைப்பாகை கட்டாயம் உள்ளே நுழைவான். நான் வாசலில் ஓடிப்போய் எதிர் வீட்டுக்காரர்களைக் கூப்பிட்டு சாட்சி வைத்துவிடுகிறேன்" என்றான்.

முதலில் மங்கம்மாளுக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. ஆனால் மெத்தையில் அடிப்பதற்குச் சம்மதியாவிட்டால் முதுகின்மேல் அடி விழுமென்று தோன்றிற்று. ஆகவே "சரி" யென்றாள்.

சாப்பாடு முடிந்தது. அடுத்த வீட்டில் போலீஸ்காரனும், அவன் மனைவியும் படுத்துக்கொண்டார்கள் என்று தெரிந்தபின், அந்தச் சுவர் ஓரமாக மெத்தையைக் கொண்டுபோய்ப் போட்டான். "முதலில் கொஞ்சம் வாய்ச் சண்டை போடவேண்டும். உன் மனதில் என்மேலுள்ளதை யெல்லாம் சொல்லித் தீர்த்து விடு. பக்கத்து வீட்டுக்குக் கேட்கும்படி உரக்கப் பேசு." என்றான்.

மங்கம்மாள் பயந்து கொண்டே ஆரம்பித்தாள். ஆனால் இதற்கு முன்னெல்லாம் அவள் ஒரு வார்த்தை பேசியதும் வேணு வாயில் போடுவது வழக்கம். இப்பொழுது அவன் பேசாமலிருக்கவே அவளுக்கு உற்சாகம் பிறந்தது. எட்டு வருஷ காலமாய் அவள் மனதில் குமுறிக் கொண்டிருந்தவைகள் அனைத்தையும் எடுத்து வெளியேவிடத் தொடங்கினாள். கால் மணியாயிற்று. அரைமணியும் ஆயிற்று. வேணு காரியம் என்ன வென்பதை மறந்து போனான். உண்மையிலேயே தானும் தன் மனைவியும சண்டை யிடுவதாகவே கருதினான். "இவ்வளவுதானா? இன்னும் உண்டா!" என்று சொல்லிக் கொண்டு எழுந்தான்.

இன்னும் "இருக்கிறது" என்று கூறி மங்கம்மாள் மேலும் ஆரம்பித்தாள் புராணத்தை. ஆனால் வேணு நாயக்கன் உண்மையாகவே தடியைத் தூக்கிக் கொண்டு வருகிறான் என்று தெரிந்ததும் "வீர்" என்று ஒரு பெரிய கூச்சல் போட்டுக் கொண்டு சமயலறைக்குள் ஓடிக் கதவைச் சாத்தித் தாழ்ப்பாளிட்டுக் கொண்டாள். ரயில் வேகமாய் ஓடும்போது அதை நிறுத்துதல் இயலாததுபோல், அவள் நாவைத் திடீரென்று நிறுத்துதலும் முடியாததாயிற்று. உள்ளிருந்தபடியே அவள் வேணு நாயக்கன், அவனுடைய அப்பன், பாட்டன், இன்னும் இஷ்டமித்திர பந்து ஜனங்கள் எல்லாருடைய குணாதிசயங்களையும் வர்ணித்து அவர்களை ஆசீர்வாதஞ் செய்யலானாள். அவள் வேணு நாயக்கனையும் விடவில்லை.



இந்தச் சமயத்தில் அடுத்த வீட்டிலிருந்து போலீஸ்காரன் குரல் கேட்டது. "என்ன ஓய்! காட்டுப் பூனையை ஓட்டித் தொலேயும். தூக்கத்தைக் கெடுக்கிறது" என்றான் அந்தப் பொல்லாத குள்ள நரி. உடனே வேணு நாயக்கனுக்கு ஞாபகம் வந்தது. தொப்புத் தொப்பென்று பழைய மெத்தையைப் போட்டு அடிக்கத் தொடங்கினான். பாவம்! மூன்று தலைமுறையாக வேணு நாயக்கன் குடும்பத்தைத் தாங்கிவந்த அந்த மெத்தை அன்று படாத பாடும் பட்டது. துணி சுக்கு சுக்காய்க் கிழிந்தது. பஞ்சு துசும்பு துசும்பாகப் பறந்தது.

போலீஸ்காரன் மேல் கோபம் ஒரு பக்கம்; பெண்சாதி மேல் ஆத்திரம் ஒரு பக்கம்; அரை மணி நேரத்துக்கு மேலாகியும் வேணு நாயக்கன் ஓயவில்லே. திடீர் என்று வாசற் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. "ஆஹா! ஜயித்தோம்" என்று அளவிலாத குதூகலத்துடன் முன்னேவிட ஓங்கி அடித்தான். திடு திடுவென்று யாரோ ஓடிவரும் சத்தம் கேட்டது. "மாட்டிக் கொண்டாயா நெருப்புக் குச்சி பயலே!" என்று எண்ணுவதற்குள் திடு திடுவென்று முதுகில் ஐந்தாறு அடி விழுந்துவிட்டது. "ஆஹா பயலே!" என்று சத்தமிட்டுக் கொண்டு வேணு குதித்து எழுந்தான். முதுகிலும் தலையிலும் தோளிலும் மாறி மாறி, அடி விழுந்தது. திரும்பிப் பார்த்ததும் வேணுவுக்குத் திகைப்பு உண்டாகிவிட்டது. ஏனென்றால் அவ்வளவு தைரியமாய் உள் நுழைந்து தன்னே அடித்தவன் போலீஸ்காரனல்ல, தன் மைத்துனன் முத்து நாயக்கன் மங்கம்மாளின் அண்ணன், என்பதை அவன் கண்டான்.



ஆனால் அதிக நேரம் திகைத்து நிற்க நேரமில்லை. அடி நிற்காமலல்லவா விழுந்து கொண்டிருக்கிறது? "ஓய்! ஓய்! நிறுத்துங் காணும் சங்கதி சொல்கிறேன்" என்றான்.

"சங்கதி என்னடா? கழுதை மகனே! உன் கை வரிசையைக் கடைசியில் என்னிடமே காட்டுகிறாயா? முத்து நாயக்கன் தங்கையை ஒருவன் அடிப்பதற்சாயிற்றா?" என்று மேலும் சாத்தினான்.

அன்று வஸ்தாது நாயக்கன் வைகுண்டத்துக்கே போயிருப்பான். ஆனால் நல்ல வேளையாக மங்கம்மாளுக்கு விஷயம் தெரிந்து போயிற்று. அவள் கதவைத் திறந்துகொண்டு ஓடிவந்து அண்ணன் கையைப் பிடித்துக்கொண்டாள். மேலே ஒரு காயம் இல்லாமல் அவள் கொழுக்கட்டைபோல் இருப்பதைக் கண்டதும் முத்து நாயக்கனுக்குக் கோபம் தணிந்தது. பிறகு சுற்று முற்றும் பார்த்தான். பழைய மெத்தையின் பதினாயிரம் துண்டு துணுக்குகளைக் கண்டான்.

"என்ன சமாசாரம்?" என்று கேட்டான். எல்லா விவரமும் மங்கம்மாள் சொன்னாள். முத்து நாயக்கன் ஒரு நிமிஷம் திகைத்து நின்றான். பின்னர் வேணு நாய்க்கன்மீது காறி புமிழ்ந்துவிட்டு ஓட்டம் பிடித்தான். மங்கம்மாள் வாசல் கதவைத் தாளிடப் போனாள். அந்த நிசி வேளையில் தெருவிலிருந்த அத்தனை வீட்டு வாசலிலும் ஜனங்கள் வந்து நிற்கக் கண்டாள். மிக்க வெட்கத்துடன் திரும்பி வந்து படுத்துக்கொண்டாள்.



மறுநாள் காலையில் வஸ்தாது வேணுநாயக்கன் எழுந்து வழக்கம்போல் வெளியே வந்தான். தன் முதுகு, தோள், முகம் எல்லாம் வீங்கி யிருந்ததை அவன் கவனிக்கவில்லை. அடுத்த வீட்டு வாசலில் தயாராய்க் காத்திருந்த போலீஸ்காரன் அவனைப் பார்த்து, 'இதென்ன நாயக்கரே! நீரல்லவோ உம் பெண்சாதியை அடித்ததாக ஊரெல்லாம் பிரஸ்தாபமா யிருக்கிறது? பாவம்! உம்மையா அந்த அம்மாள் அப்படி அடித்துவிட்டாள்? உடம்பெல்லாம் தடித்துப் போயிருக்கிறதே?'' என்றான். பிறகு அன்று முழுதும் வேணு வெளிக்கிளம்பவே யில்லை.

3

ஹெட் கான்ஸ்டேபிள் வீராசாமிப் பிள்ளைக்குத் தோட்டவேலையில் கொஞ்சம் பைத்தியமுண்டு. அவன் அந்த வீட்டுக்கு வந்து ஆறு மாதந்தான் ஆயிற்று. இதற்குள் கொல்லையைக் கிளி கொஞ்சும்படி வைத்திருந்தான். ஆள் உயரம் வளர்ந்திருந்த கொத்தவரைச் செடிகளில் சொத்துக் கொத்தாய் காய் காய்த்திருந்தது. ஒரு பக்கம் மல்லிகைச் செடிகள் செழிப்பாகக் கிளம்பி அப்போதுதான் மொட்டு விட்டிருந்தன. ஒரு பந்தலில் புடலங்காய்கள் பிஞ்சும் பழமுமாய்த் தொங்கின. மற்றொரு பந்தலில் அவரைக்கொடி பச்சைப் பசேல் என்று அடர்த்தியாய்ப் படர்ந்திருந்தது. புதிய இங்கிலீஷ் குரோடன்ஸ்களும் வாடாமல்லிகைச் செடிகளும் மற்றொரு பக்கம் காணப் பட்டன. இரண்டு மூன்று வாழைக் கன்றுகளும் வளர்ந்திருந்தன. வீராசாமிப் பிள்ளை வீட்டில் தங்கும் நேரத்தில் முக்கால் பங்கு நேரம் புழக்கடைத் தோட்டத்திலேயே கழிப்பது வழக்கம். ஒரு செடியில்

ஒரு இலைக்கு ஏதாவது ஆபத்து வந்துவிட்டால் அவனுக்கு அன்றிரவு தூக்கம் வராது.

வஸ்தாது வேணு நாயக்கன் பழைய மெத்தையுடன் யுத்தம் புரிந்து ஒரு மாதமாயிற்று. ஒருநாள் காலையில் ஹெட்கான்ஸ்டேபிள் படுக்கையை விட்டு எழுந்ததும் வழக்கம்போல் புழக்கடைக்குச் சென்றான். அவன் அடி வயிற்றில் பகீர் என்றது. "ஐயோ" என்று மஹா தீனமான குரலில் ஒரு பெரிய கூச்சல் போட்டான். திடீரென்று கீழே விழுந்து மூர்ச்சை யடைந்தான்.

அவன் மனைவி படுக்கையிலிருந்து குதித்தெழுந்து ஒரே ஓட்டமாய் ஓடிவந்தாள். நேற்று மாலை கிளி கொஞ்சிக்கொண் டிருந்த தோட்டம் இன்று அனுமான் அழித்த அசோகவனம்போ லிருப்பதைக் கண்டாள். ஒரு செடி, ஒரு கொடி, ஒரு புல் பூண்டு உருப்படியிருக்க வேண்டுமே? கிடையாது. அவரைக் கொடிகள் அறுபட்டுக் கிடந்தன. கீரைப் பாத்திகள் மிதிபட்டுக் கிடந்தன. மல்லிகைச் செடிகள் வேரோடு பிடுங்கப்பட்டிருந்தன. வாழைக் கன்றுகள் வெட்டி வீழ்த்தப்பட் டிருந்தன. கொத்தவரை வெண்டைச் செடிகள் நிர் மூலமாய்க் கிடந்தன. ஒரே துவம்ஸம், ஒரே நாசம்.

ஹெட் கான்ஸ்டேபிள் மனைவி மஹா உத்தமி. சாதாரணமாய் அதிர்ந்து பேசும் வழக்கமே அவளிடம் கிடையாது. ஆனால் இந்த மகா பாதகத்தை யாரால்தான் சகித்துக்கொண்டிருக்க முடியும்? "அட பாவி, நீ நாசமாய்ப் போகமாட்டாயா? உன்னைத் தெய்வம் கேட்காதா?" என்று கத்திக்கொண்டு இரண்டு கை மண்ணை வாரி வேணு நாயக்கன் கொல்லைப் பக்கம் இரைத்தாள். உடனே ஓடி வந்து கணவனுக்கு சைத்தியோபசாரம் செய்யத் தொடங்கினாள். அவனுக்கு ஸ்மரணை வந்ததும் இன்னொரு தடவை தோட்டத்தைப் பார்த்தான். அவ்வளவுதான். உடனே எழுந்து உள்ளே ஓடிப் போய்க் கூடத்தில் குப்புறப் படுத்துக்கொண்டான். அப்போது அவன் கண்ணிலிருந்து பெருகியது கண்ணீரா? இல்லை. அதை இரத்தம் என்றே சொல்லவேண்டும். இந்தப் பெரும் துயரத்திற்கு

இணையாக வேறெதைச் சொல்ல முடியும்? பூமி திடீரென்று பிளந்து தன் மனைவி மக்கள் எல்லாரையும் விழுங்கி விட்டால்கூட அவன் அத்தகைய துக்கம் அடைந்திருக்க மாட்டான்.

மணி பத்தடித்தது. "எத்தனை நேரம் இப்படிப் படுத்திருப்பது? எழுந்திருங்கள். வெளியே போய்விட்டு வாருங்கள். வேறு வீடு இருந்தால் பார்க்கக் கூடாதா? இந்தப் பாழும் வீட்டை விட்டுப் போகலாம்" என்றாள் போலீஸ்காரன் மனைவி. வீராசாமிப் பிள்ளை எழுந்து உடுப்புத் தரித்துக்கொண்டு 'டியூடி' பார்க்கச் சென்றான்.

ஒரு குறுகலான சந்து. இரண்டு பக்கமும் மதில் சுவர். ஜன நடமாட்டம் கிடையாது. மின்சார விளக்குகள் அழுது வடிந்தன. இரவு பதினொரு மணி சுமாருக்கு ஹெட் கான்ஸ்டேபிள் வீராசாமிப் பிள்ளை தனியாக வீடு நோக்கி வந்துகொண் டிருந்தான். அந்தச் சந்தின் நடுவில் மற்றொரு சந்து சேருமிடத்தில் அதன் வழியாக வேறொரு மனிதன் வந்தான். இந்த முச்சந்தியில் ஒரு மின்சார விளக்கு இருந்தபோதிலும் பக்கத்தில் மரங்கள் அதிக மிருந்தபடியால் சாலையின் பெரும் பகுதியில் நிழல் வீழ்ந்திருந்தது. தற்செயலாக அம்மனிதன் முகத்தை வீராசாமிப் பிள்ளை பார்த்த நேரமும் அவன் மீது வெளிச்சம் விழுந்த நேரமும் ஒத்துக் கொண்டன. வந்தவன் வஸ்தாது வேணு நாயக்கன்.



போலீஸ்காரன் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த துக்கம் அவ்வளவும் அந்நேரத்தில் குரோதமாக மாறிற்று. இருவரும் நேருக்கு நேர் நின்று ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தார்கள். வேணுவுக்குக் குடி மயக்கம். எனவே ஆள் இன்னான் என்று அறிந்துகொள்ள ஒரு நிமிஷம் பிடித்தது. உடனே பல்லை இளித்துக்கொண்டு "என்ன சிகப்புத் தலைப்பா? தோட்டம் எப்படி யிருக்கிறது?" என்றான்.

அதற்குமேல் வீராசாமியால் தாங்க முடியவில்லை. கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தான். ஆனால் வஸ்தாது வேணு நாயக்கனா இதற்கெல்லாம் பயப்படுகிறவன்? இத்தகைய சந்தர்ப்பத்தைத்தான் அவன் வெகு காலமாகத் தேடிக்கொண் டிருந்தது. ஐந்து நிமிஷத்தில் போலீஸ்காரன் கீழே விழுந்து மண்ணைக் கவ்வினான். கொஞ்ச நேரத்தில் அவன் பிண்டப் பிரதானமாகி யிருப்பான். ஆனால் அந்த சமயத்தில் அவனுடைய அதிர்ஷ்டம் வந்து குறுக்கிட்டது.

இவர்கள் கட்டிப் புரண்டது அடர்ந்த மர நிழலுள்ள இடம். இரண்டு கையிலும் இரண்டு பெட்டி தூக்கிக்கொண்டு அவ்வழியே ஓடிவந்த மூன்றாவது மனிதன் ஒருவன் இவர்கள்மீது காலிடறித் தொப்பென்று விழுந்தான். அவன் வைத்திருந்த பெட்டி யொன்று வஸ்தாது நாயக்கன் தோள்மீது விழுந்தது. அவன் திடுக்கிட்டு எழுந்திருந்தான். இதுதான் சமயமென்று போலீஸ்காரன் சட்டென்று நழுவிச் சத்தம் போடாமல் மரத்தடியில் ஒளிந்துகொண்டான். குடி மயக்கத்திலிருந்த வேணுவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஓடி வந்தவன் இருட்டில் விழுந்து கிடப்பதுதான் தெரிந்தது. அவன்தான் போலீஸ்காரன் என்று நினைத்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவனைப் பிடித்துக் குத்தத் தொடங்கினான். அவன் பேசுவதற்கும் இடங்கொடுக்கவில்லை. மேலும் மேலும் விழுந்த அடி பொறுக்காமல் அந்த மனிதன் மூர்ச்சையடைந்தே போனான். வஸ்தாது இரண்டு மூன்று தடவை அவனைப் புரட்டிப் பார்த்துவிட்டு வேகமாய் வீடுநோக்கி நடந்தான். "இவ்வளவு தடியனா அந்தப் போலீஸ்காரன்? ஒருவேளை உடம்பு வீங்கிப்போயிற்றோ?" என்று நினைத்துக்கொண்டான்.



வேணு சந்து திரும்பிப் போனபிறகு ஹெட்கான்ஸ்டேபிள் வீராசாமி மரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்தான். கீழே கிடந்தவனை உற்றுப் பார்த்தான். கீழே கிடந்த பெட்டிகளையும் பார்த்தான். கொஞ்சம் சந்தேகம் உதித்தது. தூரத்தில் ஏதோ 'கோல்மால்' நடக்கும் சத்தம் கேட்டது. சந்தேகம் உறுதிப் பட்டது. பெட்டிகளை எடுத்துக் கொண்டு சத்தம் கேட்ட திசையை நோக்கி விரைவாக நடந்தான். ஒரு பங்களாவின் வாசலில் ஏக தடபுடலாய்க் கிடந்தது. பலர் கூடி இரைந்து கொண்டிருந்தார்கள். இரண்டு போலீஸ்காரர்களும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் கூட நின்றார்கள். கையில் பெட்டிகளுடன் உடம்பெல்லாம் இரத்தம் சொட்ட உடுப்பெல்லாம் கிழிந்து அலங்கோலமாய் வந்த வீராசாமியைக் கண்டதும் அங்கே பெருங் கிளர்ச்சி உண்டாயிற்று.



"என்ன?"

"ஏது?"

"அகப்பட்டானா?"

"ஓடிப்போனானா?"

"ஐயோ! பாவம்! நன்றாய் அடிபட்டிருக்கிறான்!"

"எத்தனை பேர்?"

"திருட்டுப் பசங்கள்!"

இவ்வாறு ஏககாலத்தில் பலர் கூச்சல் போட்டார்கள். வீராசாமிக்குக் கொஞ்சம் விஷயம் விளங்கிற்று. தன் அதிர்ஷ்டத்தைத் தானே வியந்துகொண்டான்.

இதற்குள் வீட்டு எஜமான் கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஓடி வந்தான். வீராசாமி கையில் பெட்டிகளைக் கண்டதும் அவனுக்குக் கரைகாணாத சந்தோஷம் உண்டாயிற்று. "ஐயோ! பிழைத்தேன். உயிர் வந்தது. நீ மகாராஜனாய் இருக்கவேண்டும்" என்று வீராசாமியைக் கட்டிக்கொண்டான். பெட்டிக்குள் ரூ. 20,000 பெறுமான நகைகளல்லவா இருந்தன?

சப் இன்ஸ்பெக்டர் இப்போது குறுக்கிட்டு "அதெல்லாம் இருக்கட்டும். என்ன சமாசாரம்? சீக்கிரம் சொல்லு. திருடனை எங்கே கண்டாய்? என்ன நடந்தது? சீக்கிரம் சொல்லு!" என்றார்.

வீராசாமிப் பிள்ளையின் மூளை வரும்போதே வேலை செய்து கொண்டிருந்தது. எனவே, அவன் தயங்காமல் சொல்லலுற்றான்:—"வட பக்கத்துச் சந்து வழியாய் வந்துகொண்டிருந்தபோது மூன்று தடிப்பசங்கள் குறுக்குச் சந்து வழியாய் ஓடிவந்தார்கள்; என்னைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றார்கள். உடனே எனக்கு சந்தேகம் தட்டிற்று. 'அடே திருட்டுப் பயல்களே!' என்று சும்மா ஒரு அதட்டல் அதட்டினேன். உடனே மூன்று பேரும் என் மேல் வந்து விழுந்தார்கள். அப்பா! என்ன பாடுபட்டுப் போனேன்? தப்பிப் பிழைப்பது இனிமேல் இல்லையென்றே நினைத்துவிட்டேன். இருந்தாலும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சண்டை போட்டேன். கையில் கத்தி, துப்பாக்கியும்ஒன்றுமில்லை. அந்த மூன்று பேரிலும் ஒருவன்தான் நல்ல தடியன். ஒரு திமிறு திமிறிக்கொண்டு அவன் நெற்றியைப்பார்த்து ஒரு குத்துவிட்டேன். அப்படியே அவன் சுருண்டு விழுந்தான். மற்ற இரண்டுபேரும் ஓடியே போனார்கள். கீழே



விழுந்தவன் மறுபடியும் எழுந்து தாக்கினான். மூன்று பேரையே ஒருகை பார்த்தவன் ஒருவனுக்குப் பயப்படுவேனா? அடித்துப் போட்டேன். அந்த மரத்தடியிலேயே இப்போது கிடக்கிறான். உயிர் இருக்கிறதோ, செத்துப் போனானோ தெரியாது. பெட்டிகளை எடுத்துக்கொண்டு ஓடிவந்தேன்.''

எல்லோரும் கையில் லாந்தர்களுடன் கிளம்பிச் சென்றார்கள். முச்சந்தியில் கீழே விழுந்து கிடந்த பிரமாண்ட மனிதனைப் பார்த்ததும் அவர்களுக்குப் பிரமையுண்டாகி விட்டது. வீராசாமியையும் கீழே கிடந்தவனையும் மாறி மாறிப் பார்த்தார்கள். "இத்தனை பெரிய ஆளை இவன் எப்படி அடித்தான்?'' என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். நல்ல வேளையாக அவன் மூக்கில் மூச்சு வந்து கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் கண்ணைத் திறந்தான். கையிலும் காலிலும் விலங்கு பூட்டிப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனார்கள்.

4

ஹெட் கான்ஸ்டேபிள் வீராசாமிப் பிள்ளை ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் இருந்து வஸ்தாது வேணு நாயக்கன் அடித்த அடியினால் உண்டான காயங்களை ஆற்றிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான். வேணுவும் அந்த ஒரு வாரமாக வெளியில் கிளம்பவில்லை. ஆனால் அடுத்த வீட்டுப் போலீஸ்காரன் ஆஸ்பத்திரியில் இருப்பதை மட்டும் தன் மனைவி மூலம் விசாரித்துத் தெரிந்துகொண்டான். மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு "வஸ்தாது வேணு நாயக்கனிடமா இவன் வரிசை காட்டினான்?'' என்று உறுமிக் கொண்டே இருந்தான்.

"என்னமோ திருடனைப் பிடித்தான், என்று சொல்லிக் கொள்கிறார்கள்!'' என்றாள் மங்கம்மாள்.

" திருடனா, திருடன்? இந்தக் கையினால் எண்ணி 99 குத்து அல்லவா விட்டேன்?'' என்றான்.

"ஐயோ! இரையாதேயுங்கள்!" என்று மங்கம்மாள் அவன் வாயைப் பொத்தினுள்.

எட்டாம் நாள் காலையில் வீராசாமிப் பிள்ளை எழுந்து வீட்டுக்கு வெளியில் வந்தான். அவன் தலையில் இன்னும் கட்டுப் போட்டிருந்தது. வேணுவும் அச்சமயம் வெளியே வந்தான். அவனுல் சும்மா விருக்க முடியவில்லை. "என்ன ஓய்! காயம் இன்னும் ஆறவில்லையா?" என்றான். வீராசாமி சும்மா யிருந்தான். வேணு மறுபடியும் "என்ன ஓய் பேசக்காணும்? பயப்படாதே. இனிமேல் குத்தவில்லை" என்றான்.

வீராசாமி "என்னுங்காணும், உளறுகிறீர்?" என்றான்.

"நானு உளறுகிறேன்? அதற்குள் முதுகு 99 குத்தையுமா மறந்து விட்டது?" என்று சொல்லிச் சிரித்தான் வேணு.

"என்ன? நீயா அன்று என்னை அடித்தாய்"

"பின்னே யார்? உன் அப்பனு?"

"இரு, இரு. எதிர் வீட்டுக்காரர்களைக் கூப்பிடுகிறேன். இரண்டு பேரை வைத்துக்கொண்டு இதைச் சொல்லு."

"சொன்னுல் தலை போய் விடுமோ?"

"தலை போகாது. ஒன்னிரண்டு வருஷம் கடுங்காவல். அவ்வளவு தான். மூன்று திருடர்களில் ஒருவனைப் பிடித்தாய் விட்டது. இரண்டு பேர் ஓடிப் போனுர்கள். ஓடிப் போனவர்களில் நீ ஒருவனு? ரொம்ப சந்தோஷம்" என்றான் போலீஸ்காரன்.

நடையிலிருந்து இந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த வேணுவின் மனைவிக்குப் பாதிப் பிராணன் போய்விட்டது. வேணுவுக்கு நன்ருய் விளங்கவில்லை. இருந்தாலும் கொஞ்சம் பயமுண்டாயிற்று. உடனே அவன் தட்டுத் தடுமாறிக்கொண்டு "போனதெல்லாம் போகட்டும் அண்ணே! நாம் அண்டை வீட்டுக்காரர்கள். ஏன் மனத்தாங்கல்?—இனி சௌஜன்னியமா யிருப்போம்" என்றான்.

"அந்த பாக்கியம் எனக்கில்லே, நாயக்கரே! நான் நாளையே இந்த வீட்டை விட்டுப் போகிறேன்." என்றான் வீராசாமி. வேணு வுக்கு மிக்க சந்தோஷம் உண்டாயிற்று. "தொலேந்தான் சனியன்" என்று மனதில் நினைத்துக் கொண்டான். "அதேன் அண்ணே? வந்து ஆறு மாதங்கூட ஆகவில்லேயே? ஏன் போக வேண்டும்?" என்று கேட்டான்.



வீராசாமிப் பிள்ளே சொன்னதாவது;—"அதை யேன் கேட்கிறாய் தம்பி! 'யானேக்குட்டி முதலி' என்னும் பெயர்பெற்ற திருடனே நான் பிடித்துக் கொடுத்தேன். அவனோடு சண்டை போட்டதில்தான் காயமாயிற்று. இதற்காக சர்க்கார் என்னே சப் இன்ஸ்பெக்டர் வேலேக்கு உயர்த்தி யிருக்கிறார்கள். அத்தோடு திருட்டுப்போன நகையை மீட்டுக் கொடுத்ததற்காக ஆத்தூர் ஜமீன்தார் ஆயிரம் ரூபாய் வெகுமதி கொடுத்தார். இனிமேல் நான் ஏன் இந்த எட்டு ரூபாய் வீட்டில் இருக்க வேண்டும்? முப்பது ரூபாய்க்கு ஒரு மச்சு வீடு பார்த்திருக்கிறேன்!" என்றான்.



வேணு நாயக்கனுக்கு இன்னும் விளங்க வில்லே. மனக் குழப்பமே அதிக மாயிற்று. "என்னடா அதிசயம்! குற்றுயிராகும் வரையில் தலேயிலும் முதுகிலும் மாறிமாறிக் குத்தியவன் நான். என்னமோ திருடன் திருடன் என்கிறானே?" என்று திகைத்தான். அன்று சாயங்காலம் சாராயக் கடைக்குப் போனான். அங்கே விசாரித்து விஷயங்களே யெல்லாம் நன்றாகத் தெரிந்துகொண்டான். அன்றிரவு வந்து வீட்டில் சுரமாகப் படுத்தவன் ஒரு மாதம் எழுந்திருக்கவில்லே.

மதிப்புரை

ஐயா! இங்கே பாருங்கள். அவ்வளவு அவசரமாய் ஓடவேண்டாம். இந்தக் கட்டுரையைத் தாங்கள் கண்ணால் பார்க்கலாம்; படித்தாலும் பாதகமில்லை. ஏனென்றால் இது உண்மையில் மதிப்புரையன்று; அதாவது ஏதோ ஒரு புத்தகத்தைப்பற்றி எழுதிய விமரிசனம் அன்று. இது மதிப்புரைக்கு மதிப்புரை. அதாவது தமிழ்ப் பத்திரிகை உலகில் நூல்களுக்கு மதிப்புரை எழுதும் வழக்கத்தைக் குறித்து ஏதோ சில வார்த்தைகள் சொல்ல முன் வந்திருக்கிறேன். இந்த விஷயத்தைக் குறித்து நீங்கள் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாத அத்தியாவசியம் பொருந்தியதென்று நான் சொல்லவேண்டியதில்லை. இருந்தாலும் சொல்லி வைத்தேன்.

அந்தக் கதையெல்லாம் சரிதான்; மதிப்புரைக்கு மதிப்புரை எழுதும்படியான யோக்கியதை உமக்கு என்ன இருக்கிறது? என்று நீங்கள் கேட்கலாம். சரியான கேள்வி. அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டவன். அத்தகைய யோக்கியதை எனக்குண்டென்று தைரியமாகச் சொல்வேன். ஏனென்றால், மதிப்புரையின் இரண்டு அம்சங்களிலும எனக்கு அநுபவம் உண்டு. அந்த இரண்டு அம்சங்கள் யாவை யெனில், மதிப்புரைக்கு அனுப்புதல் ஓர் அம்சம்; மதிப்புரை வரைதல் இரண்டாவது அம்சம்.

இரண்டாவது அம்சத்தில் என் அநுபவத்தைப்பற்றி முதலில் சொல்கிறேன். சில காலம் ஒரு தமிழ்ப் பத்திரிகையில் நான் உதவியாசிரியனு யிருந்தேன். இந்தக் காலத்தில் மதிப்புரை எழுதுவதற்காக என் வசம் வந்த பொருள்களின் ஜாபிதாவைக் கவனியுங்கள்:—

பல்பொடி, சுகந்த மூக்குத்தூள், வாசனைத் தைலம், ரோஜா அத்தர், நன்னாரி ஷர்பத்து, தாதுபுஷ்டி லேகியம், படுக்கையறை

பிரஞ்சு லேடி படங்கள், மகாசக்தி கவசம், சிவபுரி புகையிலே, திருச்சிருப்பள்ளி சுருட்டு, வெள்ளைக் குஷ்டத்துக்கு மருந்து, எலெக்டிரிக் மோதிரம், நரைமயிர் கறுக்கும் தைலம், ரோமசங்காரி, க்ஷவரக்கத்தி, மாங்காய் ஊறுகாய், டானிக் ஒயின், இக்ஷா பிராண்டி..............

ஒரு தமிழ்ப் பத்திரிகையின் உதவி ஆசிரியன் இத்தனை சாமான்களையும் உபயோகித்துப் பார்த்து மதிப்புரை எழுத வேண்டுமென்ருல், நேயர்களே! அது எத்தனை பொறுப்புள்ள உத்தியோகம் பாருங்கள். ஆயினும் கொஞ்சமும் தயங்காமல் இவ்வளவு கஷ்டமான கடமையை நிறைவேற்றும் உதவியாசிரியர்கள் தமிழ்நாட்டில் எத்தனையோ பேர் இருக்கிருர்கள். இது தமிழ் நாட்டுக்கே ஒரு பெருமையல்லவா? ஆனல், என்னைப்பற்றிய வரையில், அவ்வளவு பெரிய பொறுப்பை என்னல் வகிக்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொண்டுவிடுகிறேன். மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நன்னரி ஷர்பத்து ஒன்றுக்குத்தான் நான் மதிப்புரை எழுதலாம். ஆனல் அதுவும் என்னல் கூடவில்லை. ஏனென்ருல் மதிப்புரைக்காக வரும் மற்ற சாமான்களெல்லாம் என் மேஜைக்கு வந்துவிட, ஷர்பத்து புட்டிகளுக்கு மட்டும் காகிதச் சீட்டுதான் வந்து சேரும்! புட்டியை இடைமறித்துத் தலைமை யாசிரியரின் மருமகனே, அல்லது அச்சுக்கூட மேஸ்திரியின் மைத்துனனே எடுத்துக் கொள்வார்கள்.

இதென்ன இப்படிச் சொல்கிறீர்? பல் பொடியைக் கூடவா உப உபயோகித்துப் பார்த்து மதிப்புரை எழுதக்கூடாது? என்று நீங்கள் கேட்கலாம். வாஸ்தவந்தான். தற்போது கோணல் மாணலாயிருக்கும் என் பற்களெல்லாம் விழுந்து, அழகிய புதுப் பற்கள் கட்டிக்கொள்ளும் ஆசை எனக்கிருந்தால் அப்படிச் செய்யலாம். ஆனல் அந்த ஆசை எனக்கில்லை. மேலும் பல்லுப் போனலாவது, மனச்சாட்சிக்கு விரோத மில்லாமல் மதிப்புரை எழுதலா மென்ருலோ, அதுவும் கிடையாது. பல் பொடியின் குணதிசயங்கள் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்துவிட்டல்லவா அத்தகைய

மதிப்புரை எழுத முடியும்? என்னிடம் வந்த ஒரு பல்பொடியின் குணாதிசயங்களைக் கேளுங்கள்:—(1) பல் வெளுக்கும்; (2) ஈறில் இரத்தம் வடிதல் நிற்கும்; (3) வாய்ப் புண்கள் ஆறும்; (4) வெந்நீரில் கரைத்துக் காதில் விட்டுக்கொண்டால் காதுவலி நிற்கும்; (5) குழைத்துப் போட்டால் தலைவலி போகும்; (6) கண்ணில் தூவினால் கண்வலி நீங்கும்; (7) கஷாயம் போட்டுச் சாப்பிட்டால் வயிற்றுவலி நிற்கும்; (8) சுரம், சன்னி, பைத்தியம், சைத்தியம், க்ஷயம், குன்மம் எல்லா ரோகங்களுக்கும் கைகண்ட மருந்து.

இவ்வளவு முறையிலும் உபயோகித்துப் பார்த்துப் பற்பொடிக்கு மதிப்புரை எழுதும் ஆற்றல் உங்களில் யாருக்காவது இருந்தால் தயவு செய்து உடனே தெரிவியுங்கள். உதவி ஆசிரியர் வேலைக்குப் பூரண யோக்கியதை வாய்ந்தவர் என்று அத்தாட்சிப் பத்திரம் கொடுக்கத் தயாரா யிருக்கிறேன்.

மேலே குறிப்பிட்ட பொருள்களெல்லாம் சட்ட அமைப்புக்குப் புறம்பானவை யென்று நான் சொல்லவேண்டியதில்லை. அதாவது பத்திரிகைச் சட்டத்தின்படி மதிப்புரைக்கு அனுப்பக்கூடிய பொருள்களல்ல. உண்மையில் பத்திரிகையில் மதிப்புரை செய்வதற் கருகமானவை புத்தக வகையராதான். மூன்று வருஷ காலத்தில் என்னிடம் மதிப்புரைக்கு வந்த புத்தக வகையராவுக்கு ஜாபிதா:—

"தேனென இனிக்கும் தீந்தமிழ்க் கதைகள்"	1230
நாவல்கள் என்னும் நவீனங்கள்	3745
"உயர்தர" நாடகங்கள்	892
காவிய ஆராய்ச்சி நூல்	$\frac{3}{4}$
பொது அறிவு நூல்கள்	$3\frac{1}{2}$
பௌதிக ஆராய்ச்சி நூல்	006
மாத சஞ்சிகைகள்	37,892
வருஷ அநுபந்தங்கள்	37,893
துண்டுப் பிரசுரங்கள்	79,430

புத்தகக் காட்லாக்குகள்	7,29,325
நகை, கடிகாரக் காட்லாக்குகள்	72,842
டிராமா நோடீசுகள்	12,74,358
கலியாணப் பத்திரிகைகள்	(கணக்கிலடங்காதவை)

நான் கணக்கு வைத்தவைகளைமட்டும் மேலே எடுத்துக் காட்டியிருக்கிறேன். கணக்கு வைக்காமல் உடனுக்குடன் கிழித்துப் போட்டவை எவ்வளவோ, கடவுளுக்குத்தான் தெரியும். சுருங்கச் சொன்னால், நாட்டில் எந்த மூலையில் எந்த அச்சுக்கூடத்தில் எந்தக் காகிதம் அச்சிடப்பட்டாலும் அதில் ஒரு பிரதி மதிப்புரைக்காக என்னிடம் வந்துகொண்டிருந்தது. ஆனால் ஒரே ஒரு காகிதம் மட்டும் வருவதில்லை. அது என்ன தெரியுமா? ஆம், ஆம். நீங்கள் நினைப்பது சரிதான். சர்க்கார் அச்சடிக்கும் பணநோட்டு!

சர்க்கார் எவ்வளவு பிற்போக்கானவர்கள் என்று இதிலிருந்தே நன்கு விளங்குகிறதல்லவா? இந்த விளம்பர யுகத்தில் விளம்பரத்தின் பெருமையை அறியாதவர்கள் சர்க்காரைத் தவிர வேறு யாருமில்லை. உதாரணமாக, முற்போக்குடைய சர்க்காராயிருந்தால் என்ன செய்யலாம், பாருங்கள்!

பத்து ரூபாய் நோட்டு	1
ஐம்பது ரூபாய் நோட்டு	2
நூறு ரூபா நோட்டு	6
ஆயிரம் ரூபாய் நோட்டு	12

இவைகளுக்குத் "தயவு செய்து மதிப்புரை வரைக" என்றெழுதி எனக்கனுப்பினார்களானால், எவ்வளவு நன்றாயிருக்கும்? இதுவரை எந்தப் பிரசுரத்துக்கும் எழுதாத வகையில் அதி அற்புதமாகப் மதிப்புரை எழுதமாட்டேனா?

"சர்க்கார் கஜானாவிலிருந்து பத்து, ஐம்பது, நூறு, ஆயிரம் ரூபாய் நோட்டுகள் சில வரப்பெற்றோம். இவற்றின் அழகை வர்

ணிப்பதற்கு ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனாலும் ஆகாதென்றால், கையில் ஒரே பேனாவுள்ள நம்மால் ஆகக்கூடியதா? வெகு காலமாகத் தமிழ்மக்கள் இந்த நோட்டுகளின் பெருமையை நன்கறிந்திருக்கிறார்க ளென்றாலும், இப்போது வெளியாகியிருக்கும் புதிய பதிப்பை நேரே கண்ணால் பார்த்தாலல்லாமல், அவற்றின் சிறப்பை நன்கறிந்து கொள்ள முடியாதென்று நிச்சயமாய்ச் சொல்வோம். இவைகளுக்குக் கிராக்கி ஏராளமென்று நாம் கேள்விப்படுவதால், வேண்டுவோர் தாமதியாமல் உடனே பணத்துடன் கஜானாவுக்குச் சென்று பெறு வார்களாக'' என்று இப்படி எழுதிவிட்டேனானால், அப்புறம் சர்க்கார் கஜானாவில் நோட்டு ஒன்றேனும் பாக்கியிருக்குமா என்று கேட்கி றேன். ஒரே நாளில் அவ்வளவும் பறந்துபோய் விடாதா? செலவுக் குப் பணமில்லையே யென்று சர்க்கார் கவலைப்படுவதற்கு இடமே யிராதன்றோ? இவ்வளவு சுலபமான வழி தெரியாத அசட்டு சர்க்கா ரின் பொருட்டு மனமார்ந்த அநுதாபப்படுகிறேன்.

இந்த அநுதாபத்தினால் தூண்டப்பெற்று ஒரு தடவை நானே வலிய முயற்சி எடுத்தும் பார்த்தேன். சில பத்திராதிபர்கள் மதிப் புரைக்குப் புத்தகம் அனுப்பும்படி பிரசுரகர்த்தர்களுக்கு எழுதுவ துண்டு. இந்த முறையைப் பின்பற்றி நானும் சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதினேன். "எங்கள் மேலான பத்திரிகையில் மதிப்புரை செய்யும்பொருட்டுச் சில ஆயிரம் ரூபா, நூறு ரூபா நோட்டுக்கள் கூடிய சீக்கிரம் எதிர் பார்க்கிறோம்'' என்று அதில் தெரிவித்திருந் தேன். எழுதி ஒன்பது மாதம் கழித்துப் பதில் வந்தது. "தங்க ளுடைய கடிதம் கிடைத்தது. அதைப்பற்றி யோசனை செய்யப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரம் முடிவு தெரிவிக்கப்படும்'' என்று நமது அரசாங்கத்தார் எழுதி யிருந்தார்கள். அப்புறம் ஒன்றரை வருஷகாலம் வரை யோசனை முடிந்தபாடில்லை. ஆகவே யோசனை வெகு தீவிர மாய் நடக்கவேண்டுமென்று எண்ணினேன். ஆனால் இதற்குள் நான் உதவியாசிரியர் பதவியினின்று விலகவேண்டியதாயிற்று. ஜோதிடர் கள் சொல் பலித்து அடுத்த வருஷம் சுயராஜ்யம் ஏற்பட்டால், சுய

ராஜ்ய சர்க்கார் பழைய தஸ்தாவேஜிகளை யெல்லாம் கிழித்தெறிந்து விட்டுப் புத்தம் புதிதாக வேலை தொடங்குவார்களென்று நம்புகிறேன். ஏனெனில், என் கடிதத்தைப்பற்றிய யோசனை முடிந்து ஒருவேளை மதிப்புரைக்கு நோட்டுகள் அனுப்பிவிட்டார்களானால், அவை தற்போது எனக்குப் பதில்வேலை பார்ப்பவரிடமல்லவா சிக்கிக்கொள்ளும்? நோட்டுகளை மதிப்புரை செய்யும் யோக்கியதை அந்த மனிதருக்கு......ஆனால் இதைப்பற்றி நான் எழுதுவது ரசக் குறைவாயிருக்குமென்று விடுகிறேன். உண்மையானாலும் தற்புகழ்ச்சியாய்க் காணப்படும்.

மதிப்புரையின் மற்றொரு அம்சத்தைப்பற்றி இனிக் கொஞ்சம் கவனிப்போம். இரண்டி லுள்ளும் இதுதான் ரசமான அம்சம் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் மதிப்புரை எழுதும் பொறுப்பான வேலை சிலருக்கே உரியது. ஆனால் புத்தகமோ யார் வேண்டுமானாலும் எழுதலாம். ஏன்? நமது வாசகர்களில் 100-க்கு 99 பேர் புத்தகாசிரியர்களா யிருக்கலாம் என்பது என் மதிப்பு. அவர்களில் பலர் இதுவரை புத்தகம் அச்சிட்டு வெளிப்படுத்தாம லிருக்கலாம்: ஆனால் குறைந்தது நான்கு அல்லது ஐந்து நாவலாவது அவர்கள் கையெழுத்துப் பிரதியாக வைத்திருப்பார்களென்று நம்புகிறேன். இன்னும் சிலர் புத்தகமே இதுவரை எழுதாத புண்ணியவான்களாயு மிருக்கலாம். ஆனால், வருங் காலத்தில் கூடப் புத்தகம் எழுதும் உத்தேசம் எனக்கில்லை, யென்று நெஞ்சில் கை வைத்துச் சொல்லக் கூடியவர் உங்களுள் யாராவது உண்டா?

ஆகையினால்தான் மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவதைப் பற்றிய என்னுடைய அநுபவங்கள் உங்களுக்கு அதிக ரசமா யிருக்குமென்று சொல்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள். நான் புத்தகம் எழுதியது உண்மையே. இந்தக் குற்றம் போதாதென்று அதை அச்சிட்டு வெளியிட்டேன். இதுவும் போதாதென்று அதை தமிழ் நாட்டில் என்னென்ன பத்திரிகைகள் உண்டோ அவ்வளவுக்

கும் மதிப்புரைக்கு அனுப்பினேன். கடவுளே! தண்டனை கிடைத்தது. தினந்தோறும் பத்திரிகைகளைப் பிரிப்பேன். ஆவலுடன் அடியிலிருந்து கடைசிவரை படிப்பேன். ஓர் எழுத்து விடுவதில்லை. தங்க பஸ்பங்களுக்கும், காமசாஸ்திரங்களுக்கும் இடையில் என் புத்தகத்தின் மதிப்புரை எங்கேயாவது ஒளிந்து கிடக்கிறதோ வென்று துருவித் துருவித் தேடுவேன். தேடிக்கண்ட பயன் ஏமாற்றந்தான். ஆறு மாதம் கிணற்றில் கல் போட்டாற்போல் இருந்தது. பேச்சு மூச்சில்லை.

அப்புறம் திடீரென்று ஒருநாள் கிளம்பியதையா மதிப்புரை. என்னுடைய பொறுமையைப் பூரணமாய்ச் சோதித்தாய்விட்டதென்று பத்திரிகாசிரியர்களும், உதவி யாசிரியர்களும் திருப்தியடைந்த பின்னர் எழுதத் தொடங்கினர்கள் போலும். பீரங்கியிலிருந்து குண்டுகள் கிளம்புவதுபோல் மதிப்புரைகள் படார், படார் என்று வெடித்துக்கொண்டு புறப்பட்டன. மாதிரிக்கு அவைகளில் சிலவற்றைக் கீழே காண்க.

(1) "சாரதையின் தந்திரம் என்னும் புத்தகம் வரப்பெற்றேம். புத்தகம் பார்வைக்கு அழகா யிருக்கிறது. அட்டை நல்ல வெளுப்பு. இப்புத்தகத்தை இவ்வளவு நன்ருய் அச்சிட்டுக் கொடுத்த அச்சுக் கூடத்தை மிகவும் பாராட்டுகிறேம்."

(2) "சாரதையின் தந்திரம் என்னும் புத்தகம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இதன் ஆசிரியரைத் தமிழுலகம் நன்கறியு மாதலால் நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. இப்புத்தகத்தைத் தமிழர்கள் ஆதரிப்பார்க ளென்று நம்புகிறேம்."

(3) "கதைகள் நன்ரு யிருக்கின்றன. காகிதம் நேர்த்தியா யிருக்கிறது. அட்டை அழகா யிருக்கிறது. அச்சு சுத்தமா யிருக்கிறது. ஆசிரியர்......இருக்கிருர். விலை குறைவா யிருக்கிறது." (அடக்கங் காரணமாக ஆசிரியரின் குணதிசயத்தை நீக்கி யிருக்கிறேன்.)

(4) "மிக மிக, மிக நல்ல புத்தகம். ரொம்ப, ரொம்ப, ரொம்ப ரசமான கதைகள். எளிய நடையில் எழுதி யிருக்கும் இவ்வினிய கதைகளின் சிறப்பைக் குறித்து அதிகம் சொல்வது மிகையாகும்."

முதலில் எனக்கு ஒரு மாதிரியா யிருந்தது. என்னடா! நாம் தான் உதவியாசிரியரின் பதவியி லிருந்து புத்தகத்தின் அட்டையைப் பார்த்து மதிப்புரை எழுதினேமென்றால், எல்லாரும் இப்படித்தான் செய்கிறார்கள்போ லிருக்கிறதே! ஒரு மனிதனாவது புத்தகத்தைப் பிரித்துப் பார்த்ததாகத் தெரியவில்லையே? கன்னக்கோல் சாத்தும் இடம் வேண்டாமா? "உனக்கும் பெப்பே! உங்கப்பனுக்கும் பெப்பே!" என்ற கதையா யிருக்கிறதே? இவ்வாறெண்ணிக் கொஞ்சம் வருத்தப்பட்டேன். பின்னால் ஒருவாறு சமாதானமாயிற்று. அட்டையைக் குறித்து எழுதினார்களோ, அச்சைப்பற்றி எழுதினார்களோ, எல்லாரும் நன்று யிருக்கிறதென்றுதானே சொல்லுகிறார்கள்? குற்றம் கூறவில்லை யல்லவா?

நான் உதவி யாசிரியனா யிருந்தபோது மனச்சான்றின் தொல்லைக்காகச் சிலசமயம் குற்றம் கண்டுபிடிப்பது முண்டு. உதாரணமாக:—

"இதிலுள்ள சிற்சில அச்சுப் பிழைகள் அடுத்த பதிப்பில் நீக்கப்படுமென்று எதிர்பார்க்கிறோம்."

"அட்டை பச்சை நிறமா யிருப்பது அவ்வளவு எடுத்துக் காட்டவில்லை. மஞ்சள் நிறமா யிருந்தால் நன்று யிருக்கும்."

"சிறுவர்களுக்கும், மாதர்களுக்குங்கூடப் பயன்படுமாறு தமிழ் நடை இன்னும் சிறிது தளர்த்தப்பட்டால் நலம்."

என்று இப்படி ஏதேனும் ஒரு வாக்கியம் இடையில் போட்டு வைப்பதுண்டு. நல்ல வேளையாய் நமது புத்தகத்தைப்பற்றி அத்தகைய கண்டனங்கள் வரவில்லையே யென்று சந்தோஷப்பட்டேன்.

ஆனால் இதிலும் நான் அவசரப்பட்டுவிட்டேன் என்று பின்னால் தெரிந்தது. ஏனென்றால், ஏதாவது ஒரு புத்தகத்தின் அச்சு அல்லது அட்டையைப்பற்றிக் குறைசொல்லி யிருந்தாலல்லவோ

நான் சந்தோஷப்படலாம்? கிடையவே கிடையாது. என் புத்தகத்தோடு சேர்த்து இன்னும் முப்பது புத்தகங்களுக்கு மதிப்புரை வெளியாகி யிருந்தது. ஆனால் எல்லாம் "மிக மிக மிக நன்றாகவும், ரொம்ப ரொம்ப அழகாகவும்" இருந்தன. நான் எப்படி மகிழ்ச்சி யடைவது?

ஆனால் எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளுமே இப்படி மோசம் செய்துவிடவில்லை. தமிழ்ப் பத்திரிகை உலகின் மானத்தைக் காப்பாற்ற அத்தி பூத்தது போல ஒரே ஒரு பத்திரிகை முன் வந்தது. புத்தகத்தின் உள்ளழகு, வெளி யழகு, கதைகளின் அமைப்பு, நடைப்போக்கு முதலியவைகளை வெகு நன்றாய் எடுத்துக்காட்டி விஸ்தாரமான ஒரு விமரிசனம் அப்பத்திரிகையில் வெளியாயிற்று. அது எந்தப் பத்திரிகை யென்று யறிந்து கொள்ள நீங்கள் ஆவல் கொண்டிருக்கிறீர்க ளல்லவா? ஆனால் அதைத் தெரிந்துகொண்டு உங்களுக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்று மில்லை. அதைவிட அந்த விமரிசனம் எந்த முறையில் வெளியாயிற்று என்று அறிந்துகொண்டால் லாபமுண்டு. காதோடு சொல்கிறேன் கேளுங்கள். எனக்குப் பூரண திருப்தி யளித்த அந்த விரிவான விமரிசனத்தை எழுதியவன் யார் தெரியுமா? புத்தகாசிரியனாகிய அடியேன்தான்!

ஒரு பத்திரிகாசிரியரைத் தற்செயலாய்ச் சந்தித்தபோது "என்ன ஸார்! என் புத்தகத்துக்கு மதிப்புரை வரவில்லையே" என்றேன் "அவகாசமே யில்லை ஸார்! நீங்களே ஒன்று எழுதி அனுப்பிவிடுங்களேன்" என்று புன்னகையுடன் கூறினார். முதலில் பரிகாசம் செய்கிறார் என்று நினைத்தேன். உண்மைதான் என்று தெரிந்ததும் அப்படியே என்னுடைய ஆற்றலை யெல்லாம் காண்பித்து ஒரு மதிப்புரை எழுதி அனுப்பினேன். ஓர் எழுத்துக்கூட மாறுதலின்றி அப்படியே வெளியாயிற்று. அடடா! இந்த யுக்தி முன்னமே தெரியாமல் போயிற்றே என்று அன்றிர வெல்லாம் தூக்கமில்லாமல் நான் பட்ட வருத்தம் ஆண்டவனுக்கே வெளிச்சம்.

ஆனால், பொதுவாக மதிப்புரைக்குப் புத்தகங்கள் அனுப்புவதைப் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டால், கலியாணம் செய்துகொள்வதைப்பற்றி பிரமசாரிகள் யோசனை கேட்டால் என்ன சொல்வேனே, அதே பதில்தான் சொல்லுவேன். அது **"வேண்டாம் வேண்டாம், முக்காலும் வேண்டாம்!"** என்பதே. புத்தகம் வெளியாக்கியதில் நான் அடைந்த லாபம் ஒன்றுண்டானால் அது தாழ்மைக் குணந்தான். உதவியாசிரியரின் பதவியிலிருந்து புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதியபோது என் தலை கழுத்தில் நிற்காது. அவ்வளவு கர்வம். புத்தகாசிரியர்களுக்கு ஏதோ சர்வமானியம் விடுவதாய் எண்ணிக்கொள்வேன். ஆனால் என் சொந்தப் புத்தகத்தை மதிப்புரைக்கு அனுப்பியபோது இந்தப் பிரமை சிதறிப்போயிற்று. மொத்தம் ஐம்பது புத்தகங்கள் மதிப்புரைக்கு அனுப்பினேன். 48-மதிப்புரைகள் வெளியாயின. இவற்றின் பயனாக மொத்தம் மூன்றரை புத்தகம் விலையாயிற்று. (ஒரு வாசகசாலைக்குப் பாதி விலைக்குக் கொடுத்த புத்தகத்தை அரைப் புத்தகம் என்று கணக்கிட்டேன்.)

ஒரு காரியத்துக்குமட்டும் மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புதல் உண்மையிலேயே பயன்படும். என்னுடைய புத்திமதியை மீறிக் கலியாணம் பண்ணிக்கொள்ள விரும்பும் பிரமசாரி யாரேனும் இருந்தால் அவர் ஒரு புத்தகம் பிரசுரித்துத் தமது புகைப்படத்தையும் அதில் வெளியிடுவாராக. புத்தக மதிப்புரைகளில் அவருடைய அழகிய தோற்றம் வர்ணிக்கப்படுவது நிச்சயம்.

"ஆசிரியரின் நறுக்கு மீசை மிக ரசமாய் அமைந்திருக்கிறது."

"ஆசிரியர் மிக்க சுந்தரமான புருஷர். படத்தில் இவருடைய உச்சிக் குடுமி மிக்க எளிய முறையில் எடுத்துக் காட்டப்படுகிறது."

"மூக்குக் கண்ணாடி யணிந்த இவ்வாசிரியர் வதனம் ஆந்தை முகத்தையும் தோற்கடிப்பதாகும். தமிழ் உலகில் இத்தகைய முகம் இதுவரை வெளியானதில்லை யென்று கூறலாம்."

என்பது போன்ற வர்ணனைகள் ஐம்பது, அறுபது பத்திரிகைகளில் வந்துவிட்டால் அப்புறம் கலியாணத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டுமா, என்ன? பணங் கொடுத்து "மணப்பெண் தேவை" என்று விளம்பரம் செய்வதைக் காட்டிலும் இது நல்ல முறையாகாதா?

கடைசியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடாமல் இதை முடிக்க எனக்கு மனம் வரவில்லை. அது என்ன வென்றால், இங்கிலீஷ் பத்திரிகைகளில் தமிழ்ப் புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதுதல். எனக்கு அறிமுகமான ஒருவர் ஒரு புத்தகம் வெளியிட்டார். அதில் மேனாட்டுப் பிரபல ஆசிரியர்கள் நால்வர் எழுதிய நாலு கட்டுரைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு அடங்கி யிருந்தது. ரஸ்கின், கார்லைல் முதலியவர்களின் கட்டுரைகளை ஆங்கிலத்தில் படித்தாலே விளங்குவது கஷ்டம். தமிழிலோ சொல்லவேண்டிய தில்லை. அதிலும் இந்த ஆசிரியரோ கடினமான தமிழ் நடையில் ஆங்கிலத்திலுள்ள ஒவ்வொரு பதத்துக்கும் தமிழில் பிரதி பதமிருக்கும்படி மிக சிரமப்பட்டு மொழி பெயர்த்திருந்தார். புத்தகத்தை நான் வாசித்துப் பார்த்தபோது ஓர் அட்சரங்கூட விளங்கவில்லை. ஆங்கிலத்தில் ஏற்கெனவே அக்கட்டுரைகளை வாசித்திருந்த எனக்கே இந்தக் கதி யென்றால், புதிதாய்ப் படிக்கும் ஆங்கில ஞானமற்ற தமிழர்கள் என்னபாடு படுவார்களென்று சொல்ல வேண்டியதில்லை.

மேற்படி புத்தகத்துக்குச் சென்னையில் முதன்மையான ஆங்கிலப் பத்திரிகையாகிய "ஹிந்து"வின் மதிப்புரை வெளியாயிற்று. அதன் சாராம்சத்தைக் கீழே தருகிறேன். தயவு செய்து ஊன்றிப் படியுங்கள்:—

"இந்தத் தமிழ் நூலில் மேனாட்டு மேதாவிகள் நால்வரின் ஜீவிய சரித்திரம் அடங்கி யிருக்கிறது. மிக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கும் இப்புத்தகம் அம் மேதாவிகளைக் குறித்துத் தமிழர்கள்

அறிந்துகொள்ள மிக்க உபயோகமா யிருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.''

என் அருமை நேயர்களே! என்ன நினைக்கின்றீர்கள்? இதைப் பற்றி ஏதாவது எழுத எனக்கு யோக்கியதை யுண்டென்று சொல்வீர்களா? ஒருநாளுமில்லை. இது என்னையும் மீறிப் போய்விட்டது. ஆனால் ஒரு கதை மட்டும் சொல்லிவிட்டு முடித்து விடுகிறேன். தமிழ்ப் பண்டிதர் ஒருவர் ஒரு புதிய அகராதி தயாரித்தார். அதில் நவீன வார்த்தைகளை யெல்லாம் புகுத்த எண்ணிய அவர், **'கங்காரு'** என்பதற்கு "ஆப்பிரிக்கா தேசத்து ஆறுகளில் பின்புறமாய் நீந்திச் செல்லும் ஒருவிதப் பறவை'' என்று பொருள் எழுதினார். பின்னர் ஆங்கிலந் தெரிந்த நண்பர் ஒருவருக்கு அதைக் காட்டி "சரிதானா?'' என்று கேட்டார். "நண்பரே, கொஞ்சம் தவறி யிருக்கிறது. கங்காரு ஆப்பிரிக்கா தேசத்தில் உள்ள தன்று; அது நீரில் வசிப்ப தன்று; அது பின்புறமாய் நீந்துவ தன்று; அது பறவை யன்று. மற்றப்படி நீர் எழுதி யிருப்பது முற்றிலும் சரி''' என்றார் நண்பர். உபமானத்தைப் பொருத்திப் பார்க்கும் வேலையை நேயர்களுக்கே விடுத்து இவ்விஷயத்தை நிறுத்துகிறேன்.



பகல் தூக்கம்

—(0)—

விஸ்தாரமான மைதானம். கண்ணுக் கெட்டிய தூரம் பச்சைப் பசேல் என்ற பசும்புற் கம்பளம் விரித்திருந்தது. மைதானத்தின் மேற்குத் திசையில் மட்டும் வெகு தூரத்துக் கப்பால் அடுக்கடுக்கான மலைத் தொடர்கள் காணப்பட்டன. மலை யடிவாரங்களில் அடர்ந்து நெருங்கிய கண்ணுக்கினிய சோலைகள் காட்சி யளித்தன. திங்களஞ் செல்வன் இன்ப ஒளிக் கிரணங்களைப் பொழிந்து வானமும் பூமியும் ஜோதி மயமாகத் திகழும்படி செய்துகொண் டிருந்தான். மெல்லிய குளிர்ப் பூங்காற்று வீசிக்கொண் டிருந்தது.

இம்மைதானத்தில் நின்று நான் நாலாபுறமும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் உடலும் உள்ளமும் ஒருங்கே இயற்கை இன்பத்தில் ஈடுபட்டுத் திளைத்துக் கொண்டிருந்தன. உற்சாகம் பொங்கித் ததும்பிற்று. இவ்வாறு நாலாபக்கமும் பார்த்துக்கொண்டு நிற்கையில், மேற்குத் திசையில் இருந்த வெண்மலைத் தொடர்களில் எல்லாவற்றிலும் உயரமாக நின்ற ஒரு சிகரத்தின்மீது என் பார்வை சென்றது. ஓ! அப்போது நான் கண்ட காட்சியை என்ன வென்று வர்ணிப்பேன்! என் கண்கள் அச்சமயத்தில் ஓர் அதிசய சக்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். இன்றேல் அவ்வளவு தொலை தூரத்தில் இருந்த மலைச் சிகரத்தில் ஒரு பெண்ணரசி தன்னந்தனியே தலைவிரி கோலமாய் நின்று கண்ணீர் உகுத்துக்கொண் டிருந்த காட்சி எனக்குத் தெள்ளத் தெளியக் காணப்பட்ட தெவ்வாறு? என் உள்ளங் குழைந்தது; மயிர் சிலிர்த்தது; கண்ணீர் ததும்பிற்று. அந்த மாதரசியி னருகிற் சென்று அவளுக்கு நேர்ந்த குறை யாது என்று வினவும்படி என் மனம் தூண்டிற்று. உடனே விரைந்து நடந்தேன். நான் இதுவரை என்றும் கண்டறியாத ஒருவகைப் புதிய சக்தி பிடர் பிடித்துந்த வாயுவேக மனோவேகமாகப் பறந்து சென்றேன். மலை

யடிவாரத்தை அடைந்தேன். மலைமீதேறினேன். அரை நொடிப் பொழுதில் சிகரத்தின் உச்சி சேர்ந்தேன். தொலை தூரத்திலேயே என் உள்ளத்தைக் கவர்ந்த அம்மாதரசியின் தோற்றம் என்னை இப்போது பரவசப்படுத்தி விட்டது. சற்று நேரம் பேச நாவெழாது திகைத்து நின்றேன்.

அவள் தோற்றத்தை, அவள் சௌந்தர்யத்தை வருணிக்கச் சொல்கிறீர்களா? அந்தோ! அது என்னால் இயலாத காரியம். அவள் அழகு தெய்வீகமானது. உருக்கமும், சோகமும், அன்பும், அருளும், அற்புத சௌந்தர்யமும் ஒன்றுகூடி ஒரு பெண் வடிவ வெடுத்தன வென்று சொல்லும்படி விளங்கினாள். வேறு விதமாக அவளைப் பற்றி வருணிக்க நான் அறியேன். 'கடலினும் பெரிய' அவள் கண்களினின்றும் நீர்ப் பெருக்கெடுத்து பொழிந்துகொண் டிருந்தது. தலைவிரி கோலமாய் அவள் நின்ற காட்சி அனலிலிட்ட மெழுகென என் உள்ளத்தை உருக்கிற்று. அவளுடைய வயது என்ன வாயிருக்கலாம் என்று எண்ணி எண்ணிப் பார்த்தேன். அதை மட்டும் என்னால் அறியக்கூடவே யில்லை.

அவள் பாத தாமரைகளில் வீழ்ந்து வணங்கி "தாயே, உனக்கு நேர்ந்த குறை யென்ன சொல்வாய்? நின் கண்களி னின்றும் நீர் பெருகுவ தென்னே? இளமைப் பருவத்தில் என்னைப் பெற்ற அன்னையை இழந்தேன். ஆனால் இன்று உன்னைப் பார்க்கும்போது நீயே என் தாய் என்று என் உள்ளத்தி னுள்ளே ஏதோ ஒன்று கூறுகிறது. உன் துயரத்தின் காரணத்தைக் கூறுவாய். என் இன்னுயிரை ஈந்தேனும் உன் துயரம் தீர்ப்பே னென்று இதோ சத்தியம் செய்கிறேன்!" என்று நாத்தழு தழுக்கக் கண்களில் நீர் ததும்ப உருக்கத்தோ டுரைத்தேன்.

அப்போது அம்மாதரசியின் முகம் ஒரு சிறிதே மலர்ச்சி யுற்றது. அன்றலர்ந்த செந்தாமரையை யொத்த அவள் இதழ்களில் புன்னகை

யின் ஒரு சாயை மின்னல்போல் தோன்றி மறைந்தது. என் உள்ளமும் தண்ணென்று குளிர்ந்தது. அப்பெண்ணரசி தனது பவழச் செவ்வாய் திறந்து சொல்வாள்:—“மைந்தா! முதலில் பாவியேனாகிய நான் யாரென்று உனக்குத் தெரிவிக்கிறேன். என்னைக் கண்டதும் உன் அன்னை யென்னும் உணர்ச்சி பிறந்ததாகக் கூறினாய். ஆம், உண்மையில் நான் உனது அன்னையே. ஒருவரல்ல, இருவரல்ல, முப்பது கோடி மக்களை ஈன்றெடுத்த தாய் நான். என்னைப் ‘பாரதி’ என்றழைப்பார்கள்.”

இம்மொழிகள் இன்பத்தேன் மாரியென்ன என் செவிகளிற் புகுந்து சென்று என் ஆன்மாவை ஆனந்தக் கடலில் அமிழ்த்திவிட்டன. ஆனால் அவ் வானந்தம் நீடித்திருக்கவில்லை. அன்னை மீண்டுஞ் சொல்வாள்:—“ஆம், முப்பது கோடிப் புதல்வர் புதல்விகளைப் பெற்றெடுத்தேனாயினும் அநாதையாய், பராதீனையாய் இருக்கிறேன். என் மக்கள் படுந் துன்பங்கள் சொல்லுக்கடங்கா. ஆனால், எப்போதுமே நான் இப்படித்தான் இருந்து வந்தேனோ? இல்லை, இல்லை. இப் பூவுல கெல்லாம் வந்து என் அடி பணிய நான் வீற்றிருந்த காலமும் உண்டு. ஆதிகாலந் தொட்டுச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை நான் சீருஞ் சிறப்பும் பெற்று, மண்ணவரும் விண்ணவரும் புகழ்ந் தேற்றப் பெற்றவளாய், மணிமுடி தரித்து வாழ்ந்திருந்தேன். என் மக்களும் அக்காலத்தில் உண்ண உணவுக்கும், உடுக்க ஆடைக்கும் குறைவின்றிப் பஞ்சமும் பிணியும் அறியாதவராய், செல்வர்களாய், வீரர்களாய், ஞானிகளாய், கவிகளாய், இன்பவாழ்வு நடாத்தி வந்தனர். இன்றோ?—பாவியேன் வயிற்றிற் பிறந்த அவர்கள் நிலையை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் என் வயிறு எரிகிறது. அந்தோ! என் செய்வேன்?”

அன்னையின் இம்மொழிகள் எனக்குத் தாங்க முடியாத பெருந் துக்கத்தை விளைத்தன. விம்மி விம்மி யழுதுகொண்டே நான் கூறினேன்:—“அன்னையே! உன்னைப்பற்றி நான் பாட்டிலே கேட்டிருக்

கிறேன்; புத்தகத்திலே படித்திருக்கிறேன். இதுவரை நேரில் தரி சிக்கும் பாக்கியம் பெற்றேனில்லை. இன்று அப் பேறடைந்தேன். ஆனால் உன் துக்கத்தைக் காணும்போது என் நெஞ்சம் வெடித்து விடும்போலிருக்கிறது. இதோ உன்னுடைய தொண்டுக்காக என் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்கிறேன். நீ உன் பெருமை யிழந்து தாழ்வுற்றிருப்பதின் காரணம் என்ன சொல்வாய். உன் மக்கள் படும் துன்பங்களைத் தெரிவிப்பாய். அவற்றைப் போக்க நான் செய்ய வேண்டுவ தென்ன வென்று கட்டளை யிடுவாய்.''

"மைந்தா! தொலையில் நடக்கும் காட்சிகளை இருந்த விடத்தி லிருந்து அவ்வப்போதே பார்ப்பதற்குரிய 'டெலிவிஷன்' என்னும் புதிய சாதனத்தைப்பற்றி நீ கேள்விப்பட்டதுண்டா?'' என்று அன்னை கேட்டாள்.

"மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் சிலர் இது குறித்து ஆராய்ச்சி செய்து வருவதாகப் பத்திரிகையில் படித்திருக்கிறேன்'' என்று நான் விடை யளித்தேன்.

அன்னை பெருமூச்சு விட்டுச் சொல்வாள்:—"ஆம், ஐரோப்பாவி லும் அமெரிக்காவிலும் உள்ள என் போன்ற நாட்டரசிகள் இது போழ்து சீருஞ் சிறப்பும் பெற்று விளங்குகின்றனர். அவர்களின் புதல்வர்கள் தினந்தோறும் புதிய புதிய இயந்திரங்களைக் கண்டு பிடிப்பதாலும்,பிறவற்றாலும் தங்கள் தாய்மார்களின் பெருமையையும், புகழையும் வளர்த்து வருகின்றனர். ஆனால் அதைப்பற்றி நான் இங் குக் கூறவந்தேனில்லை. இயந்திர சாதன மேதுவுமின்றித் தொலையில் நிகழும் காட்சிகளை யெல்லாம் அந்தந்தக் கணத்திலேயே காணும் ஓர் அற்புத சக்தியைச் சிறிது நேரம் உனக்கு அளிக்கிறேன். அப்போது உன் கண்களாலேயே பார்த்து என் மக்களின் துயரங்களை அறிந்து கொள்வாய்.''

இவ்வாறு கூறி அன்னை பாரதி தன் திருக் கரங்களால் என் கண்களை ஒரு கணம் தொட்டாள். அந்த ஸ்பரிசத்தினால் நான் புள

காங்கித மடைந்தேன். "குழந்தாய், அதோ பார்!" என்றாள் தாய். அவள் சுட்டிக் காட்டிய பக்கம் நோக்கினேன். அதி ஆச்சரிய மடைந்தேன். மைதானத்தைக் காணேன்; பசும்புற்றரையைக் காணேன்; வெண்ணிலவைக் காணேன். பஞ்சமர்கள் வசிக்கும் சேரி ஒன்று என் கண்முன்னே தென்பட்டது. அச்சேரியின் நடுவில் இருந்த ஒரு வீட்டின்மீது என் பார்வை சென்றது. அது ஒரு குச்சு; கூரையில் ஆயிரம் பொத்தல்கள் இருந்தன. அக்கம் பக்கத்தின் ஆபாசம் சொல்ல முடியாது. குப்பைகள்; எலும்புத் துண்டுகள், பிராணிகளின் அழுகிய உடல்கள், மலஜலங்கள் இவையே வீட்டைச் சுற்றிலும் உள்ளவை. அத்தகைய வீட்டின் உள்ளே ஒரு பெண் கண்ணீர் விட்டுக் கதறி அழுதுகொண் டிருந்தாள். ஆடவன் ஒருவன் அவளைப் புடைத்துக் கொண்டிருந்தான். குழந்தை ஒன்று அழுதுகொண்டே வந்து அம் மனிதன் கால்களைப் பற்றியது. ஆனால் வெறி கொண்ட பித்தன் போல் அந்த ஆடவன் அக்குழந்தையையும் நையப் புடைத்தான்.

"அன்னையே! இஃதென்ன கோரம்!" என்று நான் வினவினேன்.

"மைந்தா, மிருகத் தன்மையனாக உனக்குத் தோன்றும் அம் மனிதன் உண்மையில் நல்லவன். தன் மனைவியிடமும், குழந்தையிடமும் அடங்காத அன்பு கொண்டவன். ஆனால் அவன் இன்று குடித்து விட்டு வந்திருக்கிறான். நாள் முழுதும் வேலைசெய்து பெற்ற தானியத்தைக் கள்ளுக் கடையில் அழுதுவிட்டு வீட்டுக்கு வெறுங்கையுடன் வந்திருக்கிறான். வீட்டிலே கூழுக்குத் தானியம் இல்லை. குடி வெறியில் இதன் பொருட்டு மனைவியைப்போட்டு அடிக்கிறான். குழந்தைக்கும் இந்தக் கதியே. இனி, இன்னமொரு காட்சியைப்பார்!" என்றாள் அன்னை.

உடனே பஞ்சமர் சேரி மறைந்தது; குடியானவர் வசிக்குந் தெரு ஒன்று தோன்றியது. இங்கும் ஆபாசங்களுக்குக் குறைவில்லை. ஒவ்வொரு வீட்டுவாயிலிலும் கூரை முனையில் வேப்பிலைக் கொத்து

ஒன்று செருகி யிருந்தது. எங்கும் அழுகுரல் கேட்டது. தெருவின் மத்தியில் இருந்த ஒரு வீட்டின் உள்ளே என் பார்வை சென்றது. பெண்ணொருத்தி அடுப்பினருகில் உட்கார்ந்து கம்பம் கூழ் காய்ச்சிக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றிலும் ஐந்தாறு குழந்தைகள் "அம்மா கஞ்சி! அம்மா கஞ்சி" என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தன. குழந்தைகள் மீது ஆடை யென்பது அணுவளவுமில்லை. குளிரால் விறைத்துக் கொண்டிருந்தன. ஒருமூலையில் தள்ளாத கிழவன் ஒருவன்படுத்து இருமிக்கொண் டிருந்தான். மற்றொருபுறத்தில் இளம் பெண் ஒருத்தி படுத்துக்கொண் டிருந்தாள். அவளுக்கு வைசூரி போட்டி யிருப்பதாக அவள் உடம்பில் இருந்த கொப்புளங்களினால் தெரிந்தது. அப்போது நடுத்தர வயதுடைய மனிதன் ஒருவன் வெளியி லிருந்து வீட்டுக்குள் வந்து சுவர் ஓரமாக உட்கார்ந்தான். "தெய்வமே!" என்று கூறிப் பெருமூச்சு விட்டான். மூலையில் படுத்திருந்த கிழவன் "மகனே, போன சங்கதி என்ன வாயிற்று?" என்று கேட்டான். "காரியம் ஆகவில்லை. எஜமான் நிச்சயமாக இல்லை யென்று சொல்லி விட்டார். அவர்கள் வீட்டுக்கே நெல் போதும் போதாததா யிருக்கிறதாம்" என்றான் வந்தவன். கூழ் காய்ச்சிக் கொண்டிருந்த பெண் "ஐயோ? தை பிறக்கும் வரை இன்னும் மூன்று மாதப் பொழுது போக வேண்டுமே. இந்தக் குழந்தைகள் என்னைப் பிடுங்கித் தின்கின்றனவே?" என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

அன்னை கூறுவாள்:—"மைந்தா, இவர்கள் வீட்டில் மிகுந்திருந்த கம்பை இன்று கடைசியாகக் கூழ் காய்ச்சி விட்டார்கள். அந்தக் கூழ் இவர்கள் எல்லாருக்கும் கால் வயிற்றுக்குக்கூடக் காணாது. இந்நிலைமையில் இவர்கள் வீட்டில் வைசூரி போட்டி யிருக்கிறது. இனி, மற்றொரு காட்சியைப்பார்." என்றாள்.

அக்காட்சி மறைந்தது. இப்பொழுது என் கண்முன் காணப்பட்டது ஒரு நகரம். எங்குப் பார்த்தாலும் ஆலைகளின் புகை போக்கிகள் காணப்பட்டன. சுத்த ஆகாயம் என்பதை எந்நாளும் கண்டறியாத ஒரு குறுகிய சந்து. எச்சில் இலைகளும்

சாக்கடைக் கும்பியும் மற்றும் ஆபாசங்களும் அங்கு நிறைந்து காணப் பட்டன. இச்சந்தில் குகை போன்று இருளடர்ந்த ஒரு வீட்டுக்குள் என் பார்வை சென்றது. அங்கே வெறுந் தரையில் பூரண கர்ப்ப வதியாகக் காணப்பட்ட ஒரு பெண்மணி படுத்திருந்தாள். பக்கத் திலே ஓர் ஆடவன் உட்கார்ந்து அழுதுகொண் டிருந்தான். ஒரு மூலையில் சுமார் ஒன்றரை வயதுள்ள ஒரு குழந்தை கிடந்தது. அன்று, குழந்தையன்று; குழந்தையின் உடல். ஏனெனில் அவ்வுடலி னின்றும் உயிர் பிரிந்து சில மணி நேரம் ஆகி யிருத்தல் வேண்டும்.

"தாயே! போதும், போதும். இந்தக் கோரக் காட்சியை என்னால் சகிக்க முடியவில்லை" என்று கூறி நான் கண்ணை மூடிக் கொண்டேன்.

அப்போது அம்மாதரசி கூறுவாள்:—"குழந்தாய்! உண்மை தெரியாத வண்ணம் கண்களை மூடிக் கொள்ளாதே. நன்றாகப் பார்த்துத் தெரிந்துகொள். இதோ இந்தப் பெண் மரணாவஸ்தையில் இருக்கிறாள். அவள் பூரண கர்ப்பிணி. ஆனால் சில தினங்களுக்கு முன்வரை ஆலையில் வேலை செய்து கொண்டிருந்தாள். அதன் பய னாகவே இவள் சுகப்பிரசவம் ஆவதற்கின்றி உயிர்விடப் போகிறாள். அதோ, பிணமாய்க் கிடக்கிறதே, அந்தக் குழந்தை ஆலையில் வேலை செய்யப் போகும்போது அழாம லிருப்பதற்கென்று அவள் அதற்கு அபினி ஊட்டி வந்தாள். இனிமேல் அக்குழந்தை என்றும் யாருக் கும் அழுது தொந்தரை கொடாது! பக்கத்திலிருந்து புலம்பி அழுப வன் அவள் கணவன். அவனும் ஆலைத் தொழிலாளி. பாவம்! அவன் சோகக் கடலில் மூழ்கி யிருக்கிறான். என்ன செய்வதென்று தெரியாமல் புலம்புகிறான். இதுவரை நீ பார்த்த மூன்று காட்சி களும் உனக்குப் பரிதாபத்தை விளைக்கின்றன வல்லவா? ஆயினும் மைந்தா, விஸ்தாரமான இப்பரத கண்டம் முழுவதிலும் இத்தகைய பரிதாபக் காட்சிகளே எங்கெங்கும் நிறைந்திருக்கின்றன. அடுத்தாற் போல் கொஞ்சம் சந்தோஷகரமான இன்னொரு காட்சியைப் பார்."

நீண்ட நாளாய் மழை பெய்யாமல் காய்ந்து தீய்ந்து போனது போல் காணப்பட்ட ஒரு பிரதேசத்தின் நடுவே பனை ஓலை வேயப் பட்ட கூரைகளை யுடைய சில குச்சுகள் தென்பட்டன. அக்குச்சு களில் ஒன்றினுள்ளே என் பார்வை ஊடுருவிச் சென்றது. அங்கே இரண்டு பெண்மணிகளும் ஐந்து அல்லது ஆறு பிராயமுடைய ஒரு சிறுவனும் இருந்தனர். பெண்மணிகளுள் ஒருத்தி கிழவி. அவள் கூடை ஒன்றைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு வெளியே புறப்பட ஆயத்தமா யிருந்தாள். சுமார் 25 வயதுடைய மற்றொரு பெண் இராட்டினத்தில் நூல் நூற்றுக்கொண் டிருந்தாள். அக் குழந்தை அவளுடைய கழுத்தைத் கட்டிக்கொண்டு "அம்மா! அப்பா, பசிக்கிறது" என்று அழுதுகொண் டிருந்தான். அப்பெண்மணி "என் கண்ணே! இதோ ஆயாள் நூல் எடுத்துக்கொண்டு போகிறாள். இன்னும் சற்று நேரத்திற் கெல்லாம் கேழ்வரகு வாங்கிக்கொண்டு வருவாள். வந்ததும் கூழ் காய்ச்சித் தருகிறேன், அப்பா, அழாதே" என்று சமாதானம் செய்துகொண் டிருந்தாள்.

அன்னை பாரதி கூறுவாள்:—"மைந்தா. இந்தப் பிரதேசத்தில் சில ஆண்டுகளாக மழை யின்மையால் மக்கள் சொல்லொணு வறுமைக் காளாகித் தவித்துக்கொண் டிருந்தனர். இந்த இளம் பெண்ணின் கணவன் இரண்டாண்டுகளுக்கு முன்பு மலாய் நாட்டுக்கு ஓடிவிட் டான். அந்தப் பெண்ணின் தாயார் அக்கிழவி இவ்விரண்டு மாதர் ளும், இச்சிறுவனும் திக்கற்றவர்க ளாயினர். இந்நிலைமையில் சென்ற ஆண்டில் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் சில தொண்டர்கள் வந்து கதர் உற்பத்திசாலை ஒன்றை ஏற்படுத்தினுர்கள். அநாதையான இந் தப் பெண்கள் இப்போது நூல் நூற்றுப் பிழைத்து வருகிறுர்கள். துன்ப இருள் சூழ்ந்திருந்த இவர்கள் குடிசையில் இராட்டினம் என் னும் காமதேனு இன்ப ஒளியின் ஒரு கிரணத்தைப் புகுத்தி யிருக்கி றது. அந்தக் கிழவி சென்ற வாரத்தில் நூற்ற நூலை எடுத்துக் கொண்டு கதர் உற்பத்தி சாலைக்குச் செல்கிறுள். அவள் வரும்போது புதிய பஞ்சம், பாக்கிக் கூலியைக் கொண்டு தானியமும் வாங்கி

வருவாள். அவள் வந்த பின்னர்தான் இந்த வீட்டில் அன்று சாப்பாடு. ஆனல், குழந்தாய், இந்த நாட்டிலே இவ்வாறு வறுமை இருள் குடிகொண்ட குடிசைகள் லட்சக்கணக்காக இருக்கின்றன. இவற்றில் மிகச் சிலவற்றிற்கு மட்டுமே இராட்டினம் இதுவரை ஒளி தந்திருக்கிறது. ஏனெனில், பலவகையிலும் தாழ்வடைந்திருக்கும் என் மக்கள் தங்கள் சொந்த நன்மை யெது வென்பதையும் உணர்ந்து கொள்ளல் அரிதா யிருக்கிறது. இதுகாறும் மைந்தா, இந்நாட்டில் மிகப் பெரும்பான்மை யோரான ஏழை எளியவர்களின் நிலைமையை விளக்கும் காட்சிகள் சில காட்டினேன். இனி, மற்றவர்களின் நிலைமையையும் நீ பார்த்துத் தெரிந்துகொள்.''

இப்படி அன்னை கூறியதும் மேற்சொன்ன காட்சி மறைந்தது. ஒரு கிராமத்தின் மத்தியில் ஒரு பெரிய மச்சு வீடு காணப்பட்டது. அதனுள்ளே கூடத்தில் சுமார் 40 வயதுள்ள ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்தால் பெரிய மனிதர் என்று தோன்றியது. ஆனல் அவர் தலையில் இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு மடியில் கிடந்த ஒரு காகிதத்தைப் பார்த்துக்கொண் டிருந்தார். ஆழ்ந்த சிந்தனையில் இருப்பவராகக் காணப்பட்டார். அடிக்கடி பெருமூச்சு விட்டார்.

அப்போது அன்னை கூறுவாள்:—"குழந்தாய், இவர் இவ்வூரில் பரம்பரையாக வந்த பெரிய மனிதர். பூஸ்திதி நிரம்ப உள்ள மிராசுதாரர். ஆனல் இவருடைய ஆஸ்தியின் விலை மதிப்பில் பாதி அளவுக்கு இவருக்குக் கடன் இருக்கிறது. கையில் மூலதன மில்லாததால் விவசாயம் திருப்திகரமாக நடைபெறுவ தில்லை. வரவர விளைவு குறைந்து வருகிறது. இவ்வருஷத்தில் இவருக்கு நெல் விற்றுவந்த தொகை நிலவரிக்குத்தான் சரியாக இருந்தது. ஆனல் நாலாவது கிஸ்திக்காக வைத்திருந்த தொகையைக் கடன்காரன் வந்து பிடிவாதம் செய்து வட்டிக்காக வாங்கிக்கொண்டு போய்விட்டான். இப்போது கிஸ்திக்குப் பணங் கட்ட வகை தெரியாமல் தவித்துக்

கொண்டிருக்கிறார். இந்தத் தொந்தரவுகளைப் பொருது நிலத்தை விற்றுக் கடன் அடைத்து விடலாமாவென்று யோசிக்கிறார். ஆனால் பூர்வீகமான நிலத்தை விற்கவும் மனம் வரவில்லை. எவ்வளவு கடன் இருக்கிறது, எவ்வளவு நிலம் விற்கவேண்டும் என்று கணக்குப் பார்த்துக்கொண் டிருக்கிறார். இனி அடுத்த காட்சியைப் பார்.''

மூன்றடுக்கு மெத்தை வீடு. அதில் நன்கு அலங்கரிக்கப்பட்ட விஸ்தாரமான ஒரு ஹாலில் சுமார் 35 வயதுடைய ஒரு கம்பீர புருஷர் நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவர் ஆங்கில நடையுடை பாவனைகளைக் கொண்டவராகத் தோன்றிற்று. கையில் ஒரு பத்திரிகையை விரித்துப் பார்த்துக்கொண் டிருந்தார். அதிக கோபமடைந்தவராகக் காணப்பட்டார். கண்கள் சிவந்திருந்தன; மீசை துடித்தது. சற்று நேரம் பார்த்துவிட்டுப் பத்திரிகையைக் கிழித்து கசக்கிக் கீழே எறிந்தார்.

“மைந்தா, இவர் வீரமறவர் குலத்தில் தோன்றிய ஜமீன்தார். இவரது முன்னோர்கள் செய்துள்ள வீரதீரச் செயல்களை யெல்லாம் சொல்வதெனில் இப்போது நேரமில்லை. இன்று இவரது வீரமெல்லாம் வேலைக்காரர்களை விரட்டி மிரட்டுவதுடன் சரி. அரசாங்கத்தாரிடமிருந்து ஒரு பெரிய பட்டம் பெறுவதற்கென்று, விருந்துகளிலும், அரசியல் கட்சிகளுக்குப் பண உதவி புரிவதிலும் பிறவற்றிலுமாகச் சுமார் 2 லட்சம் ரூபா வரை கடன் வாங்கிச் செலவு செய்தார். ஆயினும் எதிர்பார்த்தபடி “ராஜா'' அல்லது “ஸர்'' பட்டம் ஒன்றும் இல்லாமல் கேவலம் ராவ்பகதூர் பட்டந்தான் இவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகையில் இவ்விவரத்தைக் கண்டதும் அவருக்கு ஏமாற்றமும், கோபமும் உண்டாகி யிருக்கின்றன.'' என்று அன்னை கூறினாள்.

ஒரு பெரிய நகரத்தின் மத்தியில் இருந்த ஒரு வீதியில் சாதாரணமான வீடு ஒன்று அடுத்தாற்போல் என் கண் முன் தோன்றியது. இரண்டு, மூன்று குடும்பங்கள் அவ்வீட்டில் வசித்தபடியால் ஜனக்

கூட்டம் அதிகமாயிருந்தது. ஓர் அறையில் கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு, தம்பதி போற் காணப்பட்ட ஓர் ஆடவனும் ஒரு ஸ்திரீயும் முகவாட்டத்துடன் உட்கார்ந்திருந்தனர். அந்தப் பெண்மணி கண்ணீர் விட்டுக்கொண்டே தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி ஒன்றைக் கழற்றிக் கொடுத்தாள்.

"குழந்தாய், இதோ இந்த இளைஞன் பி. ஏ. பட்டம் பெற்றவன். மாதம் 50 ரூபா சம்பளத்தில் உத்தியோகத்தில் அமர்ந்துள்ளான். இவன் பெற்றோர் தங்களுக்கிருந்த சொற்ப பிதுரார்ஜித நிலத்தையும் விற்றுச் செலவு செய்து இவனைப் படிக்க வைத்தார்கள். எனவே சொத்து கொஞ்சமும் இல்லை. குடும்பம் தாயாரும் குழந்தைகளும் உள்பட மொத்தம் ஐந்து பேர் கொண்டது. 50 ரூபாவைக்கொண்டு கஷ்டஜீவனம் நடத்தி வந்தனர். ஆனால் துரதிர்ஷ்ட வசமாகச் சென்ற மாதத்தில் இவன் மனைவிக்கு நோய் வந்துவிட்டது. மலேரியா சுரத்தினால் நிரம்பக் கஷ்டப்பட்டாள். வைத்தியரை அழைத்து வந்து காட்டியதிலும், பிறவற்றிலுமாக சுமார் 25 ரூபா தொலைந்து போயிற்று. [illegible]வே இம்மாதத்தில் 15உக்குள் அரிசி முதலிய எல்லாச் சாமான்களும் ஆகிவிட்டன. வேறு வழியின்றி அடகு வைத்துக் கடன் வாங்கி வருவதற்காக மனையாளின் நகையைக் கேட்டான். அவள் பதில் கூறாது சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாளாயினும், பாவம்! தன்னையறியாமல் துக்கம் பொங்கிக் கண்ணீர் விடுகிறாள். இதைக்கண்ட அவள் கணவன் மனமிடிந்து நிற்கிறான்" என்று கூறினாள் அன்னை.

"தாயே, இந்தத் துயரக் காட்சிகள் போதும்! போதும்! இப்பாரத நாட்டில் பிறந்த எவருக்கும், அவர் எந்த வகுப்பை, எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும், வாழ்க்கை பெரும்பாலும் துன்ப மயமாகவே இருக்கிறதென்பதை அறிந்துகொண்டேன். போதும், போதும்!" என்று கூவினேன்.

"ஆயினும், மைந்தா, என் மக்களான உன் சகோதரர் இன்னும் விழித்துக் கொண்டார்களில்லையே. என் செய்வேன்? பெற்ற தாயை

மறந்து, தங்களுடைய சொந்த நலத்தையும் மறந்து, ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதிலும், வகுப்புப் பூசல்களை வளர்ப்பதிலும் ஈடுபட்டிருக்கிறார்களே. தங்களில் ஒரு பெரும் பகுதியாரைத் "தீண்டத் தகாதவர்" என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்களே. என் வயிற்றில் பிறந்த மக்களுக்குள் இத்தகைய வேற்றுமைகள் வளர்வதைக் காண்பதற்கு, அந்தோ! பாவியேன் என்ன தீவினைகள் செய்தேன். குழந்தாய்! இன்னும் இரண்டே காட்சிகளைமட்டும் நீ பார்த்தல் அவசியம்" என்று அவள் கூறிமுடிப்பதற்குள் ஒரு விசாலமான சபா மண்டபம் என் முன் தோன்றியது. அங்குச் சுமார் 20,25 வெள்ளைக்காரர் உணவு அருந்திக்கொண் டிருந்தனர். சாராய வகைகள் தாராளமாக வழங்கப்பட்டன. அவர்கள் அனைவரும் குதூகலத்தில் ஆழ்ந்திருந்தனர் என்பதை அவர்கள் முகங்கள் நன்கு காட்டின. ஏறக்குறைய எல்லாரும் பக்கத்தில் சமாசாரப் பத்திரிகை வைத்துக் கொண்டு அடிக்கடி எடுத்துப் பார்த்து மனம் பூரித்தனர்.

"மைந்தா, நான் யாருக்குத் தொண்டு செய்து தற்போது வாழ்கிறேனோ அந்த ஆங்கில அரசியின் புதல்வர்கள் இவர்கள். இவர்களில் வியாபாரிகள் உண்டு, தோட்டக்காரர்கள் உண்டு, உத்தியோகஸ்தர்கள் உண்டு, பத்திரிகாசிரியர்கள் உண்டு. எனது மக்களாகிய ஹிந்து முஸ்லிம்கள் எங்கோ ஓரிடத்தில் ஒருவரை யொருவர் தாக்கிக் கலகம் விளைத்தார்கள் என்னும் செய்தி இன்று பத்திரிகையில் வந்திருக்கிறது. அச்செய்திதான் இவர்களுக்கு இத்துணைக் குதூகலம் அளித்திருக்கிறது. பாரத மக்களுள் சாதிப்பூசல், வகுப்புச் சண்டை உள்ளவரை நமது வாழ்விற்குக் குறைவில்லை யென அவர்கள் இறும்பூதெய்தி யிருக்கின்றனர். இனி, குழந்தாய், கடைசியாக, உன்னால் என்றும் மறக்கவொண்ணாத காட்சியைக் காண்பாயாக."

இவ்வாறு அன்னை கூறியதும் இயற்கை எழிலும் இணையற்ற அமைதியும் குடிகொண்ட ஒரு காட்சி என் கண்முன்னே தோன்றியது. விசாலமான ஆறு ஒன்றின் கரை யோரமாகப் பளிங்கு போன்ற தெள்ளிய நீர் மணலை அரித்து ஓடிக் கொண்டிருந்தது.

அந்தக் கரைமீது செழித்து வளர்ந்திருந்த பூஞ் செடிகளுக் கிடையிடையே குடில்கள் போன்ற சிறுசிறு கட்டிடங்கள் காணப்பட்டன. ஆற்றின் எதிர்க் கரையில் வானத்தை அளாவிய புகை போக்கிகள் நிரம்ப உள்ள பெரியதொரு நகரம் காணப்பட்டது. சபர்மதி ஆசிரமத்தைப்பற்றி நான் படித்திருந்தது உடனே நினைவுக்கு வந்தது. ஓ! காந்தியடிகளின் புனித வாசஸ்தலம் இது, என்பதை உணர்ந்தேன். அக்குடில்களுக்கு நடுவண் இருந்த குடில் ஒன்றினுள் என் பார்வை சென்றது. ஆம்! ஆம்! உலகம் போற்றும் உத்தம புருஷரே அவர்! படங்களில் அவரை அடிக்கடி பார்த்திருக்கிறேன். சென்னைக்கு வந்திருந்தபோது ஒருமுறை நேரிலும் தரிசித்திருக்கிறேன்.

ஆனல் படங்களிலும், நேரில் பார்த்தபோதும் காணப்படாத ஓர் அற்புதஜோதி அவருடைய முகத்தில் அப்போது விளங்குவதைக் கண்டேன். அந்த ஜோதியின் பிரபை அவாது சிரசைச் சுற்றி ஒரு மின்னொளி வட்டமாகத் திகழ்ந்து கொண்டிருந்தது. அடிகள் அப்போது இராப் [illegible] த்தில் நூல் நூற்றுக் கொண்டிருந்தார். ஓ! இஃதென்ன புது [illegible] முதலில் காணப்படாத அற்புத ஒளி வடிவமான சில உருவங்க [illegible] ந்த அறையில் இப்போது தோன்றுகின்றன. அவ்வுருவங்கள் வ [illegible] தில் மனிதரை ஒத்திருப்பினும் அவை பரு உடல்களான உருவங் [illegible] ல்ல. அவர்கள் தேவர்கள்! அவர்க ளனைவரும் பயபக்தியுடன் அங்கு நின்றனர். சிலர் மகாத்மாவை வலம் வந்தனர். சிலர் அவாது அடி பணிந்தனர். இப்போது கூரையின் வழியாகச் சில புதிய உருவங்கள் கீழிறங்கி வருவதைப் பார்த்தேன். அவ்வுருவங்களும், அங்கிருந்த தேவர்களின் உருவங்களை ஒத்திருந்தன வாயினும் அவை போல் ஒளி வடிவமா யிராமல் கருநிறங் கொண்டவையாயிருந்தன. ஆனல் அவை கீழிறங்கி மகாத்மாவை மூன்று முறை வலம் வந்து வணங்கியதும் கருமை நீங்கப்பெற்று மற்ற தேவர்களைப் போன்ற ஒளி வடிவம் பெறுதலைக் கண்டேன். இந்தத் தெய்வீகக் காட்சியினல் பரவச மடைந்திருந்த என் செவிகளில் அன்னையின் மொழிகள் இன்னமுத மெனப் பாய்ந்தன.

"குழந்தாய், என் போன்ற நாட்டரசிகள் பலர் சீருஞ் சிறப்பு முற்று விளங்குவதாய் முன்னம் கூறினேன். ஆனால், இதோ இந்த உத்தமப் புதல்வனை ஈன்றெடுத்த ஓர் அம்சத்தில் உலகில் எனக்கு இணையானவர் எவருமில ரென்று இறுமாந் துள்ளேன். இன்றும் சரி, என்றும் சரி, இப்பூவுலகில் மனித வுடல் தரித்து வந்த மகான்களுள் இவருக் கிணையாகச் சொல்லக் கூடியவர் எவருமில்லை. குழந்தாய், நான் அளித்த சூக்ஷ்ம திருஷ்டியின் துணைகொண்டு விண்ணவர்களும் அவரைத் தேடி வந்து தூய்மை பெற்றுப் போவதைப் பார்க்கிறா யல்லவா? அதோ! கருநிற முடையவர்களாய் வருகிறார்களே, அவர்கள் விண்ணுலகில் தீய எண்ணங்களுக் கிடங்கொடுத்ததினால் பாவிகளாய்ப் போனவர்கள். அவர்கள் இம்மகாத்மாவிடம் வந்து அவருடைய தரிசனத்தின் மகிமையினால் தங்கள் பாவந்தீர்ந்து தூய்மை யடைந்து மீண்டும் ஒளி வடிவம் பெற்றுத் திரும்பிச் செல்கின்றனர். அத்தகைய மகாபுருஷன், மைந்தா, அதோ கண்ணீர் விடுவதைப் பார்."

மகாத்மாவின் தேஜோமயமான வதனத்தில் கண்ணீர் பெருகி ஓடுவதைக் கண்டேன். என் உள்ளம் உருகி விட்டது; என் கண்களிலும் நீர் பொங்கி வழிந்தது.

"கோடிக்கணக்கான தம் ஏழைச் சகோதரர்களின் துன்பங்களை எண்ணி எண்ணி அவர் கண்ணீர் பெருக்குகிறார். ஆயினும் அவர் நம்பிக்கை யிழந்து விடவில்லை. அவர் முகத்தில் குடிகொண் டுள்ள புன்னகை ஆண்டவன் அருளில் அவருக் குள்ள அழியா நம்பிக்கையைப் புலப்படுத்துகிறது." என்றாள் அன்னை.

அந்த அற்புதக் காட்சி மறைந்தது. நான் அக்கணமே அன்னையின் பாத கமலங்களில் விழுந்து "தாயே, உன் பொற் றிருவடிகள் மீதாணை! உன் மக்களின் துன்பங்களை நீக்கி உன்னை மீண்டும் முன்போல் உலகத்துக்கு ஓர் ஒப்பற்ற அரசியாய் வீற்றிருக்கச் செய்யும் முயற்சியில் என் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்வேன்.

அறுவரை ஊண் வேண்டேன்; உறக்கம் வேண்டேன், என்று மனங் குழைந்து கூறினேன்.

"மைந்தா, நீ கூறுவது சத்தியமா?"

"சத்தியம், சத்தியம், முக்காலும் சத்தியம்."

"இனி என்றும் கதர் ஆடை தவிர வேறு துணி அணிவதில்லை யென்று பிரதிக்ஞை செய்வாயா?"

"அவ்வாறே பிரதிக்ஞை செய்கிறேன்."

"இந்நாட்டில் உன் ஏழைச் சகோதரர்களின் குடியைக் கெடுக்கும் குடித் தீமையை ஒழிக்கக் கங்கணங் கட்டிக்கொள்வாயா?"

"அவ்வாறே செய்வேன்."

"சாதி ஒற்றுமை, சமய ஒற்றுமையை நிலைநாட்டவும், தீண்டாமையைத் தொலைக்கவும் முயல்வாயா?"

"முயல்வேன், சத்தியம்."

"மற்றி எல்லா நியாயமான வழிகளிலும் முயன்று உன் அன்னையின் அடிமைத் தளைகளை உடைத்தெறிவதாகப் பிரதிக்ஞை செய்வாயா?"

"உன் பாதகமலங்களின் ஆணையாக அவ்வாறே பிரதிக்ஞை செய்கிறேன்."

இவ்வாறு அந்த வெண்ணிலவிரவிலே, மலைச் சிகரத்திலே, பாரதத் தாயின் முன்னிலையிலே நான் பிரதிக்ஞை செய்து வாய் மூடவில்லை; அதற்குள் "கிண், கிண், கிண்" என்ற மணிச் சத்தம் எங்கேயோ வெகு தூரத்திலிருந்து மந்த மாருதத்துடன் கலந்து வந்து என் செவிகளில் ஒலித்தது.

"ஐயோ, என்ன அநியாயம்! உட்கார்ந்தபடி தூங்குகிறீர்களே! மணி பத்து அடித்துவிட்டதே, ரயில் வந்துவிடுமே?" என்று என் மனைவி கூச்சல் போடும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன். கடிகாரம் கிண் என்று பத்தாம் முறையாக அடித்து மீண்டும் வழக்கம்போல் டக், டக் சத்தம் செய்யத் தொடங்கிற்று. 10–5-க்குரயில். அந்த வண்டி தவறிவிட்டால் அன்று ஆபீஸ் கிடையாது. சாப்பிட்டு விட்டு வந்து நாற்காலியில் உட்கார்ந்து சட்டை போட்டுக்கொள்ள ஆரம்பித்தேன். உண்ட களைப்பினால் அப்படியே உறங்கிக் கொண்


டிருந்துவிட்டேன். அவசர அவசரமாகக் கோட், அங்கவஸ்திரம், கழுத்துச் சுருக்கு, தோல் அரைக்கச்சை எல்லாவற்றையும் எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு, பிரம்பையும், குல்லாவையும் ஒரு கையிலும், மனைவிகொடுத்த சிற்றுண்டிப் பொட்டணத்தையும் சூடாறாத பாத்திரத்தில் காப்பியையும் மற்றொரு கையிலும் எடுத்துக்கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடினேன். ரயிலில் உட்கார்ந்து சரியாக உடை தரித்துக் கொண்டேன்.

அன்று சம்பள தினம். தீபாவளி இன்னும் இரண்டு நாள் கழித்ததும் வரவிருந்தது. எனவே, அன்று மாலை வீடு திரும்பிய போது கீழ்க்கண்ட சாமான்களை வாங்கிக்கொண்டு போனேன். எனக்கு உடுத்திக்கொள்ள ஒரு பீஸ் 1703-ம் நம்பர் மல்; இரண்டு ஷர்ட்டுக்கு இங்கிலீஷ் ட்வில், இரண்டு ஷர்ட்டுக்கு நா[illegible] பட்டு; கோட்டுக்கு அல்பாகா துணி; விதம் விதமான [illegible] கழுத்துச் சுருக்குகள்; குழந்தைகளுக்குப் பாவாடை; சட்டைக்குச் சீனத்துப்பட்டு, இங்கிலீஷ் சிட்டி, பிளானல் முதலியன; ஐந் ரூபாய்க்குப் பட்டாசுக்கட்டு, மத்தாப்பு தினுசுகள்; இவைகள் வைத்து எடுத்துக்கொண்டு போவதற்குப் பளபளவென்று ஜொலித்துக்கொண்டிருந்த புது தினுசு பிரயாணப்பெட்டி; ஹார்லிக்ஸ் மா புட்டி; ஊதல் வாத்தியங்கள்; மற்றும் சில சில்லரைச் சாமான்கள். ஸ்டேஷனில் பஞ்சமச் சினன் நின்றுகொண்டிருந்தான். அவனைச் சாமான்களை வீட்டுக்கு எடுத்துக்கொண்டுவிடச் செய்தேன். 'தண்ணி போடு'வதற்காக அவனுக்கு இரண்டணைக் கொடுத்தேன். "ஐயோ, பறையனுக்கு அவ்வளவு கிட்டப் போய் விட்டீர்களே! ஸ்நானம் செய்தால்தான் சாதம் போடுவேன்" என்றாள் என் வாழ்க்கைத் துணைவி. வெந்நீர் போடச் சொல்லி முழுகினேன். நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் கண்ட கனவு நினைவுக்கு வந்து கொஞ்சம் உறுத்தியது. "சேச்சி! இனிமேல் பத்திரிகை படிக்கக்கூடாது. உழவுக்கும் அக்னிஹோத்திரத்துக்கும் பொருந்துமா? நமது உத்தியோக மெங்கே? பாரத மாதாவும் மகாத்மா காந்தியு மெங்கே?" என்று முணுமுணுத்துக் கொண்டேன்.

வாலின் உபயோகம்

நமது மூதாதையரெனக் கூறப்படும் அனுமந்த ராயர்களின் முக்கிய அம்சமான வாலின் உபயோகத்தைப்பற்றிப் பலர் பலவிதமாக அபிப்பிராயப்படுகின்றனர். மனிதரைப் பற்றியவரை வால்கள் பின் கூறப்பட்டுள்ள மூன்று முக்கிய விஷயங்களிலும் பயன் தருவதாகும்.

(1) சென்னைப் பட்டணத்தில் வீதிகளில் மாடுகளையும் வேறு மிருகங்களையும் பார்க்கும்போ தெல்லாம் எனக்குண்டாகும் பொறுமை... முடியாது. ஆகா! அவை என்ன ஆனந்தமாக ...து மொய்க்கவரும் ஈக்களையும், கொசுக்களையும் ...ன்? இது காரணமாக அவற்றின் மற்ற வேலைகள் ...யில்லை. சென்னை நகரத்தின் கொசுக்களை வதம் செய்வதற்காக இதுவரையில் எத்தனையோ திட்டங்கள் போட்டாய் விட்டன. ஒன்றிலும் பயனில்லை. ஆகவே, சென்னை நகர வாசி ஒவ்வொருவருக்கும் ஒரு வால் 'சப்ளை' செய்ய நகர சபை ஏன் முயற்சி செய்யக் கூடாது? மிருகங்களின் வால், தலை வரையில் வந்து கொசு ஓட்டுவதில்லை யென்பது உண்மையே. ஆனால் மனிதர்களுக்குக் கொஞ்சம் நீளமாகவே வைத்து விட்டால் இந்தக் குறையை நிவர்த்தி செய்து விடலாம். இதனால் எவ்வளவு சௌகரியம் உண்டென்று சிந்தித்துப் பாருங்கள். ஜனங்கள் இரவு நேரத்தில் கொசு வலை தேடவேண்டியதில்லை. நகர சபை கொசுக்களின் ஜனன மரண விகிதத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. வாலைமட்டும் ஆட்டிகொண்டே




யிருந்தால் மலேரியா சுரமும் மாயமாய்ப் பறக்காதா? மற்றும், சாப்பாட்டில் சாக்கடை ஈக்களெல்லாம் வந்து உட்காராமல் பார்த்துக் கொள்ளலாம். இன்னோரன்ன பிற!

ஆனால் மேற்படி யோசனை என்னுடைய மூளையில் நேராக உதித்ததில்லை யென்பதை ஒப்புக்கொண்டு விடுகிறேன். சமீபத்தில் சீமையில் நடந்த ஒரு வழக்கைப் படித்தபோதுதான் இதன் முக்கியம் எனக்குச் சட்டென்று புலப்பட்டது. அங்கே ஒரு குதிரையை ரயிலில் ஏற்றிச் சென்றார்களாம். அப்போது குதிரையின் வால் வண்டிக் கதவில் மாட்டிக்கொண்டபடியால் அது 'ரிபேர்' ஆகி விட்டதாம். அதாவது உடம்பின் ஒரு பக்கத்தில் மட்டுமே அது வாலைச் சுழற்றி ஈக்களை ஓட்டக்கூடுமாறு ஆகி[illegible] நா[illegible] பொருட்டுக் குதிரையின் சொந்தக்காரனுக்கு ர[illegible]சமான[illegible] நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கோர்ட்[illegible] சட்[illegible] (சொந்தக்காரனுக்கு நஷ்ட ஈடு கொடுத்தால் குதி[illegible] நேராகிவிடுமா என்பது வேறு விஷயம். ஆங்கிலக் கோர்ட்டார் வாலின் முக்கியத்தை நன்குணர்ந்திருக்கிறார்க[illegible]ன்பதே இங்கு நாம் கவனிக்க வேண்டியது.) இரு[illegible]ட்டும்.

(2) நாமெல்லாம் குரங்குகளா யிருந்த [illegible]ர் காலத்தில் வால் எவ்வளவு உபயோகமா யிருந்த தென்பதை ஞா[illegible]ப்படுத்த விரும்புகிறேன். அப்போது நாம் பிரயாணம் செய்வதற்கு வால்தான் முக்கிய சாதனமா யிருந்தது. இதைப்பற்றிச் சந்தேக முள்ளவர்கள் உடனே எங்கேயாவது குரங்குகள் இருக்குமிடம் தேடிச்சென்று அவை கிளைக்குக் கிளை எப்படித் தாவிச் செல்கின்றன வென்று பார்த்து வரட்டும். ஆனால் பிரயாணத்துக்கு ரயில் வண்டிகள் ஏற்பட்டு விட்ட இந்தக் காலத்தில் வால் எதற்காக என்று சிலர் கேட்கலாம். ரஸிகர்கள் இப்படிக் கேட்கமாட்டார்கள். ஆனந்தமாக மரத்துக்கு மரம் தாவிக் குதித்துப் பிரயாணம் செய்வதெப்படி? ரயில் வண்டியில் உட்கார்ந்த இருப்பில் பிரயாணம் செய்வதெப்படி? இரண்டும் ஒருநாளும் சம

மாக மாட்டா. ஆனால் ரயில் பிரயாணத்துக்குக்கூட வால் வேண்டுமென்று நான் சொல்கிறேன். ரயில் பிரயாண அநுபவமுள்ளவர்களெல்லாரும் என்னுடைய கட்சியை ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. சாதாரணமாக மூன்றாம் வகுப்பு வண்டிகளில், அதிலும் விளம்பரம் போட்டு ஆள் சேர்க்கும் திருவிழாக் காலங்களில், ரயிலுக்குள்ளே பாதிபேர் இருந்தால் வெளியில் படியில் நின்று கொண்டும் இன்னும் பலவிதமாகத் தொங்கிக்கொண்டும் பாதிபேர் பிரயாணம் செய்கிறார்களென்பது யாவரும் அறிந்ததே. இதனால்



பல விபத்துக்கள் நேரிடுகின்றன. கைப்பிடி நழுவுவதினாலும், ஒருவரை யொருவர் இடிப்பதினாலும் கீழே விழுந்து மரண மடைவதற்கு எது உண்டாகிறது. ஒரு வால் மட்டும் இருந்தால் இத்தகைய விபத்துக்கள் நேரிடுமா பாருங்கள். வாலை நன்றாக ரயில் ஜன்னல் சட்டத்தில் சுற்[illegible]டித்துவி[illegible]ால் எந்த நிலையில் வேண்டுமானாலும் தொங்கிக்கொ[illegible] போகலாம்; திருவிழாக்களுக்குச் செல்வோர் இரண்டு கைகளா[illegible]லும் தாளம் கொட்டி ஆனந்தமாக பஜனை செய்துகொண்டே பிரயாணம் செய்யலாம். தலைகீழாய் நின்று மத்தளம் அடித்தாலும் கேட்பாரில்லை.

(3) கடைசியாக, இன்னும் ஒரே ஒரு பெரிய உபயோகம் பாக்கியிருக்கிறது. கோபம் வந்த சிங்கத்தை நீங்கள் பார்த்ததுண்டா? சென்னை பீபிள்ஸ் பார்க்கில் உள்ள சிங்கங்களை நான் குறிப்பிடவில்லை. அந்தச் சிங்கங்களுடன் உங்களில் யாராவது சண்டை போடுவதாகச் சொல்லிக் கூண்டுக்குள் போனால் ஜீவகாருண்ய சங்கத்தார் குறுக்கிட்டு எளிய ஜீவன்களைத் துன்புறுத்தியதற்காக உங்கள் மீது

வழக்கு நடத்தவேண்டி வரும். காட்டில் திரியும் சிங்கத்துக்குக் கோபம் வந்து பாயும்போது பார்க்கவேண்டும். அப்போது அதன் வால் வெகு ஜோராக நிமிர்ந்து நிற்குமாம். (இதை நானும் பார்த்தது கிடையாது. சொல்லக் கேள்விதான்.) ஆனால் நாய்க்குச் சந்தோஷம் வந்தபோது வாலைக் குழைத்து ஆட்டுவதை நாம் எல்லாரும் பார்த் திருக்கிறோம். உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு வால் எவ்வளவு அரிய சாதனம் என்பதை இதிலிருந்தே நாம் நன் கறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, ஆபீஸ் குமாஸ்தா ஒருவர் துரையிடம் ஏதோ காரியமாகப் போகவேண்டி யிருக்கிறதென வைத்துக் கொள்ளுங்கள்.



துரை உடுக்கு நா[illegible]க் கும் ச[illegible]மான [illegible] குமாஸ்[illegible]டை சட்[illegible] ஆனால் [illegible] ஜ[illegible] சானி யம்மா[illegible]டம் [illegible] சண்டை [illegible]ட்ட காரணத் தினால் க[illegible]கோபத்துடன் இருக்கி[illegible] இதைக் குமா ஸ்தா [illegible]த் தெரிந்து கொள்[illegible] முகத்தைப் பார்த்[illegible]ரிந்து கொள் ளலாமெ[illegible]ல் துரை சாரா யம் குடித்துக் குடித்து எப்போதும் முகம் சிவந்துதா னிருக்கிறது. கோபச் சிவப்பு என்று எப்படிக் கண்டு பிடிப்பது? இதற்குத்தான் வால் வேண்டுமென்பது. துரைக்கு ஒரு வால் மட்டும் இருந்தால் கோப வேளையில் அது நிமிர்ந்து விரைத்துக் கொண்டு நிற்கும். குமாஸ்தா மெதுவாக நழுவித் தப்பித்துக் கொள்ளலாம்.

அதேவிதமாக, குமாஸ்தாவிற்கும் வாலிருந்தால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும், பாருங்கள். துரை இன்று குதூகலத்துடன் ஆபீஸுக்கு வந்திருக்கிறார். குமாஸ்தாவை அழைத்து ஒருநாளும் இல்

லாத வழக்கமாக முதுகில் தட்டிக்கொடுத்து ஒன்றே முக்கால் ரூபாய் சம்பள உயர்வு செய்திருப்பதாகச் சொல்கிறார். குமாஸ்தாவோ தம் முடைய நன்றியறிதலையும் சந்தோஷத்தையும் தெரிவிக்க ஆங்கில வார்த்தைகள் அகப்படாமல் திண்டாடுகிறார். இந்தச் சந்தர்ப்பத்திற்கு ஒரு வால்மட்டு மிருந்தால் அதைக் குழைத்து ஆட்டிச் சந்தோஷம் தெரிவிக்கலா மல்லவா? மற்றோர் உதாரணத்தை எடுத்துக்கொள் வோம். கலெக்டர் தர்பார் நடக்கிறது. திவான் பகதூர், ராவ் சாகிப், முதலிய பட்டங்கள் வழங்கப்படுகின்றன. பட்டம்பெற்றவர்கள் அளவு கடந்த ஆனந்த வெள்ளத்தில் மூழ்குகிறார்கள். உணர்ச்சி மேலீட்டி னால் "வந்தனம்" என்று சொல்வதற்குகூட அவர்களுக்கு நா எழ வில்லை. ஆகா! இந்த நெருக்கடியான தருணத்தில் அவர்களுக்கு வா[illegible]ால் எவ்வளவு உபயோகமா யிருக்கும்?

